# ஆண்டறிக்கை
# 2022

## இலங்கை மகாவலி அதிகார சபை

## இலங்கை மகாவலி அதிகார சபையின் ஆண்டறிக்கை – 2022

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| நோக்கு மற்றும் குறிக்கோள் | | 01 |
| வரலாற்றுப் பின்னணி | | 02 - 06 |
| 2022 ஆண்டில் பணிப்பாளர் சபையின் அமைப்பு | | 07 |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | | 07 - 11 |
| 2022 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் நாயகத்தின் மதிப்புரை | | 12 - 13 |
| பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு | | 14 |
| 2022 ஆண்டின் கணக்காய்வுக் குழு அறிக்கை | | 15 - 16 |
| கடந்த 07 ஆண்டுகளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் | | 17 - 18 |
| இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்களின் பணிப்பாளர் சபை - 2022 | | 19 |
| **பாகம் 01** | **நிர்வாக அறிக்கை** | |
| **முதலாவது அத்தியாயம்** | **இலங்கை மகாவலி அதிகார சபையை நிருவுதல்** | 20 - 53 |
| | இலங்கை மகாவலி அதிகார சபையின் அமைப்பு மற்றும் பணி வினைகள் | 20 |
| | இலங்கை மகாவலி அதிகார சபையின் நிருவாக கட்டமைப்பு | 22 |
| | மகாவலி வலயங்களின் கட்டமைப்பு மற்றும் நிருவாகம் | 23 - 45 |
| | திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு | 46 |
| | உள்ளக கணக்காய்வுப் பிரிவு | 46 |
| | நீரியல் முகாமைத்துவச் செயலகம் | 49 - 52 |
| | கொள்முதல் பிரிவு | 53 |
| **இரண்டாம் அத்தியாயம்** | **தொழில்நுட்ப சேவைப் பிரிவு** | **54 - 60** |
| | வகிபாகங்கள் | 54 |
| | செயற்திட்ட திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துதல் | 55 |
| | தாழ் பள்ளத்தாக்கு அபிவிருத்திப் பிரிவு | 55 - 57 |
| | பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் | 58 – 60 |

| உள்ளடக்கம் | | பக்கம் |
|---|---|---|


| | | |
|---|---|---|
| | ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகம் | 60 – 63 |
| | மின் மற்றும் இயந்திரவியல் பிரிவு | 63 – 72 |
| | பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவு | 73 – 79 |
| | காணி உபயோக திட்டமிடல் பிரிவு | 79 – 84 |
| | வன மற்றும் சுற்றாடல் பிரிவு | 85 - 89 |
| **மூன்றாம் அத்தியாயம்** | **அபிவிருத்திப் பிரிவு** | **90-111** |
| | காணிப் பிரிவு | 90-93 |
| | விவசாய அபிவிருத்திப் பிரிவு | 94 -99 |
| | மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு | 100-104 |
| | தாபன அபிவிருத்திப் பிரிவு | 104 -106 |
| | வியாபார அபிவிருத்திப் பிரிவு | 107-110 |
| **நான்காம் அத்தியாயம்** | **மனித வள மற்றும் நிதி முகாமைத்துவப் பிரிவு** | **111-123** |
| | ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவு | 111-112 |
| | சட்டப் பிரிவு | 113-114 |
| | நிதிப் பிரிவு | 115-116 |
| | மகாவலி பாதுகாப்புப் படையணி | 117-121 |
| | போக்குவரத்துப் பிரிவு | 122 |
| **ஐந்தாம் அத்தியாயம்** | இ.ம.அ.சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள் | 123 |
| **பாகம் 02 -** | வருடாந்த கணக்குகள் | 124-139 |
| **பாகம் 03 -** | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 140-164 |
| **பாகம் 04** - | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் வாதுரை | 165-197 |
| **பாகம் 05 -** | இ.ம.அ.சபையின் மொத்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் முதலீட்டுத் திட்டம் – 2022 | 198 -204 |

# நோக்கு

நிலைபெறுதகு விவசாயம், புதுப்பிக்கத்தகு வலு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் மகாவலி அதிகார பிரதேசங்களில் வசிக்கின்ற பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக நிலத்தை மற்றும் நீரை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான இலங்கையின் அதி சிறந்த தாபனமாக மாறுதல்.

# குறிக்கோள்

மகாவலி சமூகம் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக புதுப்பிக்கத்தகு வலுவை தோற்றுவித்தல், பசுமைச் சூழல் மற்றும் சூழற் தோழமையுடைய சுற்றுலா தொழில்துறையை உதவியாகக் கொண்டு நவீன தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்க மற்றும் நிலைபெறுதகு விவசாய உற்பத்தித் திறனிற்காக நிலம் மற்றும் நீர் வளத்தை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக நெறிப்படுத்துதல்.

# வரலாற்றுப் பின்னணி

மகாவலி அபிவிருத்தித் திட்டமானது இலங்கையில் இதுவரையில் செயற்படுத்தப்பட்டுள்ள மாபெரும் பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும். அடிப்படையாக உலர் வலயங்களில் கிராமிய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட இச்செயற்திட்டமானது 1968 ஆம் ஆண்டு அக்காலத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்/ உணவு மற்றும் விவசாயத் தாபனத்தின் (UNDP/FAO) மூலம் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவிகளுடன் திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய மலைநாட்டில் காணப்படுகின்ற இயற்கை நீர் வளத்தை உலர் வலயங்களின் விவசாயத்திற்காக மற்றும் குடியிருப்பு அபிவிருத்திகளுக்காக பயன்படுத்தும் செயல்பாட்டில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பாரிய வகிபாகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் சனத்தொகை அதிகரிப்பானது சடுதியாக அதிகரித்தமையால் எழுந்த இடைப் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடும் பொழுது உற்பத்தி வேகத்தை அதிகரிப்பது தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டி ஏற்பட்டது. 1969 ஆம் ஆண்டு இலங்கையின் சனத்தொகை 11.8 மில்லியனாக காணப்பட்டது. இது 1940 ஆம் ஆண்டு காணப்பட்ட சனத்தொகையின் இரு மடங்காகுவதுடன் வருடாந்த சனத்தொகை விருத்தி அதிகரிப்பு 3.1% ஆக காணப்பட்டது. இவ்வாறு சனத்தொகை அதிகரித்தமையால் உணவிற்காக 1980 ஆம் ஆண்டாகும் போது அரிசி 1.8 மில்லியன் மெட்ரிக் தொன் தேவைப்படும் என ஊகிக்கப்பட்டது. எனினும், 1969 ஆம் ஆண்டில் அரிசி 0.7 மில்லியன் மெட்ரிக் தொன் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டது. அதைப் போலவே, தொழிற்சாலை மேம்பாட்டிற்கு மற்றும் வீட்டுப் பயன்பாட்டிற்காக மின்சாரமானது மணித்தியாலத்திற்கு 2000 கிகா வொட் தேவைப்பட்டது. எனினும், 1969 ஆம் ஆண்டாகும் போது மின் உற்பத்தியானது வருடத்திற்கு 470 கிகா வொட்டாக மாத்திரமே காணப்பட்டது. அதில் 388 மணித்தியால கிகா வொட்டானது நீர் மின் உற்பத்தியின் மூலமாகவும், எஞ்சிய தொகை பெற்றோலிய தகனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அனல் மின் உற்பத்தியாகும். மேலும், 1960 – 1967 கால எல்லையில் அரிசி 466,000 மெட்ரிக் தொன் வருடாந்தம் இறக்குமதி செய்யப்பட்டதுடன், அதற்காக ஆண்டொன்றிற்கு 200 மில்லியன் ரூபாய் வீதம் வெளிப்பாய்ச்சல் இடம்பெற்றுள்ளது. இதைத் தவிர, உப உணவுப் பயிர்களுக்காக 139 மில்லியன் ரூபாயும் வருடாந்தம் செலவாகி உள்ளது. அச்செலவானது மிக அதிகமான பெறுமதியாகும்.

இலங்கையில் ஈர வலயத்தின் பக்கம் மக்கள் ஒன்றுதிரள்வது காணக்கூடிதாக இருந்தது. ஈர வலயத்தில் சனத்தொகையானது சதுர கிலோமீட்டரிற்கு 465 ஆக காணப்பட்டதுடன் உலர் வலயத்தில் சதுர கிலோமீட்டரிற்கு 80 ஆக மாத்திரமே காணப்பட்டது. நாட்டில் முழு நிலப் பரப்பில் 66% உலர் வலயத்திற்கு உட்படுவதுடன் சனத்தொகையில் 70% மக்கள் ஈர வலயத்திலேயே வாழ்ந்தனர். இதற்கமைய, உலர் வலயத்தில் பாரிய நிலப் பரப்பில் மிகக் குறைந்த சனத்தொகைப் பரவலே காணக்கூடியதாக இருந்தது. அதற்கமைய, இலங்கையில் ஏனைய ஆறுகளுடன் ஒப்பிடும் பொழுது ஈர வலயத்தில் மத்திய மலைநாட்டில் ஊற்றெடுக்கும் மகாவலி கங்கையானது நாட்டின் முழு நிலப் பரப்பில் 6 இல் 1 இற்குக் கிடைக்கின்ற மழை நீரை தனது பிடிக்குள் கொண்டு உலர் வலயத்தின் ஊடாக கடலை நோக்கி வழிந்தோடுகின்ற மகாவலி கங்கையானது வருடத்தின் அனைத்து காலங்களிலும் வளம்பொருந்திய நதியாகும். இதற்கமைய, மகாவலி கங்கையை உலர் வலயத்திற்குத் திசை திருப்புவதன் மூலம் கிடைக்கப் பெறுகின்ற நீரின் மூலம் உலர் வலயத்தின் விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும், மேல் மகாவலி அதிகார பிரதேசத்தை அண்மித்து நீர்மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதன் மூலம் இலங்கையின் எதிர்கால தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என உணரப்பட்டது. இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் பெறுபேறாக அரசாங்கம் மேற்கொண்ட கோரிக்கைக்கு அமைய இலங்கைக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் தூதுக் குழுவொன்று உலர் வலயத்தில் காணி அபிவிருத்திக்கான வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கென 1956 ஆம் ஆண்டு இயலுமை ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது. அத்துடன் இலங்கையில் நீர்ப்பாசன மற்றும் நில அளவீட்டுத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கனேடிய அரசின் தொழில்நுட்ப உதவியுடன் கனேடியன் ஹன்டின் சேர்வே கோர்பரேஷன் நிறுவனமும் இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமைய மகாவலி கங்கை தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. இந்நிறுவனம் அவ்வாய்வு தொடர்பாக சுயாதீன அறிக்கைகள் இரண்டை 1961 ஆம் ஆண்டு முன்வைத்துள்ளது. இவ்வறிக்கையானது அங்கீகாரத்திற்காக 1962 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

ஒட்டுமொத்த மகாவலி வடிநிலத்தினதும் நீர் வளம் தொடர்பாக முழுமையான ஆய்வு ஒன்றை மேற்கொள்ளாமல் மகாவலி நீரின் ஒரு பகுதியை திசை திருப்புவதானது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால், இலங்கை நிபுணர்களின் அபிப்பிராயம் காரணமாக பாராளுமன்றம் இப்பிரேரணையை அங்கீகரிக்கவில்லை. அதன் பின்னர், மகாவலி கங்கை உட்பட ஏனைய நதிகளை அண்மித்த காணிகள் மற்றும் நீர் வளங்கள் தொடர்பாக ஒட்டுமொத்த ஆய்வு ஒன்றை மேற்கொண்டு அபிவிருத்தி தொடர்பாக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய செயற்திட்டங்களைத் தெரிவு செய்து சுயாதீன பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு 1962 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு

கோரிக்கை முன்வைக்க வேண்டி ஏற்பட்டது. அதன் பெறுபேறாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மூலம் உணவு மற்றும் விவசாய அமைப்பின் விசேட நிபுணர்கள் உள்ளடங்கிய குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி வைத்தது. அதற்கு மேலதிகமாக, அக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இலங்கையைச் சேர்ந்த விசேட நிபுணர்கள் குழு மற்றும் பதவியணியும் நியமிக்கப்பட்டது.

நான்கு வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வின் பின்னர் 1968 ஆம் ஆண்டு 14 புறம்பான விசேட அறிக்கைகளை உள்ளடக்கிய 03 தொகுதிகளைக் கொண்ட ஆய்வு அறிக்கை பிரசுரிக்கப்பட்டது. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டமானது 1968 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

வட மத்திய மாகாண மற்றும் கிழக்கு மாகாணத்தை அண்டிய அனுகூலங்களைப் பெறுகின்ற பிரதேசங்கள் 13 வலயங்களாக பிரிக்கப்பட்டதுடன், அதனை ஆங்கில அரிச்சுவடிப்படி A இல் இருந்து M வரை பெயரிடப்பட்டது. பொருளாதார ரீதியில் அதிகூடிய விளைத்திறனான மற்றும் குறைந்த முதலீட்டின் ஊடாக அதிகூடிய பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ள முடியுமான செயற்திட்டங்கள் முதலாம் கட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டன.

# மகாவலி பெருந்திட்டம்.

மகாவலி பெருந்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது யாதெனில், மகாவலி கங்கையின் நீர் வளத்தின் மூலம் சுமார் 6,900 மில்லியன் கன அடி நீரை நீர் மின் உற்பத்தி மற்றும் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக விநியோகிப்பதாகும். 15 நீர்த் தேக்கங்களை அமைத்து அதில் 11 ஐ பிரதானமாக மின் உற்பத்திக்காக பயன்படுத்துவது இரண்டாவது நோக்கமாக காணப்பட்டது.
ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் உணவு மற்றும் விவசாய அமைப்பால் முன்வைக்கப்பட்ட மகாவலி பெருந்திட்டத்திற்கு அமைய மகாவலி கங்கை வடிநிலத்தில் மற்றும் உலர் வலயத்தினுள் காணப்படுகின்ற ஏனைய நதிகளின் வடிநிலங்களில் அமைந்திருந்த நிலப்பரப்பு, 364,372 ஹெக்டயர் இற்காக சிறுபோகம் மற்றும் பெரும் போகம் ஆகிய இரு பருவங்களின் போதும் நீர்ப்பாசன நீரை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த மொத்த நிலப்பரப்பில் 264,777 ஹெக்டயார் நிலப்பரப்பானது விவசாயத்திற்கு திறந்துவிடப்படவிருக்கும் புதிய நிலங்களாக காணப்பட்டன. எஞ்சிய 110,404 ஹெக்டயார் நிலப்பரப்பில் ஏற்கனவே ஒரு பருவத்தின் போது மாத்திரம் சாகுபடி செய்யப்பட்டிருந்து. திட்டமிடப்பட்டிருக்கும் நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்கள் என்பவற்றின் ஆற்றலைப் பயன்படுத்தி மணித்தியாலத்திற்கு 2037 கிகா வொட் அலகு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்ற விடயமும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. மகாவலி பெருந்திட்டத்தின் பிரகாரம் 30 வருட காலப் பிரிவின் போது இவ்வபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. நிதிகளின் உபயோகம் மற்றும் அமுலாக்கம் என்பவற்றின் வசதியைக் கருத்திற் கொண்டு, குறிப்பாக அபிவிருத்தியின் பயனானது அனைவருக்கும் கிட்ட வேண்டும் என்ற விடயத்தைக் கருத்திற் கொண்டு இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பணிகள் 03 கட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தன;

**I முதலாவது கட்டம்**

முதலாவது கட்டமானது 1969 – 1980 காலப்பரிவின் போது அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டு இருந்தது. இக்கட்டத்தின் போது 74,494 ஹெக்டயார் புதிய நிலங்களுக்கும், 58,300 ஹெக்டயார் பழைய நிலங்களுக்கும் நீர்ப்பாசன நீரை விநியோகிப்பதற்கு வருடாந்தம் மணித்தியாலத்திற்கு 820 கிகா வொட் நிலையான மின் வலுவை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்தது. இக்கட்டத்தின் நடவடிக்கைகள் 03 செயற்திட்டங்களாக மேற்கொள்வதற்குப் பிரிக்கப்பட்டு இருந்தன;

- பொல்கொல்ல திசை திருப்பல் (1969 – 1973)
- விக்டோரியா/ மினிப்பே திசை திருப்பல் (1973 – 1977)
- மொரகஹகந்த பல்நோக்கு அலகு

**II இரண்டாவது கட்டம்**

இவ் இரண்டாவது கட்டத்தின் போது மாதுறு ஓயா நீர்த்தேக்கம், பல்நோக்குக் கட்டிடத் தொகுதி, கந்தகாடு அணைக்கட்டு போன்ற முதன்மைப் பணிப் பிரிவுகளில் மகாவலி மற்றும் மாதுறு ஓயா வடிநிலங்களில் அமைந்திருக்கும் 93,117 ஹெக்டயார் நிலப்பரப்பிற்கு விவசாயம் செய்வதற்காக நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கப் பெறுவதுடன், இதில் 8502 ஹெக்டயார் நிலப்பரப்பானது ஏற்கனவே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலப்பரப்பாக கணக்கில் கொள்ளப்பட்டிருந்தது. 15 மெகா வொட் நிறுவப்பட்ட ஆற்றலைக் கொண்ட நீர் மின் உற்பத்தி நிலையத்தை தல்தெனியவில் நிர்மாணிப்பதற்கும், மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தை வளப்படுத்துவதற்காக உல்ஹிடிய ரத்கிந்த நீர்த்தேக்கத்தில் இருந்து சுரங்கப் பாதை ஒன்றை அமைப்பதற்கும், மாதுறு ஓயா நீர்த்தேக்கத்திற்கு அருகில் 4.9 மெகா வொட் நிறுவப்பட்ட ஆற்றலைக் கொண்ட சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிர்மாணிப்பது இதன் பிரதான பணிகளாகும்.

**III மூன்றாவது கட்டம்**

இதன் மூலம் நாட்டின் வட மத்திய மாகாணத்தில் 105,668 ஹெக்டயார் புதிய நிலப்பரப்புகள் அபிவிருத்தி செய்யப்படும். நீர் மின் உற்பத்தியின் இறுதித் திட்டத்தைச் செயற்படுத்தி 293 மெகா வொட் அலகு நிறுவப்பட்ட ஆற்றல் உடைய மின் உற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்படுவதுடன், அதன் மூலம் வருடாந்தம் மணித்தியாலத்திற்கு 1169 கிகா வொட் அலகு நிலையான மின் உற்பத்தி செய்யப்படும். பழைய மினிபே இடது கரைக் கால்வாயை அபிவிருத்தி செய்தல், 164 கிலோ மீட்டர் நீளமான வட மத்திய கால்வாயை நிர்மாணித்தல், ரொடலாவல, உமா ஓயா, றண்தம்பே, கொத்மலை மற்றும் களு கங்கை ஆகிய நீர்த் தேக்கங்களை நிர்மாணத்தில் இக்கட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.
எனினும், நடப்புத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி மகாவலி பெருந்திட்ட அபிவிருத்தியானது 03 கட்டங்களின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

## <u>மகாவலி பெருந்திட்டத்தைச் செயற்படுத்துதல் (01 ஆவது அபிவிருத்திக் கட்டம்)</u>

மகாவலி பெருந்திட்டதின் கீழ் முதலாவது செயற்திட்டமாக பொல்கொல்ல மற்றும் போவதென்ன திட்டமானது 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், 1976 ஆம் ஆண்டாகும் பொழுது கட்டுமானப் பணிகளை பூர்த்தி செய்ய முடியுமாக இருந்தது. இதன் மூலம், முன்பு ஏற்கனவே காணப்பட்ட 16,000 ஹெக்டயார் நிலப்பரப்பிற்கு மற்றும் 23,000 ஹெக்டயார் புதிய நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசன நீரை விநியோகிப்பதற்கும், 40 மெகா வொட் நிறுவப்பட்ட ஆற்றலைக் கொண்ட நீர் மின்னை உற்பத்தி செய்தற்கும் முடியுமாக இருந்தது. இத் திட்டத்தின் கீழ் மகாவலி எச் வலயத்திற்குரிய கலா ஓயா பள்ளத்தாக்கில் 23,000 விவசாய குடும்பங்கள் 1977 ஆம் ஆண்டாகும் பொழுது குடியேற்றப்பட்டன. தற்பொழுது மகாவலி திட்டத்தின் கீழ் எச் வலயத்தில் சகல குடியேற்ற நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு குடியேற்றப்பட்டுள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 39,500 ஆகும்.

1977 ஆம் ஆண்டாகும் பொழுது இலங்கைப் பொருளாதாரம் பல சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருந்தது. அரிசி உட்பட விவசாய உற்பத்தி இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தமை பிரதான பிரச்சினையாக காணப்பட்டது. பயன்பாட்டிற்கு அவசியமாகின்ற அரிசியில் 69% மாத்திரமே நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதுடன், 31% இறக்குமதியிலேயே தங்கி இருந்தது. அதற்கு மேலதிகமாக அவசியமான பிற விவசாய உற்பத்திகள் பலவும் இறக்குமதி செய்யப்பட்டன.

1977 ஆம் ஆண்டாகும் பொழுது மின்சார சபையினால் உற்பத்தி செய்யப்பட்ட மின் கொள்ளளவானது சுமார் 408 மெகா வொட் அலகாக இருந்து வந்ததுடன், அது அச்சந்தர்ப்பத்தில் நாட்டில் நிலவி வந்த கேள்வியை நிறைவேற்றி வைப்பதற்குப் போதியதாக இருக்கவில்லை. மின் துண்டிப்பானது சாதாரண விடயமாக மாறி இருந்து வந்ததுடன், ஒரு வருடத்தில் மின்சாரம் துண்டிக்கப்படும் நாட்களின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்து இருந்தது.

இலங்கையில் வேலையின்மையானது 17% வரை அதிகரித்துக் காணப்பட்டது. வேலையின்மையைக் குறைக்க வேண்டியது அத்தியாவசிய அம்சமாகக் காணப்பட்டது. இப்பிரச்சினைக்கு துரிதமாக தீர்வு வழங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டு இருந்தது.

இப்பிரச்சினையைத் இயன்றளவு அவசரமாக தீர்க்கும் ஒரு படிமுறையாக மகாவலி அபிவிருத்திப் பெருந்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டும் என 1977.10.12 ஆம் திகதி அப்போதைய அரசாங்கம் தீர்மானித்தது.

## துரிதப்படுத்தப்பட மகாவலி நிகழ்ச்சித் திட்டம் (இரண்டாவது அபிவிருத்திக் கட்டம்)

மகாவலி பெருந்திட்டத்திற்குரிய தெரிவு செய்யப்பட்ட செயற்திட்டங்கள் பலவற்றை ஒரே தடவையில் ஆரம்பித்து சுமார் 06 வருட குறுகிய காலப் பிரிவில் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு 1977 இல் அரசாங்கம் தீர்மானித்தது. அதனைச் செயற்படுத்துவதற்காக புறம்பாக ஒரு அமைச்சும் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய, கொத்மலை, விக்டோரியா, ரன்தெனிகலை மற்றும் மாதுறு ஓயா நீர்த் தேக்கங்களுக்காக முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டு அவற்றைச் செயற்படுத்துவதற்காக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் இதற்கு றன்தம்பே செயற்திட்டமும் உள்ளடக்கப்பட்டது. இதில் மாதுறு ஓயாவைத் தவிர ஏனைய நீர்த்தேக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நீர் மின் உற்பத்தி செய்யப்பட்டதுடன், அதே நீரே நீர்ப்பாசனத் துறைக்கும் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கமைய, மகாவலி சி மற்றும் பி வலயங்களை அபிவிருத்தி செய்து விவசாயிகளை குடியேற்றுவதும் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. அதற்கமைய பி வலயத்தில் 30,465 குடும்பங்களும், சி வலயத்தில் 45,488 குடும்பங்களும் குடியேற்றப்பட்டு உள்ளன.

இச்செயற்திட்டத்திற்காக முறையே சுவீடன், பெரிய பிரித்தானியா, ஜேர்மனி மற்றும் கனடா ஆகிய நாடுகள், கீழ் பள்ளத்தாக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உலக வங்கி, EEC, ஜப்பான் மற்றும் குவைத் ஆகிய நாடுகள் நிதி உதவிகளை வழங்கி உள்ளன. இச்செயற்திட்டத்தை தொடங்குவதற்காக 1979 ஆம் ஆண்டு இலங்கை மகாவலி அதிகார சபை நிறுவப்பட்டதுடன், பொறியியல் மற்றும் வடிவமைப்புப் பணிகளுக்காக மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவர் நிலையமும், மீள் குடியேற்றுதல்களை மேற்கொள்வதற்காக மகாவலி பொருளாதார முகவர் நிலையமும் நிருவப்பட்டன. அதைப் போலவே, துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தியின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட பாரிய நீர்த்தேக்கங்களை முகாமைத்துவம் செய்வதற்காக முதன்மைப் பணிகளை நிர்வாகித்தல், நிறைவேற்றுதல், மற்றும் இயக்கற் பிரிவானது 1986 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டாகும் பொழுது துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்திச் செயற்திட்டமானது பூர்த்தி செய்யப்பட்டதுடன், அதன் மூலம் மின்சார துறை மற்றும் விவசாயத்தை மேம்படுத்துவதற்காக கணிசமான அளவில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் காரணமாக விவசாயத் துறையில் நேரடி முதலீடுகளை மேற்கொள்வதில் அரசாங்கம் தயக்கம் காட்டியமையால் மகாவலி பெருந்திட்டத்திற்குரிய மொரகஹகந்தை நீர்த்தேக்க செயற்திட்டமானது இடைநிறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், நீண்ட காலமாக சார்புரீதியாக கோப்புக்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அபிவிருத்திச் இச்செயற்திட்டமானது தற்பொழுது செயற்படுத்தப்படும் நிலைமைக்கு எட்டியுள்ளமை மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் பிரதிபலன்களை மேலும் விரிவுபடுத்துவதற்கு காரணமாக அமையும்.

## மகாவலி இயக்கத்தின் தற்போதைய வகிபாகம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள். (மூன்றாவது அபிவிருத்திக் கட்டம்)

மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நாட்டின் நாலா புறமும் விரிவுபடுத்தும் கட்டமாக மூன்றாவது அபிவிருத்திக் கட்டத்தைக் குறிப்பிடலாம். மொரகஹகந்தை களு கங்கை நீர்த்தேக்க முன்மொழிவின் ஊடாக வடக்கு, வட மத்திய, கிழக்கு, வட மேல், மத்திய மாகாணங்களில் சிறிய அளவான குளங்கள் 1200 இற்கு நீரை விநியோகிக்கும் நோக்கில் மொரகஹகந்தை மற்றும் களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டமானது செயற்படுத்தப்பட்டது. எலஹர பிரதேசத்தின் வயல்களுக்கு, பொலன்னறுவை பிரதேசத்தின் சகல நீர்த்தேக்கங்களுக்கும் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் சகல பிரதான நீர்த்தேக்கங்களுக்கும் ஆண்டு பூராகவும் தொடர்ச்சியாக நீர் விநியோகத்தை வழங்கி 81,000 ஹெக்டயார் புதிய பயிர்ச்செய்கை நிலப்பரப்பிற்காக நீரை விநியோகித்து விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டை தற்போசணை நாடாக மாற்றுவதற்கு பங்களிப்பு வழங்குவதும், மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி மூலம் தேசிய மின்சாரத் தொகுதிக்கு 25 மெகா வொட் அலகு கொள்ளளவை ஒன்று சேர்த்து தேசிய மின்சாரத் தேவைக்குப் பங்களிப்பு வழங்குவதும் இதன் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகும். அதைப் போலவே, செயற்திட்டத்தின் ஊடாக இடம்பெயர்ந்த மக்களுக்கு அவசியமான குடியேற்றங்களை அமைத்துக் கொடுப்பதுடன் மாத்திரம் நிறுத்தி விடாமல், சகல உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய லக்கல நகரத்தை புதிதாக நிர்மாணித்து மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கும் மாபெரும் பணியானது தற்பொழுது வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இச்செயற்திட்டத்தை 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமாகும் பொழுது இலங்கை மகாவலி அதிகார சபைக்குக் கையகப்படுத்திக் கொண்டதன் பின்னர் இலங்கை மகாவலி அதிகார சபையின் மாபெரும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் மற்றுமொரு படிமுறையின் வெற்றிகரமான நிறைவைக் காணக் கூடியதாக இருக்கும்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையானது தமது பணிவினைகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் உமா ஓயா பல் நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டத்தை ஆரம்பித்து வைத்தது. இதன் மூலம் உமா ஓயா நதியின் வடிநில நீரை வெலிமடை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரு நீர்த்தேக்கங்களுக்கு ஒன்று சேர்த்து, நாட்டில் முதல் தடவையாக 15.6 கி.மீ. நீளமான சுரங்கப் பாதையின் ஊடாக கிரிந்தி ஓயா வடிநிலத்திற்கு திசை திருப்பி அனுப்பப்படுகின்றது. அதன் மூலம், ஆசியாக் கண்டத்தின் மாபெரும் நிலக்கீழ் மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக 120 மெகா வொட் அலகு கொள்ளளவை தேசிய மின்சாரத் தொகுதிக்கு ஒன்று சேர்த்து தேசிய மின்சாரத் தேவைக்கு பங்களிப்பு வழங்குவதற்கும், மிகவும் பின்தங்கிய வட மேல் மாகாணத்தின் விவசாய விளைத்திறனை மேம்படுத்துவதற்கும் மற்றும் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றுவதல் போன்ற தனது அடிப்படை நோக்கங்களை நோக்கி இச்செயற்திட்டமானது வெற்றிகரமாக பயணித்துக் கொண்டிருக்கின்றது. இச்செயற்திட்டமானது 2019 ஆம் ஆண்டு நிறைவடையும் பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையின் செயலூக்க நீர் முகாமைத்துவக் கட்டமைப்பிற்கு உட்படுத்தப்படும்.

இலங்கை மகாவலி அதிகார சபையின் மாபெரும் நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏனைய நீர்த்தேக்கங்களைச் சுத்தம் செய்யும் செயற்திட்டத்தைப் போன்றே, நீர் வளம் பொருந்திய பிரதேசங்கள், நதிகளின் வடிநிலங்களைப் பாதுகாக்கும் செயற்திட்டமும் தற்பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையின் சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நிலைபெறுதகு வலு நிகழ்சித் திட்டத்தின் கீழ் மகாவலி நீர்த்தேக்கங்களில் மிதக்கக் கூடிய சூரிய மின் படலத் தொகுதிகளைப் பொருத்துதல் மற்றும் சிறிய அளவான நீர் மின் உற்பத்திச் செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் முலம் சுற்றாடல் தோழமையான விதத்தில் தேசிய மின்சார தேவைக்கு பங்களிப்புச் செய்வதற்கும், அதன் மூலம் பாரிய வருமான வழிகளை ஏற்படுத்துவதன் மூலம், இலங்கை மகாவலி அதிகார சபையானது புதிய மூலோபாய வருமான வழிகளை இனங்கண்டு வருகின்றது.

இதனுடன், மாதுறு ஓயா தெற்குக் கரையின் அபிவிருத்திச் செயற்திட்டம், வலவ வலயம், ரம்பகெண் ஓயா, மகாவலி பி வலயம், மகாவலி எச் வலயம் ஆகிய வலயங்களை அண்மித்து மேலும் மாபெரும் அபிவிருத்திச் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதன் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபையின் மூன்றாவது கட்டத்தின் சகல அடிப்படை நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் போது நாட்டின் நாலா புறமும் பரவலடைந்து தேசியப் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக விவசாய, நீர்ப்பாசன மற்றும் கால்நடை வளங்கள், மின்சக்தி உற்பத்தி, சுற்றாடல் பாதுகாப்பு போன்ற துறைகளினால் உயர்ந்தபட்ச பங்களிப்பை வழங்கும் கட்டத்தை நோக்கி படிப் படியாக முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

# பணிப்பாளர் சபை தொடர்பான விபரம் – 2022

| தொடர் இலக்கம் | பெயர் / பதவி | காலம் |
|---|---|---|
| 01 | திரு. ஐவன் டி சில்வா (உறுப்பினர்)<br>செயலாளர் (நீர்ப்பாசன அமைச்சு) | 2022 பெப்ரவரி தொடக்கம்<br>ஆகஸ்ட் வரை |
| | யூ. டி. சி. ஜயலால் ( உறுப்பினர்)<br>செயலாளர் (நீர்ப்பாசன அமைச்சு) | 2022 ஆகஸ்ட் தொடக்கம்<br>தற்பொழுது வரை |
| 02 | தவிசாளர்/ பணிப்பாளர் நாயகம்<br>இலங்கை மகாவலி அதிகார சபை<br>இலக்கம் 500, டீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 | 2021 ஜனவரி தொடக்கம்<br>தற்பொழுது வரை |
| 03 | திரு. பீ. பீ. எஸ்.ஆர். சில்வா (உறுப்பினர்)<br>பணிப்பாளர் (புற வளங்கள்)<br>நிதி அமைச்சு, கொழும்பு 01 | 2022 மார்ச் தொடக்கம்<br>தற்பொழுது வரை |
| 04 | பேராசிரியர் திரு. டி. எம். சூரதிஸ்ஸ (உறுப்பினர்)<br>பணிப்பாளர்,<br>உள்ளூராட்சி பற்றிய இலங்கை நிறுவனம்,<br>இலக்கம் 17, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 | 2022 ஆகஸ்ட் தொடக்கம்<br>தற்பொழுது வரை |
| 05 | திருமதி. கயானி பிரேமதிலக,<br>சட்ட உத்தியோகத்தர்,<br>மாகாண சபைகள், உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு,<br>இல. 330, பேராசிரியர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 02. | 2022 ஆகஸ்ட் தொடக்கம்<br>தற்பொழுது வரை |

# <u>சிரேஷ்ட முகாமைத்துவம்</u>

**இலங்கை மகாவலி அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டு நிறைவடையும் போது இருந்த சிரேஷ்ட முகாமைத்துவம் தொடர்பான தகவல் அறிக்கை.**

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | பெயர் |
|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | திரு. கீர்த்தி பி. கொடகம |
| 02 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | திரு. எம். எம். ஏ. குணதிலக, வதிவிட வணிக முகாமையாளர் (2022.09.21 – 2022.12.31 ஆம் திகதி வரை பதில் கடமை) |
| 03 | பிரதி பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி) | திரு. ஜீ.டி.என். டி செல்வா (வழிமொழிதலின் அடிப்படையில் - 2021.07.22 ஆம் திகதி தொடக்கம் 2022.02.03 ஆம் திகதி வரை) |
| | | திருமதி. டி. கே. வி. விஜயவீர, பணிப்பாளர் (ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விசேட செயற்திட்டங்கள்) (2022.08.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை பதில் கடமை) |
| 04 | பிரதி பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவை ) | திரு டி.எம்.என்.ஜே. தனபால, பணிப்பாளர் (நீரியல் முகாமைத்துவ செயலகம்)<br>2021.10.26 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரையில் பதில் கடமை புரிதல் |
| 05 | பிரதி பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) | திரு. ஆர். எம். நெவில் ராஜபக்ஷ, பணிப்பாளர் (விவசாயம்)<br>2021.12.01 – 2022.12.31 ஆம் திகதி வரையில் பதில் கடமை புரிதல் |
| 06 | பணிப்பாளர் (ஆளணி மற்றும் நிர்வாகம்) | திருமதி எம். டப்லியூ. ஆர். என். டெல்பட், இராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் (நிர்வாகம்)<br>(2021.07.26 ஆம் திகதி தொடக்கம் பதில் கடமை)<br>(2022.06.01 – 2023.07.25 ஆம் திகதி வரையில் வழிமொழிதலின் அடிப்படையில்) |
| 07 | பணிப்பாளர் (நிதி) | திரு. டீ.டி. பிரியந்த |
| 08 | பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு) | திருமதி எச். என். யாலிங்க |
| 09 | பணிப்பாளர் (மகாவலி கேந்திர மையம்) | பேராசிரியர் திரு. எஸ். மத்தும பண்டார (2022.02.01 – 2022.07.26 ஆம் திகதி வரை ஒப்பந்த அடிப்படையில்) |
| | | திரு. டி. பெர்ணாண்டோ (2022.08.18 ஆம் திகதியில் இருந்து தற்பொழுது வரை ஒப்பந்த அடிப்படையில்) |

| | | |
|---|---|---|
| 10 | பணிப்பாளர் (விவசாயம்) | திருமதி டி. கே. எச். டப்லியூ. எம். டப்லியூ. ஆர். செனவிரத்ன<br>பணிப்பாளர் (வியாபார அபிவிருத்தி) (2021.12.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை கடமை புரிதல்) |
| 11 | பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வளம்) | திருமதி. எம். ஜி. டீ. பிரியதர்ஷனி |
| 12 | பணிப்பாளர் (காணி) | திருமதி எஸ். ஏ. ஈ. டப்லியூ. குலரத்ன, நீர்ப்பாசன அமைச்சின் பணிப்பாளர் (காணி) (2021.01.26 - 2022.05.31 வரை பதில் கடமை) |
| | | திரு. ஏ. எம். ஏ. பீ. எச். குணவர்தன, வதிவிட வணிக முகாமையாளர் (2022.08.01 ஆம் திகதியில் இருந்து தற்பொழுது வரை கடமை தழுவுதல்) |
| 13 | பணிப்பாளர்<br>(தாபன அபிவிருத்தி) | திரு. எம். எல்.டி.சி. அபேகுணவர்தன, பிரதிப் பணிப்பாளர் (தாபன அபிவிருத்தி) (2017.09.08 -2022.03.31 ஆம் திகதி வரை கடமை தழுவல்) மற்றும் (2022.04.01 – 2022.07.25 ஆம் திகதி வரை பதில் கடமை) மற்றும் (2022.07.26 ஆம் திகதி தொடக்கம் பதவி நிரந்தரமாக்கப்பட்டு உள்ளது.) |
| 14 | பணிப்பாளர்<br>(வணிக அபிவிருத்தி) | திருமதி. டி. கே. எச். டப்லியூ. எம். டப்லியூ. ஆர். செனவிரத்ன |
| 15 | பணிப்பாளர்<br>(பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல்) | பொறியியலாளர் திரு. எஸ். ஏ. ஏ. தர்மசிறி, பிரதிப் பணிப்பாளர் (தாழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி) (2021.10.26 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை கடமை தழுவல்) |
| 16 | பணிப்பாளர் (தாழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி) | திரு டீ. ரணசிங்ஹ, பிரதிப் பணிப்பாளர் (பொறியியலாளர்) (2021.04.30 ஆம் திகதி தொடக்கம் 2022.12.30 வரை) |
| | | பொறியியலாளர் திரு. எம். பீ. எம். பெரேரா பிரதிப் பணிப்பாளர் (பொறியியலாளர்) (2022.12.30 ஆம் திகதி தொடக்கம் கடமை தழுவல்) |
| 17 | பணிப்பாளர்<br>(பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க செயற்பாடு) | பொறியியலாளர் திரு. எஸ். ஆர். கே. அருப்பொல (2017.02.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது 2022.12.31 வரை)) |
| 18 | பணிப்பாளர்<br>(ஆற்று வடிநில முகாமைத்துவம்) | பொறியியலாளர் செல்வி. சந்திரா செனரத் (2022.12.31 ஆம் திகதி வரை) |
| 19 | பணிப்பாளர்<br>(காணி உபயோக திட்டமிடல்) | திருமதி. ஜே.எம்.ஐ.எச். ஜயவர்தன, உதவிப் பணிப்பாளர் (காணி உபயோக திட்டமிடல்) (2018.08.27 - 2021.08.31 ஆம் |

| | | |
|---|---|---|
| | | திகதி வரை கடமை தழுவல்) மற்றும் (2021.09.01 ஆ திகதி தொடக்கம் கடமையாற்றுதல்) |
| 20 | பணிப்பாளர்<br>(வன மற்றும் சுற்றாடல்) | திரு. ஏ.எம்.கே.பி. அத்தநாயக்க |
| 21 | பணிப்பாளர் (நீரியல் முகாமைத்துவ செயலகம்) | பொறியியலாளர் திரு. டி. எம். என். ஜே. தனபால (2021.04.30 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை) |
| 22 | பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்) | திரு. பி. எல். பி. சேனாரத்ன, உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்) (2018.08.27 - 2021.08.03 ஆம் திகதி வரை கடமை தழுவல்) மற்றும் (2021.08.04 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை கடமையாற்றுதல்) |
| 23 | பணிப்பாளர்<br>(ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விசேட செயற்திட்டம்) | திருமதி. டி.கே.வி. விஜயவீர |
| 24 | பணிப்பாளர்<br>(மின் மற்றும் பொறிமுறை) | திரு. ஜே. ஆர். போபிடிய, பிரதிப் பணிப்பாளர் (பொறியியலாளர்) (2019.11.15 - 2021.08.31 ஆம் திகதி வரை கடமை தழுவல்) மற்றும் (2021.09.01 ஆம் திகதி தொடக்கம் 2022.12.31 வரை கடமையாற்றுதல்) |
| 25 | வதிவிட வணிக முகாமையாளர் (பி வலயம்) | திரு. பீ. ஜீ. நொயெல் ஜயசிறி, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (காணி) (2020.11.03 - 2022.08.01 ஆம் திகதி வரை கடமை தழுவல்) |
| | | திரு. ஐ. ரணவீர, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (காணி) (2022.08.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை கடமை தழுவுதல்) |
| 26 | வதிவிட வணிக முகாமையாளர் (சி வலயம்) | திரு. ஐ.எம்.யூ.கே. குமார<br>(2020.10.26 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை) |
| 27 | வதிவிட வணிக முகாமையாளர் (டி வலயம்) | திரு. ஏ. எம். ஏ. பீ. ஜீ. குணவர்தன (2021.02.04 - 2022.07.31 ஆம் திகதி வரை) |
| | | திரு. ஏ. ஜீ. டீ. எச். ஜயசிங்க, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (காணி) (2022.11.16 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை கடமை தழுவுதல்) |
| 28 | வதிவிட வணிக முகாமையாளர் (ஈ வலயம்) | திரு. ஜே.பீ. ஜயதிலக்க, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (விவசாயம்) (2021.02.12 - 2022.08.03 ஆம் திகதி வரை கடமை தழுவல்) |
| | | திரு. எச். எம்.கே. ஆர். ஹேரத் (2022.08.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை) |
| 29 | வதிவிட வணிக முகாமையாளர் (ஜீ வலயம்) | திரு. ஏ.ஜீ.டீ. ஹேமந்த ஜயசிங்ஹ, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (காணி) (2017.02.01 - 2022.07.27 ஆம் திகதி வரை கடமை தழுவல்) |

| | | |
|---|---|---|
| | | திரு. ஆர்.எம்.கே.பி. ரன்தெணிய, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (காணி) (2022.09.29 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை கடமை தழுவல்) |
| 30 | வதிவிட வணிக முகாமையாளர் (எல் வலயம்) | திரு. எச். எம். கே. ஆர். ஹேரத் (2021.04.05 - 2022.08.03 ஆம் திகதி வரை |
| | | திரு. ஜே.பீ. ஜயதிலக்க, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (விவசாயம்) (2022.08.04 ஆம் திகதி தொடக்கம் கடமை தழுவல்) |
| 31 | வதிவிட வணிக முகாமையாளர் (எச் வலயம்) | திரு. டப்லியூ. எம். எஸ். வீரசிங்ஹ, தொகுதி முகாமையாளர் (2020.10.29 ஆ திகதி தொடக்கம் தற்பொழுது வரை கடமை தழுவல்) |
| 32 | வதிவிட வணிக முகாமையாளர் (ஹுருளுவெவ வலயம்) | திரு. எம். எம். ஏ. குணதிலக (2020.10.14 - 2022.08.02 ஆம் திகதி வரை) |
| | | திரு. பீ. ஜீ. என். ஜயசிறி, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (காணி) (2022.08.02 ஆம் திகதி தொடக்கம் கடமை தழுவல்) |
| 33 | வதிவிட வணிக முகாமையாளர் (ரம்பகெண் ஓயா வலயம்) | திரு. ஏ.எல். ஒஸ்மன் டி சில்வா (2021.10.04 ஆம் திகதி தொடக்கம் 2022.12.31 வரை) |
| | | திரு. எச். பீ. எஸ். திலகரத்ன (2022.12.31 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை கடமை தழுவல்) |
| 34 | வதிவிட வணிக முகாமையாளர் (வலவ வலயம்) | திரு. எல். எம். என். பிரியந்த, பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (நிர்வாகம்) (2021.10.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை கடமை தழுவல்) |

## 2022 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் நாயகத்தின் மதிப்புரை.

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் விசேட அதிகாரங்களுடன் கூடியதாக பன்முக நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டமானது இந்நாட்டில் அமுல்படுத்தப்பட்ட மாபெரும் பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்திச் செயற்திட்டமாக காணப்படுவதுடன் அதன் மூலம் ஆரம்பத்தில் இருந்து தற்பொழுது வரை பல்வேறு விடயத் துறைகள் மூலம் இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு மிக முக்கியமான பங்களிப்பை வழங்கி உள்ளது. மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு இணங்கியதாக தேசிய உணவு உற்பத்திக்கு அவசியமான நீர்ப்பாசன நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், புதுப்பிக்கத்தகு மின்சார உற்பத்தி, குடி நீர் மற்றும் வணிகச் செயற்பாடுகளுக்கு அவசியமான நீரை விநியோகிப்பது போன்றே மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக மகாவலி அபிவிருத்தித் திட்டமானது 05 தசாப்தங்களுக்கும் அதிகமான காலம் தேசிய பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு மிக முக்கியமான பங்களிப்பை வழங்கி வருகின்றது. பல்வேறு விடயத் துறைகளின் கீழ் அபிவிருத்திப் பணிகளை மிகவும் வினைத்திறனாக பிரதேச மட்டத்தில் அமுல்படுத்துதல் மற்றும் கண்காணிக்கும் கட்டமைப்புடன் கூடிய தாபனமாக அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதிகளை விளைத்திறன் மிக்கதாக முதலீடு செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

கடந்த இரு ஆண்டுகளாக நிலவிய கொவிட் 19 தொற்றுப் பரவல் அச்சுறுத்தல் நிலைமையானது இவ் ஆண்டின் முதலாம் காலாண்டின் பின்னர் குறைவடைந்தமையால் உள்நாட்டுப் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காகவும் குடியேற்ற விவசாய மக்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காகவும் இவ் ஆண்டு விவசாயத் துறையில் குறிப்பிடத்தக்க அளவு விருத்தியைப் பெற்றுள்ளதுடன் உள்நாட்டு நெல் மற்றும் மேலதிக பயிர் வித்துக்களின் உற்பத்தியை மேம்படுத்துதல், மேலதிக பயிர்களை மகாவலி வலயங்களை அண்டிய விவசாய நிலங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்ளுதல், மகாவலி வலய வீட்டுத் தோட்ட விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வலுவூட்டுதல், நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற மட்டுப்படுத்தப்பட்ட மானியங்களைக் கொண்டு வெற்றிகரமாக நிறைவு செய்தல், மீன்பிடி மற்றும் கால்டை வள விருத்தியின் கீழ் திரவப் பால் உற்பத்தி, முட்டை உற்பத்தி, நன்னீர் மற்றும் அலங்கார மீன்கள் உற்பத்தி மற்றும் நன்னீர் இறால்கள் உற்பத்தி ஆகிய சகல நிகழ்ச்சித் திட்டங்களின் மூலமும் பாரியளவு முன்னேற்றத்தைப் பெற்றுக் கொண்ட ஆண்டாகும். விவசாயப் பிரிவிற்காக நவீன தொழில்நுட்ப உத்திகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளதுடன் அதன் வெற்றிகரமான பிரதிபலன்களை விவசாயிகள் அனுபவித்து வருகின்றனர். இதற்கு மேலதிகமாக விவசாய மற்றும் கால்நடை வளப் பிரிவின் மேம்பாட்டிற்காக வெளிநாட்டுச் செயற்திட்டமாக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு, ஆசிய அபிவிருத்தி வங்கி, WORLD VISION செயற்திட்டம் மூலம் மானியங்கள் ஒதுக்கப்பட்டு ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டாகும்.

இதற்கு மேலதிகமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசன முறைமைகளின் அபிவிருத்திக்கான வெளிநாட்டுச் செயற்திட்டமாக ஒருங்கிணைந்த நீரேந்து மற்றும் நீர் வள திட்டமிடல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்பு பிரிவுகள் முலம் நீர்த் தேக்கங்களில் விரைவாகப் பரவி வருகின்ற ஆக்கிரமிப்புத் தாவரங்களை நீக்கி சுத்தம்

செய்தல், தாழ் பள்ளத்தாக்கு மற்றும் நீர் வளம் பொருந்திய பிரதேசங்களில் உயிர் பல்வகைமையைப் பாதுகாப்பதற்காக மரக் கன்றுகளை நடுதல் மற்றும் நீரின் தன்மையைப் பரிசீலித்தல் ஆகிய பணிகள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. உழவர் அமைப்புக்களை வலுவூட்டி குடியேற்றவாசிகளின் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து காணி உரித்துப் பத்திரங்களை வழங்குவதல் இவ் ஆண்டு துரிதப்படுத்தப்பட்டு உள்ளது. நீண்ட கால மின் துண்டிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக விசேட கவனம் செலுத்தப்பட்டு நீர் மின் உற்பத்திக்கான பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்க முடியுமாக இருந்தது. அவ்வாறே, வெள்ள நீர் கட்டுப்பாடு உட்பட நீர் முகாமைத்துவத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதன் மூலம் குடியேற்ற விவசாயிகளின் பயிர்ச் செய்கைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது.

மேற்குறிப்பிட்ட பணிகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அவசியமான அடிப்படை வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்ற நீர்ப்பாசன அமைச்சரான கௌரவ ரொஷான் ரணசிங்க அவர்களிடம் இருந்து கிடைக்கப் பெறுகின்ற பக்கபலத்தை மிகவும் பாராட்டத்தக்க விடயமாக கருதுகின்றேன். அதைப்போலவே, அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஆகியோரின் வழிகாட்டல்களுக்கு அமைய மேற்குறிப்பிட்ட இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கு செயற்பட்ட இலங்கை மகாவலி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் உட்பட மகாவலி அதிகார சபையின் சகல பதவியணிகளுக்கும் மற்றும் இணைந்து பணியாற்றுகின்ற சகல செயற்திட்ட பதவியணிகளுக்கும் நன்றி செலுத்துவதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றேன்.



(ஒபபம)

**கீர்த்தி. பி. கொடகம**
**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை மகாவலி அதிகார சபை**

# பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு.

இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் சபை அறிக்கையை 2022-12-31 ஆம் திகதிக்கு நிறுவனத்தின் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட நிதிக் கூற்றுகளுடன் சமர்ப்பிக்கின்றோம்.

**2022 ஆம் ஆண்டு தொடர்பான மீளாய்வு.**

பணிப்பாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதிப்புரையில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் தொழிற்பாடுகள் தொடர்பான விவரமான கூற்று உள்ளடக்கப்பட்டு உள்ளது.

அத்துடன் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல், ஊழல், மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகள் தொடர்பாக கண்டறிதல் மற்றும் இடர்நேர்வுகளைக் குறைக்கும் நோக்குடன் உள்ளக நிர்வாகம் தொடர்பாக சிறந்தொரு முகாமைத்துவத்துடன் செயற்பட்டுள்ளது.

மேலும், இலங்கை மகாவலி அதிகார சபையின் சகல பதவியணிகளாலும் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் காட்டியுள்ள அளப்பரிய அர்ப்பணிப்பு தொடர்பாக பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் எமது பாராட்டுக்களை இத்தாள் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(ஒப்பம்)

திரு. யூ.டி.சி. ஜயலால் திஸாநாயக்க,

செயலாளர்,

நீர்ப்பாசன அமைச்சு

(ஒப்பம்)

திரு. பீ.பீ.எஸ்.ஆர். சில்வா,

பணிப்பாளர் (வெளி வளங்கள்)

நிதி அமைச்சு

(ஒப்பம்)

பேராசிரியர் திரு. டி.எம். சூரதிஸ்ஸ,

பணிப்பாளர்.

உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவனம்

(ஒப்பம்)

திருமதி. கயானி பிரேமதிலக,

சட்ட உத்தியோகத்தர்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு.

# 2022 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் குழு அறிக்கை

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு :

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் (நி.பி. 133) இன் பிரகாரம் அதிகார சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டு உள்ளதுடன், நி.பி. 134 (1) இன் பிரகாரம் பிரதான உள்ளக கணக்காய்வானது நேரடியாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்படுகின்றது.

இலங்கை இலங்கை மகாவலி அதிகார சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவானது, இலங்கைக் குடியரசினால் வெளியிடப்பட்டுள்ள நிதிப் பிரமாணம் (Financial Regulations), நிர்வாக பிரமாணம் (Administration Regulations), காலத்திற்கு ஏற்ற விதத்தில் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க, இலங்கை மகாவலி அதிகார சபையின் நோக்கங்களை உறுதி செய்து கொள்வதற்காக, விசாரணைகள் கண்காணிப்புக்களின் மூலம் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை அமுல்படுத்தி, முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

<u>**வகிபாகங்கள்**</u>

வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் செயற்படுத்தும் போது, நிலவுகின்ற உள்ளக நிர்வாக ஒழுங்கு முறைகளுக்கு இணங்கியதாக மற்றும் நல்லாட்சிக் கொள்கைகளுக்கு இணங்கியதாக அமுல்படுத்தப்படுகின்றதா எனவும், மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் பொருளாதார ரீதியான பிரதிபலன்கள் (Value for Money) கிடைக்கின்றதா எனவும், கணக்காய்வு விசாரணைகளின் கண்காணித்தல்கள் ஒப்பீடுகள், பௌதீக பரிசீலனைகள் என்பன இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனம் (ICA) மூலம் மற்றும் சர்வதேச கணக்கியல் தர நியமங்கள் (IAS) மூலம் வெளியிடப்பட்டுள்ள தர நியமங்களுக்கு அமைவாக, கணக்காய்வை மேற்கொண்டு மேலாண்மைக்கு அறிக்கையிடுதல்.

2022 ஆம் ஆண்டில், பின்வரும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

1. உள்ளக கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 43 ஆகும்.
2. வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கைகளின் எண்ணிக்கை 04 ஆகும்.
3. நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ ஒன்று கூடல்களின் எண்ணிக்கை
    - அமைச்சுக்கள் மட்டத்திலான கணக்காய்வு மேலாண்மை ஒன்று கூடல்கள் 03.
    - அதிகார சபைகளின் மட்டத்திலான கணக்காய்வு மேலாண்மை ஒன்று கூடல் 01.
4. உள்ளக கணக்காய்வு உசாவல்களுக்கு வழங்கப்பட்ட பதில்கள் மற்றும் உவாசவல்கள் மூலம் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளை செயற்படுத்துதல், அவற்றின் பின்னரான பின்தொடர்வுகளை மேற்கொள்ளுதல்.
5. கணக்காய்வு மற்றும் மேலாண்மைக் குழுக்கள் மூலம் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக, முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக ஆலோசனைகளை வழங்குதல்.

**<u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கட்டமைப்பு</u>**

இலங்கை மகாவலி அதிகார சபையின், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பின்வரும் விதத்தில் அமைகின்றது.

1. திரு. பீ.பீ.எஸ்.ஆர். டி சில்வா - தவிசாளர் – திறைசேரி
2. பேராசிரியர் திரு. டி.எம். சூரதிஸ்ஸ – குழு உறுப்பினர்
3. சட்டத்தரணி திருமதி. கே.கே.ஜீ. பிரேமதிலக - குழு உறுப்பினர்
4. பிரதான உள்ளக கணக்காய்வாளர் – அமைச்சு

(1 – 4: இலங்கை மகாவலி அதிகார சபையின்பணிப்பாளர் சபை)

5. கணக்காய்வாளர் நாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கணக்காய்வு அத்தியட்சகர்
6. பணிப்பாளர் (தொழில்நுட்ப கணக்காய்வு) – அமைச்சு

**குழுவில் கலந்து கொள்கின்ற ஏனைய உத்தியோகத்தர்கள்**

7. பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு)
8. பணிப்பாளர் (நிதி)
9. தேவைக்கு அமைய அழைப்பு விடுக்கப்படுகின்ற ஏனைய உத்தியோகத்தர்கள்.

**<u>குழுவின் வகிபாகம் :</u>**

- வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தை மேற்பார்வையிடுதல்.
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வுக்கு உட்படுத்துதல் மற்றும் அதன் மூலம் இனங்காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குதல்.
- 1971 ஆம் ஆண்டின் 38 இலக்க நிதி தொடர்பான சட்டத்தின் 14 (2) (இ) உப பிரிவிற்கு அமைய கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் உள்ளக நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு ஆலோசனைகளை வழங்குதல்.
- காலாண்டு அடிப்படையில் குழு ஒன்று கூடலை நடாத்துதல்.

# கடந்த 07 வருடங்களுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்.

| | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 | 2017 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|
| | Rs'000 | Rs'000 | Rs'000 | Rs'000 | Rs'000 | Rs'000 | Rs'000 |
| **சொத்துக்கள்** | | | | | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | | | | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 111,447,032 | 114,258,254 | 119,033,935 | 4,972,468 | 4,675,657 | 4,116,187 | 4,195,724 |
| முதலீடுகள் (LT) | 235,989 | 231,04 | 164,555 | 166,299 | 171,313 | 187,531 | 178,556 |
| புலனாகாத சொத்துக்கள் | 0 | 6 | 785 | | | | |
| மூலதன செயன்முறையிலுள்ள பணிகள் | 8,738 | 31,390 | 57,166 | 47,482 | 84,947 | 78,552 | 41,301 |
| **மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | **111,691,760** | **114,312,754** | **119,256,441** | **5,186,249** | **4,931,917** | **4,382,270** | **4,415,581** |
| | | | | | | | |
| உயிரியல் சொத்துக்கள் – மூலதனம் | 320,905 | 286,717 | 259,342 | 219,777 | 167,027 | 134,578 | 101,940 |
| முன்மொழியப்பட்ட தள்ளுபடி | | | | - | - | 859 | 859 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | | | |
| சரக்கு இருப்புகள்/ இருப்புகள் | 270,140 | 276,905 | 166,810 | 170,983 | 180,342 | 184,815 | 168,173 |
| உயிரியல் சொத்துக்கள் – வணிகம் | 119,708 | 41,118 | 42,721 | 47,178 | 26,312 | 15,875 | 22,630 |
| வணிகம் மற்றும் ஏனைய பெறுவனவுகள் | 4,576,005 | 3,471,407 | 2,594,637 | 2,997,661 | 2,032,715 | 2,084,069 | 1,730,015 |
| தொங்கல் கணக்கு | | | | - | - | - | - |
| முற்கொடுப்பனவுகள் | | | | - | 4,767 | 3,896 | 8,754 |
| வங்கி உத்தரவாதங்கள் | | | 377 | 374 | 6,292 | 6,164 | 4,153 |
| முகவருக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகள் | | | | - | - | - | - |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 272,418 | 1,177,597 | 667,498 | 258,877 | 312,702 | 343,312 | 312,750 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | 5,238,270 | 4,967,027 | 3,472,043 | 3,475,073 | 2,563,130 | 2,638,131 | 2,246,475 |
| **மொத்த சொத்துக்கள்** | **117,250,935,** | **119,566,498** | **122,987,826** | **8,881,100** | **7,662,074** | **7,155,838** | **6,764,855** |
| | | | | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | | | | |
| கொடுப்பனவுகள் | 39,760,813 | 39,819,011 | 39,970,622 | 968,185 | 651,986 | 879,967 | 376,737 |
| குத்தகை – ஏலியன்ஸ் பினான்ஸ் | | | | - | - | 2,153 | 3,080 |
| அட்டுறுச் செலவுகள் | 107,390 | 103,544 | 94,434 | 211,909 | 102,067 | 175,733 | 122,286 |
| முகவருக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகள் | | | | - | - | | |
| **மொத்த நடைமுறை பொறுப்புக்கள்** | **39,868,202** | **39,922,555** | **40,065,057** | **1,180,094** | **754,053** | **1,057,853** | **502,103** |
| | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | | | | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்குகள் | 1,413,100 | 1,343,221 | 1,500,519 | 1,371,814 | 1,379,494 | 1,388,101 | 1,489,288 |
| வங்கிக் கடன் | | | | - | - | | 2,455 |
| குத்தகை கட்டணங்கள் | | | | - | 219 | 271 | 2,653 |
| பிற்போடப்பட்ட வரி | | | 612 | 612 | 612 | 612 | 612 |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | 1,413,100 | 1,343,221 | **1,501,131** | **1,372,426** | **1,380,325** | **1,388,984** | **1,495,008** |
| **மொத்த பொறுப்புக்கள்** | **41,281,302** | **41,265,776** | **41,566,188** | **2,552,520** | **2,134,378** | **2,446,837** | **1,997,111** |
| | | | | | | | |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | **75,969,633** | **78,300,722** | **81,421,638** | **6,328,579** | **5,527,696** | **4,709,001** | **4,767,744** |
| | | | | | | | |
| **தேறிய சொத்துக்கள் / உரிமையான்மை** | | | | | | | |
| நிதி கூட்டுத்தொகை | 70,823,574 | 73,877,177 | 76,926,922 | 1,837,751 | 24,649,830 | 24,407,260 | 24,066,161 |
| ஒதுக்குகள் – வருமான மற்றும் செலவுக் கணக்கின் ஆரம்ப மீதி | (2,723,686) | (1,238,559) | (1,178,028) | (657,528) | (24,040,551) | (23,755,208) | 52,121 |
| வருமான ஒதுக்குகள் - நிறுவனங்கள் | - | | 48,288 | 48,288 | 50,865 | 4,006,082 | 4,019,027 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் – | 7,869,744 | 5,662,104 | 5,624,456 | 5,100,069 | 4,867,551 | 50,865 | (23,369,566) |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமையான்மை** | **75,969,633** | **78,300,722** | **81,421,638** | **6,328,580** | **5,527,696** | **4,708,999** | **4,767,743** |

# இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களின் பணிப்பாளர் சபை

| தொடர் இலக்கம் | நிறுவனம் | வருடத்தினுள் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்/ நிலைமை |
|---|---|---|
| 01 | வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம். | ❖ மாகாணத்தின் பால் விவசாயிகளிடம் இருந்து பால் சேகரித்தல் மற்றும் அவர்களுக்கு அதன் மூலம் சேவைகளை வழங்குதல்.<br>❖ பாலுடன் தொடர்புடைய உற்பத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் அவ் உற்பத்திகளை மகாவலி வலயங்கள் மற்றும் சுற்றியுள்ள பிரதேசங்களுக்கு சந்தைப்படுத்துதல்.<br>❖ ஆண் மாடுகளான பயன்படுத்துவதற்காக நீர் எருமைகளின் உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு வழங்குதல்.<br>❖ 2022 ஆம் ஆண்டின் முதல் இரு காலாண்டுகளிலும் தரத்தில் உயர்ந்த புரொய்லர் இறைச்சி உற்பத்தி செய்து சந்தைப்படுத்தல்.<br>❖ பெரும் போகத்தில் கிராந்துரு கோட்டை கால்நடை பண்ணையின் 200 ஏக்கருக்கு சோளம் பயிர்ச் செய்கைக்காக விவசாயிகளுக்கு வழங்குதல் மற்றும் வயல்கள் 25 ஏக்கரில் பயிர்ச் செய்கை முன்னெடுக்கப்பட்டு உள்ளது.<br>❖ தம்மின்ன மிருகப் பண்ணையில் இரு போகங்கள் வித்து நெற்கள் 08 ஹெக்டயரில் (20 ஏக்கர்) பயிரச் செய்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.<br>❖ சிறு அளவில் டிராகன் பழம் பயிரிடுதல். |
| 02 | வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனைச் சேவைப் பணியகம் (தனியார்) நிறுவனம். | இந்நிறுவனமானது 2020.12.30 ஆம் திகதியில் இருந்து நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டு உள்ளது. |
| 03 | வரையறுக்கப்பட்ட இயற்கை வள முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) நிறுவனம். | தீர்ப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட பின்னர் சகல நிதிக் கூற்றுகளும் சட்டப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளது. |

# நிர்வாக அறிக்கை

## பாகம் - I

# முதலாவது அத்தியாயம்.

## 1.1 இலங்கை மகாவலி அதிகார சபையை ஸ்தாபித்தல் மற்றும் அதன் அமைப்பு.

1979 ஆம் ஆண்டின் இலக்கம் 23 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன், அச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் விசேட பிரதேசம் ஒன்று தொடர்பாக அதிகார சபையின் பணி வினைகள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன.

(அ) நீர்த் தேக்கங்கள், நீர்ப்பாசன நீர் விநியோக அமைப்புக்கள் என்பவற்றை நிர்மாணித்தல் மற்றும் விநியோகிப்பதற்கான இயந்திர உபகரணங்களை நிறுவுதல் மற்றும் இயக்குதல் உட்பட மகாவலி கங்கையின் அபிவிருத்தி முன்மொழிவுத் திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் செயற்பாட்டிற்குக் கொண்டு வருதல். அவ்வாறு இருப்பினும், மின்சாரத்தை விநியோகிப்பதற்குரிய பணி வினைகளை வேறு ஏதேனும் எழுத்து மூல சட்டத்தின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் உள்ள வேறு ஏதேனுமொரு அதிகார சபையினால் செயற்படுத்துவதற்கு முடியும்.

(ஆ) முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த அபிவிருத்தியை போசித்து வளர்த்தல் மற்றும் அவ்வபிவிருத்தியைத் தக்க வைத்துக் கொள்ளுதல்.

(இ) விவசாய விளைத்திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு ஆற்றல்களை உயர்ந்த பட்ச நிலைமைக்கு கொண்டு வருதல் மற்றும் விவசாய பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளுதல்.

(ஈ) பௌதீக சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.

(உ) மக்களின் பொது நலன் மற்றும் கலாச்சார முன்னேற்றத்தை மேம்படுத்துதல் மற்றும் நிர்வாகித்தல்.

(ஊ) உள் மற்றம் வெளி பிரத்தியேக மூலதனத்தை விவசாய அபிவிருத்திகளில் பயன்படுத்துவதை முன்னேற்றுதல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளல்.

(எ) மகாவலி கங்கை அபிவிருத்தி முன்மொழிவுத் திட்டத்தை திட்டமிடும் போது மற்றும் அதனைச் செயற்படுத்தும் போது அரச திணைக்களங்கள், அரச தாபனங்கள், உள்ளூராட்சி மன்ற தாபனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட தாபனங்கள், பிரத்தியேக அல்லது வேறு நபர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளுதல்.

## 1.2 இலங்கை மகாவலி அதிகார சபையின் பணி வினைகள்.

பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒவ்வொரு விடயத் துறைகளின் கீழ் நிறுவப்பட்டுள்ள செயற்திட்டங்கள் மற்றும் துறைகளுக்குரிய அலுவலகங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தலானது பிரதி பணிப்பாளர் நாயகங்கள், பணிப்பாளர்கள், செயற்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் வதிவிட வணிக முகாமையாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.
அதற்கமைய பின்வரும் பணி வினைகள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் நிறைவேற்றப்படுகின்றன.

- கூட்டுத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைய தாபனத்தின் முன்னேற்றத்தை மாதாந்தம் பரிசீலித்து அவசியமான தலையீடுகள் மூலம் உரிய இலக்கை எட்டுதல்.
- சொத்துக்களைத் தாபரித்தல் மற்றும் நிர்வாகித்தல் தொடர்பாக பொருத்தமான திட்டம் ஒன்றிற்கு அமைய செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் சொத்துக்களை கையுதிர்த்தல்.
- கால வரையறைக்கு அமைய மொரகஹகந்த களுகங்கை நீர்த்தேக்கம் மற்றும் கிவுல் ஓயா நீர்த்தேக்கம் ஆகியவற்றை நிர்மாணித்தல்.
- பி வலயத்தின் வலது கரை மற்றும் எல் வலயத்தின் நீர்ப்பாசன நிலப்பரப்பை அதிகரித்துக் கொள்வதற்காக பிரதேசங்களை இனங்கண்டு அடிப்படைச் சூழல் ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுதல்.
- விவசாய உதவிச் சேவைகள் மேம்பாடு, விவசாய மேம்பாடு மற்றும் வருமான தோற்றுவிப்புச் செயற்திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் நாட்டில் பாதுகாப்பை ஏற்படுத்துதல்.
- நீர்ப்பாசனத் தொகுதிகளை தாபரித்தல் மற்றும் முகாமைத்துவத்தை விவசாய அமைப்புக்களுக்கு ஒப்படைப்பதற்கு இயன்ற வகையில் விவசாய அமைப்புக்களை பலப்படுத்துவது தொடர்பாக உத்தியோகத்தர்கள் மற்றும் உழவர் பிரதிநிதிகளை பலப்படுத்துதல்.
- “செல்வச் செழிப்பு மிக்க தேசம் ஒன்றிற்கு மகாவலி கால்நடை உற்பத்திகள்” என்ற தொனிப் பொருளின் கீழ் மகாவலி குடியேற்ற சமூகத்தின் வாழ்வாதார அபிவிருத்திக்கு கால்நடை வளங்கள் துறையை பலப்படுத்துதல்.
- விவசாய நிலங்கள் வரையறுக்கப்பட்ட வளமாகி வருகின்றமையால் மகாவலி குடியேற்றவாசிகளின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தலைமுறைகளின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவிக்கும் பொருட்டு பாரம்பரிய விவசாயத் துறைக்கு அப்பாற்பட்ட தொழில் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்கு ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழி காட்டுதல்.
- சகல மட்டங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பதவியணியின் தகவல்களை கணினி மயப்படுத்தி (இலத்திரனியல்) e - மனித வள முகாமைத்துவ தொகுதி ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- நேரியல் தாபனங்களுடன் கலந்துரையாடி சாகுபடி பருவ செயற்பாட்டுத் திட்ட செயல்முறைகள் மூலம் பிரதான நீர்த்தேக்கங்கள் மூலம் நீர்ப்பாசன குடியேற்ற செயற்திட்ட பிரதான நீர்மின் உற்பத்தி மற்றும் வீடுகளுக்கான நீர் மின் மற்றும் வீடுகளுக்கான நீர் வழங்கலுக்காக நீரை வேறு பிரித்துக் கொடுத்தல்.
- பி, சி, எச், எல், டி, மொரகஹகந்த, ஹுருளுவெவ, வலவ, விக்டோரியா மற்றும் புதிய வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ரம்புக்கன் ஓயா ஆகிய செயற்திட்டங்களில் பயிர் பன்முகப்படுத்தல், சமூக, பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவிப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- நீர் முகாமைத்துவம், மனித வள அபிவிருத்தி, கால்நடை வள அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, மண் மற்றும் நீர்ப் பாதுகாப்பு, நீர் பிரி நிலங்களின் முகாமைத்துவம், சூழல் மாசடைதல் மற்றும் நீர் மாசடைதல் தொடர்பாக சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டுதல்.
- பிரதான நீர்த் தேக்கங்களில் திசை திருப்பல் அளவுகளை பாதுகாப்பான விதத்தில் மேற்கொள்ளும் பொருட்டு பயனுறு தொழிற்பாட்டு தாபரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் உழவர் அமைப்புக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.

## 1.3 இலங்கை மகாவலி அதிகார சபையின் நிர்வாக கட்டமைப்பு



## 1.4 மகாவலி வலயம் – கட்டமைப்பு, நிர்வாகம் மற்றும் தற்போதைய நிலைமை

மகாவலி கங்கை வடிநில அபிவிருத்திப் பெருந்திட்டத்திற்கு அமைய உருவாக்கப்பட்ட குடியேற்றங்களை நிர்வாகித்தல், நீர்ப்பாசனத் தொகுதியை இயக்குதல், தாபரித்தல் மற்றும் நிர்வகிப்பதற்காக மகாவலி அதிகார பிரதேச வலயம் என்ற அடிப்படையில் நிர்வாக அலகுகள் 10 நிறுவப்பட்டுள்ளன. மகாவலி கங்கைப் பள்ளத்தாக்கை அண்மித்து பி,சி,டி,எச், மொரகஹகந்தை, விக்டோரியா, ஹுருளு வெவ ஆகிய வலயங்களும், உடவலவ, வெலி ஓயா (எல் வலயம்) மற்றும் ரம்புக்கன் ஓயா வலயம் ஆகிய விசேட வலயங்களும் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மகாவலி வலயங்களில் மற்றும் விசேட பிரதேசங்களில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பணி வினைகள் வதிவித வணிக முகாமையாளர்களின் அதிகாரங்களுக்குக் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வதிவிட வணிக முகாமையாளர்கள் நேரடியாக பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியதுடன், பிரதி பணிப்பாளர் நாயகங்களின் மேற்பார்வையின் கீழ் வலய மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளுக்காக பிரதான அலுவலகத்தில் ஒவ்வொரு துறைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களின் ஒத்துழைப்பு கிடைகைப் பெறும்.

அவ்வாறே, அனைத்து வலயங்களுக்கும் பிரதம நிறைவேற்று அதிகாரி வதிவிட வணிக முகாமையாளராகுவதுடன், தொழில்நுட்ப, காணிகள், விவசாயம் மற்றும் அபிவிருத்தித் துறைகளுக்காக கண்காணிப்பு உத்தியோகத்தர்களாக பிரதி வதிவிட வணிக முகாமையாளர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். அலகுகள் பலவற்றிற்காக ஒரு தொகுதி முகாமைத்துவ அலுவலகமும், அவ்வலுவலகத்திலட ஒவ்வொரு விடயத் துறைகளுக்கும் தொகுதி முகாமையாளர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் நீர்ப்பாசன பொறியியலாளர் ஒருவர், தாபன அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர், கமநல உத்தியோகத்தர் மற்றும் காணிகள் உத்தியோகத்தர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வனைத்து உத்தியோகத்தர்களினதும் கண்காணிப்பின் கீழ் சகல விடயத் துறைகளினதும் கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் ஒவ்வொரு அலகிற்கும் ஒவ்வொரு முகாமையாளர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு அலகானது பொதுவாக 250-300 அளவான காணி உரித்துடைய குடும்பங்களை குடியேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகாவலி வலயங்களில் காணி நிர்வாகம் மேற்கொள்ளப்படுவது காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் மற்றும் அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தை முதன்மையாகக் கொண்ட அரசாங்கத்தின் காணிகள் கொள்கைகளுக்கு அமையவாகும். அரசாங்கத்தின் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வெளியேற்றுவதில் இருந்து பிரதான பத்திரம் வெளியிடுவது வரை அடிப்படை நடவடிக்கைகள் அக்காணிகளுக்குரிய பின் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக வணிக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுக்காக காணிகள் குத்தகை அடிப்படையில் வெளியேற்றுவதற்குரிய அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதும், ஆரம்ப குடியேற்றவாசிகளுக்கு மேலதிகமாக இரண்டாவது, மூன்றாவது தலைமுறைகளுக்கு காணிகளை வழங்குவதும் வலய அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதைப் போலவே, நீர்ப்பாசன நீர் முகாமைத்துவம், தாபன அபிவிருத்தியின் ஊடாக நீர்ப்பாசனத் தொகுதியை தாபரித்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற செயற்பாடுகளும், விவசாய அபிவிருத்தின் கீழ் விதைகளை உற்பத்தி செய்தல், பண்ணை அபிவிருத்தி, பயிற்சி மற்றும் மாதிரி நடவடிக்கைகளும், கால்நடை வள, மீன்பிடி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைச் செயற்திட்ட அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தரமான கடன் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்பாட்டிற்குக் கொண்டு வருதல், வணிக, விவசாய வியாபாரத்தை இயக்குதல், விவசாயத்திடன் தொடர்புடைய சுய தொழில் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்பாட்டிற்குக் கொண்டு வருதலும் வலய நிர்வாகத்தின் கீழ் இடம்பெறும்.

# மகாவலி வலயம் – வரைபடம்






## பி (B) வலயம்

### வலயம் தொடர்பான அறிமுகம்

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மாபெரும் மகாவலி வலயமாக இருப்பது பி வலயமாகும். அது சுமார் 94,225 ஐக் கொண்டதாகும். மகாவலி பி வலயமானது 1982 - 1983 ஆகிய காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தி வலயமாகும். இவ்வலயமானது 08 தொகுதிகளைக் கொண்டுள்ளதுடன் 48 அலகுகளைக் கொண்டுள்ளது. பிரதான பயிராக நெல் காணப்படுவதுடன் மேலதிக பயிர்களாக சோளம், கவ்பி, பயறு, மரக்கறிகள், பப்பாசி, அன்னாசி, வாழை, மா, தென்னை என்பன ஆகும். மேலதிக வருமான வழிகளாக கால்நடை வளர்ப்பு, நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 20,006 (இடது கரை) ஹெக்யடர் ஆகும்.

பிரதானமாக பாரிய நீர்த்தேக்கமாக மாதுருஓயா நீர்த்தேக்கம் உள்ளதுடன் அதன் மொத்த கொள்ளளவு 596.6 MCM ஆகும். இதற்கு மேலதிகமாக சிறிய அளவிலான குளங்கள் 74 காணப்படுகின்றன. மகாவலி பி வலயமானது இடது கரை மற்றும் வலது கரை ஆகிய பகுதிகள் இரண்டைக் கொண்டுள்ளதுடன், பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு உரியதாக அமைந்துள்ளது. வெலிகந்த, திம்புலாகல, கோரளைப் பற்று வடக்கு, வாகரை ஆகிய பிரதேச செயலகங்கள் மூன்றும் இதில் உள்ளடங்குகின்றன. மகாவலி பி வலயமானது 1979.06.15 ஆம் திகதி வர்த்தமானி பத்திரிகை மூலம் வெளியிடப்பட்டதுடன், இலங்கை மகாவலி அதிகார சபையில் விசேட அதிகார பிரதேசமாக காணப்படுகின்றது.

மகாவலி பெருந் திட்டத்திற்கு அமைய நிர்மாணிக்கப்பட்ட மாதுறு ஓயா நீர்த் தேக்கமானது பி வலயத்தின் பிரதானமான நீர் மூலாதாரம் ஆகும். மாதுறு ஓயா பிரதான கால்வாய் 52.887 கி.மீ. நீளமானது ஆகும். மேலும், பிம்புரத்தேவ நீர்த்தேக்கமும் பி வலயத்தில் அமைந்துள்ளதுடன் அதன் பிரதான கால்வாய் 22 கி.மீ. நீளமானது ஆகும். 77.605 கி.மீ. நீளமான கிளைக் கால்வாய்கள் அமைந்துள்ளன. அவ்வாறே, பிரிப்புக் கால்வாய்கள் 474.137 கி.மீ. நிளத்தைக் கொண்டுள்ளன. மேலும் வலயத்தில் களக் கால்வாய்கள் கி.மீ. 1117.78 காணப்படுவதுடன் தற்பொழுது இடது கரையானது மகாவலி மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு மகாவலி தொகுதி அலுவலகங்கள் எட்டைக் கொண்டுள்ளதுடன் நிர்வாக காணிகள், விவசாயம், நீர்ப்பாசனம், சமூக விருத்தி, தொழில்நுட்ப ஆகிய பிரிவுகளின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றன.

நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட புனர்நிர்மாணங்கள்




நீர்ப்பாசன புனர்நிர்மாண நடவடிக்கைகள் – விநியோகக் கால்வாய்கள் (Distribution Canal)




நீர்ப்பாசன புனர்நிர்மாண நடவடிக்கைகள் – களக் கால்வாய்கள் (Field Canal)




புனர்நிர்மாண நடவடிக்கைகள் – வடிகாலமைப்புக் கால்வாய்கள் (Drainage Canals)






## சி (C) வலயம்

### வலயம் தொடர்பான அறிமுகம்

துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்குரிய மகாவலி "சி" வலயமானது "பின்தென்ன" எனும் பெயரில் அழைக்கப்படுகின்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க பிரதேசத்தின் ஒரு பகுதிக்கும், "புலதிசி" என்று அழைக்கப்படுகின்ற எனும் பெயரில் அழைக்கப்படுகின்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க பிரதேசத்தின் ஒரு பகுதிக்கும் உரிய விசேட வலயமாகும்.

பதுளை, அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய மூன்று மாவட்டங்களையும் எல்லையாகக் கொண்டு அமைந்துள்ளதுடன், மகியங்கனை, தெஹிஅத்த கண்டிய, திம்புலாகல பிரதேச செயலகங்கள் மூன்றையும் கொண்டுள்ளதுடன், தொகுதி முகாமைத்துவ அலுவலகங்கள் 07 உம், அலகு முகாமைத்துவ அலுவலகங்கள் 31 ஐயும் கொண்டுள்ளது. வலயத்திற்குச் சொந்தமான பிரதான நிர்வாக நகரமாக தெஹிஅத்த கண்டிய உள்ளதுடன், வலயத்திற்குச் சொந்தமான மகாவலி வலது கரைப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள "சி" வலயமானது மேற்கே மகாவலி கங்கைகயும், கிழக்கே வலது கரை உள்ளகப் பள்ளத்தாக்குக் கால்வாய் மற்றும் உல்ஹிடிய – ரத்கிந்த நீர்த்தேக்கத்தை அண்டிய வலது கரையின் பிரதான கால்வாயையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

வலயத்தில் 22406 நீர்ப்பாசனக் காணிகளில் பயிரிடுவதற்காக 2039 கி.மீ. அளவான நீர்ப்பாசனக் கால்வாய் முறைமையின் முலம் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக 56 குளங்கள் மூலமும், மற்றும் உல்ஹிடிய ரத்கிந்த நீர்த்தேக்கம் மூலம் நீரை சேகரித்தல் முன்னெடுக்கப்படுகின்றது. உழவர் அமைப்புக்களின் எண்ணிக்கை 200 ஆகும்.

மகாவலி சி வலயமானது தெஹிஅத்த கண்டியவை பிரதான நகரமாகக் கொண்டு வேகமாக அபிவிருத்தி அடைந்து வருகின்ற விவசாய வலயமாகும். இதன் பிரதானமான விவசாய பயிராக நெல் காணப்படுவதுடன், தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு 4% ஆகும். குடியேற்றவாசிகளை குடியேற்றி அவர்களுக்குப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு அவசியமான காணிகளை வழங்குதல், குடிநீர் மற்றும் வீட்டுப் பாவனைகளுக்கு நீரை வழங்குதல், மின்சாரம் உட்பட ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்ட வலயமாகும். இவ்வலயத்தில் விவசாய நிலங்களுக்கு அவசியமான நீர்ப்பாசன நீரை மகாவலி அதிகார சபையின் மூலம் முன்னெடுக்கப்படுவதுடன் 100% இற்கும் அதிகமான வினைத்திறன் பெறுமதியைக் கொண்டுள்ளது. மகாவலி இளம் சமூகத்தை முதன்மையாகக் கொண்ட பயிர்ச் செய்கை கிணறுகளை அண்டி பழப் பயிர்ச் செய்கை, பாதுகாப்பு வீடுகளுக்குள் பயிர்ச் செய்கை, அலங்கார மீன் வளர்ப்பு ஆகியவை முதன்மையான இடத்தைக் கொண்டுள்ளன. சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் பாரிய பணிகளை நிறைவேற்றுகின்ற இவ்வலயமானது உயிர் பல்வகைமையை பாதுகாப்பதற்காக விசேட சுற்றாடல் பாதுகாப்பு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி உள்ளது. வலயத்தின் மக்களை அடிப்படையாகக் கொண்ட நிர்வாக அமைப்பானது அதிகார சபையின் பணிகளை மக்களுக்கு மேலும் நெருக்கப்படுத்தி உள்ளது.

நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்

தொகுதிக் குழு – சிரிபுற



தொகுதிக் குழு – கிராந்துருகோட்டை









விஜேபுற 403/D12 கால்வாயை புனர்நிர்மாணம் செய்தல்

மல்தெணிய கால்வாயின் புனர்நிர்மாணம் செய்தல்

தாபன அபிவிருத்திப் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்





உலக நீர் தினக் கொண்டாட்டம்





வலயத்தின் மதச் செயற்பாடுகளை மேம்படுத்துதல்.





மகளிர் தின நிகழ்ச்சித் திட்டம் – மெதகம

விளையாட்டுக் கழகத்தை நிறுவுதல்




# டி (D) வலயம்

### வலயம் தொடர்பான அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு மெதிரிகிரிய பிரதேசத்தில் 2004 ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ள மகாவலி “டி” வலயமானது 03 தொகுதிகளை உள்ளடக்கி உள்ளது. அவை யாதெனில் பிசோபுற, சூரியபுற மற்றும் மீகஸ் வாவி ஆகியவை ஆகும். பிசோபுற தொகுதியானது மொரகஹகந்த களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது குடியேற்றப் பெருநகர் ஆகும். பிசோபுற தொகுதியானது 07 அலகுகளையும் (தஹம் வாவி, பண்டார வாவி, பிசோபுற, நபட வாவி, மெதிரிகிரிய, திவுலன்கடவல, புதிய நகரம்) மற்றும் சூரியபுற தொகுதியானது 02 அலகுகளையும் (சமகிபுற, சூரியபுற), மீகஸ் வாவி தொகுதியானது 04 அலகுகளையும் (மீகஸ் வாவி, தம்சோபுற, ஜயகம்புற, தியசென்புற) உள்ளடக்கியவையாகும்.

வடக்கே திருகோணமலை மாவட்டத்தின் கந்தலைப் பிரதேசம் வரையிலும், கிழக்கே சேறுவில பிரதேசம் வரையிலும், தெற்கு மற்றும் மேற்கே பொலன்னறுவை மாவட்டத்தின் லங்காபுற, ஹிங்குரன்கொட பிரதேசம் வரையிலும் பரந்து விரிந்து காணப்படுகின்றது.

**தாபன அபிவிருத்திப் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

சூரியபுற ஹெலம்ப ஓயா அணை, தர்ஷனபுற அணை மற்றும் சூரியபுற கிம்புல கால்வாய் அணை நிர்மாணித்தல்.

மீகஸ் வாவியின் சேற்றுப் படிவுகளை அகற்றுதல்.

அம்பகஸ் வாவி டி3 விவசாய வழியை நிர்மாணித்தல் – மீகஸ் வாவி






**மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.**

**பாரியளவான புற்றரை வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்**

ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பு – 56 ஏக்கர்

பயன்பாட்டிற்குக் கொள்ள முடியுமான நிலப்பரப்பு – 40 ஏக்கர்

பிரித்து வழங்கப்பட்ட நிலப்பரப்பு – 19 ஏக்கர்

பயிரிடுதல் ஆரம்பிக்கப்பட்ட நிலப்பரப்பு – 17 ஏக்கர்

   

**விவசாய அபிவிருத்திப் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

**தேசியப் பொருளாதாரத்திற்கான பங்களிப்பு**

மொத்த பண்ணைகளின் எண்ணிக்கை – 17

புற்றரை விளைச்சலை வழங்கியமையால் ஒரு பண்ணையில் அதிகரித்த பாலின் அளவு – 05 லீட்டர்

அதற்கமைய மொத்த பண்ணைகளிலும் அதிகரித்த பாலின் அளவு (17 X5L X 30 = 2550L) – 2550 லீட்டர்

மாதாந்தம் கிடைக்கப் பெற்ற நிதி முன்னேற்றம் (2550L X150.00 ) – ரூ. 382,500.00

  

   

   

**தாபன அபிவிருத்திப் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**




## ஈ (E)வலயம்

### வலயம் தொடர்பான அறிமுகம்

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரம் மகாவலி அதிகார சபை நிறுவப்பட்ட பின்னர் உலர் வலயங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு கொத்மலை நீர்த்தேக்கம், ரன்தெணிகல நீர்த்தேக்கம் மற்றும் ரண்தம்பே நீர்த்தேக்கங்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் காரணமாக தூண்டுதலால் பாதிக்கப்பட்டவர்களை மீள குடியமர்த்துவதற்காக மற்றும் நீர்த்தேக்கம் அமைப்பதற்கு சுவீகரிக்கப்பட்ட காணிகளின் நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்காக விக்டோரியா விசேட வலயம் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறே, 2019 ஆம் ஆண்டில் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மினிப்பே மற்றும் வில்கமுவ பிரதேச செயலாளரின் அதிகார பிரதேசங்கள் மகாவலி “ஈ” வலயமாக பெயரிடப்பட்டு உள்ளது. அதற்கமைய தற்பொழுது கொத்மலை, விக்டோரியா விசேட அதிகார பிரதேசமும், மிணிப்பே மற்றும் வில்கமுவ தொகுதிகளும் உள்ளடங்கலாக ஒட்டு மொத்தமும் மகாவலி “ஈ” வலயமாக ஒரே வதிவிட வணிக முகாமையாளரின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. இலங்கை வரலாற்றிலேயே மிக முக்கியமான பிரதேசமாகத் திகழ்கின்ற கொத்மலை மற்றும் மகாவலி கங்கைக்குக்குக் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள மிணிப்பே அணைக்கட்டு உட்பட நீர்ப்பாசன கட்டமைப்புக்கள் பலவற்றைப் போன்றே மகாவலி அதிகார சபையின் இதயமாக கருதப்படுகின்ற கொத்மலை, விக்டோரியா, ரன்தெணிகல, ரண்தம்பே மற்றும் பொல்கால்லை நீர்த்தேக்கங்களும் இவ்வலயத்தில் உள்ளடங்குகின்றன.

“ஈ” வலயத்திற்குச் சொந்தமான நிர்வாக மாவட்டங்களான மாத்தளை, கண்டி, நுவரெலியா மாட்டங்கள் பெயரிடப்பட முடியும் என்பதுடன், காணி நிர்வாக நடவடிக்கைகள் மகாவலி அதிகார சபையினால் சுவீகரிக்கப்பட்ட பிரதேசங்களில் மாத்திரம், அதாவது விக்டோரியா, கொத்மலை பிரதேசங்களில் மாத்திரம் முன்னெடுக்கப்படுகின்றன. மகாவலி “ஈ” வலயமாக கருதுவதற்கு காரணமான தொகுதிகள் இரண்டான மிணிப்பே மற்றும் வில்கமுவ தொகுதிகள் இரண்டிலும் 10 அலகுகள் (ஹுந்தகனாவ, மொரயாஹுசலக, உல்பதகம, கொலொன்கொட, நுககொல்ல, வில்கமுவ, ஹெட்டிபொலதேவகிரிய, நாமிணிகம என்பன காணப்படுகின்றன). “ஈ” வலயத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 75 உள்ளடங்கும் விதமாக 28,059 குடும்பங்களின் சனத்தொகை 94,108 வாழ்கின்றனர். விவசாய பின்பிலத்தை கருத்திற் கொள்ளும் போது விவசாய காலநிலை வலயம் - IL2 இற்குச் சொந்தமானதாக காணப்படுவதுடன் மண் வகை - Reddish Brown Latasolic Soil ஆகும். இவ்வலயத்தின் வருடாந்த மொத்த மழை வீழ்ச்சி 1500 - 1800 mm ஆகும்.

கொத்மலை, விக்டோரியா நீர்த்தேக்க செயற்திட்டம் காரணமாக காணிகளை இழந்தவர்களின் குடும்பங்கள் 3500 இற்கு கொத்மலை வலயத்தில் குடியேற்றப்பட்டு உள்ளதுடன், விக்டோரியா ரன்தெணிகல நீர்த்தேக்கங்களை அமைப்பதன் காரணமாக காணிகளை இழந்த 500 குடும்பங்கள் இவ்வலயத்தில் மீள் குடியமர்த்தப்பட்டு உள்ளனர்.

இதற்கு மேலதிகமாக, நீர்த்தேக்க செயற்திட்டங்கள் காரணமாக அகற்றப்பட்ட நகரங்களுக்குப் பதிலாக திஸ்பனே, கொத்மலை, அதிகாரிகம, குருதெணிய, குண்டசாலை, திகன, தெல்தெணிய புதிய நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டு உள்ளன. கடுகஸ்தோட்டையை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளும் இவ்வலயத்தில் உள்ளடங்குகின்றன.

2021 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட திட்டத்திற்கு அமைய விக்டோரியா கொத்மலை பிரதேசங்களில் காணி கடமைகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாத்திரம் திறக்கப்பட்டுள்ளதுடன், மிணிப்பே மற்றும் வில்கமுவ ஆகிய தொகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முன்னுரிமை வழங்கப்பட்டு இருந்தன. அவ்வாறே, மிணிப்பே வன ஜீவராசிகள் திணைக்களத்திற்குச் சொந்தமான 18 வட்டாரங்கள் மீண்டும் வர்த்தமானி இடுவதற்காக தற்பொழுது சூழலியல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒன்று

திட்டமிடப்பட்டு வருகின்றது. பின்வரும் பிரிவுகளின் கீழ் இவ்வலயத்தின் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**வியாபார அபிவிருத்திப் பிரிவின் பணிகள்**









**<u>தாபன அபிவிருத்திப் பிரிவின் பணிகள்</u>**









# ஜீ வலயம்

**வலயம் தொடர்பான அறிமுகம்**

மகாவலி பெருந் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது அணையாக பொல்கொல்ல நீர் விநியோக அமைப்பானது நீர் மார்க்கங்கள் இரண்டின் ஊடாக நீர் விடுவிக்கப்படுகின்றது. போவதென்ன நீர்த்தேக்கமானது அபன் கங்கையில் இருந்து பராக்கிரம சமுத்திரத்திற்கும், எலஹர கால்வாயின் ஊடாக கிரிதலை, மின்னேரியா, கவுடுல்ல மற்றும் கந்தளாய் நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்கப்படுகின்றன.

1982 இலிருந்து 1999 வரை "ஜீ" வலயமானது மகாவலி "பி" வலயத்தின் தொகுதி அலுவலகமாக நடாத்திச் செல்லப்பட்டு உள்ளது. பின்னர் அது 1999 இல் "ஜீ" வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளது. ஆரம்பத்தில் மகாவலி "ஜீ" வலயமானது பகமூண மற்றும் அத்தனகடவல ஆகிய தொகுதிகள் இரண்டை உள்ளடக்கி இருந்தது.

மகாவலி பெருந் திட்டத்தின் இறுதி நீர்த்தேக்க செயற்திட்டமாக காணப்படுவது மொரகஹகந்த களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டமாகும். செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் லக்கல, பல்லேகம மற்றும் நாவுல பிரதேச செயலாளரின் அதிகார பிரதேசங்களில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 24 இற்கு தாக்கம் செலுத்தியது. ஆகையால் மொரகஹகந்த, களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் காரணமாக தமது ஊருகளில் இருந்து நீங்கிச் சென்ற மக்கள் களு கங்கை இடது கரை மற்றும் களு கங்கை வலது கரைகளில் மீள் குடியமர்த்தப்பட்டனர்.

அதற்கமைய, "ஜீ" வலயத்திற்கு 4,524 ஹெக்டயர் ஒருங்கிணைக்கப்பட்டு மொரகஹகந்த வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது. 2010 ஆம் ஆண்டு களு கங்கை இடது கரைப் பிரதேசத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக வெல்லெவெல மற்றும் களு கங்கை வலது கரைப் பிரதேசத்தின் நிர்வாகத்திற்காக குருவெல ஆகிய தொகுதிகள் 2012 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன.

மொரகஹகந்த வலயமானது 15,058.41 ஹெக்டயர் இற்கு பரந்து விரிந்து காணப்படுவதுடன் மொரகஹகந்த வலயத்திற்கு வடக்கே தியபெதும - கடுகெலியாவவும், கிழக்கே களு கங்கை - வஸ்கமுவவும், தெற்கே நகல்ஸ் மலைத்தொடரும், மேற்கே கிரிதலை - மின்னேரியா இயற்கை ஒதுக்கும் அமைந்துள்ளன. மொரகஹகந்த வலயமானது வட மத்திய மாகாணத்தின் பொலன்னறுவை மாவட்டத்திற்கு மற்றும் மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்திற்கு உரித்தாகின்றது.

- வலயத்திற்குச் சொந்தமான மாவட்டங்கள் - பொலன்னறுவை மற்றும் மாத்தளை
- தொகுதிகள் - 04
- அலகு அலுவலகங்கள் - 17
- குடும்பங்களின் எண்ணிக்கை - 13,612
- சனத்தொகை - 56,441

விவசாய உற்பத்தி விளைத்திறனை அதிகரித்தல் மற்றும் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு அவசியமான உற்பத்திக் கருவிகளை உருவாக்குகின்ற, நவீன விவசாய தொழில்நுட்பங்களை விவசாய உற்பத்தியாளர்களுக்குக் கொண்டு செல்கின்ற சுற்றாடல் தோழமை மிக்க விவசாய சமூகத்தின் அமைப்பாக உழவர் அமைப்புக்களை உருவாக்குவதல் மற்றும் அதற்காக செயற்படுதல்.









அத்தனகடவல வித்துப் பண்ண

பாதுகாப்புப் பண்ணை








## “எச்” வலயம்

**வலயம் தொடர்பான அறிமுகம்**

கலா ஓயாவை மையமாகக் கொண்டு 1977 – 1978 காலப் பகுதியில் 31,500 குடும்பங்களுக்கு ஈர நிலத்தில் 2 ½ ஏக்கர்களும் (01 ஹெக்டயார்), உலர் நிலத்தில் ½ ஏக்கர்களும் பிரித்து வழங்கப்பட்ட மகாவலி முன்மொழிவுத் திட்டத்தின் அதி விசேட வலயமாக மகாவலி “எச்” வலயம் கருதப்படுகின்றது. இதில் விவசாய நிலங்கள் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர்களும் (நீர்ப்பாசன மற்றும் உலர்நில) காணப்படுகின்றது. **மகாவலி முன்மொழிவுத் திட்டத்தின் தொடக்க குடியேற்ற வலயமான இதில்** வதிவிட வணிக முகாமையாளரின் அலுவலகத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற பிரதானமாக 08 பிரிவுகள் காணப்படுகின்றன. அதாவது, தொழில்நுட்ப சேவைப் பிரிவு, விவசாய அபிவிருத்திப் பிரிவு, மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, காணிப் பிரிவு, சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவு, வணிக அபிவிருத்திப் பிரிவு, கணக்குப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு என வலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு பங்களிப்பு வழங்கி செயற்பட்டு வருகின்றன.

வலயத்தின் அமைவிடமாக மேற்கே, அநுராதபுரம் – புத்தளம் பிரதான வீதியும், வடக்கே தெற்குக் ஆற்றங்கரைக் கால்வாயும், தெற்கே பலலுவெவ ஆற்றங்கரை – உஸ்கல சியபலன்கமுவ ஊடாக ராஜாங்கன ராஜாங்கன ஆற்றங்கரைக் கால்வாயை எல்லையாகக் கொண்டுள்ளதுடன் மேலதிகமாக காகம கடியாவ மற்றும் உஸ்கல சியபலன்கமுவ ஆகிய பழமையான குடியேற்ற பிரதேசங்களையும் உள்ளடக்குகின்றது.

இலங்கை மகாவலி அதிகார சபை, எச் வலயம், தம்புத்தேகம வதிவிட வணிக முகாமையாளரின் அலுவலகத்தில் பிரதானமாக 08 பிரிவுகள் காணப்படுகின்றன. அதாவது, தொழில்நுட்ப சேவைப் பிரிவு, விவசாய அபிவிருத்திப் பிரிவு, மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, காணிப் பிரிவு, சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவு, வணிக அபிவிருத்திப் பிரிவு, கணக்குப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு என வலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு பங்களிப்பு வழங்கி செயற்பட்டு வருகின்றன.

தொழில்நுட்பச் சேவைப் பிரிவின் கீழ் களத்தின் நொச்சியாகம தொகுதி அலுவலகத்தை நிர்மாணிக்கும் பணிகள் நிறைவடைந்து உள்ளன. நல்லச்சிய வான் கதவு கட்டுமானமும் நிறைவடைந்துள்ளது. அதன்படி, 2022 ஆம் ஆண்டில் தொழில்நுட்பத் துறைக்கு வழங்கப்பட்ட இலக்கு வேலைகளில் 100% பௌதீக முன்னேற்றத்தையும் 100% நிதி முன்னேற்றத்தையும் அடைய முடிந்தது. நீர்ப்பாசன செழுமைத் திட்டத்தின் கீழ், எச் பிராந்தியத்தில் பெரும் விவாதத்திற்கு உள்ளான மஹா பெல்லங்கடவில் வான் கதவு கட்டமைப்புகளை நிர்மாணிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு சுமார் 40% கட்டுமான முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. உலக வங்கியின் ஆதரவுடன் கலா வாவி இடது கரை பிரதான கால்வாயின் கதவுகள் மற்றும் கட்டமைப்புகளை திருத்துவதற்கான ஒப்பந்தம் (ஒப்பந்தப் பெறுமதி 160 மில்லியன் ரூபாவுடன்) ஆரம்பிக்கப்பட்டமை 2022 ஆம் ஆண்டு விசேட நிகழ்வாகும். இப்பணிகள் முடிவடைந்தால், கல வாவி இடது கரையின் நீர் திறனை அதிகரிக்க முடியும். 2022/2023 பெரும் போகத்தைத் தொடங்குவதற்கு தண்ணீர் திறக்கும் வரை கால்வாயில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. போகம் ஆரம்பிக்கப்பட்டதும் முன்னெடுக்க முடியுமான ஏனைய கட்டுமானங்கள் களத்தில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**2021/2022 பெரும் போகம் (ஜனவரி முதல் மார்ச் வரை)**

| கால்வாய் | பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு | மதிப்பிடப்பட்ட நீரின் அளவு | | பயன்படுத்தப்பட்ட நீரின் அளவு | | நீர் செயல்திறன் (Ft) |
|---|---|---|---|---|---|---|
| | | **mcm** | **A.cft.** | **Mcm** | **A.cft.** | |
| வலது கரை பிரதான கால்வாய் | 14,028.00 | 185.00 | 149,850.00 | 174.20 | 141,102.00 | 4.02 |
| இடது கரை பிரதான கால்வாய் | 6,642.00 | 75.00 | 60,750.00 | 62.90 | 50,949.00 | 3.07 |
| பாரிய கால்வாய் | 4,720.00 | 40.00 | 32,400.00 | 21.30 | 17,253.00 | 1.46 |
| கூட்டுத் தொகை | **25,390.00** | **300.00** | **243,000.00** | **258.40** | **209,304.00** | **3.30** |

**2022 சிறு போகம் (ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை)**

| கால்வாய் | பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு | மதிப்பிடப்பட்ட நீரின் அளவு | | பயன்படுத்தப்பட்ட நீரின் அளவு | | நீர் செயல்திறன் (Ft) |
|---|---|---|---|---|---|---|
| | | **mcm** | **A.cft.** | **Mcm** | **A.cft.** | |
| வலது கரை பிரதான கால்வாய் | 13,598 | 186.5 | 151,065 | 164.3 | 133,083 | 3.91 |
| இடது கரை பிரதான கால்வாய் | 6,392 | 69.4 | 56,214 | 63.2 | 51,192 | 3.20 |
| பாரிய கால்வாய் | 4027 | 23.6 | 19,116 | 22.3 | 18,063 | 1.79 |

2022 ஆம் ஆண்டில், நிலையான விவசாயத்திற்காக பிராந்திய விவசாயிகளை ஈர்ப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன், பூச்சி எதிர்ப்பு வலைகள்/பயிர் காப்பகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நோய் மற்றும் பூச்சி சேதங்களைக் குறைத்தல், களைகளைக் கட்டுப்படுத்த பொலித்தீன் தழைக்கூளம் பயன்படுத்துதல், நீர்ப்பாசனத்திற்கான தெளிப்பு நீர் வழங்கலுக்காக தெளிப்பு நீர் வழங்கல் முறைமையைப் பயன்படுத்துவதன் மூலம் நீர் செயல்திறனை அதிகரிக்கவும், பாதுகாப்பான உட்புற சாகுபடி மூலம் அதிக வருமானம் ஈட்ட விவசாயிகளுக்கு வழிகாட்டவதற்கு இவ்வாண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.





தேசிய உற்பத்திக்கு பிரதான பயிர்களுக்காக மகாவலி எச் வலய பங்களிப்பு மற்றும் அதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்திட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் - 2022





நெற் பயிர்ச் செய்கை மேம்பாடு




## எல் வலயம்

**வலயம் தொடர்பான அறிமுகம்**

1984 ஆம் ஆண்டில் காணி ஆணையாளர் திணைக்களத்தினால் குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பிரதேசமானது 1988 ஆம் ஆண்டில் 562 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 163,000 ஹெக்டயார் ஆக காணப்பட்ட இவ்வலயமானது 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி 1487/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிலப்பரப்பானது 199209 ஆக விரிவுபடுத்தப்பட்டு உள்ளது. இதில் 16857 ஹெக்டயர் நிலப்பரப்பின் அப்விருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு உள்ளன. 03 தொகுதிகளில் 16 அலகுகள் நிறுவப்பட்டு 6,295 குடும்பங்கள் குடியேற்றப்பட்டு உள்ளன. 47 குளங்கள் மூலம் 980 ஹெக்டயர் வயல்களுக்கு நீர் விநியோகிக்கப்படுகின்றது. இவ்வலயத்தில் நிலப்பரப்பானது வடக்கே முல்லைதீவு – வவுனியா பிரதான வீதியும், கிழக்கே முல்லைதீவு கடற்கரையும், தெற்கே புல்மோட்டை கெபிதிகொல்லாவ பிரதான வீதியும், மேற்கே சிங்ஹயா உல்பதஹின்ன திரிகோண ஸ்தளத்தின் ஊடாக மகஹெட்டியாவஹின்ன மலைத்தொடரின் ஊடாக கோடானது புலியன்குளம் வவுனியா வீதியின் ஊடாக எல்லையைக் கொண்ட பிரதேசம் பூராக பரந்து காணப்படுகின்றது.

**முன்னெடுக்கப்பட்ட விசேட பணிகள் மற்றும் அதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு**





விவசாயக் கிணறுகளை அமைத்தல் – 264









விவசாயிகளுக்கான பயிற்சிப் பட்டறை – 164
நிகழ்ச்சித் திட்டங்கள்





காணிக் கச்சேரிகளை நடாத்துதல்





“உங்கள் மகாவலி உரிமை வீட்டிற்கே” உரித்து வழங்குதல்






வணிக காணி பயனாளிகளுக்கு நீண்ட கால குத்தகை உரித்து வழங்குதல்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உபகரணத் தொகுதி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்.




# ஹுருளு வாவி வலயம்

## வலயம் தொடர்பான அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1997.07.16 ஆம் திகதிக்குரிய இலக்கம் 984/5 உடைய அறிவித்தல் மூலம் ஹுருளு நீர் வழங்கும் கால்வாயின் நீர் முகாமைத்துவத்தை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் 1998.05.09 ஆம் திகதி ஹுருளுவெவ வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகமானது தம்புள்ளை பெல்வெஹரவில் நிறுவப்பட்டது.

ஹுருலுவெவ நீரேந்து பிரதேசத்தில் இருந்து பெறப்படும் நீரின் அளவு பயிர்ச்செய்கை நீர் தேவைக்கு போதுமானதாக இல்லாததால், பொல்கொல்ல போவதென்ன திருப்பு நீரை லெனதொரவில் பெறுவதற்காக ஹுருலுபோஷித கால்வாய் 1973-1976 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. மகாவலி "எச்" வலயத்தின் கட்டுப்பாட்டில் இருந்த கந்தளம தம்புலுஓயா நீர்த்தேக்கங்களால் ஊட்டப்படும் மடாடுகம மற்றும் கல்கிரியாகம பிரிவுகள் வினைத்திறனான நீர் முகாமைத்துவம் மற்றும் சேவையை இலகுபடுத்துவதற்காக 15.05.2008 முதல் ஹுருலுவெவ வலயத்துடன் இணைக்கப்பட்டன.

அதற்கமைய அநுராதபுர மாவட்டத்தில் கெகிராவை, பலாகல, பலுகஸ் வாவி மற்றும் கலென்பிதுனுவெவ ஆகிய பிரதேச செயலாளர் தொகுதிகளுக்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 49 உம், மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ளை மற்றும் நாவுல பிரதேச செயலாளர் தொகுதிகளுக்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 32 உம், கல்கிரியாகம, மடாடுகம, பளுகஸ்வெவ, களுந்தேவ மற்றும் சீகிரியா ஆகிய தொகுதிகள் 05 இற்கும் உட்படுகின்றன.

மாத்தளை மாவட்டத்தில் உள்ள லெனகெதர சுரங்கப் பாதை நீர்நிலையிலிருந்து 33 கி.மீ. அனவான ஹுருளுபோசித கால்வாயும் அங்கிருந்து 33 கி.மீ. சீகிரி ஓயா மற்றும் தல்கொட்டே ஏரி, ஹிரிவடுன்ன குளம், ஹபரன ஏரி மற்றும் யான் ஓயா ஊடாக ஹுருலுவெவ வரையிலான பகுதியும், கந்தளம நீர்த்தேக்கத்தின் மூலம் ஊட்டப்படுகின்ற கலா வாவி வரையிலான மகாவலி பெருந் திட்டத்தின் "எச்" 06, 07, 08 எனக் குறிப்பிடப்பட்டு உள்ள கந்தளம பள்ளத்தாக்கும், தம்புளு ஓயா நீர்த்தேக்கத்தில் இருந்து கலா வாவி வரையிலான மகாவலி பெருந் திட்டத்தின் "எச்" 09 எனக் குறிப்பிடப்பட்டுள்ள தம்புளு ஓயா பள்ளத்தாக்கு வரையிலும் பரந்து காணப்படுகின்ற அண்ணளவாக 14,266 ஹெக்டயர் உடைய இவ் வலய எல்லையில் உலக மரபான சீகிரியாவும், பிதுரங்கல ரஜமஹா விகாரையும், நாட்டுப்புறக் கதைகளின்படி தொல்பொருள் மதிப்புமிக்க இடமாகக் கருதப்படும் கொடகல ஸ்ரீ பியங்கல ரஜமகா விகாரையும், காண்டாரத்துடனான பழைய ரத்மல்கந்த ரஜமஹா விகாரை, , 68 கற் சிற்பங்களைக் கொண்ட அழகமுகந்த ரஜமஹா விகாரை, மற்றும் போகஹவெவ ஆலயம் ஆகிய வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களையும், நாமல் உயன இளஞ்சிவப்பு குவார்ட்ஸ் மலையும் அமைந்துள்ளது.

அதிக அடர்த்தி கொண்ட நடவு செயல்விளக்கத்தை அமைப்பதற்காக, JICA ஆதரவின் கீழ் ஹுருலுவெவ பிரதேசத்தில் பெறப்பட்ட 1000 (கிலோ) சோள விதைகள் 200 விவசாயிகளுக்கு 5 (கிலோ) வீதம் ஒரு விவசாயிக்கு 3/4 ஏக்கர் பயிரை நிறுவுவதற்கு விநியோகிக்கப்பட்டது. இங்கு பளுகஸ்வெவ தொகுதியில் நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய 172 விவசாயிகளும், சீகிரிய தொகுதியில் மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய 12 விவசாயிகளும், கல்கிரியாகம தொகுதியில் ஏழு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய 16 விவசாயிகளும் பயிர்ச்செய்கை தொடர்பாக அறிவிக்கப்பட்டு 150 ஏக்கருக்கு விதைகள் வழங்கப்பட்டன.





பொலிடனல் நிர்மாணித்தல்





ஹிருலுவாவி வலயத்தில் கல்கிரியாகம தொகுதியில் ரணவ வாவி மற்றும் மடாடுகம தொகுதியின் எலகமுவ வாவி ஆகியவற்றில் நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் ஒன்றரை இலட்சம் (150,000) மீன் திரள்களை விடுவித்தல்.







ஹிருலுவாவி வலயத்தில் கல்கிரியாகம மற்றும் மடாடுகம தொகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட சமூர்த்தி பயனாளிகள் எட்டு (08) பேருக்கு புதிய மாட்டுப் பட்டிக்கு அவசியமான மூலப் பொருட்கள் (கூரைத் தகடு, சீமெந்து, மெடல், மணல், ஆணி, கம்பி) மற்றும் நீர்த் தொட்டிகள் வழங்குதல்.




## ரம்பகன் ஓயா வலயம்

### வலயம் தொடர்பான அறிமுகம்

1979 இலக்கம் 23 ஐ உடைய மகாவலி அதகார சபைச் சட்டத்தின் 3/1 ஆம் பிரிவின் கீழ் விசேட செயற்திட்ட பிரதேசமாக 2000.05.07 ஆம் திகதிக்குரிய இலக்கம் 1130 (13) ஐ உடைய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வலயமாகும். அதற்கமைய 2010.09.01 ஆம் திகதியில் இருந்து மகா ஓயா மற்றும் பதியதலாவ பிரதேச செயலாளர் தொகுதிகளில் நிலவுகின்ற நீர் மற்றும் ஏனைய இயற்கை வளங்களை உபயோகித்து பிரதேசத்தின் நிலைபெறுதகு அபிவிருத்தியை இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் முன்னெடுக்கப்படுவதாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் நிலவுகின்ற வறுமையைப் போக்குவதல் மற்றும் மொத்த தேசிய உற்பத்திக்கு வழங்க வேண்டிய பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ள இவ்வபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் நேரியல் தாபனங்களுடன் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டமாக செயற்படுத்தப்படும். இதற்கமைய ரம்பகெண்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தின் நீர்ப்பாசன காணி அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

ரம்பகன் ஓயா வலயமானது அம்பாறை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களைக் கொண்டது. மகா ஓயா மற்றும் பதியதலாவ பிரதேச செயலாளர் தொகுதியானது கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திற்கு உரியது ஆகும். மகா ஓயா பிரதேச செயலாளர் தொகுதியானது கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் 17 ஐ உள்ளடக்கி உள்ளதுடன், பதியதலாவ பிரதேச செயலாளர் தொகுதியானது 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கி உள்ளன. ரிதிமாலியத்த பிரதேச செயலாளர் தொகுதியானது ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்திற்கு உரியது ஆகும். ரிதிமாலியத்த பிரதேச செயலாளர் தொகுதியானது கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 42 ஐ உள்ளடக்கி உள்ளது. 2021 ஆம் ஆண்டாகும் போது வலயத்தின் மொத்த சனத்தொகை 110,502 ஆக காணப்பட்டதுடன், மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 35,102 ஆகும்.

இலங்கை மகாவலி அதிகார சபையினால் 2010 ஆம் ஆண்டு மகா ஓயா பிரதேசத்தில் வதிவிட வணிக அலுவலகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. பொல்லேபெத்த, பதியதலாவ மற்றும் ரிதிமாலியத்த ஆகிய தொகுதி அலுவலகங்கள் மூன்று ரம்பகன் ஓயா வலயத்தில் செயற்பட்டு வருகின்றன.

ரம்பகன் ஓயா வலயமானது அடுத்த வலயங்களை விட கவனத்தில் கொள்ள வேண்டிய அடையாளங்களைக் கொண்டுள்ளது. அதில் பிரதான அடையாளமாக காணப்படுவது யாதெனில் பொல்லேபெத்த பிரதேசத்தில் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றமையாகும். பேராசிரியர் ஸ்பீடெல் (1940 - 1950) இந்த ஆதிவாசி சமூகம் குறித்து அவருடைய சஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரதேசமானது சத்தாதிஸ்ஸ மன்னனின் யுகத்திற்கு உரியதாகும். ஆகையால் தொல்பொருளியல் சிதைவுகள் பல காணப்படுவதுடன் புராதன விகாரைகளும் அமைந்துள்ளன.

**2022 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட சிறப்புப் பணிகள் மற்றும் தேசியப் பொருளாதாரத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு**

- தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இனங்காணப்பட்ட குறைந்த வருமானம் பெறும் சிறார்களுக்கு பாடசாலை புத்தகங்கள் மற்றும் வினாத்தாள்களை அச்சிடுவதற்கான உபகரணங்களை வழங்கி பிள்ளைகளின் கல்வியின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்தல்.
- தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் தங்கள் வணிகங்களை மாற்றியமைக்க தொழில்முனைவோர் பயிற்சி திட்டங்களை நடத்துவதன் மூலமும் அதை எதிர்கொள்வதன் மூலம் அவர்களின் வணிகங்களை மேம்படுத்த பங்களிப்புச் செய்தல்.
- விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் விளையாட்டு திறன்களை வளர்ப்பதில் பங்களிப்புச் செய்தல்.
- ஏனைய செயற்பாடுகள் மூலம், வலய மக்களின் மனப்பான்மை வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தல் மற்றும் நோய்த்தடுப்பு திட்டங்களின் மூலம் அவர்களின் சுகாதார நிலையை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு செய்தல் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் அபிவிருத்தித் பிரிவானது தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது.



லாகுகல அலகின் பாலர் பாடசாலை





மிரிஸ்வெல்லந்த வாவி நிர்மாணித்தல்





முரடுகளை மட்டப்படுத்துதலை நிர்மாணித்தல்



வீதிகளுக்கு மோடர்கிரேடர் இடுதல்



பாடசாலைகளுக்கு மலசலகூடங்களை நிர்மாணித்தல்



பாடசாலைகளுக்கான நீர்ச் செயற்திட்டம்




# வலவ வலயம்

## வலயம் தொடர்பான அறிமுகம்

வலவ ஆற்று வெளியிடையானது 2442 சதுர கி.மீ. ஐக் கொண்டுள்ளதடன் அது இலங்கையில் பலாங்கொடை இரத்னபுரி மலைப் பிரதேசத்தில் இருந்து ஹம்பாந்தோட்டை/ ரன்ன தெற்கு கடற் கரையோரம் வரை பரந்து விரிந்து காணப்படுகின்றது. புராதன குளங்கள் பல நூற்றுக் கணக்கில் வலவ பள்ளத்தாக்கில் அமைந்துள்ளன.

உடவலவ பல்நோக்கு முன்மொழிவுத் திட்டம் 1963 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், உடவலவ நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டதும், அதற்கு இணக்கமாக குடியமர்த்தல்கள் மற்றும் விவசாய நிலங்களின் அபிவிருத்தி என்பன 1981 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டது ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் மூலமாகும்.

1979 ஆம் ஆண்டு இலக்கம் 23 ஐ உடைய இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய 1981/04/06 ஆம் திகதிக்குரிய இலக்கம் 137 ஐ உடைய வர்த்தமானி பத்திரிகை மூலம் கௌரவ காணி அபிவிருத்தி மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமிணி திஸாநாயக்க அவர்களால் வலவ வலயமானது வலவ விசேட அதிகார பிரதேசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 1982.01.01 ஆம் திகதியில் இருந்து வலவ வலயத்தில் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுகின்றன.

வலவ வலயத்தின் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டு தற்பொழுது 34 வருடங்கள் கடந்துள்ளதுடன், இக்காலத்தினுள் வலயமானது விரைவான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இவ்வலயமானது தென் மாகாணம், சப்ரகமுவ மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் ஆகிய 03 மாகாணங்களுக்குச் சொந்தமான ஹம்பாந்தோட்டை, இரத்னபுரி மற்றும் மொணராகலை ஆகிய 03 மாவட்டங்களுக்குரியது ஆகும்.

அங்குனுகொளபெலெஸ்ஸ, முரவெசிஹேன, சூரிய வாவி, மயுரபுற, சந்திரிகா வாவி, கிரிஇப்பன் வாவி மற்றும் செவனகல ஆகிய 07 தொகுதிகளைக் கொண்டுள்ளதுடன், 39 அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

வலயத்தில் உள்ள நிலப்பரப்புகள் தொடர்பாக தகவல்

- மொத்த நிலப்பரப்பு - ஹெக்டயர் 60,803
- நீர்ப்பாசன இடப்பரப்பு - ஹெக்டயர் 23,203
- பண்படுத்தப்பட்ட இடப்பரப்பு - ஹெக்டயர் 14,064
- புற் தரைகள், குள ஒதுக்குகள், தொல்பொருளியல் பிரதேசங்கள் போன்றவை - ஹெக்டயர் 24,536

வலவ வலத்தின் தாபன அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்திச் சபையின் வளப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட கேக் மாதிரிகளை நிர்மாணிக்கும் பயிற்சிப் பட்டறை





வலவ வலத்தின் தாபன அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்திச் சபையின் வளப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட வீட்டு மின் முறைமையைப் பொருத்தும் பயிற்சிப் பட்டறை



வலவ வலத்தின் முரவெசிஹேன தொகுதியின் தாபன அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்திச் சபையின் வளப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட பாடசாலை சீருடைகளை (ஆண், பெண் பிள்ளைகளின்) தைப்பதற்கான பயிற்சிப் பட்டறை





**2022.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் – வலய அடிப்படையில்**

| தொடர் இலக்கம் | வலயம் | 2022 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மில்.) | 2022-12-31 ஆம் திகதிக்கு செலவு செய்யப்பட்ட தொகை (ரூ.மில்.) | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1 | பி | 262.87 | 171.65 | 65 |
| 2 | சி | 482.64 | 183.30 | 38 |
| 3 | டி | 77.13 | 34.41 | 45 |
| 4 | மொரகஹகந்த | 56.84 | 36.97 | 65 |
| 5 | எச் | 190.80 | 94.01 | 49 |
| 6 | எல் | 60.47 | 27.51 | 45 |
| 7 | ரம்பகன் ஓயா | 92.40 | 26.39 | 29 |
| 8 | உடவலவ | 313.85 | 131.21 | 42 |
| 9 | இ | 329.88 | 91.79 | 28 |
| 10 | ஹுருளு வாவி | 20.34 | 10.45 | 51 |

# பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற பிரிவுகள்

1. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு
2. உள்ளக கணக்காய்வுப் பிரிவு
3. நீரியல் முகாமைத்துவ செயலகம்
4. கொள்முதல் பிரிவு

## 01. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

### வகிபாகங்கள்

- தாபனத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளிற்கு அமைய ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல் மற்றும் வருடாந்த திட்டத்திற்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- விசேட செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் பொருளாதார சமூக கணிப்பீடுகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல்.
- செயற்பாட்டுத் திட்டத்தில் மற்றும் செயற்திட்ட அறிக்கைகளில் உள்ள முன்னேற்றத்தை மாதாந்தம், காலாண்டிற்கு ஒரு முறை மற்றும் வருடாந்தம் மீளாய்வுக்கு உட்படுத்துதல். செயற்திட்ட மதிப்பீட்டு ஒருங்கிணைப்பு மற்றும் இயக்க ஒருங்கிணைப்புத் தொகுதி ஒன்றை சான்றுப்படுத்துதல்.
- தொழில்நுட்ப அறிக்கைகள், இயல்வாய்ப்பு அறிக்கை இயக்கல்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளைப் பாதுகாத்தல் மற்றும் பயன்பாட்டிற்கு வழங்குதல்.
- மகாவலி கணினி வலையமைப்பை இயக்குதல், தாபரித்தல் மற்றும் உத்தியோகபூர்வ வலைத் தளத்தை நிறுவுதல். இற்றைப்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொள்ளுதல்.
- ஆதிக்கத்திற்கு உட்படுகின்ற துறைகள் தொடர்பான ஆயவுகளை ஒருங்கிணைத்தல்.

## 02. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் (நி.பி. 133) இன் பிரகாரம் அதிகார சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டு உள்ளதுடன், நி.பி. 134 (1) இன் பிரகாரம் பிரதான உள்ளக கணக்காய்வானது நேரடியாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்படுகின்றது.

இலங்கை மகாவலி அதிகார சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவானது, இலங்கைக் குடியரசினால் வெளியிடப்பட்டுள்ள நிதிப் பிரமாணம் (Financial Reguations), நிர்வாக பிரமாணம் (Adminstration Regulations), காலத்திற்கு ஏற்ற விதத்தில் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க, இலங்கை மகாவலி அதிகார சபையின் நோக்கங்களை உறுதி செய்து கொள்வதற்காக, பரிசீலனைகள் கண்காணிப்புக்களின் மூலம் உள்ள கணக்காய்வுத் திட்டத்தை அமுல்படுத்தி, முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## வகிபாகங்கள்

வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் செயற்படுத்தும் போது, நிலவுகின்ற உள்ளக நிர்வாக ஒழுங்கு முறைகளுக்கு இணங்கியதாக மற்றும் நல்லாட்சிக் கொள்கைகளுக்கு இணங்கியதாக அமுல்படுத்தப்படுகின்றதா எனவும், மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் பொருளாதார ரீதியான பிரதிபலன்கள் (Value for Money) கிடைக்கின்றதா எனவும், கணக்காய்வு உசாவல்களின் கண்காணித்தல்கள் ஒப்பீடுகள், பௌதீக பரிசீலனைகள் என்பன இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனம் (ICA) மூலம் மற்றும் சர்வதேச கணக்கியல் தர நியமங்கள் (IAS) மூலம் வெளியிடப்பட்டுள்ள தர நியமங்களுக்கு அமைவாக, கணக்காய்வை மேற்கொண்டு மேலாண்மைக்கு அறிக்கையிடுதல்.

| | |
|---|---|
| அ | தவறுகள் மற்றும் மோசடிகளை வெளிப்படுத்துதல் மற்றும் தவிர்ப்பதற்காக அதிகார சபையில் அமுலில் உள்ள உள்ளக நிர்வாக முறைமையின் பலத்தை மதிப்பிடுதல். |
| ஆ | அதிகார சபையின் நிதிக் கூற்றுகளின் திருத்தத் தன்மை மற்றும் நம்பகத் தன்மை குறித்து பரிசீலித்தல். |
| இ | அதிகார சபையின் ஆதனங்கள் உரிய முறையில் பாதுகாக்கப்படுகின்றனவா என தேடிப் பார்த்தல். |
| ஈ | அதிகார சபையின் ஒவ்வொரு பிரிவின் பொறுப்புக்கள் மற்றும் வகிபாகங்களை நிறைவேற்றுவதில் அவற்றின் செயலாற்றுகையை மதிப்பிடுதல். |
| உ | தாபன விதிக் கோவை, நிதிப் பிரமாணம், திறைசேறி மற்றும் ஏனைய அரச சுற்றறிக்கைகள், அதிகார சபையின் நிர்வாக சுற்றறிக்கைகள் உட்பட சட்ட திட்டங்கள், விதிமுறைகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்கியதாக செயற்பட்டு உள்ளனவா என பரிசீலித்தல். |
| ஊ | அவசியமான சந்தர்ப்பங்களில் விசேட விசாரணைகளை நடாத்துதல். |
| எ | தொழிற்பாடற்ற செலவுகள், குறைப் பயன்பாட்டு சொத்துக்கள், பற்றாக்குறையாக உள்ள வருமானங்கள், செலுத்தப்பட வேண்டிய மற்றும் பெறப்பட வேண்டிய நிதி ஆகியவை தொடர்பாக பரிசீலித்தல். |
| ஏ | செயற்திட்டங்கள் தொடர்பாக அவற்றின் தொழிற்பாடுகள் மற்றும் முன்னேற்றம், இலக்குகளை அடைதல், தாமதங்கள், நிர்வாகம் ஆகியவை தொடர்பாக பரிசீலித்தல். |

2022 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- உள்ளக கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 43 ஆகும்.
- வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கைகளின் எண்ணிக்கை 04 ஆகும்.
- நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் மேலாண்மை ஒன்று கூடல்களின் எண்ணிக்கை.
    - அமைச்சுக்கள் மட்டத்திலான மேலாண்மை ஒன்று கூடல்கள் 03
    - அதிகார சபைகளின் மட்டத்திலான மேலாண்மை ஒன்று கூடல்கள் 01
- உள்ளக கணக்காய்வு உசாவல்களுக்காக வழங்கப்பட்ட பதில்கள் மற்றும் உசாவல்கள் மூலம் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளை செயற்படுத்துதல், அவற்றின் பின்னரான பின்தொடர்வுகளை மேற்கொள்ளுதல்.

- கணக்காய்வு மற்றும் மேலாண்மைக் குழுக்கள் மூலம் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக, முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக ஆலோசனைகளை வழங்குதல்.

**<u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கட்டமைப்பு</u>**

இலங்கை மகாவலி அதிகார சபையின், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பின்வரும் விதத்தில் அமைகின்றது.

1. திரு. பீ.பீ.எஸ்.ஆர். டி சில்வா - தவிசாளர் – திறைசேரி
2. பேராசிரியர் திரு. டி.எம். சூரதிஸ்ஸ – குழு உறுப்பினர்
3. சட்டத்தரணி திருமதி. கே.கே.ஜீ. பிரேமதிலக - குழு உறுப்பினர்
4. பிரதான உள்ளக கணக்காய்வாளர் – அமைச்சு

(1–4: இலங்கை மகாவலி அதிகார சபையின்பணிப்பாளர் சபை)

5. கணக்காய்வாளர் நாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கணக்காய்வு அத்தியட்சகர்
6. பணிப்பாளர் (தொழில்நுட்ப கணக்காய்வு) – அமைச்சு

**குழுவில் கலந்து கொள்கின்ற ஏனைய உத்தியோகத்தர்கள்**

7. பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு)
8. பணிப்பாளர் (நிதி)
9. தேவைக்கு அமைய அழைப்பு விடுக்கப்படுகின்ற ஏனைய உத்தியோகத்தர்கள்.

**<u>குழுவின் வகிபாகம் :</u>**

- வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தை மேற்பார்வையிடுதல்.
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வுக்கு உட்படுத்துதல் மற்றும் அதன் மூலம் இனங்காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குதல்.
- 1971 ஆம் ஆண்டின் 38 இலக்க நிதி தொடர்பான சட்டத்தின் 14 (2) (இ) உப பிரிவிற்கு அமைய கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் உள்ளக நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு ஆலோசனைகளை வழங்குதல்.
- காலாண்டு அடிப்படையில் குழு ஒன்று கூடலை நடாத்துதல்.

## 03.நீரியல் முகாமைத்துவ செயலகம்

நீர் முகாமைத்துவ செயலகம் மூலம் வருடாந்த சிறு போகம் மற்றும் பெரும் போகங்களுக்காக இயக்கற் கொள்கைகளை பரிந்துரைத்து மகாவலி தொகுதிக்காக இயக்கற் திட்டங்களை தயாரித்தல் முன்னெடுக்கப்படுவதுடன் இது அடிப்படையாக நீர்ப்பாசன மற்றும் மின்வலுத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு பிரதானமாக நெல் மற்றும் மேலதிக பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்திக்காக விரிவான பங்களிப்பை வழங்குகின்ற தேசிய நிகழ்ச்சித் திட்டமாகும். இதற்கு அவசியமான தொழில்நுட்ப வல்லுனர்களின் ஆலோசனைகளை வழங்நகுகின்ற அலகாக நீரியல் நிர்வாக செயலகத்தின் மூலம் நீரியல் நிர்வாக குழுவிற்குச் சொந்தமான உறுப்பு நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் சகல இயக்கற் திட்டங்களை வாராவாரம் மேற்பார்வையிட்டு அதன் முன்னேற்றத்தை மீளாய்வுக்கு உட்படுத்துதல் மற்றும் வருகின்ற வாரங்களுக்கான நீரியல் இயக்கற் திட்டங்களை செயற்படுத்துவதற்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குவது முன்னெடுக்கப்படுவதுடன் அதனை விவசாய, மின்சார மற்றும் குடிநீர் தேவைகளை கருத்திற் கொண்டு மொத்தத் தொகுதியிலும் பரிந்துரைக்கப்பட்ட நீர்த் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கின்றது.

### 2021/22 பெரும் போகம் (2022 ஜனவரி மாதம் 01 – 2022 மார்ச் மாதம் 31)

2021/22 பெரும் போகத்திற்கான மகாவலி நீரியல் முகாமைத்துவக் குழு ஒன்றுகூடலானது 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி பேராதெனிய கன்னொருவ தாவரங்கள் மற்றும் மரபணு வள மத்திய நிலையத்தில் இடம்பெற்றதுடன், அப்பொழுது தொகுதியின் சகல நீர்த்தேக்கங்களினதும் செயற்படு நீர் மட்டமானது 2022 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியாகும் போது, கொத்மலை 72.1%, விக்டோரியா 78.9%, ஹுருளு வாவி 19.3%, மாதுறு ஓயா 49.5% மற்றும் வலவ வலயம் 73.1% ஆக காணப்பட்டது.

அப்பொழுது கிடைக்கப் பெற்றிருந்த பருவ இடை மழை மற்றும் வடகீழ் தொடர் பருவ மழை என்பன எதிர்பார்க்கப்பட்ட பிரதேசங்களுக்கு கிடைக்கப் பெற்றமையால் நீரை விநியோகித்தமைக்கு அமைய வலயங்கள் எச், டி 02 மற்றும் வலவ வலயங்களை 2021 நவம்பர் முதலாம் வாரமாகும் போது ஆரம்பிக்க முடியுமாக இருந்தது.

2021/22 பெரும் போகத்தில் 2022 ஜனவரி தொடக்கம் மார்ச் மாதம் வரையில் மகாவலி முறைமையின் மூலம் மணித்தியாலத்திற்கு 429.85 கிகா வொட் உம், களனி முறைமையின் மூலம் மணித்தியாலத்திற்கு 494.05 கிகா வொட், மின்சாரமும் உற்பத்தி செய்யப்பட்டது. மின்சார உற்பத்தியானது 2020/21 பெரும் போகத்தில் நிலவிய விதமானது பின்வரும் முதலாவது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




முதலாவது வரைபடம்

நீர் நிர்வாகக் குழுவின் கீழ் உள்ள வலயங்களில் 2021/22 பெரும் போகத்தின் பயிர்ச் செய்கைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன பின்வரும் இரண்டாம் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




இரண்டாவது வரைபடம்

## 2022 ஆம் ஆண்டின் சிறு போகம் – (2022 ஏப்ரல் மாதம் 01 – 2022 செப்டம்பர் 30)

2022 ஆம் ஆண்டு சிறு போகத்திற்கான மகாவலி நீர் நிர்வாக குழு ஒன்றுகூடலானது 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி பேராதெனிய கன்னொருவ தாவரங்கள் மற்றும் மரபணு வள மத்திய நிலையத்தில் இடம்பெற்றதுடன், அப்பொழுது தொகுதியின் சகல நீர்த்தேக்கங்களினதும் செயற்படு நீர் மட்டமானது கொத்மலை 19%, விக்டோரியா 35.1%, மாதுறு ஓயா 100%, கலா வாவி 39.8%, ஹுருளு வாவி 44.6% ஆக காணப்பட்டதுடன், பராக்கிரம சமுத்திரத்தின் நீர் மட்டமானது 92.6% உயர்ந்த பட்ச நீர் மட்டத்தை எட்டியிருந்தது.

ஆகையால் ஒட்டு மொத்தமாக பயிர்ச் செய்கையானது சுமார் 75% உயர்ந்த பட்சமாக எதிர்பார்க்கப்பட்டதுடன், எச், எம், எல் மற்றும் வலவ வலயங்களுக்கு 50% முன்மொழியப்பட்டது.

அதற்கமைய 2022 சிறு போகத்தின் மொத்த விதைக்கும் பரவெல்லையானது 184,622 ஹெக்டயராக இருந்ததுடன் அது அண்ணளவாக மொத்த பயிர்ச் செய்கையில் சுமார் 94.6% ஆக இருந்தது.

இச் சிறு போகத்தில் மகாவலி முறைமையின் மூலம் மணித்தியாலத்திற்கு 1126.18 கிகா வொட் மின் உற்பத்தி செய்யப்பட்டதுடன் களனி முறைமையின்மூலம் மணித்தியாலத்திற்கு 1635.13 கிகா வொட் மின் உற்பத்தி செய்யப்பட்டது. மின்சார உற்பத்தியானது 2022 சிறு போகத்தில் நிலவிய விதமானது பின்வரும் மூன்றாது வரைபடத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.




மூன்றாவது வரைபடம்

நீர் நிர்வாகக் குழுவின் கீழ் உள்ள வலயங்களில் 2022 சிறு போகத்தின் பயிர்ச் செய்கைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன பின்வரும் நான்காம் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




நான்காவது வரைபடம்

## 2022/23 பெரும் போகம் (2022 ஒக்டோபர் மாதம் 01 – 2022 டிசம்பர் மாதம் 31 வரை)

2022/23 பெரும் போகத்திற்கான மகாவலி நீரியல் முகாமைத்துவக் குழு ஒன்றுகூடலானது 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி பேராதெனிய கன்னொருவ தாவரங்கள் மற்றும் மரபணு வள மத்திய நிலையத்தில் இடம்பெற்றதுடன், அப்பொழுது தொகுதியில் எதிர்பார்க்கப்பட்ட சகல

நீர்த்தேக்கங்களினதும் செயற்படு நீர் மட்டமானது கொத்மலை 88%, விக்டோரியா 95%, வலவ 41%, ஹுருளு வாவி 22%, மட்டத்தைக் கொண்டிருந்ததுடன் மாதுறு ஓயா 43% ஆக காணப்பட்டது.

அப்பொழுது கிடைக்கப் பெற்றிருந்த பருவ இடை மழை மற்றும் வடகீழ் தொடர் பருவ மழை என்பன எதிர்பார்க்கப்பட்ட பிரதேசங்களுக்கு கிடைக்கப் பெற்றமையால் நீரை விநியோகிப்பதானது அதற்கமைய H, D02 மற்றும் வலவ வலயங்களில் 2022 ஒக்டோபர் மாதம் 02 ஆம் வாரமாகும் போது ஆரம்பிக்க முடியுமானதாக இருந்தது.

அதற்கமைய 2022/23 பெரும் போகத்தின் மொத்த விதைக்கும் பரவெல்லையானது 195,267 ஆக இருந்ததுடன் அது ஒட்டு மொத்தமாக சுமார் 100% ஆக இருந்தது.

இச்சாகுபடியில் மாகவலித் முறைமையில் மணித்தியாலத்திற்கு 816.8 கிகா வொட் மின்சாரமும், களனி முறைமையில் மணித்தியாலத்திற்கு 860.2 கிகா வொட் மின்சாரமும் தோற்றுவிக்கப்பட்டது. மின் உற்பத்தியானது 2022/23 பெரும் போகத்தில் நிலவிய விதமானது பின்வரும் ஐந்தாவது வரைபடம் மூலம் காட்டப்பட்டுள்ளது.




ஐந்தாவது வரைபடம்

நீர் நிர்வாகக் குழுவின் கீழ் உள்ள வலயங்களில் 2022/23 பெரும் போகத்தின் பயிர்ச் செய்கைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன பின்வரும் ஆறாம் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




ஆறாவது வரைபடம்

# 04. கொள்முதல் பிரிவு

**வகிபாகங்கள்**

1. இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் சபை ஒன்று கூடலை நடாத்துவதற்குரிய செயற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.
2. திணைக்கள கொள்முதல் குழு நடாத்துதல் மற்றும் அதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.
3. இ.ம. அதிகார சபையின் ஒன்றிணைந்த கொள்முதல் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவசியமான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
4. பிராந்திய கொள்முதல் குழு, செயற்திட்ட கொள்முதல் குழு மற்றும் சகல தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களையும் நியமித்தல் மற்றும் பின் தொடர்வுகள்.
5. கொள்முதல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அரச வழிகாட்டல்கள், சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பாக நிறுவனத்திற்கு அறிவுறுத்துதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
6. உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் நிதிசார் அதிகாரங்களை பன்முகப்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் கொள்முதன் செயன்முறைகளை மிகவும் வினைத்திறன் மிக்கதாக மற்றும் தெளிவானதாக பேணிச் செல்லுதல்.
7. இ.ம.அ. பிரதான அலுவலகம் மற்றும் வலய அலுவலகங்களுக்கு அவசியமான கொள்முதல்களை முன்னெடுத்தல் மற்றும் இயக்குதல்.
8. இ.ம. அதிகார சபையின் பிரிவுகள் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற விலை/ கேள்விலை மனுக்கள் கோருவதற்கான பகிரங்க விலை/ கேள்விலை மனுக்களைத் திறத்தலை முன்னெடுத்தல் அல்லது இயக்குதல்.
9. பணிப்பாளர் நாயகம் அவர்களால் விதிக்கப்படுகின்ற விசேட/ அவசர கொள்முதல்கள் அல்லது ஏனைய கடமைசார் பணிகளை நிறைவேற்றுதல்.
10. பணிப்பாளர் நாயகம் அவர்களின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்படுகின்ற ஆவணங்கள், கோப்புகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையை பரிசோதித்தல், சீர்செய்தல் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.
11. இ.ம. அதிகார சபையின் ஆண்டறிக்கையை இலங்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தயாரித்தல் மற்றும் அதற்குரிய சகல பணிகளையும் செயற்படுத்துதல்.

# இரண்டாவது அத்தியாயம்

## 2.1 தொழில்நுட்ப சேவைப் பிரிவு

**வகிபாங்கள் :**

- நிறுவனத் திட்டம்/ வருடாந்த திட்டத்திற்கு அமைய புதிய உருப்படியில் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உத்திகளுடன் கூடிய திட்டங்களைத் தயாரித்தல்.
- தொழில்நுட்ப திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக வழிகாட்டுதல் மற்றும் இயக்குதல்.
- பிரதான அணைகள் மற்றும் நீர் திசை திருப்பு வழிகள் மற்றும் தாழ் பள்ளத்தாக்குப் பிரதேசத்தின் நீர்ப்பாசனத் தொகுதி உட்பட பௌதீக வளங்களை உரிய முறையில் தாபரிப்பத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உகந்த செயற்பாடு ஒன்றைத் தயாரித்தல்.
- நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைப்புக்களின் ஊடாக விவசாய நடவடிக்கைகள் மற்றும் ஏனைய தேவைகளுக்காக உள்ள நீரின் அளவை உரிய விதத்தில் விநியோகிப்பதற்காக முறையான திட்டங்களைத் தயாரித்தல்.
- செயற்திட்ட திட்டமிடல், இயலுமையை மதிப்பிடுதல், இயக்குதல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்விற்கு உட்படுத்துதல்.

அடிப்படையாக மேற்குறிப்பிட்ட பிரதான செயற்பாடுகளை இலக்காகக் கொண்டு இலங்கை மகாவலி அதிகார சபையின் தொழில்நுட்ப சேவைப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.
அதற்கமைய 2022 ஆம் ஆண்டில் இப்பிரிவின் மூலம் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திச் செயற்திட்டம்.
- கிவுல் ஓயா அபிவிருத்திச் செயற்திட்டம்.
- ரிதிமாலியத்த அபிவிருத்திச் செயற்திட்டம்.
- ரம்பகன் ஓயா அபிவிருத்திச் செயற்திட்டம்.
- வெலி ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம்.
- சூரிய மின் சக்தியை கரைக் காணிகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நிறுவுவதற்காக வழிகாட்டுதல்.
- சிறு மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்காக வழிகாட்டுதல்.

பின்வரும் செயன்முறைகள் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபையின் வருமான வழிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

- வணிக ரீதியான நீர் விநியோகத்தை வழங்குதல்.
- நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களின் மண்டி/ மணல்களை வணிக ரீதியில் அகற்றுதல்.

**2022 ஆம் ஆண்டிற்காக திறைசேரியின் மூலம் அந்தந்த வலயங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மானியங்கள் செலவு செய்யப்பட்ட விபரங்கள் பின்வருமாறு.**

| தொடர் இலக்கம் | செயற்திட்டம்/ வலயம்/ பிரிவு | 2022 ஆம் ஆண்டிற்காக தொ.சே.பிரிவிற்கு இற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி. | 2022 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. | கையில் உள்ள கட்டணப் பட்டியல்கள் ரூ. மி. | நிதிசார் முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | செயற்திட்டங்கள் | 140.00 | 128.99 | 0.00 | 92.14% | 98.00% |
| 02 | வலயங்கள் | 231.53 | 210.50 | 24.71 | 101.62% | 100.00% |
| உப கூட்டுத் தொகை (1+2) (தாழ் பள்ளத்தாக்கு அபிவிருத்திப் பிரிவு) | | 371.53 | 339.58 | 24.71 | 98.05% | 99.25% |
| 03 | ஆற்று வடிநில முகாமைத்துவப் பிரிவு | 1.70 | 1.26 | 0.00 | 74.14% | 99.35% |
| 04 | பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க தொழிற்பாட்டுப் பிரிவு | 493.88 | 399.44 | 28.00 | 81.00% | 86.50% |
| 05 | காணி உபயோக திட்டமிடல் பிரிவு | 0.06 | 0.05 | 0.00 | 91.20% | 100.00% |
| 06 | சுற்றாடல் மற்றும் வனப் பிரிவு | 29.76 | 25.99 | 1.37 | 92.00% | 90.00% |
| உப கூட்டுத் தொகை (3+4) | | 525.40 | 426.74 | 29.37 | 81.60% | 86.49% |
| | **மொத்த கூட்டுத் தொகை - உப கூட்டுத் தொகை (தொழில்நுட்ப சேவைப் பிரிவு)** | **896.93** | **766.32** | **54.32** | **91.47%** | **91.92%** |

## 2.1.1 தாழ் பள்ளத்தாக்கு அபிவிருத்திப் பிரிவு

### அறிமுகம்

மகாவலி அதிகார பிரதேசங்களில் உள்ள நீர்ப்பாசனத் தொகுதிக் குளங்களை மற்றும் நீர்த்தேக்கங்களை இயக்குதல் மற்றும் தாபரித்தல், கட்டிட வளாகங்களைத் தாபரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், வீதி அபிவிருத்தி மற்றும் அதற்கு உரிய கட்டுமானங்கள், மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல், கட்டுமான நிலைமைகளை நிர்வாகித்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு என்பன அப்பிரிவின் பிரதான பணிகளாகும்.

### வகிபாகங்கள்

- அனைத்து வலயங்களிலும் மற்றும் விசேட செயற்திட்டங்கள் உட்பட பணிகள் மற்றும் சேவைகள் தொடர்பாக பெறுகைச் செயற்பாடுகளை அமுல்படுத்துதல்.
- செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது ஒப்பந்த நிர்வாகத்திற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- வருடாந்த மானியங்களின் கீழ் கட்டுமானங்களை மேற்கொள்ளுதல், தாபரித்தல் மற்றும் புணர்நிர்மாணம் செய்தல் தொடர்பான வருடாந்த வரவுசெலவு திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தை மீளாய்வுக்கு உட்படுத்துதல்.
- மகாவலி வலயங்களில் குளங்கள் மற்றும் கால்வாய்ப் பாதை முறைமைக்குரிய செயல்பாடு மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- நீரியல் நிர்வாக முகாமைத்துவ அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து மகாவலி பிரதேசங்களின் பயிர்ச்செய்கைக்கு அவசியமான நீர் தேவைப்பாடுகளை பெற்றுக் கொள்வதை உறுதி செய்தல்.

- தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக மகாவலி அதிகார சபையில் காணப்படுகின்ற ஏனைய பிரிவுகளுடன் மற்றும் வெளி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளுதல்.

**<u>நிதிசார் முன்னேற்றம்</u>**

2022 ஆம் ஆண்டிற்காக திறைசேரியின் மூலம் அந்தந்த வலயங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட மானியங்கள் செலவு செய்யப்பட்ட விபரங்கள் பின்வருமாறு.

### 1. செயற்திட்டங்களின் கீழ்

| தொடர் இலக்கம் | செயற்திட்டம் | முழுமையான முதலீட்டு மதிப்பீடுத் தொகை (ரூ.மி.) | 2022 டிசம்பர் 31 வரை திரண்ட செலவினம் (ரூ.மி.) | 2022 ஆம் ஆண்டிற்காக தொ.பி. இற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி. | 2022 ஆம் ஆண்டிற்கான செலவினம் (ரூ.மி.) | 2022 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம் % | 2022 ஆம் ஆண்டின் பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | ரிதிமாலியத்த அபிவிருத்திச் செயற்திட்டம் | 1,100.00 | 870.58 | 40.00 | 36.55 | 85.40% | 98.00% |
| 02 | ரம்பகன் ஓயா அபிவிருத்திச் செயற்திட்டம் | 1086.00 | 706.65 | 60.00 | 54.69 | 77.72% | 98.00% |
| 03 | வெலி ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் | 3,957.00 | 2534.38 | 40.00 | 37.75 | 94.00% | 98.00% |
| | **கூட்டுத் தொகை (செயற்திட்டங்கள்)** | **6,143.00** | **4,111.61** | **140.00** | **128.99** | **92.14%** | **98%** |

பின்வரும் இரு செயற்திட்டங்களுக்காக நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டதுடன் இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | செயற்திட்டம் | முழுமையான முதலீட்டு மதிப்பீடுத் தொகை (ரூ.மி.) | 2022 டிசம்பர் 31 வரை திரண்ட செலவினம் (ரூ.மி.) | 2022 ஆம் ஆண்டிற்காக தொ.பி. இற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி. | 2022 ஆம் ஆண்டிற்கான செலவினம் (ரூ.மி.) | கையிறுப்பில் உள்ள கட்டணப் பட்டியல் (ரூ.மி.) | 2022 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம் % | 2022 ஆம் ஆண்டின் பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திச் செயற்திட்டம் | 38,500.00 | 724.30 | 500.00 | 390.20 | 94.80 | 97.00% | 85.00% |
| 02 | கிம்புல் ஓயா அபிவிருத்திச் செயற்திட்டம் | 8,000.00 | 59.65 | 100.00 | 31.45 | 0.00 | 31.45% | 40.00% |

2. தாபன மூலதனத்தின் கீழ்

| தொடர் இலக்கம் | செயற்திட்டம் | 2022 ஆண்டில் தொ. சே. பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. | 2022ஆண்டில் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. | கையிறுப்பில் உள்ள கட்டணப் பட்டியல் | நிதிசார் முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| 1 | பி வலயம் | 40.25 | 40.25 | 3.80 | 109.44% | 100.00% |
| 2 | சி வலயம் | 46.49 | 29.74 | 16.75 | 100.00% | 100.00% |
| 3 | டி வலயம் | 11.16 | 10.95 | 0.21 | 100.00% | 100.00% |
| 4 | ஜீ வலயம் | 11.30 | 10.69 | 0.61 | 100.00% | 100.00% |
| 5 | எச் வலயம் | 47.31 | 47.31 | 0.00 | 100.00% | 100.00% |
| 6 | வலவ வலயம் | 47.23 | 44.23 | 3.00 | 100.00% | 100.00% |
| 7 | ஹுருளு வாவி வலயம் | 9.59 | 9.62 | 0.04 | 100.73% | 100.00% |
| 8 | விக்டோரியா வலயம் | 11.70 | 11.30 | 0.30 | 99.15% | 100.00% |
| 9 | பிரதான அலுவலகம் (தொ. சேவை) | 0.50 | 0.50 | 0.00 | 100.00% | 100.00% |
| 10 | வளாக முகாமைத்துவம் | 6.00 | 6.00 | 0.00 | 100.00% | 100.00% |
| | **உப கூட்டுத்தொகை 2 (வலயங்கள்)** | **231.53** | **210.59** | **24.71** | **101.63%** | **100.00%** |

**(3) விசேட பணிகள் மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்கள்**

1. பாடசாலை கட்டிடங்கள் போன்றவற்றை வழங்குவதன் மூலம் கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
2. வீதிகளை மீள் திருத்தம் செய்வதன் மூலம் மிகவும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு முடியுமானதாக இருத்தல்.
3. நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமிய குளங்களை புனர்நிர்மாணம் செய்வதன் ஊடாக விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
4. குளங்களின் வண்டல்களை நீக்கி அவற்றின் கொள்ளளவை அதிகரிப்பதன் மூலம் அறுவடை செய்யக் கூடிய நிலப்பரப்பை அதிகரித்தல்.

## 2.1.2 பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவு

### பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவு

இலங்கை மகாவலி அதிகார சபைக்குரிய முன்மொழியப்பட்டுள்ள செயற்திட்டங்களின், நடைமுறையில் உள்ள மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட, செயற்திட்டங்களின் பொறியியல் வடிவமைப்புக்கள் மற்றும் திட்டங்களை தயாரித்தல் பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

பின்வரும் வகிபாகங்கள் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

- மாகவலி நீர் வளத் திட்டத்தை இற்றைப்படுத்துதல்.
- அரச மற்றும் தனியார் தொழில் முயற்சியாளர்களால் முன்வைக்கப்படுகின்ற சிறிய அளவிலான நீர் செயற்திட்ட முன்மொழிவுகள் மற்றும் திட்டங்களை பகுப்பாய்வுக்கு உட்படுத்துதல்.
- வடிவமைப்பு மற்றும் திட்டமிடலுக்குரிய பொறியியல் மதிப்பீடுகள் மற்றும் அளவுகளுக்கான கட்டணப் பட்டியலை கொள்முதல் செயற்பாடுகளுக்காக தயாரித்தல்.
- இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தர நியமங்களுக்கு அமைய பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் தொடர்பாக பயிலுனர் பொறியியலாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

**<u>மகாவலி B வலயம்</u>**

1.1 மகாவலி B வலயத்தில் அரலகங்விலவில் அமைந்துள்ள Rhyad வர்த்தக வளாக கட்டிடம் தொடர்பான புனரமைக்கப்பட வேண்டிய கட்டடக்கலை மற்றும் பொறியியல் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

1.2 மகாவலி B வலயத்தின் சிங்கபுர பிரிவில் முன்மொழியப்பட்டுள்ள முத்துவெல்ல விவசாய, கால்நடை வளர்ப்பு மற்றும் தொடர்புடைய தொழில் முதலீட்டுத் திட்டங்களுக்கான சுற்றுச்சூழல் அறிக்கையைப் பெறுவதற்குத் தேவையான பொறியியல் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

1.3 நுண் நீர்மின் திட்ட பங்களிப்பு

மகாவலி B பிராந்தியத்தில் Z-D கால்வாய் தொடர்பில் முன்மொழியப்பட்டுள்ள நுண் நீர்மின் நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் பொறியியல் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

**<u>மாதுரு ஓயா தென்கரை அபிவிருத்திச் செயற் திட்டம்</u>**

**<u>அளவீட்டு விபரம்</u>**

பிரதான கால்வாய் முறைமையின் ஊடாக மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் இருந்து நீரைக் கொண்டு செல்கின்ற வலது கால்வாய் பாதைக்குரியதாக 2+200 கி.மீ தளத்தின் அளவீட்டு விபரத்திற்கு அவசியமான (RBMC2) வரைபடங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

**<u>மகாவலி C வலயம்</u>**

துவரகல அணையின் திட்டங்களை ஆய்வு செய்தல் மற்றும் தேவையான எதிர்கால சீரமைப்பு பணிகளுக்கு தேவையான திட்டங்களை வழங்குதல்.

**<u>மகாவலி D வலயம் (மெதிரிகிய)</u>**

கிவுலே கால்வாய் அணை கட்டுதல்.

சமகிபுர பிரதான விநியோகக் கால்வாயை ஒழுங்குபடுத்தும் வடிவமைப்பை உருவாக்குதல்.

**<u>மகாவலி எச் வலயம்</u>**

கலா வாவி சுற்றுலா பங்களாவை நவீனமயமாக்குவதற்கு தேவையான திட்டங்கள் மற்றும் வடிவமைப்புகளை வழங்குதல்.

தம்புத்தேகம நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரைப் பெறுவதற்கு தேவையான ஆரம்ப சாத்தியக்கூறு ஆய்வை முன்வைத்தல்.

கலா வாவி இடது கரை பிரதான கால்வாய் Weir மற்றும் Transition இற்குத் தேவையான திட்டங்கள் மற்றும் வடிவமைப்புகளை வழங்குதல்.

**<u>ஹுருலு வாவி வலயம்</u>**

**<u>நுழைவு கால்வாயின் வடிவமைப்பு</u>**

தல்கோட்டை ஏரியிலிருந்து அவுடங்காவ ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்வதற்கு கால்வாய் தயாரிப்பது தொடர்பான வடிவமைப்புத் திட்டங்கள் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்தல்.

**<u>கந்தளம நீரேந்து கால்வாயை நவீன மயப்படுத்துதல்.</u>**

ஹுருலு வாவி நீரேந்து கால்வாயில் இருந்து கந்தளம ஏரிக்கு நீர் கொண்டு செல்வதற்காக உள'ள விநியோக கட்டமைப்பின் பாதுகாப்பு பக்க சுவர் அமைத்தல்.

**<u>எல் வலயம் - வெலிஓயா</u>**

கிவுல் ஓயா செயற்திட்டத்துடன் தொடர்புடைய வடி வழி / குளக் கட்டு / கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்திக்கான ஆரம்ப பொறியியல் வடிவமைப்புத் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன.

எல் வலய வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகம் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான பொறியியல் வடிவமைப்புகள் மற்றும் திட்டங்கள் வழங்கப்பட்டன.

மகாவலி எல் வலயத்தில் நீர்ப்பாசன செழுமைத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் குளங்களுக்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கையை சுற்றாடல் பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல். பின்வரும் குளங்களுக்கான சுற்றாடல் பரிசீலனை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டது.

- ✓ குடாதிக்வெவ
- ✓ திக்வெவ
- ✓ நாமல்கம 02
- ✓ துங்குடுநேரு
- ✓ ருவன்மடுவ
- ✓ மகாகம்பிலியாவ
- ✓ புராணமாயா

**<u>பொல்கொல்ல நீர்த்தேக்கம்</u>**

அக்குறணை திடீர் வெள்ள ஆய்வு அறிக்கை தயாரித்தல்.

**<u>போவத்தென்ன நீர்த்தேக்கத்தில்</u>**

போவத்தென்ன நீர்த்தேக்கத்தின் இடதுபுறத்தில் சேறும் சகதியுமான பகுதிக்கு பாதுகாப்பு முட்டுச் சுவர் அமைப்பதற்கான திட்டங்களை சமர்ப்பித்தல்.

**<u>வலவ வலயம்</u>**

உடவல இடதுகரை பிரதான கால்வாயின் MD15 கட்டமைப்பை வடிவமைத்தல்.

வல்சபுகல உத்தேச பால்வள அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான நீர்ப்பாசன வலையமைப்புத் திட்டத்தை தயாரித்தல்.

அங்குனுகொலபெலஸ்ஸ பஸ் நிலைய வடிவமைப்பு கட்டம் 02 இற்குத் தேவையான பொறியியல் வடிவமைப்புகள் மற்றும் திட்டங்களை சமர்ப்பித்தல்.

**<u>மகாவலி ரம்பகென் ஓயா வலயம்</u>**

1000 ஏக்கர், புலாவல, போஞ்சிகொட, இம்புல்கொட மற்றும் உல்பத்கண்டிய குளங்களுக்கு அவசியமான பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டங்களை சமர்ப்பித்தல்.

- ✓ வடி வழி
- ✓ குளக் கட்டு
- ✓ கீழ் பள்ளத்தாக்கு மேம்பாட்டுத் திட்டம் (BOP)

**<u>பயிற்சி</u>**

ஆண்டுக்கான பட்டய பொறியியல் பிரவேசத்திற்காக ஐந்து புதிய பொறியாளர்கள் பயிற்சி பெற்றனர்.

**<u>மேலதிக செயல்பாடுகள்</u>**

மகாவலி விவசாயம் மற்றும் கால்நடைப் பிரிவின் கோரிக்கையின் பேரில், கோழி மற்றும் ஆட்டுத் தொழுவங்களுக்கும் மீன் இன விருத்தித் திட்டங்களுக்கும் தேவையான பங்களிப்பை வழங்குதல்.

## 2.2 ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகம்

### அறிமுகம்

ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகமானது, மடாடுகம மகாவலி வளாகத்தில் அமைந்துள்ளதுடன் பணிப்பாளரின் (ஆற்று வடிநில முகாமைத்துவம்) கீழ் செயற்படுகின்றது. ஆற்று வடிநில முகாமைத்துவ எண்ணக்கருவிற்கு இணங்கியதாக சூழல்சார் மற்றும் இயற்கை வள முகாமைத்துவத்திற்கு உரியதான பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கட்டுமானங்கள் மற்றும் தாபரிப்புச் செயற்பாடுகளின் தரத்தைப் பரிசீலித்தல் இவ்வலுவலகத்தின் அடிப்படைப் பொறுப்பாகும்.

அதற்கமைய இவ்வலுவலகத்தின் கீழ் நடாத்தப்பட்டு வருகின்ற நீரின் தரத்தை ஆராயும் ஆய்வு கூடத்தின் மூலம் மகாவலி கங்கை மற்றும் மகாவலித் தொகுதி மற்றும் அதனுடன் தொடர்புள்ள ஆற்று வடிநிலங்களில் அமைந்துள்ள நீர் மூலங்களிலுள்ள நீரின் தன்மையை பரிசோதித்தல் மேற்கொள்ளப்படுவதுடன் அத்தரவுகளுக்கு அமைய நீரின் தன்மையானது இடத்திற் ஏற்றவாறு மற்றும் காலத்திற்கு ஏற்ப மாறுகின்ற விதத்தை ஆய்வு செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் கீழ்,

- கலா வாவி, கண்டலம, தம்புளு ஓயா, போவதென்ன, உடவலவ மற்றும் சந்திரிகா வாவி ஆகிய மகாவலி நீர்த்தேக்கங்களின் நீரின் தன்மை தொடர்பாக மாதாந்தம் பரிசீலித்தல்.

- மகாவலி வலயங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட சிறு குளங்களின் நீரின் தன்மையை மாதந்தம் பரிசீலித்தல்.
- மகாவலி கங்கை மற்றும் மாகவலித் தொகுதியுடன் தொடர்புபட்ட தெரிவு செய்யப்பட்ட நீர்த் தாரைகளின் நீரின் தன்மை தொடர்பாக பரசீலனைகளை செய்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றது.





- எமது பிரிவுக்குச் சொந்தமான வருகின்ற நீரின் தரத்தை ஆராயும் ஆய்வு கூடமானது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரம் பெற்ற ஆய்வு கூடம் என்பதால் தொழிற்சாலைகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்கும் போது அந்நிறுவனத்தின் ஊடாக சூழலிற்கு விடுவிக்கப்படும் கழிவு நீரின் நிலைமை பரிசீலிக்கப்பட்டு பரிந்துரை வழங்குவதும் மேற்கொள்ளப்படுகின்றது. இதில் அந்நிறுவன உரிமையாளர்கள் விடுக்கின்ற கோரிக்கைகளுக்கு அமைய பரிசீலனைகள் முன்னெடுக்கப்பட்டு கழிவு நீரின் அமைப்பு தொடர்பாக அறிக்கை வழங்கப்படுவதுடன் அதற்காக கட்டணம் அறவிடப்படும். இதற்கு மேலதிகமாக வெளி நிறுவனங்கள் மூலம் விடுக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைய நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்படும்.

- அதற்கமைய, நீரின் தரத்தை ஆராயும் ஆய்வு கூடத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டில் **<u>கட்டணம் அறவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட</u>** பரிசோதனை மூலம் 1350994.80 ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இதில் 2021 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற வேண்டி இருந்த நிலுவைத் தொகையான ரூ. 267,505.00 ரூபாய் ஆனது 2022 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்று உள்ளது. கிடைக்கப் பெற்று உள்ளதுடன், ரூ. 267,505.00 தொகை கிடைக்க வேண்டி உள்ளது.
- அதற்கமைய, 2022 ஆம் ஆணடில் ரூ. 1618499.80 தொகையானது நீர் மாதிரி பரிசோதனைக்காக கிடைக்கப் பெற்று உள்ளது. மேலும் **<u>கட்டணம் அறவிடப்படாமல் மகாவலி அதிகார சபைக்குரியதாக முன்னெடுக்கப்பட்ட</u>** மாதிரி பரிசோதனைகளின் பெறுமதி ரூ. 3173633.87 ஆகும். அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் **<u>கட்டணம் அறவிடப்பட்டு மற்றும் அறவிடப்படாமல்</u>** முன்னெடுக்கப்பட்ட மாதிரிகளின் பெறுமதி ரூ. 4792133.67 ஆகும்.
- தரக் கட்டுப்பாட்டு ஆய்வு கூடம் மூலம் மகாவலி அதிகார சபையின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற கட்டுமானங்களின் தரத்தை உயர் மட்டத்தில் நடாத்திச் செல்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதில் மகாவலி வலயங்களில்

மேற்கொள்ளப்படுகின்ற கட்டுமானங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற பொருட்களின் பொருத்தமுடைமையை பரீட்சிப்பதற்காக ஆய்வு கூட பரிசோதனைகள் மேற்கொள்வதும், அக்கட்டுமானங்களின் தரத்தைப் பரிசீலிப்பதற்காக களப் பரிசீலனை மேற்கொள்வதும் வலய அலுவலகங்களால் விடுக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும். அக்கட்டுமானங்கள் ஒப்பந்தக்காரர்கள் மூலம் அல்லது விவசாய அமைப்புக்கள் மூலம் முன்னெடுக்கப்படுமாயின் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக கட்டணம் அறவிடப்படும்.

- 2022 ஆம் ஆண்டில் **<u>கட்டணம் அறவிடப்பட்டு முன்னெடுக்கப்படுகின்ற பரிசோதனைகளின்</u>** பெறுமதி ரூ. 140,432.60 ஆகும். 2022 ஆம் ஆண்டில் அம் மொத்த தொகையும் கிடைக்கப் பெற்று உள்ளது.
- இதற்கு மேலதிகமாக 2023 ஆம் ஆண்டில் முன்னெடுக்கவுள்ள பரிசோதனைகளுக்கான முற்பணமாக ரூ. 825.00 தொகை 2022 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்று உள்ளது.
- அவ்வாறே, கடந்த ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளுக்காக கிடைக்கப் பெற வேண்டிய ரூ. 503,563.23 தொகையானது 2022 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்றுள்ளது.
- அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் ரூ. 638,385.83 தொகையானது தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்காக கிடைக்கப் பெற்றுள்ளது.
- அவ்வாறே, பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவை) இனால் விசேடமாக அறிவிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மற்றும் தற்செயலாக மகாவலி வலய அலுவலகத்தின் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற கட்டுமானங்களின் தரம் பரிசோதிக்கப்படுவது மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய, **<u>கட்டணம் அறவிடப்படாமல்</u>** பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுவதுடன், 2022 ஆம் ஆண்டில் அவ்வாறு முன்னெடுக்கப்பட்ட தரப் பரிசோதனைகளின் பெறுமதி ரூ. 141,637.25 ஆகும்.
- அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் **<u>கட்டணம் அறவிட்டு மற்றும் அறவிடாமல்</u>** முன்னெடுக்கப்பட்ட மாதிரிகளின் பெறுமதி ரூ. 282,069.85 ஆகும்.






**தேசிய பொருளாதார மற்றும் சமூகத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்புக்கள்**

- ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகம் மூலம் கணிசமான நிதிசார் உழைப்பை நேரடியாக மேற்கொள்ளாமல் எனினும், தேசிய அபிவிருத்தி மற்றும் சமூக விருத்தி தொடர்பாக மறைமுகமான பங்களிப்பை வழங்குகின்றது.
- நீரின் தரம் தொடர்பாக ஆய்வு கூடத்தில் செயற்படுவதன் மூலம் சூழல்சார் ரீதியில் நீரில் ஏற்படுகின்ற தன்மை மாற்றத்தை இலகுவாக இனங்காணும் இயல்பு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இம்மாற்றங்களின் நீண்ட கால இயல்புகளை ஆய்வு செய்வதன் மூலம் சூழலிற்கு அடிப்படையாக ஒன்று சேர்ந்துள்ள சூழல் மாசுகளை உய்த்தறியும் இயலுமை கிடைக்கின்றது. அதனை மிகவும் சரியான முறையில் இனங்காண்பதன் மூலம் அதற்கு உகந்த நடவடிக்கைகளுக்கு எட்டும் இயலுமை கிடைக்கப் பெறுவதுடன் அதனை எதிர்கால சந்ததிகளுக்கான சூழல்சார் முதலீடும் ஆகும்.
- தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனையை மேற்கொள்வதன் மூலம் தர நியமம் உரிய மட்டத்தில் அற்ற கட்டுமானங்களை இனங்காண்பதற்கு முடியுமாக இருப்பதுடன் அவற்றை சீராக்குவதற்காக அச்சந்தர்ப்பத்திலேயே மாற்றுத் தீர்வுகளைப் பயன்படுத்துவதற்கு முடியுமானதாக இருக்கும். அதன் மூலம் கட்டமைப்புக்களின் ஆயுட்காலத்தை திட்டமிட்டபடி பராமரிப்பதற்கு முடியுமாக இருப்பதுடன் அடிக்கடி பழுதுபார்க்கும் தேவைப்பாட்டை இயன்றளவு குறைக்கும். அதனால் அவற்றின் பிரதிபலன்கள் மக்களுக்கு தொடர்ந்தும் வழங்குவதற்கு முடியுமாக இருப்பதுடன் புணரமைப்புப் பணிகளுக்காக ஏற்க வேண்டிய செலவினங்களை இயன்றளவு குறைத்துக் கொள்வதற்கும் முடியுமாக இருக்கும். அது நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

## 2.3மின் மற்றும் இயந்திரவியல் பிரிவு

இலங்கை மகாவலி அதிகார சபையின் மின் மற்றும் இயந்திரவியல் பிரிவு மகாவலி வலயத்தில் புதுப்பிக்கத்தக்க சக்தி வலுச் செயற்திட்டங்களை பிரதானமாக ஒழுங்குமுறைப்படுத்தி தேவையான வசதிகளை வழங்குவதுடன், மின்சார மற்றும் எந்திரவியல் பணிகளுக்கான வேலை அங்கீகாரங்களுக்கான பரிந்துரைகளை வழங்குவதுடன், மின்சார மற்றும் எந்திரவியல் கொள்வனவுகளுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கைகளையும் வழங்குகிறது.

**புதுப்பிக்கத்தகு சக்தி வலுச் செயற்திட்டம்.**

இலங்கை மகாவலி அதிகார சபையினால் 2002 ஆம் ஆண்டில் சிறிய அளவிலான நீர் மின் செயற்திட்டத்திற்காக இயலுமை காணப்படுகின்ற இடங்களை இனங்காணப்பட்டன. கேள்வி கோரல் (டெண்டர்) செயன்முறைகளுக்கு அமைய போட்டித் தன்மை மிக்க விலை மனுக்களைக் கோருவதன் மூலம் இதற்கு உகந்த முதலீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். பிரதான தெரிவு செய்யும் வழிமுறையாக இருந்தது யாதெனில் காணி மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற நீரிற்காக மின்சாரத்தை விற்பதன் மூலம் சதவீதமாக வழங்கப்படுகின்ற ஆக்கியோன் பங்கு ஆகும்.

அதற்கமைய வழங்கப்படுகின்ற ஆக்கியோன் பங்கின் அடிப்படையாக கொண்டு செயற்படுவதற்கு உகந்த சிறிய அளவிலான செயற்திட்டங்கள் 10 ஐ ஆரம்பத்தில் இனங்கண்டு

அச் செயற்திட்டங்களுக்காக தீர்மானத்திற்கான கடிதங்கள் வெளியிடப்பட்டன. செயற்திட்ட வேலைத்தளத்தின் தன்மைக்கு அமைய இவ் ஆக்கியோன் பங்கானது 3.42% இல் இருந்து 34.2% வரை காணப்பட்டது. அதன் பின்னர் இலங்கை மகாவலி அதிகார சபையினால் பிரதான கங்கையில் மற்றும் ஒழுங்காக்கப்பட்ட நீர் மார்க்கங்களுக்கு உகந்த நிலங்களில் செயற்திட்டங்களை முன்வைத்த மேலும் 10 முதலீட்டாளர்களுக்கு தீர்மானத்திற்கான கடிதம் முன்வைக்கப்பட்டது. ஒழுங்காக்கப்பட்ட நீர் மார்க்கங்களில் அமைந்துள்ள செயற்திட்டங்களில் 10% பிரதான கங்கையில் அமைந்த செயற்திட்டங்களில் 6% ஆனது ஆக்கியோன் பங்காக அறவிடுவதற்கு இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் குழாமினால் தீர்மானிக்கப்பட்டது. தற்பொழுது சிறிய அளவிலான நீர் மின் செயற்திட்டங்கள் 12 பூரணப்படுத்தப்பட்டு உள்ளதுடன் அதில் இருந்து தேசிய மின்சார முறைமைக்கு 39.85 மெ. வொ. கொள்ளளவு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக இலங்கை மகாவலி அதிகார சபையினால் நிலத்தில் அமைந்துள்ள மற்றும் மிதக்கின்ற சூரிய மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக உகந்த இடமும் இனங்காணப்பட்டுள்ளது. இச் செயற்திட்டங்களின் அடிப்படை நோக்கமாக இருப்பது யாதெனில் பாரம்பரிய சக்தி மூலங்களான நிலக்கரி, எண்ணெய் மற்றும் வாயுக்கள் அற்ற சுத்தமான பசுமையான சூரிய மின் சக்தியை பிரபலமாக்குவதாகும்.

| **தொடர் இல.** | **விபரம்** | **எண்ணிக்கை** | **கொள்ளளவு/ (MW))** | **2022 ஆம் ஆண்டுக்கான வருமானம்/(ரூ.)** |
|---|---|---|---|---|
| 1 | தற்போது நடைமுறையில் உள்ள சிறிய அளவிலான நீர்மின் செயற்திட்டங்கள் | 12 | 39.85 | 271,810,951.59 * |
| 2 | கட்டுமானத்தில் உள்ள சிறிய அளவிலான நீர்மின் செயற்திட்டங்கள் | 10 | 26.18 | - |
| 3 | அமுலில் சூரிய மின்சக்தி செயற்திட்டங்கள் | 8 | 44.25 | 11,925,600.00 |
| 4 | 2022 இறுதிக்குள் செயல்பாட்டு மட்டத்தில் உள்ள புதிய சூரிய சக்தி செயற்திட்டங்கள் | 29 | 414.0 | 8,968,600.00 |
| **கூட்டுத் தொகை** | | 59 | 524.28 | 292,705,151.59 |

அட்டவணை எண் 1: புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டங்களின் சுருக்கம்

* - இலங்கை மின்சார சபை இந்த தொகையை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு நேரடியாக செலுத்துவதுடன் ஜனாதிபதி அலுவலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய 2021 நவம்பர் முதல் 2022 மே வரை கட்டணம் அறவிடுதல் இடை நிறுத்தப்பட்டதுடன், 2022 ஜூன் முதல் மீண்டும் அறவிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபை 2022 ஆம் ஆண்டுக்கான கட்டணங்களில் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு எந்தவொரு தொகையையும் செலுத்தவில்லை.

**1. அமுலில் உள்ள சிறிய அளவிலான நீர் மின்சார செயற்திட்டங்கள்**

| தொ.இ. | செயற்திட்டம் | செயற்திட்ட முதலீட்டாளரின் பெயர் | மின் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட திகதி | நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணம் / % | ஒழுங்காக்கப்பட்ட / ஒழுங்காக்கப்படாத | கொள்ளளவு/ MW | 2021 ஆம் ஆண்டின் வருமானம் / ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மாதுறு ஓயா இடது கரை வான் கதவு (மாதுறு ஓயா I) நீர் மின் செயற்திட்டம் | ஈகல் பவர் (தனி.) நிறுவனம், இலக்கம் 09, முகத்துவார ஏரி, கைத்தொழில் வலயம், பாணந்துறை | 2011 ஜூன் | 34.2 | ஒழுங்காக்கப்பட்ட | 5.00 | 76,793,729.77 |
| 2 | கோலதெணிய நீர் மின் செயற்திட்டம் | கோலதெணிய ஹைட்ரோபவர் (தனி.) நிறுவனம், இலக்கம் 344, சிறிமங்கலவத்த, மாம்பே, பிலியந்தல | 2012 ஏப்ரல் | 6.0 | ஒழுங்காக்கப்படாத | 1.20 | 2,667,531.81 |
| 3 | பிரென்போட் நீர் மின் செயற்திட்டம் | பிரென்போட் ஹைட்ரோபவர் (தனி.) நிறுவனம், இலக்கம் 315, வொக்சோல் வீதி, கொழும்பு 02 | 2013 ஏப்ரல் | 13.1 | ஒழுங்காக்கப்பட்ட | 2.50 | 9,491,000.15 |
| 4 | லெனகெதர நீர் மின் செயற்திட்டம் | கென்ட் ஹைட்ரோ (தனி.) நிறுவனம், இலக்கம் D/1, கில்ட்போட் பிறை, கொழும்பு 07 | 2013 மே | 13.0 | ஒழுங்காக்கப்பட்ட | 1.40 | 4,495,034.70 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | பலாபத்வல நீர் மின் செயற்திட்டம் | எனர்ஜி ஜெனரேடர்ஸ் (தனி.) நிறுவனம், இலக்கம் 69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 | 2013 மே | 6.0 | ஒழுங்காக்கப்பட்ட | | 6.00 | 33,565,437.71 |
| 6 | மாதுறு ஓயா இடது கரை 24 + 140 கி.மீ. இறக்குக் கட்டமைப்பு (மாதுறு ஓயா I I) நீர் மின் செயற்திட்டம் | ஈகல் பவர் (தனி.) நிறுவனம், இலக்கம் 09, முகத்துவார ஏரி, கைத்தொழில் வலயம், பாணந்துறை | 2013 நவம்பர் | 27.0 | ஒழுங்காக்கப்பட்ட | | 2.00 | 15,351,782.72 |
| 7 | கீழ் கொத்மலை நீர் மின் செயற்திட்டம் | கீழ் கொத்மலை ஓயா ஹைட்ரோபவர் (தனி.) நிறுவனம், இலக்கம் 9/1-5, ரோயல் மாவத்தை, கொழும்பு 07 | 2014 ஜூன் | 6.0 | ஒழுங்காக்கப்படாத | | 4.80 | - |
| 8 | ரொஸ் எஸ்டேட் நீர் மின் செயற்திட்டம் | ரொஸ் ஹைட்ரோபவர் (தனி.) நிறுவனம், இலக்கம் 11, ஜோசப் வீதி, கொழும்பு 04 | 2014 செப்டம்பர் | 10.0 | ஒழுங்காக்கப்பட்ட | | 3.80 | 30,877,015.74 |
| 9 | ஓவல நீர் மின் செயற்திட்டம் | எக்ஸாஸ் (ஓவல) பவர் (தனி.) நிறுவனம், இலக்கம் 276, மாபிம, ஹெய்யந்துடுவ | 2015 ஏப்ரல் | 10.0 | ஒழுங்காக்கப்பட்ட | | 2.80 | 20,407,526.63 |
| 10 | மாதுறு ஓயா இடது கரை 24 + 450 கி.மீ. இறக்குக் கட்டமைப்பு (மாதுறு ஓயா I I I) நீர் மின் செயற்திட்டம் | ஈகல் பவர் (தனி.) நிறுவனம், இலக்கம் 09, முகத்துவார ஏரி, கைத்தொழில் வலயம், பாணந்துறை | 2015 ஆகஸ்ட் | 3.4 | ஒழுங்காக்கப்பட்ட | | 0.60 | 1,507,424.72 |
| 11 | தம்புளு ஓயா நீர் மின் செயற்திட்டம் | எச்.பீ.டி. பவர் (தனி.) நிறுவனம், இலக்கம் 334, டீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 | 2016 ஆகஸ்ட் | 10.0 | ஒழுங்காக்கப்பட்ட | | 3.25 | 23,092,084.80 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | அன்கந்த நீர் மின் செயற்திட்டம் | எக்ஸாஸ் (அன்கந்த) பவர் (தனி.) நிறுவனம், இலக்கம் 276, மாபிம, ஹெய்யந்துடுவ | 2018 செப்டம்பர் | 10.0 | ஒழுங்காக்கப்பட்ட | 6.50 | 53,562,382.84 |
| **மொத்தம்** | | | | | | **39.85** | **271,810,951.59** |

குறிப்பு – 1. கீழ் கொத்மலை செயற்திட்டம் தொடர்பான கட்டணப் பட்டியல் பிரதிகள் வழங்கப்படாமையினால் எவ்வளவு தொகை அறவிடப்பட வேண்டும் என்பதை இலங்கை மகாவலி அதிகார சபையால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, இந்த நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சட்டப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளது.

2. ஜனாதிபதி அலுவலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய 2021 நவம்பர் முதல் 2022 மே வரை கட்டணம் அறவிடுதல் இடை நிறுத்தப்பட்டதுடன், 2022 ஜூன் முதல் மீண்டும் அறவிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபை 2022 ஆம் ஆண்டுக்கான கட்டணங்களில் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு எந்தவொரு தொகையையும் செலுத்தவில்லை.

**பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற (தற்பொழுது செயற்பாட்டு நிலையில் இல்லாத) சிறிய அளவிலான நீர் மின் உற்பத்திச் செயற்திட்டங்கள்**

| தொடர் இலக்கம் | செயற் திட்டத்தின் பெயர் | முதலீட்டாளரின் பெயர் | ஆற்றல் / MW | ஒழுங்காக்கப்பட்ட/ ஒழுங்காக்கப்படாத | முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 1 | உகுவெல | ஒனிக்ஸ் ஹைட்ரோபவர் (தனி.) நிறுவனம் | 2.2 | ஒழுங்காக்கப்பட்ட | மின்சாரத்தை கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் (Power Purchase Agreement) இற்கு எட்டுதல் மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபையுடன் குத்தகை ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திடுதல் முன்னெடுக்கப்பட உள்ளது. |
| 2 | திக்கல | எஸ்காஸ் திக்கல பவர் (தனி.) நிறுவனம் | 4.4 | ஒழுங்காக்கப்பட்ட | சிவில் பொறியியல் கட்டுமானப் பணிகள் முடிவடைந்த நிலையில் உள்ளது. மின் பிறப்பாக்கி இயந்திரம் பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. |
| 3 | கிவுல | எஸ்காஸ் கிவுல பவர் (தனி.) நிறுவனம் | 2.8 | ஒழுங்காக்கப்பட்ட | மின்சாரத்தை கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு ஆவன செய்யப்பட்டு உள்ளது. |

| தொடர் இலக்கம் | செயற் திட்டத்தின் பெயர் | முதலீட்டாளரின் பெயர் | ஆற்றல் / MW | ஒழுங்காக்கப்பட்ட/ ஒழுங்காக்கப்படாத | முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 4 | நாயக்கும்புற | ரெலிக் ஹைட்ரோபவர் ஜெனரேசன் (தனி.) நிறுவனம் | 0.5 | ஒழுங்காக்கப்பட்ட | சூழலியல் தாக்க மதிப்பீட்டு (EIA) அறிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் தீர்மானத்திற்கு அமைய தற்காலிக அங்கீகாரத்தைப் (Provisional Approval) பெற்றுக் கொள்வதற்காக இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையிடம் விண்ணப்பித்து உள்ளது. |
| 5 | சந்திரிக்கா வாவி | மகாவலி ஆலோசனைப் பணியகம் (தனி.) நிறுவனம் | 0.63 | ஒழுங்காக்கப்பட்ட | சூழலியல் தாக்க மதிப்பீடு (EIA) நிறைவு செய்யப்பட்டுள்ளது. நில்வலா செயற்திட்டத்தின் இறுதி அறிக்கைக் கிடைக்கப் பெற்ற பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். |
| 6 | கும்பல்ஒழுவ I | நோவூட் ஹைட்ரோ பவர் (தனி.) நிறுவனம் | 2.4 | ஒழுங்காக்கப்படாத | முதலீட்டாளர்கள் இருவருக்கும் இடையில் உள்ள முரண்பாட்டை தீர்ப்பதற்காக நில அளவீட்டை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| 7 | கும்பல்ஒழுவ I I | கும்பல்ஒழுவ ஹைட்ரோ பவர் (தனி.) நிறுவனம் | 1 | ஒழுங்காக்கப்படாத | |
| 8 | மாதுறு ஓயா LBL3 | நிப்போன் நிட் (தனி.) நிறுவனம் | 0.15 | ஒழுங்காக்கப்பட்ட | அடிப்படை சுற்றாடல் ஆய்வு நிறைவு செய்யப்பட்டு உள்ளது. |
| 9 | மொரகொல்ல சிறிய அளவிலான நீர் மின் சக்திச் செயற்திட்டம் | சிஜியென் யன்ங் எனர்ஜி கம்பனி (தனி.) நிறுவனம் | 2.1 | ஒழுங்காக்கப்பட்ட | சூழலியல் தாக்க மதிப்பீடு (EIA) முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |

| தொடர் இலக்கம் | செயற் திட்டத்தின் பெயர் | முதலீட்டாளரின் பெயர் | ஆற்றல் / MW | ஒழுங்காக்கப்பட்ட/ ஒழுங்காக்கப்படாத | முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 10 | கெடம்பே | ஏசியன் ஹைட்ரோ பவர் ஜெனரேசன் (தனி.) நிறுவனம் | 10 | ஒழுங்காக்கப்படா த | தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. |
| **மொத்தம்** | | | **26.18** | | |

## சூரிய மின் சக்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம்

## 2. அமுலில் உள்ள சூரிய மின் சக்திச் செயற்திட்டங்கள்

| தொ.இ. | முதலீட்டாளர் | இடம் | ஆற்றல் கொள்ளளவு / மெ.வொ | நிலப் பரப்பு/ ஹெக்டயார் | வருடாந்த வரித் தொகை / ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | சாகா சோலர் பவர் | வலவ/ மயுரபுறம் தொகுதி | 10.0 | 18.21 | 3,456,000.00 |
| 2 | ஐரிஸ் இகோ பவர் (தனி.) நிறுவனம் | வலவ/ மயுரபுறம் தொகுதி | 10.0 | 18.50 | 3,888,000.00 |
| 3 | எனார்சி லங்கா சோலார் (தனி.) நிறுவனம் | வலவ/ மயுரபுறம் தொகுதி | 10.0 | 18.50 | 3,888,000.00 |
| 4 | இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை | வலவ/ மயுரபுறம் தொகுதி | 1.237 | 18.60 | - |
| 5 | சோலார் வன் சிலோன் (தனி.) நிறுவனம் | “பி” வலயம், சேனபுறம் தொகுதி | 10.0 | 19.50 | 297,600.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | பிந்தென்ன சோலர் (தனி.) நிறுவனம் | "C" வலயம் / கிராந்துருகோட்டே பிரிவு | 1.0 | 2.63 | 120,000.00 |
| 7 | ஊவா சோல (தனி.) நிறுவனம் | "C" வலயம் / கிராந்துருகோட்டைத் தொகுதி | 1.0 | 2.63 | 128,000.00 |
| 8 | மாபாகட சோலர் (தனி.) நிறுவனம் | "C" வலயம் / கிராந்துருகோட்டைத் தொகுதி | 1.0 | 2.83 | 148,000.00 |
| | **கூட்டுத் தொகை** | | 44.25 | 101.4 | 11,925,600.00 |

### 3. ஏனைய சூரிய மின் சக்திச் செயற்திட்டங்களின் தற்போதைய நிலைமை

| தொ. இல. | முதலீட்டாளரின் பெயர் | இடம் | பரப்பளவு / ஹெக்டேர் | கொள்ளளவு / மெகாவொட் | ஆண்டு வரி தொகை / (ரூ.) | 31.12.2022 ஆம் திகதியாகும் போது நிலை |
|---|---|---|---|---|---|---|
| <u>வலவ மகாவலி விசேட பிரதேசம்</u> | | | | | | |
| 1 | சோல் நெவ்டாஸ் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 18.21 | 10.0 | 4,320,000.00 | வருடாந்திர வரி அடிப்படையில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. செயற்திட்டம் தொடங்கப்படவில்லை. |
| 2 | இலெக்சிஸ் பவர் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 17.20 | 10.0 | 4,648,800.00 | வருடாந்திர வரி அடிப்படையில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. செயற்திட்டம் தொடங்கப்படவில்லை. |
| 3 | சிஜியாங் யாங் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 20.23 | 10.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. நில அளவீட்டு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| 4 | ஏசியன் சன் எடிஷன் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 8.0 | 5.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. நில அளவீட்டு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| 5 | ஏசியன் சன் பவர் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 8.0 | 5.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. நில அளவீட்டு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| 6 | ஏசியன் ஆக்டிவ் சோலார் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 8.0 | 5.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. நில அளவீட்டு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| 7 | ஏசியன் சோலார் கான்செப்ட் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 8.0 | 5.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. நில அளவீட்டு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளது. |

| தொ. இல. | முதலீட்டாளரின் பெயர் | இடம் | பரப்பளவு / ஹெக்டேர் | கொள்ளளவு / மெகா வொட் | ஆண்டு வரி தொகை / (ரூ.) | 31.12.2022 ஆம் திகதியாகும் போது நிலை |
|---|---|---|---|---|---|---|
| 8 | டுடு இன்டர்நஷனல் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 12.15 | 10.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. |
| 9 | ஓரியன் சோலார் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 12.15 | 10.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. |
| 10 | தனிஷ் இன்டர்நேஷனல் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 12.15 | 10.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. |
| 11 | தனு இன்டர்நஷனல் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 12.15 | 10.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. |
| 12 | நிதன்யா இன்டர்நேஷனல் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 12.15 | 10.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. |
| 13 | எலக்ட்ரோலைட் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 10.0 | 10.0 | - | நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தற்காலிக அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| 14 | எலிபன்ட் பவர் இன்டர்நேஷனல் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 10.0 | 10.0 | - | நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தற்காலிக அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| 15 | ஜென்கோ (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 10.0 | 10.0 | - | நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தற்காலிக அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| 16 | லெஷர் கிரியேஷன்ஸ் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 10.0 | 10.0 | - | நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தற்காலிக அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| 17 | போர்ட்டன் சாண்ட் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 10.0 | 10.0 | - | நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தற்காலிக அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| 18 | பொட்டோவாட் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 10.0 | 10.0 | - | நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தற்காலிக அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| 19 | சோலஜென் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 10.0 | 10.0 | - | நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தற்காலிக அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| 20 | ஸ்டாலியன் எனர்ஜி (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 10.0 | 10.0 | - | நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தற்காலிக அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| 21 | தல்னா ஹோல்டிங்ஸ் (தனி.) நிறுவனம் | மயூரபுர தொகுதி | 10.0 | 10.0 | - | நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தற்காலிக அனுமதி பெறப்பட்டுள்ளது. |

| தொ. இல. | முதலீட்டாளரின் பெயர் | இடம் | பரப்பளவு / ஹெக்டேர் | கொள்ளளவு / மெகாவொட் | ஆண்டு வரி தொகை / (ரூ.) | 31.12.2022 ஆம் திகதியாகும் போது நிலை |
|---|---|---|---|---|---|---|
| **"பி" வலயம்** | | | | | | |
| 22 | பொலன்னறுவை சோலார் (தனி.) நிறுவனம் | அசேலபுர தொகுதி | 12.0 | 5.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. |
| 23 | காசல் எ சோலார் (தனி.) நிறுவனம் | அசேலபுர தொகுதி | 12.0 | 5.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. |
| 24 | எக்கோ சோலார் வன் (தனி.) நிறுவனம் | புனானி மேற்கு/கோரளைப்பற்று - தெற்கு/மட்டக்களப்பு | 10.0 | 5.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. |
| 25 | எக்கோ சோலார் டூ (தனி.) நிறுவனம் | புனானி மேற்கு/கோரளைப்பற்று - தெற்கு/மட்டக்களப்பு | 10.0 | 5.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. |
| 26 | எக்கோ சோலார் சொலூஷன்ஸ் (தனி.) நிறுவனம் | புனானி மேற்கு/கோரளைப்பற்று - தெற்கு/மட்டக்களப்பு | 4.0 | 2.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. |
| 27 | சீக் எனர்ஜி (தனி.) நிறுவனம் | புனானி மேற்கு/கோரளைப்பற்று - தெற்கு/மட்டக்களப்பு | 148.0 | 100.0 | - | நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தற்காலிக அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| 28 | சோலா ஃபோர்ஜ் (தனி.) நிறுவனம் | புனானி மேற்கு/கோரளைப்பற்று - தெற்கு/மட்டக்களப்பு | 190.0 | 100.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. |
| **"ஹூறுலு வாவி" வலயம்** | | | | | | |
| 29 | சாயிஷா சோலர் (தனி.) நிறுவனம் | ஹபரண | 6.02 | 2.0 | - | எரிசக்தி உரிமம் பெறப்பட்டுள்ளது. நில அளவீட்டு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| **தொகுப்பு** | | | 630.41 | 414.0 | 8,968,600.00 | |

## 2.4 பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க தொழிற்பாட்டுப் பிரிவு – இலங்கை மகாவலி அதிகார சபை

**அறிமுகம்**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி பத்திரிகை மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட, 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்ட மூலத்திற்கு அமைய அப்பொழுது மகாவலி அபிவிருத்திச் சபை எனும் பெயரில் காணப்பட்ட நிறுவனமானது இலங்கை மகாவலி அதிகார சபை எனும் பெயரில் விசேட அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்ட அரை அரச நிறுவனமாக மாற்றம் செய்யப்பட்டது.

மகாவலி அபிவிருத்திச் செயற்திட்டம் மற்றும் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பிரதான நீர்த்கேகங்கள், அணைகள் மற்றும் அணைக்கட்டுக்களை மேம்படுத்துதல், தொழிற்படுத்துதல் மற்றும் தாபரிக்கும் நோக்கில் இலங்கை மகாவலி அதிகார சபையில் 1985 இல் உருவாக்கப்பட்டு நிறுவப்பட்ட பிரிவானது ஆரம்ப கட்ட பணிகளின் நிர்வாக செயற்பாடுகள், இயக்குதல் மற்றும் தாபரிப்புப் பிரிவு என்ற பெயரில் அழைக்கப்பட்டது. பொது மக்கள் இனங்கண்டு கொள்வதற்கு இலகுவான விதத்தில் 2019 ஆம் ஆண்டில் இருந்து இப்பிரிவானது **“பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க தொழிற்பாட்டுப் பிரிவு”** என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

இதுவரை காலமும் நிர்மாணிக்கப்பட்டுள்ள அணைகள் மற்றும் நீர்த்தேக்க முறைமையானது, இலங்கை மகாவலி அதிகார சபைக்குரிய சொத்தாக அரசாங்கம் சார்பாக நம்பிக்கைப் பொறுப்பாண்மை ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அச்சொத்துக்கள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் நிர்வகிக்கப்படுகின்றன. இப்பிரதான அணைகள் மற்றும் நீர்தேக்க முறைமையின் கட்டுமானச் செலவின் ஒட்டு மொத்த தற்போதைய பெறுமதி சுமார் 420 பில்லியன் ரூபாயாகும்.

இப்பிரிவின் மூலம் பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக பிரதான நீர்த்தேக்கங்களின் செயற்பாட்டுப் பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்படுகின்றன. இதற்காக சர்வதேச நீர்த்தேக்க மற்றும் அணைச் செயற்பாடு தொடர்பான நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி நீரை உபயோகிப்பவர்களுக்கு உயர்ந்தபட்ச நீர்த் தேவை விநியோகிக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக தாழ் பள்ளத்தாக்குகளில் வெள்ள நீர் பாதிப்பை இயன்றளவு குறைப்பதற்கு அவசியமான வெள்ள நீரைக் கட்டுப்படுத்துவதற்காக நீர்த்தேக்க கட்டுப்பாட்டுப் படலைகளை செயற்படுத்துதல் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், நீர்த்தேக்கங்கள் மற்றும் இடைப் பள்ளத்தாக்குக் கால்வாய் மட்டத்தில் நீர் முகாமைத்துவ செயற்பாட்டு நடவடிக்கைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டமைப்புக்களை தாபரித்தல் மேற்கொள்ளப்படுவதுடன், நீர்த்தேக்கங்களின் நீண்ட கால நிலைத்திருப்பை அடிப்படையாகக் கொண்ட மேம்படுத்தல்களுக்கான திட்டங்களைத் தயாரித்து அமுல்படுத்துதல் மற்றும் நீர்த்தேக்க முறைமைகளுக்கரிய புணர்நிர்மாண செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் என்பன முன்னெடுக்கப்படுகின்றன.

**இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பணிகள்.**

**நிர்வாகம்-** அணை மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர்க் கபாலம் , தாங்கல் வலயம் (100m Buffer zone) மற்றும் அதற்குச் சொந்தமான ஒதுக்குகளை பாதுகாக்கும் நோக்குடனான பிரமாணங்களைச் செயற்படுத்தி நீர்த்தேக்கங்கள் மற்றும் ஒதுக்குகளுக்குச் சொந்தமான அதிகார பிரதேச நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**செயற்படுத்துதல்** - நீர் முகாமைத்துவச் செயலகத்தினால் நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்காக நீர்த்தேக்கங்கள் மற்றும் இடைப் பள்ளத்தாக்குக் கால்வாய் மட்டத்தின் மடைப் படலைகளை தொழிற்படச் செய்தல் மற்றும் நீர்த்தேக்கங்களின் மேல் மற்றும் தாழ் பள்ளத்தாக்குகளில் வெள்ள நீரை இயன்றளவு குறைக்கும் பொருட்டு வெள்ள நீரைக் கட்டுப்படுத்துவதற்காக கதவுகளை செயற்படுத்துதல்.

**தாபரிப்பு** - நீர்த்தேக்கங்கள் மற்றும் இந்நீர்த்தேக்கங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள அணை, படலைகள், நீர்த்தேக்கத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் மற்றும் நீர்த்தேக்கத்துடன் இணைந்துள்ள சகல கட்டமைப்புக்களும் சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைய (ICOLD) தாபரிப்பதைப் போன்றே அவற்றை மேம்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

**2022 ஆம் ஆண்டில் நீர்த்தேக்கங்களை அண்டிய சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள்.**

| தொடர் இலக்கம் | விபரம் | பௌதீக முன்னேற்றம் % | நிதிசார் முன்னேற்றம் மில். ரூபாய் |
|---|---|---|---|
| 01 | டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்ச்சித் திட்டங்கள் - திகன, நிலகம மற்றும் அலுவலக வளாகம். | 90 | 0.270 |
| 02 | விக்டோரியா மற்றும் பொல்கொல்ல நீர்த்தேக்க ஒதுக்கிலுள்ள பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன்களை அகற்றும் சிரமதான நிகழ்ச்சித் திட்டங்கள். | 85 | 0.000 |
| 03 | நீர்த்தேக்க ஒதுக்கில் உள்ள ஆக்கிரமிப்பு மிக்க தாவரங்கள், பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன்களை அகற்றும் சிரமதான நிகழ்ச்சிகள். | 80 | 0.306 |
| 04 | நீர்த்தேக்க ஒதுக்குகளில் மூங்கில்/ காடு வளர்ப்புக் கன்றுகள் நடுதல். | 90 | 0.131 |
| 05 | அலுவலக வளாகங்களில் தோட்டச் செய்கை மேற்கொள்ளுதல். | 80 | 0.100 |
| 06 | தொழிற்சாலை மற்றும் சுற்றாடல் மாசுபடுத்தல் நிறுவனங்கள் மற்றும் தளங்கள் தொடர்பாக வெளிக்களப் பிரிசீலனை. | 60 | 0.000 |
| 07 | டெங்குக் குழு, சுற்றாடல் குழு மற்றும் ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றிற்காக செயலூக்க பங்களிப்பு வழங்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள். | 90 | 0.285 |
| 08 | கழிவு நீர் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் சுற்றாடல் அனுமதிப் பத்திரக் கட்டணம். | 100 | 0.050 |
| **மொத்தம்** | | | **1.142** |

**2022 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட விசேட முன்னேற்றம் மற்றும் அதன் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு.**

| தொடர் இலக்கம் | நீர்த்தேக்கம் | மின் உற்பத்திக்காக நீர் விநியோகித்தல் (MCM) | மின் உற்பத்தி ஆற்றல் (KWH) | தேசிய வருமானம் (ரூ. மில்லியன்) |
|---|---|---|---|---|
| 01 | விக்டோரியா | 2,256.500 | 909.301X $10^6$ | 16,176.465 |
| 02 | ரன்தெனிகல | 2,211.810 | 421.331X $10^6$ | 7495.478 |
| 03 | ரண்டெம்பே | 2,578.240 | 199.219X $10^6$ | 3,544.106 |
| 04 | கொத்மலை | 988.375 | 532.166X $10^6$ | 9,467.233 |
| 05 | போவதென்ன | 465.498 | 59.595X $110^6$ | 1,060.195 |
| 06 | மாதுறு ஓயா | 562.17 | 18.9557 X $10^6$ | 223.093 |
| 07 | பொல்கொல்ல | 976.968 | 170.502X $10^6$ | 3,033.231 |
| 08 | மொரகஹகந்த | 1,045.380 | 77.007X $10^6$ | 1,369.951 |
| 09 | உடவலவ | 1002.508 | 16.388 X $10^6$ | 291.543 |
| **மொத்தம்** | | **12,087.449** | **2,404.465 X $10^6$** | **44,077.242** |

**<u>2022 ஆம் ஆண்டில் விவசாய நோக்கங்களுக்காக நீர் விநியோகித்தல்</u>**

| தொ. இல. | நீர்த்தேக்கம் | | குடிநீர் விநியோகிக்கப்பட்ட அளவு மில்லியன் கன மீட்டர் (MCM) |
|---|---|---|---|
| 01 | பொல்கொல்ல திருப்பம் (போவதென்ன நீர்த்தேக்கத்திற்கு) | | 977 |
| 02 | மினிப்பே கால்வாய் | இடது கரை | 315 |
| | | வலது கரை | 1326 |
| 03 | மொரகஹகந்த நீர்த்தேக்கம் | | 1046 |
| 04 | உடவலவ | இடது கரை | 502 |
| | | வலது கரை | 475 |
| | **மொத்தம்** | | **4641** |

**பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டுப் பிரிவினால் நிர்வாகிக்கப்படுகின்ற நீர்த்தேக்கங்கள்.**

| நீர்த்தேக்கங்கள் | தாபரிக்கப்படுகின்ற பகுதிகள் |
|---|---|
| கொத்மலை | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| பொல்கொல்ல திசை திருப்பி | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் சுரங்கப் பாதை |
| போவதென்ன | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| தம்புளு ஓயா | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| கண்டலம | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| கலா வாவி | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| விக்டோரியா | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| ரன்தெனிகல | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| ரன்டெபே | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| மினிப்பே அணைக்கட்டு | மடைப் படலைகள், , வான் தகவுகள், இடைப் பள்ளத்தாக்குக் கால்வாய், பதுலு ஓயா நீர்ப் பாலம், சுரங்க வழி, மற்றும் நீர்த் தோரணங்களின் கட்டமைப்புக்கள். |
| லொக்கல் ஓயா, ஹேபோல ஓயா மற்றும் திஹபான ஓயா மட்டத் தோரணங்கள் | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| உல்ஹிடிய – ரத்கிந்த | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| மாதுறு ஓயா | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| உடவலவ | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| சந்திரிகா வாவி | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| மொகஹகந்த | அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள். |
| புஹுல்பொல | செயற்திட்டத்தின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு இல்லை என்பதுடன் தாபரிப்புப் பணிகள் கையேற்கப்பட்டு இல்லை. எமது பிரிவின் பதவியணியைச் சேர்ந்த சிலர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். |
| டயரபா | |



கொத்மலை நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 173 மில்லியன் கன மீட்டர்



பொல்கொல்ல நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 4.1 மில்லியன் கன மீட்டர்




விக்டோரியா நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 721 மில்லியன் கன மீட்டர்



ரன்தெனிகல நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 801 மில்லியன் கன மீட்டர்




ரன்தெபே நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 1.15 மில்லியன் கன மீட்டர்



மாதுறு ஓயா நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 596 மில்லியன் கன மீட்டர்



போவதென்ன நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 56 மில்லியன் கன மீட்டர்



தம்புளு ஓயா நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 117 மில்லியன் கன மீட்டர்



கண்டலம நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 33 மில்லியன் கன மீட்டர்



மினிப்பே நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 0.12 மில்லியன் கன மீட்டர்



சந்திரிக்கா வாவி நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 27.7 மில்லியன் கன மீட்டர்



உல்ஹிடிய - ரத்கிந்த நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 145 மில்லியன் கன மீட்டர்



கலா வாவி நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 123 மில்லியன் கன மீட்டர்



புஹுல்பொல நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 0.634 மில்லியன் கன மீட்டர்



உடவலவ நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 268.65 மில்லியன் கன மீட்டர்



டயரபா நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 0.970 மில்லியன் கன மீட்டர்



மொரகஹகந்த நீர்த்தேக்கம்

கொள்ளளவு : 558 மில்லியன் கன மீட்டர்

## 2.5 காணி உபயோக திட்டமிடல் பிரிவு

நிலைபெறுதகு அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட ஒருங்கிணைந்த திட்டமிடலானது காணி உபயோக திட்டமிடல் பிரிவின் வகிபாகமாகும். அதற்காக பௌதீக, பொருளாதார, சமூகவியல் அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் முகாமைத்துவத்தை இலக்குகளின் ஊடாக திட்டங்கள் தீட்டப்படுகின்றன. மகாவலி பெருந்திட்டத்திற்கு அமைய அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் பணிகளுக்காக காணிகளை இனங்காணுதல் மற்றும் திட்டங்களைத் தயாரித்தலானது காணி உபயோக திட்டமிடல் பிரிவின் அடிப்படைப் பணியாக உள்ளதுடன் அதில், தற்கால காணி உபயோக வடிவமைப்பை ஆய்வுக்கு உட்படுத்தி எதிர்கால அபிவிருத்திக்காக உகந்த காணிகள் மற்றும் பாதுகாக்கப்பட வேண்டி பிரதேசங்களை வேறாக்கி உத்திசார் திட்டங்களைத் தயாரித்தல் முன்னெடுக்கப்படுகின்றது.

**<u>பிரிவின் நோக்கு</u>**

"நிலைபெறுதகு காணி உபயோக வடிவமைப்பின் ஊடாக பரிபூரணமான வாழ்க்கைக் கோலம்"

**<u>அடிப்படைப் பணிகள்</u>**

1. அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக காணிகளை இனங்காணுதல்.
2. அபிவிருத்திச் செயற்திட்டப் பிரதேசங்களுக்குரிய திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் மகாவலி நகரங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
3. புதிய செயற்திட்ட பிரதேசங்களில் மீள் குடியேற்றத்தை மேற்கொள்ளுதல்.
4. மகாவலி அதிகார பிரதேசங்களின் திட்டங்களை இற்றைப்படுத்துதல்.
5. வருடாந்த பணித் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
6. காணிகளை கையுதிர்ப்பதற்கு அவசியமான பரிந்துரைகளை வழங்குதல்.
7. மகாவலி பிரதேச அபிவிருத்திக்குரிய தகவல்களை படமாக்கல்.
8. பெற்றோலிய வளங்களை பிரித்தெடுப்பதற்குரிய பரிந்துரைகளை வழங்குதல்.
9. மகாவலி நீர்த்தேக்க ஒதுக்குகளில் அமைந்துள்ள தனியார் காணிகளின் அபிவிருத்திப் பணிகளுக்காக பரிந்துரைகளை வழங்குதல்.

**<u>2022 ஆம் ஆண்டில் காணி உபயோக திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம் பற்றிய தகவல்கள்.</u>**

- 2022 ஆம் ஆண்டில் மகாவலி வலயங்களில் முதலீட்டு காணி வரைபட வேலைத்திட்டத்திற்காக ரூபா 60,000/- ஒதுக்கப்பட்டதுடன், காணிப் உபயோக திட்டமிடல் பிரிவினால் 54,755 ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன்படி, 2022 ஆம் ஆண்டில் காணி உபயோகம் தொடர்பான பிரிவின் நிதி முன்னேற்றம் 91.2% சதவீதமாகும்.
- மகாவலி வலயங்களில் உகந்த காணிப் பயன்பாட்டை வழிநடாத்துவதற்கும் ஒழுங்கற்ற காணிப் பயன்பாட்டை ஒழுங்குறுத்துவதற்கும், மகாவலி வலயங்களில் வசிக்கும் குடியேற்றவாசிகளின் வேண்டுகோளுக்கு இணங்க காணி, நீர்ப்பாசனம், குடியிருப்பு மற்றும் பிற பொதுத் தேவைகளுக்கான திட்டங்களின்படி முறையான உட்பிரிவுகளை சட்டப்பூர்வமாக்குவதற்காக 2022 ஜனவரி 2 முதல் செப்டம்பர் 30 வரை குறிப்பிடப்பட்ட 356 இடங்களுக்கான பௌதீக திட்டமிடல் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.
- மகாவலி பிரதேசத்தில் கனிய வளங்களை நிலைபெறுதகு விதத்தில் நிலைத்திருக்கச் செய்வதற்காக காணிகளைப் பயன்படுத்துவதை ஒழுங்குறுத்துவதன் மூலம் குடியேற்றவாசிகளின் பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தை அதிகரிக்கும் நோக்கில் 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை காணி உபயோகப் பிரிவினால் கனியப் பிரித்தெடுப்புச் செயற்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி, 2022 செப்டம்பர் 30 வரை 305 இடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதுடன் 2022 செப்டம்பர் 30 வரை **சுமார் 122.15** லட்சம் காணி உபயோகக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**<u>2022 ஆம் ஆண்டில் காணிப் உபயோக திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் தொகுப்பு</u>**

01. காணி உபயோக திட்டமிடல் திணைக்களத்தின் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தற்போது அபிவிருத்தி நடவடிக்கைகள் அமுலில் உள்ள அனைத்து மகாவலி வலயங்களினதும் காணி உபயொகம் தொடர்பான வரைபடங்களை மீள தயாரித்தல்.













02.மகாவலி டி வலயத்தில் வீட்டுத் தோட்டக் காணிகளுக்காக குடியேற்றவாசிகளால் அடிக்கடி முன்வைக்கும் வேண்டுகோளுக்கிணங்க மெதிரிகிரிய பிரிவின் நபட வாவி, பிசோபுர மற்றும் தஹம் வாவி ஆகிய அலகுகள் ஒவ்வொன்றுக்கும் 20 பர்சஸ் வீதம் தோட்டக் காணிகளுக்கு துண்டுத் திட்டங்களைத் தயாரித்து தேவையான




பணிகளுக்காக D வலயத்திற்கு அனுப்புதல்.

03.மொரகஹகந்த பிரதேசத்தின் அத்தனகடவல மற்றும் பகமூன பிரிவுகளின் குடியேற்றத் திட்டங்களின் ஆரம்ப திட்டங்களில், அடர் வனம் மற்றும் வனம் என பிரிக்கப்பட்ட பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்ட 06 காணிப்பகுதிகளைச் சூழ காட்டு யானைகளை ஒன்றுசேர்தல் மற்றும் பகல் நேரங்களில் கிராத்திற்குள் தங்குகின்ற யானைகள் இரவு நேரங்களில் கிராமத்திற்குள் நுழைகின்றமையால் கிராம மக்களின் உயிருக்குள்ள ஆபத்துக்களைக் கருத்திற் கொண்டு அக் காணித் துண்டுகளை மனித குடியேற்றங்களுக்காக துண்டு

| අ. අ | කොට්ඨාසය හා ඒකකය | සැලසුම් අංකය හා කැබලි අංකය | ප්‍රමාණය (හෙක් ) | සංෂිප්ත නිදේශය |
|---|---|---|---|---|
| 1 | බකමූණ නිකපිටිය | අ.හූ.පි. 03 අති 87 හි 1223 | 23.6771 | පර්. 20 බැගින් නිර්දේශිත බිම් කට්ටි ප්‍රමාණය 300. |
| 2 | බකමූණ නිකපිටිය | අ.ජ.පි.පො.292 හි 145 | 36.4730 | පර්. 20 බැගින් නිර්දේශිත බිම් කට්ටි ප්‍රමාණය 45. |
| 3 | අත්තනකඩවල | අ.ජ.පි.පො.25 අති 133 හි 6210 | 4.9168 | පර්. 20 බැගින් නිර්දේශිත බිම් කට්ටි ප්‍රමාණය 53. |
| 4 | අත්තනකඩවල | අ.ජ.පි.පො.25 අති 134 හි 6352 | 5.3675 | ස්ථිර වන වගාවක් ලෙස පවත්වා ගෙන යාම |
| 5 | අත්තනකඩවල අත්තනකඩවල | අ.ජ.පි.පො.30 අති 03 හි 395 | 19.2624 | යෝජිත භූමිය තුල තවදුරටත් කැලය පවතින බැවින් භාවිතය සංශෝධනය නිර්දේශ නොකරන අතර පරිසර කළමනාකරණය සඳහා වෙන්කරන ලද ප්‍රදේශයක් ලෙස පවත්වා ගෙන යාම හා පර්. 20 බැගින් නිර්දේශිත බිම් කට්ටි ප්‍රමාණය 110. |
| 6 | අත්තනකඩවල අත්තනකඩවල | අ.ජ.පි.පො.30 අති 03 හි 151 | 5.0261 | යෝජිත භූමිය තුල තවදුරටත් කැලය පවතින බැවින් භාවිතය සංශෝධනය නිර්දේශ නොකරන අතර පරිසර කළමනාකරණය සඳහා වෙන්කරන ලද ප්‍රදේශයක් ලෙස පවත්වා ගෙන යාම. |
| එකතුව | | | 94.7229 | |

பிரிப்பதற்கு பரிந்துரைகள் வழங்குவதற்குரிய களப் ஆய்வு முன்னெடுத்தல் மற்றும் திட்டங்களை தயாரித்தல்.

04. மகாவலி பி வலயத்தின் தென்கரை அபிவிருத்தி பிரதேசங்களில் சோள பயிர்ச்செய்கைக்கு சாத்தியமான இடங்களை அடையாளம் காண்பதற்காக களப் பரிசோதனைகளை










மேற்கொள்ளுதல்,வரைபடங்களை தயார் செய்தல்.

05.பொல்கொல்லவிலிருந்து நாவலப்பிட்டி வரையில் மகாவலி ஆற்றின் கரைகளை வரைதல் மற்றும் ஆற்றங்கரையை அண்மித்து மணல் படிந்துள்ள இடங்களை அடையாளம் காணுதல்.

06.பிசோபுர நகரில் வர்த்தக காணிகளுக்காக துண்ட வரைபடங்களைத் தயாரித்தல்.

07. வட மாகாணத்தின் விசேட பிரச்சினை தீர்க்கும் பிரிவுடன் தொடர்புடைய கொக்கிளாய் பிரதேச மக்களின் காணி மற்றும் மீன்பிடி பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக கொக்கிளாய் பிரதேச மக்கள் எல் வலயத்தின் பௌதீக திட்டமிடலாளருடன் ஒருங்கிணைந்து ஜனகபுர பிரிவில் பயிரிடப்பட்டுள்ள விவசாய நில பிரச்சினைகள் மற்றும் மீன்பிடிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

08 .மகாவலி டி வலயத்தின் பிசோபுர பிரிவின் பிசோபுர அலகின் கால்நடை வள மற்றும் கால்நடை வளர்ப்பு அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட காணிக்காக துண்டத் திட்டம் தயாரித்தல் மற்றும் தேவையான பணிகளுக்காக D வலயத்திற்கு ஆற்றுப்படுத்துதல்.




09.மகாவலி எல் வலயத்தின் வெஹெரதென்ன பிரிவில் அமைந்துள்ள கால்நடை வள மற்றும் கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள காணியின் ஆரம்ப காணித் திட்டத்தை தயாரித்தல் மற்றும் உரிய பணிகளுக்காக எல் வலயத்திற்கு ஆற்றுப்படுத்துதல்.




10.மகாவலி அபிவிருத்தி வலயத்தின் சூரியபுர கந்தளாய் பிரிவில் குடியேறியவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு, வீட்டுத் தோட்டம் மற்றும் விவசாயத்திற்கு பொருத்தமானதாக இனங்காணப்பட்ட காணிகளுக்கான பூர்வாங்க திட்டமொன்றை தயாரித்து தேவையான பணிகளுக்காக D வலயத்திற்கு ஆற்றுப்படுத்துதல்.







11.மிதக்கும் சூரிய சக்தி மின்னுற்பத்தி செயற்திட்டங்களுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்களைக் காட்டும் வரைபடத்தை தயாரித்தல் மற்றும் சூரிய மின்னுற்பத்தி செயற்திட்டங்களுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்களின் அமைவிடங்களை வரைபடங்களின் மூலம் பரிசோதித்து அவை மகாவலி அதிகார எல்லைக்குள் அமைந்துள்ளனவா என்பதை உறுதிப்படுத்துதல்.



12.மகாவலி வலயத்திலும் அதைச் சூழவுள்ள இலங்கையின் வனசீவராசிகள் பாதுகாப்பு பிரதேசங்கள் மற்றும் வன பாதுகாப்பு பிரதேசங்கள் உள்ளடங்கிய வரைபடத்தை தயாரித்தல்.



13. சி வலயத்தின் மஹாவனவெல நகரத் திட்டத்தை இற்றைப்படுத்துதல் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக வலயத்திற்கு ஆற்றுப்படுத்துதல்.




14. மாதுறு ஓயாவின் தென்கரையில் உள்ள வாகனேரி பிரதேசங்களின் எல்லைகளை மீளாய்வு செய்வதற்கான மீள் வர்த்தமானி அட்டவணைகளையும் வரைபடங்களையும் தயாரித்தல்.




15.மொரகஹகந்த மற்றும் களுகங்கை இடையக வலயங்களை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு இடமாற்றுவதற்கான இறுதி அட்டவணையைத் தயாரித்தல்.

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் மற்றும் ஒருங்கிணைப்புச்.செய்தல்






Memorandum of Understanding
(MOU)
100 Meters Area of Kaluganga Reservoir
Mahaweli Authority of Sri Lanka
And
Department of Wildlife Conservation


Memorandum of Understanding
(MOU)
100 Meters Area of Moragahakanda Reservoir
Mahaweli Authority of Sri Lanka
And
Department of Wildlife Conservation

16. மகாவலி அதிகார சபை உத்தியோகத்தர்கள், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் இணைந்த கள ஆய்வுகளில் பங்குபற்றி வல்சபுகல புற்றரை அபிவிருத்திச் செயற்திட்டம் தொடர்பான பருமட்டான வரைபடங்களை தயாரித்தல் மற்றும் சுற்றாடல் அறிக்கைக்கான வரைவு தயாரித்தல்.










17 .மகாவலி ஹுறுலு வாவி விசேட வலயத்தினுள் வர்த்தமானியில் வெளியிடப்படாத பலுகஸ்வெவ பிரதேச பிரிவுக்கு சொந்தமான 05 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் மகாவலி விசேட வலயத்திற்கு உள்ளடக்குவது தொடர்பான தகவல்களைச் சேகரித்தல் வரைபடங்களை தயாரித்தல் மற்றும் அமைச்சரவை பத்திர வரைவைத் தயாரித்தல்.







18.மகாவலி விசேட அதிகார வரம்புகளாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள ஆனால் இதுவரை அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத வலயம் A , J வலயம், K வலயம் மற்றும் வலயம் I ஆகியவற்றில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை அடையாளம் காண்பதற்காக தற்போதுள்ள இரண்டாம் நிலைத் தரவுகளை (தேசிய பௌதீகத் திட்டம் 2050) ஆய்வு செய்வதன் மூலம் அபிவிருத்தி ஆற்றல்களை அடையாளம் காணுதல் மற்றும் மேற்படி பிரதேசங்களில் தற்போதுள்ள நிர்வாக கட்டமைப்பு மற்றும் தற்போதுள்ள காணி உபயோகம் குறித்து ஆராய்வதற்கான பூர்வாங்க வரைபடங்களைத் தயாரித்தல். (கிராம உத்தியோகத்தர் பிரிவு வரைபடம், காணி உபயோக வரைபடம், உருவரைக் கோட்டு வரைபடம், நீர்வழி வரைபடம்)






## 2.6வன மற்றும் சுற்றாடல் பிரிவு

**அறிமுகம்**

இலங்கைக்கு சமூக பொருளாதார பிரதிபலன்கள் பலவற்றை பெற்றுக் கொடுத்து செயற்படுத்தப்பட்டதுடன் அதனை துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எட்டுவதற்காக அதனை நிலைபெறுதகு சுற்றாடல் பாதுகாப்பு ஒழுங்குமுறையின் கீழ் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு அடிப்படைத் திட்டங்கள் தீட்டப்பட்டதுடன் அதன் மூலம் முன்மொழியப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளின் சகல கட்டங்களிலும் இடம்பெற முடியுமான சூழலியல் தாக்கங்கள் மற்றும் மாற்றங்களை இயன்றளவு குறைந்த மட்டத்தில் பேணுவது பிரதான நோக்கதாகும்.

மகாவலி வலயங்களில் (மகாவலி கீழ் பள்ளத்தாக்குகள்) மேல் மகாவலி நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாத்தல், இயற்கை வளங்களின் முகாமைத்துவம் , உயிரியல் பல்வகைமை மற்றும் பெறுமதிமிக்க சூழலியல் தொகுதிகளைப் பாதுகாத்தல் மற்றும் எதிர்காலத்திற்காக பொருத்தமான பாதுகாப்பு உபாயமுறைகளை இனங்கண்டு நடைமுறைப்படுத்துதல் என்பன சுற்றாடல் மற்றும் வனப் பிரிவின் பிரதான நோக்கமாகும். இதில் அப்பிரதேசங்களில் அதாவது, மேல் மகாவலி நீரேந்து பிரதேசங்களில் மற்றும் தாழ் பள்ளத்தாக்குகளில் உள்ள பிரச்சினைகள் மற்றும் காரணங்களை நடைமுறை ரீதியில் அடையாளம் கண்டு அதற்கான நிலையான தீர்வுகளை முன்மொழிந்து செயல்படுத்துதல் முன்னெடுக்கப்படும்.

**நோக்கம் :-**

நிலைபெறுதகு அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு மகாவலி கங்கை வடிநிலத்தை ஆரோக்கியமாக மற்றும் வலுவான முறையில் பராமறித்தல்.

(Healthy Mahaweli River Basin for Sustainable Development)

**குறிக்கோள்**

- ஒட்டு மொத்த மகாவலி அபிவிருத்தி பணிகளின் மூலம் சூழல் பாதுகாக்கும் விதமாக அமுல்படுத்துவதற்காக அபிவிருத்திப் பணிகளைச் செயற்படுத்துதல்.
- வருடம் பூராகவும் தொடர்ச்சியான நீர்த்தாரையை போதுமான விதத்தில் மற்றும் தரம் வாய்ந்ததாக பேணுவதற்காக உயர் மகாவலி நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாத்தல்.
- மகாவலி நீர்க் கூறுகள் மற்றும் கீழ் மகாவலி பிரதேசங்களில் இயற்கைச் சூழல் தொகுதியை பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- மகாவலி பிரதேசங்களில் மரபுரிமை மிக்க தாவரங்கள் மற்றும் கால்நடை இனங்கள் மற்றும் உயிரியலுக்குரிய சுற்றாடல் தொகுதியைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- மகாவலி அபிவிருத்திப் பணிகள் காரணமாக அகற்றப்பட்ட காடு வளர்ப்புப் பிரதேசங்களுக்குப் பதிலாக புதிய வளர்ப்புகளை மீள உருவாக்குதல்.

**பிரதான பணிகள்**

1. உயர் மகாவலி நீரேந்து பிரதேசத்தைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கான பணிகள்
2. மகாவலி தாழ் பள்ளத்தாக்கு மற்றும் ஏனைய மகாவலி வலயங்களில் முன்னெடுக்கப்படுகின்ற சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் செயற்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்திட்டங்களின் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை கண்காணித்தல் மற்றும் அமுல்படுத்துதல்.
3. மகாவலி அதிகார சபையின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற பாரிய அளவிலான செயற்திட்டங்களில் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளின் சுற்றாடல் அங்கீகாரத்தின் நிபந்தனைகளை செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மற்றும் பின் தொடர்தல்கள், அமைச்சு மற்றும் மகாவலி அதிகார சபையின் மூலம் செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள செயற்திட்டங்களின் தொழில்நுட்ப குழு, இயக்கற் குழு மற்றும் பின்தொடர்வுக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்துதல்.
4. தேசிய சூழலியல் சட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை அங்கீகரிக்கும் நிறுவனம் என்ற ரீதியில் சூழலியல் தாக்கங்களை மதிப்பிடும் செயற்பாடுகளின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் பின் தொடர்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
5. நேரியல் அரச நிறுவனங்களால் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்திச் செயற்திட்டங்களில் தொழில்நுட்ப குழுவை பிரதிநிதித்துவப்படுத்துதல், தேசிய ரீதியாக அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள சூழலியல் செயற்பாடுகள் தொடர்பான ஒன்று கூடல்கள் மற்றும் செயலமர்வுகளுக்காக அதிகார சபையை பிரதிநிதித்துவப்படுத்துதல் மற்றும் உள்ளக குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

## மேல் மகாவலி நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகள்
## சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவு – கொத்மலை

சுமார் 3118 சதுர கி.மீ. உடைய இலங்கையின் மத்திய ஈர வலயத்திற்குச் சொந்தமான மேல் மகாவலி நீரேந்து பிரசேமானது மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுகின்ற நீர்ப்பாசன மற்றும் நீர் மின் உற்பத்திச் செயற்திட்டங்களுக்கு நீரை விநியோகிக்கின்ற பிரதானமான வழியாகும். அதன் மூலம் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படை நோக்கத்திற்கு மேலதிகமாக நாட்டின் சக்தி வலுத் தேவையை பூர்த்தி செய்வதற்காக நீர் மின் உற்பத்திக்கும் பங்களிப்பு வழங்குகின்றது. மகாவலி திட்டத்தின் தொடக்க சந்தர்ப்பத்தில் 50% ஐ அண்மித்துக் காணப்பட்ட இந்நீர் மின் உற்பத்தி ஆற்றலானது நாட்டின் சக்தி வலுத் தேவையின் அடிப்படையில் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் ஏனைய தேசிய தேவைப்பாடுகளுக்காக இவ்வாறு சேகரிக்கப்பட்டு நீரைப் பயன்படுத்துவதன் மூலம் நீர் மின் உற்பத்திக்கு பங்களிப்பு வழங்கும் அளவானது குறைந்தாலும், தற்போதும் மகாவலி நீர்த்தேக்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற நீர் மின் உற்பத்தி அளவின் மூலம் நாட்டினுள் தேசிய சக்தி வலுத் தேவைப்பாடுகளுக்காக பாரிய பங்களிப்பை வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாக குடிநீர் தேவைகள் மற்றும் விவசாயத்திற்கு அவசியமான நீர்த் தேவைக்கான பங்களிப்பானது அதில் கூடிய பங்கைப் பெறுகின்றது. விசேடமாக மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தில் நீண்ட கால பெறுபேறுகளை இலங்கைக்கு பெற்றுக் கொள்ள முடியுமானதாக இருக்கும்.

தாழ் பள்ளத்தாக்கில் தற்பொழுது வசித்து வருகின்ற குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மேல் மகாவலி பிரதான நீர் தேக்கங்களில் நீரை விநியோகிக்கும் ஆற்றலின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். ஆகையால் மகாவலி கங்கையின் மேல் மகாவலி நீரேந்து பிரதேசமானது மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் இதய பூமியாகும். மேல் மகாவலி நீரேந்து முகாமைத்துவத்தின் மூலம் இந்த இதய பூமியின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படும். மேல் மகாவலி நீரேந்து பிரதேசங்களை பாதுகாப்பதைப் போலவே மகாவலி வலயங்களில் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் உயிரியல் பல்வகைமையைப் பாதுகாத்தல் மற்றும் அதன் சுற்றாடல் தொகுதிகளின் சமநிலையைப் பாதுகாப்பதற்கும் பங்களிப்பு வழங்கப்படுவதுடன் அப்பிரதேசங்களில் இயற்கை வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**மேல் நீரேந்துப் பாதுகாப்புச் செயற்பாடுகள்.**

- நிலைபெறுதகு சுற்றாடல் செயன்முறைகளின் ஊடாக மேல் நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாத்தல் மற்றும் மண் அரிப்பை இயன்றளவு குறைப்பதன் மூலம் நீர்ப்பாசன மற்றும் நீர் மின் உற்பத்தியின் நிலைபெறு தன்மையை உறுதி செய்தல். விசேடமாக விவசாய நிலங்களில் உயிரியல் மற்றும் இயந்திரவியல் மண் பாதுகாப்பு மற்றும் நீர் மலையிடுக்குகளை பாதுகாத்தல்.
- பல்வேறு காடு வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.
- விவசாய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.
- உயிரியல் பல்வகைமையைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்.
- மரக் கன்று நாற்று மேடைகள் மூலம் மரக் கன்றுகளை உற்பத்தி செய்தல் மற்றும் உள்நாட்டு மரக் கன்றுத் தேவைகளுக்காக வழங்குதல்.

- மரக் கன்றுகளின் உற்பத்திக்காக பாடசாலை மாணவர்களை தொடர்புபடுத்துவதற்காக மகாவலி மரங்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் விவசாயிகளைத் தொடர்புபடுத்தி மரக் கன்றுகளை உற்பத்தி செய்தல். (பசுமை தொழில் வாய்ப்பு)
- இழைய வளர்ப்பு தொழில்நுட்பத்தின் மூலம் நீர்த்தேக்க ஒதுக்குகளை பாதுகாப்பதற்காக மூங்கில் மரங்களை உற்பத்தி செய்தல் மற்றும் வளர்ப்பிற்காக வழங்குதல்.
- சூழலியல் பாதுகாப்புப் பணிகள் தொடர்பான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டுவதற்காக சூழலியல் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- மகாவலி சுத்தமான கங்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்,
    a. நீரியல் விஞ்ஞான தரவுகளைப் பெற்றுக் கொள்ளுதல். அத்தரவுகளை அபிவிருத்திப் பணிகளுக்காக உகந்த முறையில் பயன்படுத்துதல்.
    b. நீரேந்து பிரதேசத்தில் நீரின் தரத்தை ஆய்வு செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.
    c. மேல் மகாவலி நீரேந்தில் மற்றும் மகாவலி வலயங்களில் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அந்நிறுவனங்களை நீரேந்துப் பாதுகாப்புப் பணிகளுக்கு இணைத்துக் கொள்ளுதல் மற்றும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.
    d. ஆற்றங் கரைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டங்ளை அமுல்படுத்துதல்.
    e. நீர்த்தேக்கங்கள் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களில் பரவிக் காணப்படுகின்ற ஆக்கிரமிப்பு மிக்க கால்நடைகள் மற்றும் தாவரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
    f. அடர் கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீரை மகாவலி கங்கைக்கு ஒன்று சேர்ப்பதை இயன்றளவு குறைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**தலைமையகம்**

மகாவலி நிர்வாக வலயங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்திக் செயற்திட்டங்களுக்காக சுற்றாடல் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறையின் நிர்வாக நடவடிக்கைகள் என்பன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளும்.

**மகாவலி வலயத்தில் அமுல்படுத்தப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்.**

மகாவலி துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயன்முறைகள் காரணமாக ஆதிக்கத்திற்கு உள்ளான இயற்கை சூழல் தொகுதிகளைப் பாதுகாப்பதை விசேடமாக அவ்வலயங்களில் அதிகரித்து வருகின்ற சனத்தொகை காரணமாக முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திப் பணிகள் காரணமாக சூழலியல் மற்றும் சமூக ரீதியாக ஏற்படுகின்ற தாக்கங்களை இயன்றளவு குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதானது சுற்றாடல் பிரிவின் வழிகாட்டவின் கீழ் முன்னெடுக்கப்படும்.

அதன் கீழ் அடிப்படையாக பின்வரும் சுற்றாடல் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது.

I. காடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அவசியமான மரக்கன்று நாற்றுமேடைகளை ஆரம்பித்தல், தாபரித்தல்.

II. நுண் நீரேந்து பிரதேசங்கள், நீர்த்தேக்க ஒதுக்குகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் காடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மரம் நடும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.

III. மகாவலி குடியேற்றவாசிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு சுற்றாடல் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.

IV. நீரின் தரத்தைப் பேணுவதற்காக நீரின் தன்மையைப் பரிசீலித்தல் மற்றும் அடிப்படை தரவு முறைமையை நடாத்திச் செல்லுதல் மற்றும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.

V. தாழ் பள்ளத்தாக்கு அதிகார பிரதேசத்தில் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தியை உறுதி செய்வதற்காக களப் பரிசோதனையை மேற்கொள்ளல் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.

VI. காட்டு மரக்கன்றுகள், பழக் கன்றுகள், மூலிகைத் தாவரங்கள் உற்பத்தி செய்தல் மற்றும் அதன் மூலம் நாட்டில் வன மூடுதலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

VII. மகாவலி அதிகார பிரதேசத்தில் உயிரியல் பல்வகைமைப் பாதுகாத்தல் மற்றும் உயிரியல் உற்பத்தியை நிலைகுன்றச் செய்யக் கூடிய ஆக்கிரமிப்பு மிக்க உயிரினங்களை பரவலைக் கட்டுப்படுத்துதல்.

VIII. மகாவலி கங்கை மற்றும் ஏனைய ஆற்றங் கரைகளை அண்டிய பகுதிகளை பாதுகாக்கும் நடவடிக்கைகள்.

IX. மனிதர்கள் மற்றும் ஜீவராசிகளுக்கு இடையிலான மோதல்களை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக வன ஜீவராசிகளுடன் ஒன்றியவாழ்வின் இருப்பை உறுதி செய்தல். யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல்களை இயன்றளவு குறைப்பதற்காக மின் வேலிகளை நிர்மாணித்தல், உயிர் வேலிகளை நிர்மாணித்தல் மற்றும் தாபரித்தல்.

X. சுற்றாடல் தோழமை மிக்க மேம்பாடு மற்றும் பசுமைத் தொழில் மேம்பாடு.

XI. சுற்றாடல் தோழமை மிக்க வாழ்க்கைக் கோலத்திற்கு மக்களைப் பழக்கப்படுத்துதல் மற்றும் பசுமையான நகரங்கள் மற்றும் பசுமையான கிராமங்களை மகாவலி கிராமங்களில் மேம்படுத்துதல்.

# மூன்றாவது அத்தியாயம்

## 3.0 அபிவிருத்திப் பிரிவு

## 3.1 காணிப் பிரிவு

### அறிமுகம்

மட்டுப்படுத்தப்பட்ட வளமான காணி நல முகாமைத்துவ ஒழுங்களுகள் மூலம் மகாவலி அதிகார பிரதேசத்தினுள் வசிக்கின்ற நலன் பெறும் மக்களின் காணி உரிமையை உறுதி செய்வதன் ஊடாக அவர்களின் பொருளாதாரம் மற்றும் சமூக நிலைமையை மேம்படுத்துவதற்காக பங்களிப்பு வழங்குதல்.

#### 3.1.1 காணிப் பிரிவின் வகிபாகம்

**01. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் தனி நபர்களுக்கு காணிகளை வழங்குதல் மற்றும் அதன் பிந்திய நடவடிக்கைகள்.**

மகாவலி விசேட அதிகார பிரதேசங்களில் அமைந்துள்ள அரச காணி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பன காணிப் பிரிவின் பிரதான வகிபாகம் ஆகும். காணிகள் இல்லாத நபர்களுக்கு காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வசிப்பதற்கும், விவசாய நடவடிக்கைகளுக்கும் காணிகளை பிரித்து வழங்குதல், அதற்குரிய பிந்திய நடவடிக்கைகள் என்பன மேற்கொள்ளப்படும்.

**02. அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு காணிகளை வழங்குதல் மற்றும் அதன் பிந்திய நடவடிக்கைகள்.**

வர்த்தக முதலீட்டுச் செயற்திட்டங்கள், வீடுகள், அரச நிறுவனங்கள் மற்றும் மத ஸ்தளங்கள் ஆகியவற்றிற்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணிகளை கையுதிர்ப்பதைப் போன்றே குத்தகை வருமானத்தைச் சேகரித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிந்திய நடவடிக்கைகளானது அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் முன்னெடுத்து இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**நிதிசார் முன்னேற்றம் - 2022**

| **வலயம்** | **இலக்கு (மி.ரூ.)** | **முன்னேற்றம்** |
|---|---|---|
| பி | 11.3 | 11.3 |
| சி | 8.85 | 8.85 |
| டி | 7.03 | 6.85 |
| எச் | 22 | 22 |
| எல் | 7.30 | 7.30 |
| விக்டோரியா | 5.88 | 5.88 |
| ஹுருளுவெவ | 4.19 | 4.19 |
| மொரகஹகந்த | 14.55 | 14.80 |
| வலவ | 25.19 | 25.19 |
| ரம்பகெண் ஓயா | 25.35 | 22.74 |
| பிரதான அலுவலகம் | 8.57 | 5.47 |
| **கூட்டுத் தொகை** | **140.21** | **134.57** |




| | பி | சி | டி | எச் | எல் | விக்டோரியா | ஹுருளுவாவி | மொரகஹகந்த | வலவ | ரம்பகண் ஓயா | பிரதான அலுவலகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிதி இலக்கு (மி.ரூ.) | 11.3 | 8.85 | 7.03 | 22 | 7.3 | 5.88 | 4.19 | 14.55 | 25.19 | 25.35 | 8.57 |
| முன்னேற்றம் | 11.3 | 8.85 | 6.85 | 22 | 7.3 | 5.88 | 4.19 | 14.8 | 25.19 | 22.74 | 5.47 |

**கொடைப்பத்திரங்களை வழங்குதல்**

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் – 2022**

| **வலயம்** | **இலக்கு** | **முன்னேற்றம்** |
|---|---|---|
| பி | 6,700 | 5,393 |
| சி | 7,700 | 3,897 |
| டி | 300 | 727 |
| எச் | 5,600 | 5,245 |
| எல் | 5,000 | 1,243 |
| விக்டோரியா | 100 | 99 |
| ஹுருளுவெவ | 1,600 | 655 |
| மொரகஹகந்த | 1,100 | 1,673 |
| வலவ | 34,800 | 4,241 |
| ரம்பகெண் ஓயா | 1,500 | 657 |
| **கூட்டுத் தொகை** | **65,000** | **23,830** |




**அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் கொடுப்பனவுப் பத்திரம்/ குத்தகை வழங்குதல்**

| **வலயம்** | **இலக்கு** | **முன்னேற்றம்** |
|---|---|---|
| பி | 22 | 22 |
| சி | 88 | 13 |
| டி | 87 | 06 |
| எச் | 33 | 33 |
| எல் | 20 | 17 |
| விக்டோரியா | 470 | 381 |
| ஹுருளுவெவ | - | - |
| மொரகஹகந்த | 111 | 38 |
| வலவ | 25 | 24 |
| ரம்பகெண் ஓயா | - | - |
| **கூட்டுத் தொகை** | **856** | **534** |

**அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் விகாரைகளுக்கு கொடுப்பனவுப் பத்திரம் வழங்குதல் – 2022**

| **வலயம்** | **இலக்கு** | **முன்னேற்றம்** |
|---|---|---|
| பி | 3 | 3 |
| சி | 5 | 9 |
| டி | 8 | 2 |
| எச் | - | - |
| எல் | - | - |
| விக்டோரியா | 5 | 2 |
| ஹுருளுவெவ | 3 | 3 |
| மொரகஹகந்த | 7 | - |
| வலவ | 2 | 2 |
| ரம்பகென் ஓயா | - | - |
| **கூட்டுத் தொகை** | **33** | **21** |

**அரச நிறுவனங்களுக்காக காணிகளை வழங்குதல் – 2022**

| **வலயம்** | **கையளிப்புக் கட்டளை** | | **காணிகளைக் கையளித்தல்** | |
|---|---|---|---|---|
| | **இலக்கு** | **முன்னேற்றம்** | **இலக்கு** | **முன்னேற்றம்** |
| பி | **-** | **-** | 10 | 10 |
| சி | 19 | - | - | - |
| டி | 14 | 3 | 35 | 14 |
| எச் | - | - | 18 | 18 |
| எல் | - | - | 1 | 1 |
| விக்டோரியா | - | - | 375 | 26 |
| ஹுருளுவெவ | - | - | - | - |
| மொரகஹகந்த | 14 | 8 | - | 3 |
| வலவ | - | - | 2 | 2 |
| ரம்பகென் ஓயா | 1 | 1 | 7 | 7 |
| **கூட்டுத் தொகை** | **48** | **12** | **448** | **81** |

## 3.2 விவசாய அபிவிருத்திப் பிரிவு

**வகிபாகம்**

- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான மகாவலி வலயங்களில் வசிக்கின்ற விவசாயிகளின் பொருளாதாரத்தை விளைத்திறன் மிக்கதாக மேம்படுத்துவதற்காக சுற்றாடல் தோழமை மிக்க விவசாய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் பழக்கப்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல்.
- உணவு உற்பத்திக்கான தேசிய இலக்கு அமைய மகாவலி நீர்ப்பாசன மற்றும் நீர்ப்பாசனம் அல்லாத காணிகளில் பயிர்ச் செய்கை, கால்நடை உற்பத்தி மற்றும் விவசாய வணிகத்தை உருவாக்குவதற்காக வருடாந்த இலக்குகளைத் தயாரித்துக் கொள்ளுதல்.
- வருடாந்த பயிர் உற்பத்தி இலக்கை அணிமித்துக் கொள்வதற்காக வழங்கப்படுகின்ற வருடாந்த ஏற்பாடுகளுக்கு இணங்க பரம்பிய இலக்குகள் மற்றும் உத்தித் திட்டங்களைத் தயாரித்தல், அவற்றை வலய மட்டத்தில் ஏற்பாடு செய்தல், செயற்படுத்துதல், பின் தொடர்வை கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல்.

**வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

| **தொடர் இலக்கம்** | **வலயம்** | **வருடாந்த பௌதீக இலக்கு (வீட்டுத் தோட்டம்)** | **2022.12.31 ஆம் திகதி வரை பௌதீக முன்னேற்றம் (வீட்டுத் தோட்டம்)** | % |
|---|---|---|---|---|
| | | (வீட்டுத் தோட்டம்) | (வீட்டுத் தோட்டம்) | |
| 1 | பி | 29,969 | 23,950 | 80% |
| 2 | சி | 35,891 | 31,371 | 81% |
| 3 | டி | 20,354 | 20,354 | 100% |
| 4 | எச் | 1,533 | 1,533 | 100% |
| 5 | எல் | 42,584 | 42,182 | 99% |
| 6 | விக்டோரியா | 5,570 | 5,570 | 100% |
| 7 | ஹுருளுவெவ | 7,100 | 7,100 | 100% |
| 8 | மொரகஹகந்த | 11,532 | 11,532 | 100% |
| 9 | வலவ | 29,186 | 29,186 | 100% |
| 10 | ரம்பகெண் ஓயா | 30,794 | 30,794 | 100% |
| | **கூட்டுத் தொகை** | 214,513 | 203,572 | 92% |

**பயிர் உற்பத்தியின் முன்னேற்றம் மற்றும் பங்களிப்பு – 2021/22 பெரும் போகம் மற்றும் 2022 சிறு போகம்.**

| பயிர் | 2021/22 பெரும் போகம் | | 2022 சிறு போகம் | | 2022 கூட்டுத் தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | விதைக்கும் பரவெல்லை (ஹெக்.) | உற்பத்தி (மெ.தொ.) | விதைக்கும் பரவெல்லை (ஹெக்.) | உற்பத்தி (மெ.தொ.) | விதைக்கும் பரவெல்லை (ஹெக்.) | உற்பத்தி (மெ.தொ.) |
| நெல் | 96,227 | 344,388 | 80,668 | 336,316 | 177,895 | 680,704 |
| சோளம் | 5,365 | 16,094 | 1,366 | 4,098 | 6,731 | 20,192 |
| மிளகாய் | 417 | 3,256 | 575 | 6,897 | 992 | 10,153 |
| சோயா | 343 | 446 | 4,020 | 8,041 | 4,363 | 8,487 |
| பெரிய வெங்காயம் | | | 668 | 13,360 | 688 | 13,380 |
| பயறு | 325 | 325 | 1,005 | 1,005 | 1,330 | 1,330 |
| கவ்பி | 666 | 599 | 1,210 | 1,210 | 1,876 | 1,809 |
| நிலக்கடலை | 526 | 683 | 690 | 1,725 | 1,216 | 2,408 |
| உழுந்து | 214 | 193 | 1,039 | 1,039 | 1,253 | 1,232 |
| குரக்கன் | 602 | 903 | 3,21 | 481 | 923 | 1,384 |
| எள்ளு | 146 | 102 | 353 | 282 | 499 | 384 |
| கிழங்கு வகை + மரக்கறி | 6,388 | 83,898 | 6,463 | 91,511 | 12,851 | 175,409 |
| பழங்கள் | | | | | 12,387 | 160,078 |

தேசிய உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக இலங்கை மகாவலி அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்ட விவசாய விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தேசிய உணவு உற்பத்திக்கு பங்களிப்புச் செலுத்தி அல்லது பொருளாதாரத்தை வளமாக்குதல் மற்றும் உற்பத்தி விளைத்திறனை அதிகரித்தல் என்பன மிக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு உள்ளது.

நெற் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம்








மேலதிக பயிர்களின் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம்







மேலதிக பயிர்கள் மற்றும் வித்து உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் –

வித்து மற்றும் நடுகைப் பொருட்களின் உற்பத்தி








விவசாயிகளுக்கான பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வூட்டுதல்








விவசாயக் கிணறுகள் மற்றும் நுண் நீர் வழங்கல் முறையின் கீழ் பயிர்ச் செய்கை















மகாவலி பண்ணைகளில் வித்து மற்றும் நடுகைப் பொருட்களின் உற்பத்தி

சேதனப் பசளை உற்பத்தி மற்றும் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை





பழங்கள் மற்றும் மரக்கறி உற்பத்தி











ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் உற்பத்தி





## 3.3 மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு

**அறிமுகம்**

இலங்கை மகாவலி அதிகார சபையானது பல்வேறு வகையான பயிர்கள், மீன்பிடி மற்றும் கால்நடைகள் மூலம் உள்ளூர் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் முன்னணி அரசாங்க செயற்திட்ட அமைப்பாகும். விவசாயம் தவிர, மீன்பிடி மற்றும் கால்நடைகள் மகாவலி குடியேறிகளின் மாற்று வருமான ஆதாரங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. கிராமப் பொருளாதாரத்தில் பல்வேறு பங்கு வகிப்பதால், கால்நடைத் துறையில் கறவை மாடுகளின் மேம்பாட்டிற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மேலும், ஊட்டச்சத்து முக்கியத்துவம், ஊட்டச்சத்து தேவைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பால் மற்றும் துணை தயாரிப்புகள், அவ்வாறே சீரற்ற காலநிலை மாற்றங்களை எதிர்கொண்டு பயிர் உற்பத்திகளில் ஏற்படுகின்ற ஆபத்துக்கான தீர்வாக குறிப்பிடலாம். அதேபோல் நெல் மற்றும் பிற களப் பயிர்களின் அதிக உற்பத்திச் செலவு மற்றும் விலை குறைவினால் விவசாயிகளின் வருமானம் குறைகிறது. மேலும், நிலம் துண்டாடப்படுவதால் விவசாயிகளின் பொருளாதாரம் மேலும் சீரழிந்துள்ளது. இந்நிலையில், கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்த மீன்பிடி மற்றும் கால்நடைத் துறைகளை மிகச் சரியான தீர்வாக அறிமுகப்படுத்தலாம்.

மகாவலி பிரதேசங்களில், மீன்பிடி மற்றும் கால்நடைத் துறைகளின் ஒத்துழைப்புக்கான சாத்தியக்கூறுகளைக் கருத்தில் கொண்டு, பெரிய விலங்குகள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் காணப்படுகின்றமை, விலங்குகளின் மரபணு வேறுபாடு, 49,419 ஹெக்டேர் நீர் பரப்பளவைக் கொண்ட 611 உள்நாட்டு நீர்த்தேக்கங்கள் இருப்பதை இனங்காண முடியும். , மகாவலி வலயங்களில் கால்நடை மற்றும் நன்னீர் மீன்பிடித் துறைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை எளிதாக்குதல், சம்பந்தப்பட்ட பங்குதாரர்களை ஒருங்கிணைத்தல், தேவையான தொழில்நுட்ப தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ ஆதரவை வழங்குதல் ஆகியவை மீன்பிடி மற்றும் கால்நடை அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**நோக்கம்**

கால்நடை உற்பத்தி மூலம் மகாவலி குடியேற்றவாசிகளின் குடும்பங்களின் வருமான மட்டத்தை மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் சமூகத்தின் போசணை நிலைமையை மேம்படுத்துதல்.

**குறிக்கோள்**

கால்நடை உற்பத்தி விளைத்திறன் மற்றும் இலாபப் பெறுகைகளை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு வழங்குவதற்கான நிலைபெறுதகு உற்பத்திச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**2022 ஆம் ஆண்டிற்கான இலக்குகள்**

- வருடாந்த பால் உற்பத்தியை 50 மில்லியன் லீட்டராக அதிகரித்தல் மற்றும் தேசிய பால் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பங்களிப்பை அதிகரித்தல். (தேசிய பங்களிப்பு 8%)
- வருடாந்த நன்னீர் மீன் உற்பத்தியானது 14,000 மெட்ரிக் தொன் வரை அதிகரிக்கச் செய்தல் மற்றும் தேசிய அண்ணளவான உள்நாட்டு உற்பத்திப் பங்களிப்பை 13% வரை அதிகரித்தல்.
- வருடாந்த முட்டை உற்பத்தியை 80 மில்லியன் வரை அதிகரித்தல்.
- வருடாந்த அலங்கார மீன் உற்பத்தியை 41 மில்லியன் சோடிகள் வரை அதிகரித்தல்.
- அவற்றின் போசணைத் தேவையை நிறைவேற்றுவதுடன் கால்நடை உற்பத்தியின் ஊடாக குடியிருப்பாளர்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- வினைத்திறன் மிக்க மற்றும் விளைத்திறன் மிக்க தொழில்நுட்ப பரம்பலை மற்றும் பயன்பாட்டை உறுதி செய்தல்.
- உரிய கால்நடை வைத்திய சேவைகளை வழங்குவதன் ஒருங்கிணைப்பின் மூலம் கால்நடைச் சுகாதார பாதுகாப்பிற்கு உறுதியளித்தல்.
- பெறுமதி சேர்க்கப்பட்ட பால் உற்பத்தி மேம்பாடடையச் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வலையமைப்பை பலப்படுத்துதல்.
- சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துதல் மற்றும் குடியிருப்பாளர்களின் வீட்டு வருமானத்தை அதிகரித்தல்.

**மீன்பிடி மற்றும் கால்நடை வள முகாமைத்துவத்தின் செயற்திட்ட செயன்முறைகளானது பிரதான துறைகள் நான்கை உள்ளடக்கியது.**

- பால் உற்பத்தி விருத்தி
- கோழி வளர்ப்பு
- நன்னீர் மீன் உற்பத்தி.
- அலங்கார மீன் உற்பத்தி.

**1. கறவை மாடு விருத்தி நிகழ்ச்சித் திட்டம்.**

மகாவலியில் உள்ள ஒவ்வொரு பத்து விவசாயப் பண்ணைகளுக்கும் குறைந்தபட்சம் ஒரு பண்ணையில் கறவை மாடு மேலாண்மை அலகு அமைக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் 2022 கறவை மாடு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மகாவலி பிராந்தியத்தில் 12,940 பால் பண்ணைகள் உள்ளன மற்றும் 2022 ஆம் ஆண்டில் 50 மில்லியன் லீற்றர் திரவ பால் உற்பத்தி இலக்கில் 48.3 சதவீதம் எட்டப்பட்டுள்ளது. 2022 இல் 6.24 மில்லியன் லிட்டர் திரவ பால் உற்பத்தியானது, 2021ல் உற்பத்தி செய்யப்பட்ட 42.06 மில்லியன் லிட்டர் திரவ பாலை விட அதிகமாக உள்ளது. இது முந்தைய ஆண்டு உற்பத்தியை விட 15% அதிகமாகும். 2022 ஆம் ஆண்டில் ஒரு லிட்டர் திரவப் பாலின் சராசரி விலை ரூ. 135/= மற்றும் மகாவலி அதிகார எல்லைக்குட்பட்ட பால் பண்ணையாளர்கள் உற்பத்தி செய்யப்பட்ட திரவப் பாலின் இலாபத்தின் மூலம் 6,520.5 மில்லியன் ரூபாவை ஈட்ட முடிந்தது. திரவ பால் விற்பனை மூலம் கிடைத்த நிகர லாபம் 2,415 மில்லியன் ரூபாயாகும்.

2022 ஆம் ஆண்டில், இலங்கை மகாவலி அதிகாரசபை திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் ஒதுக்கப்பட்ட பணத்தில் கறவை மாடு விருத்திச் செயற்திட்ட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது, இலக்குத் தொகையான 28.52 மில்லியன் ரூபாவில், செலவிடப்பட்ட மொத்தத் தொகை 26.6 மில்லியன் ரூபாவாகும். இது 93.26% வீதமாகும். .

2022 ஆம் ஆண்டானது பால் உற்பத்தித் துறைக்கு சவாலான ஆண்டாகும். கோவிட் தொற்று நிலைமை, எரிபொருள் பற்றாக்குறை மற்றும் கால்நடைத் தீவனம் (செறிவூட்டப்பட்ட தீவனம்) பற்றாக்குறை மற்றும் அதிக விலை, இரசாயன உரங்களின் பற்றாக்குறை, செயற்கை கருவூட்டல் மற்றும் நீட்டிப்பு சேவையை மேற்கொள்ள இயலாமை போன்ற காரணங்களால் தேசிய அளவில் திரவ பால் உற்பத்தி படிப்படியாக குறைந்துள்ளது.

உற்பத்தி இலக்குகளை அடைவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளில் மகாவலி பால் பண்ணை களப்பள்ளி (FFS) நடாத்துதல், பால் பண்ணைகள் தொடர்பான கால்நடை தீவனத்தை ஊக்குவித்தல், கால்நடை வளர்ப்பு மற்றும் கால்நடை சுகாதார மேம்பாடு, பண்ணை உட்கட்டமைப்பு மேம்பாடு, சுற்றுச்சூழலுக்கு உகந்த பால் பண்ணை மேலாண்மை, மகாவலி பண்ணைகள் தொடர்பான புல் வளர்ப்பு, , திறன் மேம்பாட்டு திட்டங்கள் ஆகியவை அடங்கும்.

2022 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட மாதிரி பால் பண்ணைகள் தொடர்பில் மகாவலியின் ஒருங்கிணைப்பு மற்றும் மகாவலியின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்ட உப நடவடிக்கைகள்.

| **தொ. இ.** | **உப நடவடிக்கைகள்** | **அலகு** | **ஆண்டின் பௌதீக** | |
|---|---|---|---|---|
| | | | **இலக்கு** | **முன்னேற்றம்** |
| 1 | குறைந்தது ¼, ½ , 1 ஏக்கர் புல் மாதிரி | இல. | 178 | 140 |
| 2 | நடுகைப் பொருட்கள் மற்றும் கருவிகள் | விவசாயிகள் | 64 | 64 |
| 3 | எசொல்லா பயிரிடல் மாதிரி | பண்ணைகள் | 730 | 704 |
| 4 | சைலேஜ் பீப்பாய் | இல. | 157 | 158 |
| 5 | பசுக் கன்றுகளின் போசணை | நிகழ். | 102 | 102 |
| 6 | AI நிகழ்ச்சித் திட்ட மேம்பாடு | கன்றுகள் | 322 | 353 |
| 7 | ஆண் மாடுகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் பாற் பசுக்களை அறிமுகப்படுத்துதல் | கால்நடைகள் | 33 | 27 |
| 8 | இனவிருத்திப் பண்ணை | இல. | 2 | 2 |
| 9 | மிருக சிகிச்சைகள் மற்றும் தொடுப்பூசிகள் | நிகழ். | 70 | 73 |
| 10 | Mastitis kits | இல. | 70 | 70 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | கால்நடைகளை காப்புறுதி செய்தல் | கால்நடைகள் | 82 | 82 |
| 12 | மாட்டுப் பட்டி | இல. | 33 | 32 |
| 13 | புற்களைத் துண்டாக்கும் இயந்திரம்/ புற்களை வெட்டும் இயந்திரம் | இல. | 45 | 45 |
| 14 | மாட்டுப் பட்டிகளில் நீர் விநியோக முறைமையை நிறுவுதல் | இல. | 41 | 42 |
| 15 | பால் கொள்கலன்கள் மற்றும் உபகரணங்கள் | இல. | 69 | 69 |
| 16 | உயிர் வாயு அலகை நிறுவுதல் | இல. | 2 | 2 |
| 17 | சேதனப் பசளை அலகுகள் | இல. | 60 | 45 |
| 18 | பால் விவசாயிகளுக்கான களப் பாடசாலை/ விவசாய பயிற்சிகள் | நிகழ். | 374 | 374 |






**2. கோழி வளர்ப்பு.**

மனிதனின் தினசரி புரதத் தேவை 65 கிராம், இதில் 15 கிராம் விலங்கு புரதங்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனவே, விலை மலிவான விலங்கு ஆதாரமாக, மனித ஊட்டச்சத்தில் முட்டை முக்கிய பங்கு வகிக்கிறது. தோட்டக்கலை விளைச்சலை அதிகரிக்க கோழி எருவை நைட்ரஜன் நிறைந்த இயற்கை உரமாக பயன்படுத்தலாம்.
உற்பத்தி அளவின் அடிப்படையில், இலங்கையின் மகாவலி அதிகார சபை பிராந்தியங்களில் சிறிய அளவிலான, நடுத்தர அளவிலான மற்றும் பெரிய அளவிலான 03 வகையான வணிக முட்டை உற்பத்தி பண்ணைகள் உள்ளன.மகாவலி பிராந்தியத்தில், முட்டை கோழி மேலாண்மை அதிகமாக செய்யப்படுகிறது. பிராய்லர் கோழி மேலாண்மை மிகவும் குறைவாகவே செய்யப்படுகிறது. முட்டை கோழி வளர்ப்பு, வணிக கோழி வளர்ப்பு மற்றும் கிராமத்தில் கோழி வளர்ப்பு 02 முக்கிய வடிவங்கள் உள்ளன.

**அடிப்படை பணிகள்**

- மகாவலி முட்டை உற்பத்தியை 80 மில்லியனாக அதிகரித்தல்
- கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் கோழிப்பண்ணைகள் அமைக்க உதவுதல்
- முட்டை உற்பத்தியை அதிகரிக்க தரமான கோழிக் குஞ்சுகளை வழங்குதல்
- கோழி மேலாண்மை தொடர்பாக விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல்
- உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி கோழித் தீவன உற்பத்தி
- மகாவலி பிரதேசங்களில் புரதத் தேவையை பூர்த்தி செய்தல்

2022 ஆம் ஆண்டில் 80 மில்லியன் முட்டைகள் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், 60 மில்லியன் முட்டைகள் மட்டுமே அடையப்பட்டன. உணவுப் பொருட்களின் விலை உயர்வு, தரமான உணவுப் பொருள்கள் வழங்கப்படாதது, மின்வெட்டு காரணமாக குஞ்சுகள் உற்பத்தி குறைதல் போன்ற காரணங்களால் இலக்கு உற்பத்தியை எட்ட முடியவில்லை. ஒரு முட்டையின் சராசரி விலை ரூ. 40.00 மற்றும் மொத்த வருமானம் ரூ. 2402.4 மில்லியன். நிதி இலக்கு ரூ. 11.82 மில்லியன், இதில் ரூ. 11.46 மில்லியன் முன்னேற்றம் மட்டுமே அடையப்பட்டது. சதவீதமாக 96.99% எனக் குறிப்பிடலாம்.

**கோழிக் குஞ்சுகளை வழங்குதல்**



**3. நன்னீர் மீன் உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்.**

இலங்கை மகாவலி அதிகாரசபையின் கட்டுப்பாட்டில் உள்ள 10 மகாவலி அதிகார வரம்புகளில் 732 நீர்த்தேக்கங்கள் உள்ளன மற்றும் அந்த நீர்த்தேக்கங்களின் பரப்பளவு சுமார் 47,171 ஹெக்டேர் ஆகும். மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் எண்ணிக்கை சுமார் 4258 ஆகும். 2022 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையில் இத்துறையின் முன்னேற்றத்துக்கான திட்ட ஒதுக்கீட்டின் கீழ் 36 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், அதன் முன்னேற்றம் 35 மில்லியன் ரூபாவாகும்.
2022 இல் நன்னீர் மீன் உற்பத்தி 14,398 மெட்ரிக் தொன்களாக இருந்தது, இது 2021 உடன் ஒப்பிடும்போது 19% குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஆகும். தேசிய நன்னீர் மீன் உற்பத்தியில் மகாவலியின் பங்களிப்பு 13% ஆகும். கடந்த ஆண்டை விட 1.5% வளர்ச்சி கண்டுள்ளது. 2022 நன்னீர் இறால் உற்பத்தி சுமார் 35 மெட்ரிக் தொன் ஆகும். இதன் மதிப்பு 52.5 மில்லியன் ரூபாய்.

கோவிட் தொற்றுநோய் சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட மீன் முட்டை உற்பத்தி, நாட்டின் உறுதியற்ற தன்மை காரணமாக 2022 இல் மேலும் பின்னடைவை சந்தித்தது. நிலைமையை சமன்படுத்தும் வகையில், மீன்வளர்ப்புக்கு பயன்படுத்தப்படும் சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், வைப்புச் செய்யப்படுகின்ற மீன் குஞ்சுகளின் அளவை அதிகரிக்கவும், நிர்வாகத்தை சீரமைக்கவும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.
161 நீர்த்தேக்கங்களில் வைக்கப்பட்டுள்ள மீன் குஞ்சுகளின் அளவு 22.8 மில்லியன் திரள் குஞ்சுகள் மற்றும் வைப்புச் செய்யப்பட்ட நன்னீர் இறால் பிந்தைய குடம்பிகளின் எண்ணிக்கை 9.20 மில்லியன் ஆகும். 2022 ஆம் ஆண்டில் ஒரு கிலோ மீனின் மொத்த விற்பனை விலை சுமார் 450.00 ரூபாவாகும்.

**4. அலங்கார மீன் வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம்**

இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் சுமார் 1180 அலங்கார மீன் பண்ணைகள் இயங்கி வருகின்றன. மீன்களின் தரத்தை மேம்படுத்த, பண்ணைகளுக்கு தரமான தொட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டு, 2022 ஆம் ஆண்டில் 39 தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு வழங்கப்பட்ட அலங்கார மீன்களின் அளவு சுமார் 42.5 மில்லியன் ஆகும். இதன் பெறுமதி 1912.5 மில்லியன் ரூபாவாகும். உயர்தர அலங்கார மீன்களை உற்பத்தி செய்வதற்கும் சிறந்த பண்ணை முகாமைத்துவ நடைமுறைகளைப் பேணுவதற்கும் 12 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 4 பயிற்சி நிகழ்ச்சிகள் தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அலங்கார மீன் வளர்ப்பு நிலையத்தில் நடத்தப்பட்டன. இங்கு 48 அதிகாரிகளும், 76 விவசாயிகளும் பயிற்சி பெற்றனர்.
அலங்கார மீன் வளர்ப்பின் வளர்ச்சிக்கான உத்திகள், அலங்கார மீன் வளர்ப்பு அலகுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது, உற்பத்தி செய்யப்படும் மீன்களின் தரத்தை அதிகரிப்பது, அதிக சந்தை தேவை கொண்ட மீன்களை வளர்க்க விவசாயிகளை ஊக்குவிப்பது, பண்ணையில் நல்ல மேலாண்மை நடைமுறைகளை கடைப்பிடிப்பது என்பவற்றைக் குறிப்பிடலாம்.





பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தரம் வாய்ந்த தொட்டிகள்





அலங்கார மீன் வளர்ப்பு தொடர்பான பயிற்சிப் பட்டறை



## 3.4 தாபன அபிவிருத்திப் பிரிவு

**<u>அறிமுகம்</u>**

**தாபன அபிவிருத்திப் பிரிவின் நோக்கு**

இலங்கையில் நிலைபெறுதகு அபிவிருத்திக்காக மகாவலி வலயங்களில் மனித வளங்களை சிறப்பான முறையில் இயக்குதல்.

**தாபன அபிவிருத்திப் பிரிவின் குறிக்கோள்**

இலங்கையில் நிலைபெறுதகு அபிவிருத்திக்காக மகாவலி வலயங்களின் குடியேற்றவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

**<u>தாபன அபிவிருத்திப் பிரிவின் வகிபாகங்கள்</u>**

**<u>சமூக விருத்தி</u>**

மகாவலி வலயத்தினுள் போதைப் பொருட்கள் அற்ற, துன்புறுத்தல்கள் அற்ற, துஷ்பிரயோகங்கள் அற்ற, ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த ஆரோக்கியமான விவசாய சமூகம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்காக வழிகாட்டுதலானது சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படை நோக்கமாகும்.

இதன் கீழ்,

- போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்காக கிராமிய மட்டத்தில் சுயேட்சைத் தலைவர், தலைவிகளை பயிற்றுவித்தல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டுதல்.
- சிறுவர் துஷ்பிரயோகங்கள், மகளிர் துன்புறுத்தல்கள், வீட்டு வன்முறைகள், குறைந்த வயது திருமணங்கள் மற்றும் குறைந்த வயதில் கர்ப்பம் தரித்தல் போன்றவற்றைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுகள்.
- தொற்றா நோய்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல் மற்றும் சுகாதார சிகிச்சைகள் நடாத்துதல். (விசேடமாக துரிதமாக பரவி வருகின்ற சிறுநீரக நோயில் இருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல் மற்றும் இனங்காணப்பட்ட நோயாளர்களை சிகிச்சைக்காக ஆற்றுப்படுத்துதல்)
- கல்விக் கருத்தரங்குகள் நடாத்துதல் (ஐம்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தர பரீட்சை, கா.பொ.த. உயர்தரப் பரீட்சைகளுக்காக)
- மகாவலி நிதியத்தால் புலமைப்பரிசில்களை வழங்குதல். (பெற்றோர்கள் மிகவும் வறிய, அங்கவீனமான அல்லது உயிரிழந்த, சாதாரண தரத்தில் சித்திபெற்ற மாணவர்களுக்காக வழங்கப்படும்).

2022 ஆம் ஆண்டின் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய இலக்குகளைக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களில் 495 ஆகும். அதில் 483 நிகழ்ச்சித் திட்டங்களில் முன்னேற்றம் கண்டுள்ளதுடன், நிதிசார் இலக்கு 91.6 மில்லியன் ரூபாயும் மற்றும் நிதிசார் முன்னேற்றம் 88 மில்லியன் ரூபாயாகும்.

**குடியேற்ற திறமைகள் மற்றும் தொழிற் பயிற்சிகள்**

- மகாவலி குடியேற்றவாசிகளின் பொருளாதார மட்டத்தை 30,000.00 ரூபாயை விட அதிகரிக்கும் நோக்குடன் தொழிற் பயிற்சிகள் வழங்குதல், மற்றும் அதன் ஊடாக அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது அடிப்படை எதிர்பார்ப்பாகும்.
- விவசாய அமைப்புக்களின் உத்தியோகத்தர்களுக்கு கணக்குப் பயிற்சி வழங்குதல் மற்றும் பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் மகாவலி வலயங்களில் உயர் தரத்தில் சித்தியடைந்த இளைஞர் யுவதிகளுக்கு கணக்காய்வுக்கு அவசியமான பயிற்சிகளை வழங்கி விவசாய அமைப்புக்களுக்கு கணக்காய்விற்கான அதிகாரத்தை வழங்குதல் மற்றும் வலயத்தின் விவசாய அமைப்புக்களை வருடாந்த கணக்காய்வு மேற்கொள்ளுதல் என்பன அவர்கள் மூலம் முன்னெடுக்கப்படும்.

2022 ஆம் ஆண்டினுள் இதன் கீழ் 95 நிகழ்ச்சித் திட்டங்கள் இலக்காக கொள்ளப்பட்டதுடன், அதில் 97 நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னேற்றம் கண்டுள்ளதுடன், 8.413 மில்லியன் ரூபாய் இலக்கு மற்றும் 7.315 நிதிசார் முன்னேற்றம் பெறப்பட்டு உள்ளது. மேலும், வறுமையைப் போக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு மாதாந்த வருமானம் ரூ. 30,000.00 ஐ விட அதிகமாக சம்பாதிக்கின்ற எண்ணிக்கை 697 இற்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குதல் முன்னெடுக்கப்பட்டது.

(புகைப்படங்கள் - குடியேற்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்)





**<u>மகளிர் அபிவிருத்தி</u>**

- கட்டுமானங்களை மேம்படுத்துதல் மற்றும் வீட்டு நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக வழிகாட்டுதல் என்பன இதன் பிரதான நோக்கமாகும்.
- மகாவலி வலயத்தினுள் உள்ள பெண்களை ஊக்கப்படுத்துவதற்காக இதன் கீழ் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.
- தனது வீட்டில் இருந்தே வருதானத்தை ஈட்டுவதற்காக அவர்களுக்கு செயற்பட முடியுமான விதத்தில் சுய தொழில்கள் மற்றும் பல்வேறு தொழிற் பயிற்சிகளை வழங்குதல் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கு அவசியமான உபகரணங்களை வழங்கும் நடவடிக்கைகளும்

இதன் கீழ் மேற்கொள்ளப்படும். 2022 ஆம் ஆண்டில் இதன் நிகழ்ச்சித் திட்ட இலக்கு 100 ஆக இருந்ததுடன் முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் 100 ஆகும். நிதிசார் செலவு 2.565 மில்லியன் ரூபாயாகும்.

**விவசாய அமைப்புக்களின் முன்னேற்றம்**

விவசாய அமைப்புக்களின் தேர்வுகளை நடாத்துதல் மற்றும் விவசாய அமைப்புக்களுக்காக உரிய கட்டளைச் சட்டங்கள், விதிகளும் ஒழுங்குமுறைகளும், முகாமைத்துவம் ஆகியவை தொடர்பாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்படும். அவ்வாறே, விவசாயிகளின் மனப்பாங்கு விருத்தி மற்றும் ஆற்றல் விருத்திக்காக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுவதுடன் முகாமைத்துவக் குழுவின் கீழ் விவசாயிகளின் பிரச்சினைகளுக்காக தீர்வுகள் வழங்கப்படுவதும் மேற்கொள்ளப்படும்.

**விளையாட்டுச் செயற்பாடுகள்**

மகாவலி விளையாட்டு வீர வீராங்கனைகளை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு வருவதை நோக்காகக் கொண்டு மகாவலி விளையாட்டுக்களை நடாத்துதல் முன்னெடுக்கப்படுவதுடன், அதன் கீழ்

- அலகுகள்/ தொகுதிகள் மற்றும் வலயங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல்.
- விளையாட்டுப் பயிற்சி முகாம்களை நடாத்துதல்.
- மகாவலி விளையாட்டுக் கழகங்களை அமைத்தல்.
- குறைந்த வருமானம் பெறக் கூடிய திறமை வாய்ந்த விளையாட்டு வீர வீராங்கனைகளின் விளையாட்டுத் திறமைகளை விருத்தி செய்து கொள்வதற்காக நிதிசார் மற்றும் பொருள்சார் உதவிகளை வழங்குதல்.
- குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகள் மற்றும் விளையாட்டுக் கழங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்

என்பன 2022 ஆம் அண்டில் முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைய பத்து வலயங்களிலும் மகாவலி விளையாட்டுக் கழகங்கள் 317 நிறுவப்பட்டு உள்ளதுடன், அதற்காக விளையாட்டு வீர வீராங்கனைகள் 2264 பேர் கலந்து கொண்டுள்ளனர். விளையாட்டுச் செயற்பாடுகளுக்காக 2022 ஆம் ஆண்டில் 3.619 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டு உள்ளது. (புகைப்படங்கள் – மகாவலி விளையாட்டு)





**தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டங்கள்**

மகாவலி பிரதேசங்களில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதும், அவர்களின் நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக சலுகை அடிப்படையில் நிதி வசதிகளை வழங்குவதும் இதன் முதன்மையான நோக்கமாகும்.

அதன்படி, உள்ளூர் தயாரிப்புகள் தொடர்பான புதிய தொழில்முனைவோரை உருவாக்குதல் மற்றும் பல்வேறு வணிகத் துறைகளின் கீழ் உள்ள நிறுவனங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு, ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் 25 தொழில்முனைவோர் மற்றும் 250 தொழில்முனைவோருக்கு இலக்குகள் வழங்கப்பட்டன.

அதன்படி, 2022 ஆம் ஆண்டில், பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து சிறு மற்றும் நடுத்தர அளவிலான கடன் திட்டம் வலய ரீதியாக தொடங்கப்பட்டு, அதன் கீழ், 367 கடன் விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தந்த பிராந்தியங்களில் உள்ள வங்கிக் கிளைகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

## 3.5 வியாபார அபிவிருத்திப் பிரிவு

வியாபார அபிவிருத்திப் பிரிவானது, இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான முதன்மையான வகிபாகத்தை நிறைவேற்றுகின்ற பிரிவாகும். மகாவலி வலயத்தினுள் ஒவ்வொரு வலயங்களுக்கும் தனித்துவமான மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை உயர்ந்த பட்ச விளைத்திறனாக பயன்படுத்தி தொழில்முயற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக பொறுப்புக்களை ஏற்று செயற்படுகின்றது.

அதற்கமைய மகாவலி வலயங்களில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலா போன்ற உரிய பல்வேறு துறைகளில் சிறிய, நடுத்தரமான மற்றும் பாரியளவிலான பல்வேறுபட்ட தொழில்முயற்சியாளர்களை தோற்றுவிப்பதற்காக செயற்திட்டங்களை திட்டமிடுதல், செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக மூலோபாயங்களை தயாரித்தல் மற்றும் மதிப்பிடுதல், தனியார் பிரிவின் வியாபாரங்களை அபிவிருத்திக்காக ஆற்றுப்படுத்துதல், சந்தைப்படுத்தலுக்காக வியாபார நிலைய இணைப்புக்களை ஏற்படுத்துதல், வியாபார மேம்பாட்டிற்காக கடன் திட்டங்களை விரிவுபடுத்தி தொழில்முயற்சியாளர்களின் மூலதன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல், அவர்களுக்கு அவசியமான வழிகாட்டல்கள் என்பன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும்.

**<u>வியாபார அபிவிருத்திப் பிரிவின் நோக்கங்கள் –</u>**

01. சுய தொழில் பயிற்சிகள் மூலம் சிறிய அளவிலான உற்பத்தித் துறைக்கு ஒத்துழைப்பை வழங்குதல்.
02. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களைத் உருவாக்குதல்.
03. மூலதன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு அவசியமான மத்தியஸ்தராக இருத்தல்.
04. தொழில்முயற்சி ஆற்றல் விருத்தி மற்றும் தொழில்நுட்ப திறமைகளை வழங்குதல்.
05. வியாபார நிலைய ஒருங்கிணைப்புகள் மூலம் மகாவலி அதிகார பிரதேசங்களின் உற்பத்திகளுக்கு அதிகூடிய பெறுமதியைப் பெற்றுக் கொடுத்தல்.
06. மகாவலி அதிகார பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவித்தல்.
07. முதலீடுகள் மூலமான பிரதேச அபிவிருத்தி.
08. தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு வழங்குதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு.
09. வியாபார ஆலோசனைகள்/ வியாபார திட்டங்களைத் தயாரிப்பதற்கு உதவிகளைச் செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.
10. அதிகார சபையின் வருடாந்த வருமான நிலைமையை அதிகரித்தல்.

**<u>வியாபார அபிவிருத்திப் பிரிவின் வகிபாகங்கள் –</u>**

- கிராமிய ரீதியாக இனங்காணப்பட்ட வளங்களின் பரவல் தன்மையின் கீழ் வியாபார திட்டங்களைத் தயாரித்தல்.
- இனங்காணப்பட்ட சுய தொழில் துறைகளின் அபிவிருத்திக்காக திட்டங்களைத் தயாரித்தல்.
- சிறு அளவிலான வியாபாரிகளின் மூலதன தேவைகளுக்கு அவசியமான கடன் வசதிகளை வழங்குதல் மற்றும் 50% மகாவலி பங்களிப்பின் கீழ் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்.

- விவசாய மற்றும் கால்நடை வளரப்பு செயற்திட்டத்தின் ஊடாக அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துதல்.
- கால்நடை வளர்ப்பு, அலங்கார மீன்கள், தேங்காய்ப் பயிர்ச்செய்கை, ஏனைய பயிர்கள் மற்றும் பழப் பயிர்ச் செய்கை ஆகிய முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக காணிகளை வழங்குவதன் அடிப்படையில் குத்தகை வருமானம் பெற்றுக் கொள்ளுதல்.
- சூரிய மின் சக்தி, உயிர்த் திரள் மின் சக்தி, நீர் மின் சக்தி ஆகிய மின்சாரச் செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட காணிகளின் குத்தகை வருமானம்/ மகாவலி அதிகார சபையுடன் பங்கு வியாபாரமாக ஆரம்பிப்பதன் மூலம் இலாபத்தை ஈட்டுதல்.
- கைத்தொழில் பூங்காக்களை நடாத்திச் செல்வதன் ஊடாக பிரதேச மட்டத்தில் பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல்.
- மகாவலி அதிகார பிரதேசங்களில் கவர்ச்சி மிக்க இடங்களில் அமைந்துள்ள சுற்றுலா மாளிகைகளை நவீன மயப்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக திறப்பதன் ஊடாக வருமானத்தை ஈட்டுதல்.
- பாரம்பரிய தேசிய உணவுகளை பிரபலமாக்குதல் மற்றும் மகளிர் தொழில்முயற்சி விருத்திக்காக மகாவலி ஹெல போஜுன் விற்பனை நிலையங்களை ஆரம்பித்தல்.
- சுற்றாடல் தோழமையுடைய சுற்றுலா வாய்ப்புக்களை விரிவடையச் செய்வதற்காக நீர்த்தேக்க சுற்றுலாப் படகுச் சேவைகளுக்காக அனுமதி வழங்கி வருடாந்த குத்தகைத் தொகையைப் பெற்றுக் கொள்ளுதல்.

<u>**மகாவலி சுற்றுலா மாளிகைகள்**</u>

இலங்கை மகாவலி அதிகாரசபையானது 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் 1979 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை பல சுற்றுலா மாளிகைகளை அதன் அபிவிருத்தி நோக்கங்களுக்காக நிறுவியுள்ளது.

இலங்கையின் மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான 35 சுற்றுலா மாளிகைகள் மகாவலி அதிகார வரம்பு முழுவதும், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் அழகிய சுற்றுச்சூழல் அமைப்புகளால் சூழப்பட்ட பகுதிகளில் நிறுவப்பட்டு உள்ளன.

அந்த மகாவலி சுற்றுலா மாளிகைகள் ஒவ்வொன்றும் அமைந்துள்ள மாவட்டங்கள் மற்றும் அருகிலுள்ள நகரங்கள் பின்வருமாறு.

| தொ. இல. | வலயம் | சுற்றுலா மாளிகையின் பெயர் | மாவட்டம் | அண்மித்த நகரம் |
|---|---|---|---|---|
| 1 | பி | ருஹுனுகெத | பொலன்னறுவை | வெலிகந்த |
| | | பிம்புரத்தேவ | பொலன்னறுவை | அரலகங்வில |
| 2 | சி | மகாவலி மங்சல | அம்பாறை | தெஹிஅத்தகண்டிய |
| | | உல்ஹிடிய ரத்கிந்த II | அம்பாறை | கிந்துருகோட்டை |
| | | கிந்துருகோட்டை | பதுளை | கிந்துருகோட்டை |
| | ஜீ | பகமூண | பொலன்னறுவை | பகமூண |
| 3 | டி | மகாவலி வியமன | பொலன்னறுவை | மெதிரிகிரிய |
| 5 | எச் | நொச்சியாகம | அநுராதபுரம் | நொச்சியாகம |
| | | தம்புத்தேகம | அநுராதபுரம் | தம்புத்தேகம |
| | | கலா வாவி | அநுராதபுரம் | கலா வாவி |
| 6 | எல் | வெலிஓயா | முல்லை தீவு | சம்பத் நுவர |
| 7 | இ | நுவரெலியா | நுவரெலியா | நுவரெலியா |
| | | திகனை | கண்டி | திகனை |
| | | பூவெலிகடை | கண்டி | கண்டி |
| | | கொத்மலை 22/23/24 | கண்டி | கொத்மலை |
| 8 | வலவ | உடவலவ | | உடவலவ |
| | | எம்பிலிபிடிய | இரத்தினபுரி | எம்பிலிபிடிய |
| 9 | ரம்பகெண் ஓயா | மகஓயா | ரம்பகெண் ஓயா | மகஓயா |
| 10 | விடயப் பொறுப்பு பொறியியல் அலுவலகம் | பொல்கொல்ல | கண்டி | பொல்கொல்ல |
| | | கொத்மலை 119 | | கொத்மலை |
| | | ரன்தெனிகல | ரன்தெனிகல | ரன்தம்பே |
| | | போவதென்ன | மாத்தளை | நாவுல |
| | | மாதுறு ஓயா | பொலன்னறுவை | அரலகங்வில |
| | | மொரகஹகந்த | மாத்தளை | தம்புள்ள |
| | | களுகங்கை | மாத்தளை | லக்கல |
| 11 | இரத்மலானை | இரத்மலானை | கொழும்பு | இரத்மலானை |

**கலா வாவி மகாவலி சுற்றுலா மாளிகை**

மகாவலி சுற்றுலா மாளிகை அமைப்பின் தனித்துவமான நோக்கங்கள், நிறுவனத்தின் களக் கடமைகளின் போது அதிகாரிகளின் தங்குமிடத் தேவைகள், மகாவலி அதிகார சபை உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட விஜயங்களின் போது தங்குமிடத் தேவைகள் மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடத் தேவைகளை கட்டணம் வசூலிப்பதன் அடிப்படையில் வழங்குவதாகும். இதுதவிர திருமணம், கலந்துரையாடல்கள் போன்ற விழா நிகழ்வுகளுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும், அந்த விழா நிகழ்வுகளை நிர்வாகிப்பது மற்றும் பராமரிப்பது தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன.

மேலும், 2017ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நவீனமயமாக்கல் பணியின் காரணமாக 2017ஆம் ஆண்டில் 2 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருந்த வருடாந்த வருமானம் 2022ஆம் ஆண்டில் 19.6 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

ஆனால் 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து, உலகளாவிய தொற்றுநோய் நிலைமை காரணமாக, சுற்றுலாத் துறை முற்றிலும் வீழ்ச்சியடைந்ததுடன், இந்த நாட்டின் பொருளாதாரத்தை நேரடியாகப் பாதித்தது. 2022ஆம் ஆண்டுக்குள் இந்த நிலையைக் கட்டுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளால், தொற்றுநோய் நிலை தணிந்து, சுற்றுலாத் துறை உள்ளிட்ட பல துறைகளில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



**மொரகஹகந்த சுற்றுலா மாளிகை**





# நான்காவது அத்தியாயம்.

## 4.1. ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவு

<u>ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வகிபாகங்கள்.</u>

1. **ஊழியர்களின் தேவைப்பாடுகளை இனங்காணுதல், திட்டமிடுதல் மற்றும் கவர்ந்தெடுத்தல்.**
    - வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்களைக் கோருதல்.
    - பரீட்சைகள்/ நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்.
    - தகுதியானவர்களைத் தெரிவு செய்தல்.
    - ஊழியர்களின் எண்ணிக்கையை மறுசீரமைத்தல். முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலைப் பெற்றுக் கொண்ட பின்னர்)
2. **ஊழியர் பயிற்சி மற்றும் விருத்தி**
    - புதிய உத்தியோகத்தர்களை நிலைப்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.
    - குறுகிய கால மற்றும் நீண்ட கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஆற்றுப்படுத்துதல்.
    - தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள் வழங்குதல்.
3. **நஷ்டயீடுகள் மற்றும் பிரதிபலன்கள் தொடர்பான நடவடிக்கைகள்**
    - பதவியுயர்வுகள் மற்றும் சம்பள உயர்வுகளை வழங்குதல்.
    - சம்பள மறுசீரமைப்பு நடவடிக்கைகள் (தேசிய சம்பளம் மற்றும் ஊழியர்களிக் எண்ணிக்கைகள் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கு அமைய)
    - பணிக்கொடைக் கொடுப்பனவு பிரதிபலன்களை விடுவித்தல்.
    - ஊழியர் சேமலாப நிதி/ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியவற்றை விடுவிப்பது தொடர்பான நடவடிக்கைகள்.
4. **ஊழியர் செயலாற்றுகை முகாமைத்துவம்.**
    - பெயர்வழிக் கோவைகளைத் தாபரித்தல்
    - செயலாற்றுகை மதிப்பீடு.
    - பதவியணியைக் மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல்.
    - ஓய்வு செல்லல்.
    - சேவையை நிறைவு செய்தல்.
    - இடமாற்றங்கள்.
    - ஒழுக்காற்று நடவடிக்கைகள் (தாபன விதிக்கோவை மற்றும் ஒழுக்காற்று செயல்முறைகளுக்கு அமைய)
5. **முகாமைத்துவத் தொடர்புகள் மற்றும் ஊழியர் தொடர்புகள்**
    - ஊழியர் சேமலாப நிதியம்/ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகியவற்றிற்கு அங்கத்தவர்களைப் பதிவு செய்தல்.
    - இலங்கை மகாவலி அதிகார சபைக்காக சட்ட நடவடிக்கைகளுக்காக ஆஜராகுதல்.
    - ஒருங்கிணைப்பு (பல்வேறு பிரிவுகள், வலயங்கள் மற்றும் வெளியாட்களுக்கு இடையில்)
    - மக்கள் தொடர்பு
    - உத்தியோகபூர்வ விழாக்கள் தொடர்பான நடவடிக்கைகள்.

- நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆலோசனை செயற்குழுவின் நடவடிக்கைகள்
- பொது மனுக் குழுவின் நடவடிக்கைகள்
- பாராளுமன்ற வாய்மொழி மூல கேள்விகளுக்கு விடையளித்தல் மற்றும் ஏனைய பிரிவுகளை ஒருங்கிணைத்தல்.

**2022 ஆம் ஆண்டில் புதிய ஆட்சேர்ப்புகள், உள்ளக பதவி உயர்வுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.**

**<u>2022 ஆம் ஆண்டின் பயிற்சிகள்</u>**

| தொடர் இலக்கம் | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | செலவு (ரூ.) |
|---|---|---|
| 01 | நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை | 582,874.00 |
| 02 | சுற்றுலா பங்களா பொறுப்புதாரிகளுக்கான பயிற்சிப் பட்டறை | 315,970.00 |
| 03 | செலவுகள் மற்றும் கொடுப்பனவுகள் செயல்முறை மற்றும் நிதிப் பிரமாணம் தொடர்பான பயிற்சிப் பட்டறை | .18,000.00 |
| 04 | 2022 சிறு போக இலக்குகளை எட்டுவதற்கான வழிமுறைகளைத் தயாரிப்பதற்கான பயிற்சிப் பட்டறை | 97,975.00 |
| 05 | அடிப்படைக் களஞ்சிய முகாமைத்துவம் தொமர்பான பாடநெறி | 83,575.00 |
| 06 | சுற்றுலா மாளிகைகளுக்காக தளபாடங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் ஹெலபோஜுன் விற்பனை நிலையங்களின் தரத்தை மேம்படுத்துதல் | 153,000.00 |
| 07 | பொதுக் கொள்முதல் செயல்முறை தொடர்பான பயிற்சிப் பட்டறை | 10,000.00 |
| 08 | பெயர்வழிக் கோவையைத் தயாரிக்கும் விதம் தொடர்பான பயிற்சிப் பட்டறை | 10,000.00 |

## 4.2 சட்டப் பிரிவு

இலங்கை மகாவலி அதிகார சபையின் சட்டப் பிரிவானது பிரதான அலுவலகத்தின் 08 ஆம் மாடியில் அமைக்கப்பட்டு உள்ளதுடன், அதன் தலைவராக பிரதிப் பணிப்பாளர் (சட்டம்) கடமையாற்றுகின்றார்.

**<u>நோக்கு</u>**

மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்வை மேம்படுத்துவதற்காக மற்றும் ஒட்டு மொத்த மகாவலி அதிகார சபையில் ஏற்படுகின்ற சட்ட ரீதியான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கும் உயர்ந்தபட்ச பங்களிப்பை வழங்குதல்.

**<u>இலக்கு</u>**

உயர்ந்தபட்ச வினைத்திறனுடன் மற்றும் குறைந்த செலவில் சட்ட ரீதியான பிரச்சினைகளை குறைப்பதற்காக மற்றும் அதிகார சபையின் வருமான தோற்றுவிப்பிற்காக பங்களிப்பு வழங்குதல்.

**<u>சட்டப் பிரிவின் வகிபாகங்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்ற விடயத் துறைகள்.</u>**

- ஊழியர்களின் சட்ட ரீதியான பிரச்சினைகள் தொடர்பாக தொழில் திணைக்களத்தின், கைத்தொழில் விசாரணை மன்று, ஊழியர் நியாய சபையில் இருந்து உச்ச நீதிமன்றம் வரை உரிய நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.
- நிறுவனத்திற்கு உரிய சகல சட்ட நடவடிக்கைகளிலும் திணைக்களத்தின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் உரிய நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபைக்காக கையொப்பம் இடுகின்ற ஏனைய ஒப்பந்தங்களை சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்கு இணங்கியதாக தயாரித்தல், கையொப்பம் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் எதிர்வரும் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் தரப்பினர்களுக்கு இடையில் காணப்படுகின்ற ஒப்பந்தங்கள், உடன்பாட்டு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான முரண்பாடுகளின் போது அதற்குரிய மத்தியஸ்த நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும்/ அல்லது அதற்குரியதாக வழக்குத் தாக்கல் செய்தல்.
- இலங்கை மகாவலி அதிகார சபையின் காணிகள், சொத்துக்கள் தொடர்பாக சட்ட ரீதியான பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது செயற்படுதல் மற்றும் பின் தொடர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- தொழில்நுட்ப முரண்பாடுகள்,, மத்தியஸ்தம், ஊழியர் நியாய சபை மற்றும் ஏனைய நீதிமன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.
- வரி செலுத்துவதைப் புறக்கணித்தல், சட்ட விரோதமானவற்றை அகற்றுதல் போன்ற காணிகளின் கடமைகளின் போது அவசியமான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.
- பிரிவிற்குரிய அறிக்கைகளைத் தயாரித்தல்.
- இலங்கை மகாவலி அதிகார சபைக்குரிய சகல பிரிவுகளிலும் எழுகின்ற சட்ட ரீதியான பிரச்சினைகளுக்காக ஆலோசனைகளை வழங்குதல்.
- வாகன விபத்து வழக்குகள்.
- சிறிய அளவிலான மின் உற்பத்திச் செயற்திட்டங்களுக்கு அவசியமான உரிய ஆலோசனைகளை வழங்குதல்.
- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான நிறுவனங்கள் தொடர்பாக செயற்படுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
- சட்டப் பிரச்சினைகளுக்குரிய பணிப்பாளர் குழாமின் சிற்றிதழ் மற்றும் அமைச்சரவை சிற்றிதழ்களைத் தயாரித்தல்.

**<u>2022 ஆம் ஆண்டில் வைக்கப்பட்ட இலக்குகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம்.</u>**

**வரி நிலுவை அறவிடுவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்.**

- அறிவித்தல்களை அனுப்புதல்.
- விளக்கக் கோரிக்கைக் கடிதம் அனுப்புதல்.
- அரச காணிகள் (உடைமையை மீளப் பெறுதல்) சட்டத்தின் கீழ் அகற்றல் அறிவிப்புக்களை அனுப்புதல்.
- பெறுமதி ரூ. 500,000/= ஐ விட குறைவு எனில் அப்பிரச்சினையை மத்தியஸ்தர் சபைக்கு ஆற்றுப்படுத்துதல்.
- வழக்குத் தாக்கல் செய்தல்.
- எதிர்வரும் ஆண்டிற்காக தற்பொழுது பணிகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.
- 2022.12.31 ஆம் திகதியாகும் போது ரூ. 157,033,521.85 வருமானம் ஈட்டப்பட்டு உள்ளது.

**<u>2022 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட விசேட பணிகள் மற்றும் அதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு ஆற்றப்பட்ட பங்களிப்பு</u>**

- இலங்கை மகாவலி அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வரி மற்றும் ஏனைய புறக்கணிக்கப்பட்ட தொகையை அறவிட்டுக் கொடுத்தல்.
- ஏதேனும் ஊழியர் பிரச்சினைகள், காணிப் பிரச்சினைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்காக நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மத்தியஸ்தம் மேற்கொள்ளுதல்.
- பல்வேறு தரப்பினர்களால் அரசாங்கத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளில் நியாயத்தை நிலை நாட்டுவதற்கு அவசியமான உதவிகளை வழங்குதல், அரசாங்கத்தின் நற்பெயரைப் பாதுகாப்பதற்கு அவசியமான உதவிகளை வழங்குதல்.
- ஏதேனும் மோசடிகளில் ஈடுபட்ட மகாவலி உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்களிப்பை வழங்குவதன் மூலம் நேர்மையான மகாவலி உத்தியோகத்தர்களை உருவாக்குவதன் மூலம் விளைத்திறன் மிக்க வினைத்திறனுடன் கூடிய சேவையை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல். அதன் மூலம் அரசாங்கத்தால் ஏற்க வேண்டி ஏற்படுகின்ற செலவுகளைக் குறைத்தல் மற்றும் அதற்காக செலவாகின்ற அரச உத்தியோகத்தர்களின் நேரம் மற்றும் உழைப்பை விளைத்திறனான பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க முடியுமானதாக இருத்தல்.
- சட்ட ரீதியான பிரச்சினைகளில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் தொழில் ரீதியான உதவி மற்றும் ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் மிகவும் சட்ட ரீதியான வழிகாட்டலை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு வழங்குவதன் மூலம் நிலைபெறுதகு மகாவலியின் எதிர்வரும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் மகாவலியின் ஊழியர்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் தொழில் முன்னேற்றத்தைக் கவனத்தில் கொள்ள முடியுமாகின்றமையால் தேசிய பொருளாதாரத்திற்கு அச்சிறந்த பெறுபேறை வழங்குவதற்கு முடியுமானதாக இருத்தல்.

## 4.3 நிதிப் பிரிவு

நிறுவனத்தின் கூட்டுத்தாபன மற்றும் வருடாந்த திட்டங்களின் பிரகாரம் மதிப்பீடுகளைத் தயாரித்தல், தேசிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல், மாதாந்த நிதித் தேவைகளை முன்னறிவித்தல் மற்றும் திறைசேரியிடமிருந்து நிதிகளைப் பெறுதல், தேசிய மற்றும் வெளிநாட்டுத் திட்டங்களுக்கான வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தல், ஊழியர் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், பௌதிக சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல், கணக்காய்வு வினவல்களுக்கு தகவல்களை வழங்குதல் மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய பாராளுமன்றக் குழுவிற்கு தகவல்கள் வழங்குதல் இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அடிப்படை வகிபாகம் ஆகும்.

**நிதிசார் ஒதுக்கீடுகள் மற்றும் செவினங்கள் தொடர்பான விபரங்கள்.**

| | **மூலதன மூலம்** | **ஒதுக்கீடு (Rs.'000)** | **செலவினம்(Rs.'000)** |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | | 4,479,939 | 4,090,614 |
| மூலதனச் செலவினம் | | 1,200,000 | 995,470 |
| **மகாவலி செயற்திட்டங்கள்** | | | |
| ரிதீமாலியத்த அபிவிருத்திச் செயற்திட்டம் | உள்நாட்டு | 40,000 | 33,997 |
| ரம்பகன் ஓயா செயற்திட்டம் | உள்நாட்டு | 60,000 | 46,636 |
| வெலி ஓயா ஒருங்கிணைப்புச் செயற்திட்டம் | உள்நாட்டு | 40,000 | 27,666 |
| விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்திச் செயற்திட்டம் | உள்நாட்டு | 193,000 | 160,741 |
| **மொத்தம்** | | 6,012,939 | 5,355,124 |

**ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்**

| | | | | | | ரூபாய். '000 |
|---|---|---|---|---|---|---|
| **விளக்கம்** | **01.01.2022 ஆம் திகதிக்கு செலவினம்** | **கொள்வனவுகள்** | **விற்பனைகள், அகற்றல்கள், கைமாற்றல்கள்** | **31.12.2022 ஆம் திகதிக்கு செலவினம்** | **பெறுமானத் தேய்வு** | **பெறுமானத் தேய்வை கழித்த பின்னர் 31.12.2022** |
| காணிகள் | 296,000 | - | - | 296,000 | - | 296,000 |
| கட்டிடங்கள் மற்றும் அலுவலகங்கள் | 2,851,325 | 34,840 | 224 | 2,885,941 | 861,864 | 2,024,077 |
| கட்டிடங்கள் – ஏனையவை | 3,062,493 | 32,566 | 2,946 | 3,092,113 | 1,986,353 | 1,105,761 |
| பிரதான கால்வாய்கள் | 74,989,140 | - | - | 74,989,140 | 5,999,131 | 68,990,009 |
| மோட்டார் வாகனங்கள் | 1,694,043 | 27,669 | 10,746 | 1,710,967 | 1,203,467 | 507,500 |
| அலுவலக உபகரணங்கள் மற்றும் நலன்புரிப் பொருட்கள் | 192,202 | 306,788 | 173,946 | 324,045 | 58,622 | 265,423 |
| மின்பிறப்பாக்கிகள் | 6,570,424 | 6,711,936 | 6,569,602 | 6,712,758 | 1,008,177 | 5,704,581 |
| இயந்திராதிகளும் உபகரணங்களும் - வேலைத்தல பணிகள் | 28,108 | 69,548 | 27,522 | 70,134 | 9,848 | 60,628 |
| இயந்திராதிகளும் உபகரணங்களும் – கட்டுமானங்கள் | 537,728 | 771,925 | 533,362 | 776,291 | 118,656 | 657,635 |
| இயந்திராதிகளும் உபகரணங்களும் – பொதுவானவை | 297,070 | 412,034 | 273,888 | 435,216 | 75,271 | 359,944 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 339,390 | 7209 | 1,640 | 344,960 | 128,394 | 216,565 |
| கணினிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் | 211,189 | 22,665 | 7104 | 226,750 | 107,329 | 119,420 |
| பாதுகாப்புக் கருவிகள் | 4,410 | 436 | - | 4,846 | 455 | 4,391 |
| புத்தகங்கள் மற்றும் கையேடுகள் | 6,532 | - | - | 6,532 | 94 | 6,437 |
| அணைகள் | 31,764,287 | - | - | 31,764,287 | 635,286 | 31,129,002 |
| **மொத்தம்** | **122,843,342** | **8,397,618** | **7,600,980** | **123,639,979** | **12,192,948** | **111,447,032** |

## 4.4 மகாவலி பாதுகாப்புப் படையணி

**அறிமுகம் –**

மகாவலி பாதுகாப்புப் படையானது இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரதான கட்டுமானங்கள், விருத்தியிலி கட்டிடத் தொகுதி மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதைப் பிரதானமாகக் கொண்டும் மகாவலி உத்தியோகத்தர்கள் மற்றும் பதவியணி / குடியேற்றவாசிகளை பாதுகாப்பதற்காகவும் **1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15** ஆம் திகதி 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க மகாவலி அதிகார சபை சட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட பாதுகாப்புப் பதவிகள் 10 ஐ உள்ளடக்கிய **மகாவலி பாதுகாப்பு அமைப்பு** நிறுவப்பட்டுள்ளது.

இந்த கால கட்டத்தில் மகாவலி பொருளாதார முகவர் நிலையம் மற்றும் மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவர் நிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அந்த நிறுவனத்தின் மூலம் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சிலர் மூலமாக நிறைவேற்றப்பட்டதுடன், அவ்வெண்ணிக்கை அளவில் மிகவும் சிறிய அளவாகவே காணப்பட்டது. இலங்கை மகாவலி அதிகார சபையின் பாதுகாப்பு நடவடிக்கைகளை பன்முகப்படுத்தும் நோக்குடன் மற்றும் உரிய முறையில் நிர்வாகம் மற்றும் இயக்கற் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மகாவலி அதிகார சபையின் ஆலோசனைக்கு அமைய மகாவலி பொருளாதார முகவர் நிலையம் மற்றும் மகாவலி மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவர் நிலையம் ஆகியவற்றில் சேவையாற்றிய பாதுகாப்புப் பதவிகள் 1989 ஆம் ஆண்டில் மகாவலி பாதுகாப்புப் படையணிக்கு உள்ளடக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் 15 ஆம் திகதி இப்படையணி நிறுவப்பட்ட காலப்பகுதியில் நிறுவனத் தலைவர் பதவியாக பணிப்பாளர் பதவி காணப்படாததுடன் இலங்கை இராணுவப் படையில் அதிகாரம் பெற்ற பதவி ஒன்றை துணை நிலை அடிப்படையில் பாதுகாப்பு **ஒருங்கிணைப்பாளராக** இப்பாதுகாப்பு அமைப்பு இயக்கப்பட்டது. அதற்கமைய முதலாவது பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளராக **லெப்டினன் கேர்ணல் திரு. என்.பீ. பெர்ணாண்டோ அவர்களுக்கு** 1985 ஜூன் மாதம் 15 ஆம் திகதியில் இருந்து 1988 ஆம் ஆண்டு வரை இந்நிறுவனத்தின் தலைமைப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளராக 1988 ஆம் ஆண்டில் இருந்து 1989 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை **கேர்ணல் திரு. பி. மஹிபால** அவர்கள் கடமையாற்றி உள்ளதுடன் 1989 ஆம் ஆண்டின் பின்னர் இந்நிறுவனத்தின் செயற்பரப்பு விரிவடைந்த காரணத்தால் மற்றும் இந்நிறுவனம் பயன்படுத்துகின்ற ஆயுதங்கள் போன்றவற்றைப் போலவே அப்பொழுது பிரதானமாக பாதுகாப்பு வழங்கிய விக்டோரியா, ரன்தெணிகல, மாதுறு ஓயா, கொத்மலை, பொல்கொல்ல, போவதென்ன, போன்ற மட்டுப்படுத்தப்பட்ட எனினும் மிகவும் உணர்வு பூர்வமான பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த புள்ளிகளின் பாதுகாப்பு தொடர்பாக நேரடி பொறுப்பு மற்றும் கடமை தொடர்பாக கவனத்தில் கொண்டு 1990 ஆம் ஆண்டு **பணிப்பாளர் (பாதுகாப்பு)** பதவி நிறுவப்பட்டது.

அதற்கமைய மகாவலி பாதுகாப்பு அமைப்பின் **முதலாவது பணிப்பாளராக (பாதுகாப்பு) மேஜர் திரு. திலக் ரத்னசேகர அவர்கள்** கடமையாற்றினார்.

அவ்வாறே ஆரம்ப கால கட்டத்தை விட 1990 ஆம் தசாப்தத்தின் இறுதி நடுப்பகுதியாகும் போது இலங்கை மகாவலி அதிகார சபையின் பாதுகாப்புத் தேவைகளை பாரிய அளவில்

விரிவடைந்தமையால் அதுவரையில் காணப்பட்ட மகாவலி பாதுகாப்பு அமைப்பானது புது கௌரவப் பெயருடன் **மகாவலி பாதுகாப்பு படையணி** என திருத்தியமைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், 2011 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளும் செயல்முறைகளின் திருத்தத்தில் இந்நிறுவனத்தில் அதுவரை காணப்பட்ட பணிப்பாளர் (பாதுகாப்பு) பதவியை இரத்துச் செய்து அதற்குப் பதிலாக உதவிப் பணிப்பாளர் (பாதுகாப்பு) பதவியை நிறுவி அப்பொழுது பணிப்பாளர் (பாதுகாப்பு) பதவியில் கடமையாற்றிக் கொண்டிருந்த பணிப்பாளர் அவர்கள் அவருடைய பதவிக்கு தனிப்பட்ட ரீதியாக வைத்துக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தற்பொழுது மகாவலி பாதுகாப்பு படையணிக்கு தலைமை வகிக்கப்படுவது உதவிப் பணிப்பாளர் (பாதுகாப்பு) அவர்களால் ஆகும்.

அவ்வாறே, இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மற்றும் ஆரம்பிக்கப்பட்ட மொரகஹகந்த, களு கங்கை ஆகிய மாபெரும் நீர்த்தேக்கங்களின் பாதுகாப்புப் பொறுப்பைப் போலவே ரம்பகண் ஓயா, ஈ வலயம், மாதுறு ஓயா வலது கரை, மயுரபுற காட்டு யானை முகாமைத்துவ ஒதுக்கு போன்ற இடங்களினதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்பொழுது இப்படையணி மூலம் நிறைவேற்றப்படுகின்றது. விசேடமாக தற்பொழுது நாட்டில் நிலவுகின்ற நிலைமைக்கு அமைய ஆரம்ப கால கட்டத்தில் காணப்பட்ட வகிபாகங்களை விட பாதுகாப்பு செயற்பரப்பு விரிவடைந்தமையால் அதிவிசேட பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த புள்ளிகள் தொடர்பான பொறுப்புகள் இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளதுடன் அதற்கமைய **விக்டோரியா, கொத்மலை, ரன்தெணிகல, பொல்கொல்ல, ரன்தம்பே, மாதுறு ஓயா, மொரகஹகந்த, களு கங்கை, போவதென்ன, உடவலவ உட்பட மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான பிரதான நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன முறைமை கட்டிடங்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல், காணிகள் மற்றும் வனப் பாதுகாப்பு நடவடிக்கைகள், அலுவலகம், வேலைத் தளங்கள், பண்ணைகள் மற்றும் வியாபார நிலையங்களைப் பாதுகாத்தல், சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுத்தல், ஊழல் பெற்றுக் கொள்ளுதல் போன்ற சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துதல், பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல், புலனாய்வுத் தகவல்களைத் திரட்டுதல். விசேட பாதுகாப்பு செயற்பாடுகளை திட்டமிடுதல், மகாவலி அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்பளித்தல், மகாவலி அதிகார சபையின் பொதுத் தேவைகளுக்காக பாதுகாப்புதவி வழங்குதல், முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு உதவி வழங்குதல்** போன்ற பொறுப்புக்களுடன் கூடிய வகிபாகங்கள் தற்பொழுது இப்படையணிக்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

**பிரதான குறிக்கோள்கள் –**

- மகாவலி அபிவிருத்தியின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற பிரதான நீர்த்தேக்கங்கள், கால்வாய் அணைகள் மற்றும் கட்டிடங்கள் உட்பட 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், பதவியணி மற்றும் ஒப்பந்தக்காரர்களினால் ஒப்படைக்கப்படுகின்ற செயற்திட்டங்கள் மற்றும் சொத்துக்களுக்கு பாதுகாப்பு வழங்குதல்.
- மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அனைத்து அலுவலக கட்டிடத் தொகுதிகள், கட்டிடங்கள், களஞ்சிய வளாகங்கள் போன்றவற்றிற்கு அவசியமான பாதுகாப்பை வழங்குதல்.

- மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான பதவியணி மற்றும் குடியேற்றவாசிகளுக்கு அவசியமான பாதுகாப்பை வழங்குதல்.

**ஏனைய கடமைகள் மற்றும் வகிபாகங்கள்.**

- கௌரவ மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்திப் பிரதி அமைச்சர்கள் உட்பட மகாவலி அபிவிருத்தி அமைச்சின், இலங்கை மகாவலி அதிகார சபையின் முக்கிய பிரமுகர்களுக்கான உபசாரம் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புக் கடமைகளை மகாவலி விளையாட்டு மற்றும் ஏனைய விசேட விழாக்களுக்கு அவசியமான உபசாரங்கள் மற்றும் பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்றுதல்.
- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக இராணுவ வீரர்கள் மற்றும் காவல் துறையுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல்.
- இலங்கை மகாவலி அதிகார சபை வசமுள்ள பணம் மற்றும் பெறுமதியான சொத்துக்களுக்கு போக்குவரத்தின் போது பாதுகாப்பளித்தல்.
- மகாவலி பாதுகாப்புப் படையணிக்கு மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு அவசியமான புலனாய்வுத் தகவல்களை வழங்குதல்.
- மகாவலி நிறுவனங்களின் பிரதான உத்தியோகத்தர்களுக்கு மற்றும் செயற்திட்டப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் பணியாற்றுகின்ற நிறுவனங்களின் காவலாளிகளின் கடமைகளைக் கண்காணிப்பதன் மூலம் ஒத்துழைப்பு வழங்குதல்.
- மகாவலி அதிகார சபையில் மற்றும் அதற்குச் சொந்தமான நிறுவனங்களில் திருட்டுக்கள், தவறான பயன்பாடுகள் மற்றும் மோசடிகளை தடுப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவ்வாறு நடந்து கொள்கின்ற நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.
- மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் மகாவலி பிரதேசங்களில் சட்ட விரோதமாக குடியேறுதல், சட்ட விரோத கட்டுமானங்கள் மற்றும் சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுத்தல்.
- மகாவலி அதிகார சபையின் வசமுள்ள வெடி பொருட்கள், ஆயுதங்கள், வெடி மருந்துகள் ஆகிய பொருட்களை வைத்துக் கொள்ளுதல், பாதுகாத்தல், விநியோகித்தல் மற்றும் கணக்கிடுதல்.
- மகாவலி அதிகார சபைக்கு மற்றும் அதற்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு பாதுகாப்பு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- மகாவலி அதிகார சபை, பதவியணிகளுக்கு மற்றும் குடியேற்றவாசிகளுக்கு அவசியமான விதத்தில் பாதுகாப்புப் பயிற்சிகளை நடாத்துதல்.

மகாவலி பாதுகாப்புப் படையணியின் பிரதான வகிபாகங்கள் மேற்குறிப்பிட்ட விதத்தில் அமைவதுடன், அது அரசாங்கத்தின் நீர்ப்பாசன அமைச்சின் மகாவலி வலயங்களை அண்டிய கால்வாய் அணைகள் மற்றும் குடியேற்றங்களின் பாது உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் இராஜாங்க அமைச்சின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபையின் பொதுக் கொள்கைகளை அமுல்படுத்தும் போது மற்றும் அதனுடன் ஒன்றிய சொத்துக்கள் மற்றும் நபர்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். இதில் வகிபாகங்களை அமுல்படுத்தும் போது மகாவலி **பாதுகாப்புப் படையணிக்கு ஆணைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்காக உதவிப் பணிப்பாளர் ஒருவரும், அதன் கீழ் இயக்கற் பிரிவும், களங்களில் அவ்வாணைகள் மற்றும் ஆலோசனைகளை அமுல்படுத்துவதற்காக அதிகார பிரதேசங்கள் 10 உம், அவசியமான**

**விதத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் காவல் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பாரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான 42 அணிவகுப்புக்களும் தற்பொழுது நிறுவப்பட்டுள்ளன.** அவ்வாறே, சகல பதவிகளினதும் நிர்வாகம் மற்றும் சம்பளம் வழங்குதல் ஆகிய கணக்குசார் நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக 50 பேரை உள்ளடக்கிய சிவில் பதவியணி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளதுடன் திகனையில் அமைந்துள்ள தலைமையகம் மூலம் அதன் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன. அதற்கமைய 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதமாகும் போது எமது படையணியில் முழுமையான பாதுகாப்பு பதவியணியின் எண்ணிக்கை 620 ஆகும்.

**அப்பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்றுகின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மிகவும் அடக்கமான முறையில் கடமைகளில் ஈடுபடுவதற்காக அவசியமான நிலையியற் கட்டளைகள் மற்றும் ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளன.**

மகாவலி பாதுகாப்புப் படையணியானது அரசாங்கத்தின் ஏனைய சிவில் பாதுகாப்பு நிறுவனங்களை விட மிகச் சிறந்த தேர்ச்சிகளுடன், ஆயுதம் ஏந்தியதாக அமைக்கப்பட்ட முறையான பாதுகாப்புப் பிரிவாகும்.

**2022 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட இலக்குகள் மற்றும் விசேட நிகழ்வுகள்.**

மேலும், 2022 ஆம் நிதியாண்டின் முதல் பகுதி தொடக்கம் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக, மேலதிக நேர கொடுப்பனவுகள் குறைப்பு, 60 வயதை பூர்த்தி செய்ததன் காரணமாக ஏராளமான அலுவலர்கள் ஓய்வு பெறுதல், புதிய அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்யாமை போன்ற காரணங்களால் , பாதுகாப்புக் கடமைகளை மேற்கொள்வதில் கடுமையான சிரமங்கள் ஏற்பட்டாலும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட படையணியை மிகவும் சிறப்பாக முகாமைத்துவம் செய்து கடமையில் ஈடுபடுத்தியதன் மூலம் பாதுகாப்புக் கடமைகளை தொடர்ச்சியாகவும் முறையாகவும் நடாத்திச் செல்வதற்காக இலங்கை மகாவலி அதிகார சபையின் அசையும் மற்றும் அசையும் சொத்துக்களை ஒழுங்காக பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும் இந்த படையணியின் பாதுகாப்பு தரப்பினர் பெரும் முயற்சிகளையும் தியாகங்களையும் மேற்கொண்டனர் என்பதனை அபிமானத்துடன் நினைவூட்டிக் கொள்கின்றேன்.

மகாவலி பாதுகாப்புப் படையணியின் பாதுகாப்பு நடவடிக்கைகளை முறையாகவும் தொடர்ச்சியாவும் பேணும் பொருட்டு இப்படையணியின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 2021 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ESCORT AIMGUARD வகை ரிப்பீட்டர் துப்பாக்கிகளுக்காக 4700 SG NO 12 வகை தோட்டாக்கள் 4700 ஐ கொள்வனவு செய்வதற்கு கடந்த ஆண்டு முடியுமானதாக இருந்தது.

மேலும், 2021 ஆம் ஆண்டில் பணிப்பாளர் நாயகத்தின் (இலங்கை மகாவலி அதிகாரசபை) அனுமதியுடன் நடத்தப்பட்ட ESCORT AIMGUARD வகை ரிப்பீட்டர் துப்பாக்கிகள் குறித்த பயிற்சி பட்டறையானது, 2022 மார்ச் 24 முதல் மார்ச் 24, 2022 வரை வலயம் B வலயத்திற்கும், மற்றும் 2022 ஒக்டோபர் 15 ஆம் திகதி பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் நடாத்தப்பட்டமையால், 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள், எவ்வளவு கடினமான சூழ்நிலை ஏற்பட்டாலும், பாதுகாப்பு கடமைகளில் உள்ள அதிகாரிகளுக்கான பாதுகாப்பு பிரிவு கடமைகளை நடத்துவதன் மூலம் இந்த படையின் மொத்த பலத்தில் பெரும் எண்ணிக்கையிலான பயிற்சிப் பட்டறையை வெற்றிகரமாக நடத்த முடிந்தது என்பது எங்கள் படையின் ஒரு பெரிய சாதனை என்று கூறலாம்.

ரண்தெனிகல துணைப் பிரிவில் நீண்டகாலமாக நிலவுகின்ற குரங்குகளால் ஏற்படுகன்ற ஏற்பட்ட சேதங்களைக் குறைப்பதற்காக ரந்தெனிகல படைப் பிரிவுக்கு காற்றுத் துப்பாக்கி ஒன்றை கொள்வனவு செய்தமை 2022 ஆம் ஆண்டில் இந்த படையால் அடையப்பட்ட மற்றொரு இலக்காகும் என்பதை நான் நினைவுபடுத்துகிறேன்.

மேலும், 2022 ஆம் ஆண்டில், இப்படையில் கடமையாற்றும் 582 பாதுகாப்பு மேற்பார்வையாளர்கள்/உதவி பாதுகாப்பு மேற்பார்வையாளர்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கான இரவு சீருடைகளுக்கான சீருடை துணியும், 14 பிராந்திய மேலாளர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தலா 02 சஃபாரி சீருடைகளும் கொள்வனவு செய்ய முடிந்தது.

மேலும், மொரகஹகந்த பிரதேசத்தில் பாதுகாப்பு கடமைகளை தொடர்ச்சியாகவும் முறையாகவும் பேணுவதற்காக, பிராந்தியத்தின் பாவனைக்காக மொரகஹகந்த மற்றும் களு கங்கை பிரிவுகளை உள்ளடக்கிய இரண்டு நிலையான வான் சமிக்ஞை கோபுரங்கள் மற்றும் நிறுவப்பட்ட இரண்டு விமான சமிக்ஞை இயந்திரங்களை நிறுவியமை இந்த படையின் மற்றொரு தனித்துவமான சாதனையாகும். .

மேலும், நவம்பர் 03, 2022 அன்று, மொரகஹகந்த திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட 32-3343 ஆம் இலக்க பெஜரோ கார் மற்றும் 50-3804 ஆம் இலக்க டபள் கெப் ஆகியவற்றை இந்த தலைமை அலுவலகத்திற்கு பெற்றுக் கொண்டதன் மூலம் இந்த படையின் போக்குவரத்து நடவடிக்கைகளை மேலும் முறையாகப் பேணுவதற்கு பெரும் உதவியாக இருந்ததை நான் நினைவுகூருகிறேன்.

**2022 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்.**

| <u>கணக்கு இலக்கம்</u> | | <u>ரூபாய்</u> |
|---|---|---|
| 2003 | கடன் வட்டி வருமானம் | 1.05 |
| 2005 | அபராத வட்டி வருமானம் | 0.04 |
| 2008 | மீளச்செலுத்தாத டெண்டர் வைப்புகள் | - |
| 2010 | பல்வேறு வருமானங்கள் | - |
| **மொத்தம்** | | **1.09** |

| <u>நிதிசார் முன்னேற்றம்</u> | <u>மில்லியன்</u> |
|---|---|
| 2021 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை | 57.7 |
| 2005 ஆம் ஆண்டின் இலக்கு | 57.7 |
| 2008 ஆம் ஆண்டு பிரதான அலுவலகத்தில் கிடைத்த தொகை | 57.7 |
| 2010 ஆம் ஆண்டு செலவு செய்யப்பட்ட தொகை | 48.5 |
| அதற்கமைய நிதிசார் முன்னேற்றம் | 1.6 |

## 4.5 போக்குவரத்துப் பிரிவு

**அறிமுகம்**

இலங்கை மகாவலி அதிகார சபையின் இலக்குகளை எட்டுவதற்கு அவசியமான சேவைகளின் முதன்மை வகிபாகங்கள் போக்குவரத்துப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காக நிறுவனத்தின் போக்குவரத்துச் சேவை, நிறுவனத்தினுள் நிலவுகின்ற பௌதீக மற்றும் உழைப்புசார் வளங்களை உயர்ந்தபட்ச விதத்தில் பயன்படுத்தி துரிதமான வினைத்திறனுடன் கூடிய போக்குவரத்து சேவைகளாக பொருளாதார, சமூக மற்றும் சூழலியல் தாக்கங்களை இயன்றளவு குறைத்து முறையான விதத்தில் நடாத்திச் செல்வது போக்குவரத்துப் பிரிவின் அடிப்படைப் பணியாக கருத முடியும்.

புது எண்ணக்கருக்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகளுக்கு ஒருங்கிணைந்து சுற்றாடல் தோழமையுடைய சேவைகளாக நடாத்திச் செல்வது யுகத்தின் தேவையாகும். இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான வாகனங்களின் இயக்கல்கள் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக சரியான வழிகாட்டல்கள்,, அவசியமான ஆலோசனைகளை வழங்குதல், கையிறுப்பில் உள்ள வாகனங்களை முகாமைத்துவம் செய்தல், சரியான பாதைக்கு ஆற்றுப்படுத்துவதன் ஊடாக வினைத்திறன் மிக்க சுற்றாடல் தோழமையுடைய வினைத்திறனான சேவைகளை வழங்குவது எமது நோக்கமாகும். பகுதியான அரச நிறுவனமாக செயற்படுகின்ற இலங்கை மகாவலி அதிகார சபையானது அரசாங்கத்திற்கு செலவுச் சுமையாக செயற்படக் கூடாது என்றும், அதில் வருமானங்களைத் தோற்றுவிக்கின்ற அல்லது இலாபம் ஈட்டும் நிறுவனமாக எதிர்வரும் காலங்களில் செயற்பட வேண்டும் எனவும் பொதுத் திறைசேரியால் (நிதி அமைச்சு) ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளது.

அதற்கமைய எதிர்வரும் நடவடிக்கைகளைத் திட்டமிடும் போது போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பிரிவின் பிரதான வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள்.

அதிகார சபைக்குச் சொந்தமான அனைத்து வாகனங்கள் தொடர்பான பொறுப்பு, சகல வாகனங்களினதும் பழுதுபார்த்தல்கள் மற்றும் தாபரிப்புக்கள், வாகன தாபரிப்புக்கள் மற்றும் எரிபொருட்களுக்கான வருடாந்த செலவினங்களைத் தயாரித்தல், வருமான உத்தரவுப் பத்திரம் மற்றும் காப்புறுதி சான்றிதழ் என்பன உரிய தினத்திற்கு இற்றைப்படுத்துதல், கடமைக்காக உத்தியோகத்தர்களுக்கு வாகனங்கள் ஒதுக்குதல், சாரதிகளுக்கு மற்றும் சாரதி உதவியாளர்களுக்கு கடமைகளை ஒப்படைத்தல், வாகனப் பட்டியலைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல், வாகனங்களுக்கு ஏற்படுகின்ற விபத்துக்களின் போது முறையான செயன்முறைகளுக்கு அமைய செயற்படுதல், வலய மற்றும் பிரதேச அலுவலகங்களின் தலைவர்கள் மற்றும் போக்குவரத்து உத்தியோகத்தர்களுடன் உரிய விடயம் தொடர்பாக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல், அறிக்கை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் இற்றைப்படுத்துதல் போன்ற போக்குவரத்து பிரிவின் பிரதான பணிகள் மற்றும் பொறுப்புக்கள் ஆகும்.

# ஐந்தாவது அத்தியாயம்

## இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள்.

நிறுவன சட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட வியாபார நடவடிக்கைகளின் ஒரு பகுதி முகாமைத்துவத்திற்காக பின்வரும் தனியார் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

- வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்.
  Mahaweli Livestock & Agro Enterprises (Pvt) Ltd

- வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனைச் சேவைப் பணியகம் (தனியார்) நிறுவனம். (MCB)
  Mahaweli Consultancy Bureau (Pvt) Ltd

- இயற்கை வள முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) நிறுவனம். (NRMS)
  Natural Resources Management Services (Pvt) Ltd

**2021 ஆம் ஆண்டில் நிறுவனங்களின் செயலாற்றுகை**

| தொடர் இலக்கம் | நிறுவனம் | வருடத்தினுள் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்/ நிலைமை |
|---|---|---|
| 01 | வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம். | ❖ மாகாணத்தின் பால் விவசாயிகளிடம் இருந்து பால் சேகரித்தல் மற்றும் அவர்களுக்கு அதன் மூலம் சேவைகளை வழங்குதல்.<br>❖ பாலுடன் தொடர்புடைய உற்பத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் அவ் உற்பத்திகளை மகாவலி வலயங்கள் மற்றும் சுற்றியுள்ள பிரதேசங்களுக்கு சந்தைப்படுத்துதல்.<br>❖ ஆண் மாடுகளான பயன்படுத்துவதற்காக நீர் எருமைகளின் உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு வழங்குதல்.<br>❖ 2021 ஆம் ஆண்டின் முதல் இரு காலாண்டுகளிலும் தரத்தில் உயர்ந்த புரொய்லர் இறைச்சி உற்பத்தி செய்து சந்தைப்படுத்தல்.<br>❖ பெரும் போகத்தில் கிராந்துரு கோட்டை கால்நடை பண்ணையின் 200 ஏக்கருக்கு சோளம் பயிர்ச் செய்கைக்காக விவசாயிகளுக்கு வழங்குதல் மற்றும் வயல்கள் 25 ஏக்கரில் பயிர்ச் செய்கை முன்னெடுக்கப்பட்டு உள்ளது.<br>❖ தம்மின்ன மிருகப் பண்ணையில் இரு போகங்கள் வித்து நெற்கள் 08 ஹெக்டயரில் (20 ஏக்கர்) பயிரச் செய்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.<br>❖ சிறு அளவில் டிராகன் பழம் பயிரிடுதல். |
| 02 | வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனைச் சேவைப் பணியகம் (தனியார்) நிறுவனம். | இந்நிறுவனமானது 2020.12.30 ஆம் திகதியில் இருந்து நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டு உள்ளது. |
| 03 | வரையறுக்கப்பட்ட இயற்கை வள முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) நிறுவனம். | ஏலமிடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட பின்னர் சகல நிதிக் கூற்றுகளும் சட்டப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளது. |

# வருடாந்த கணக்குகள்

## பாகம் - II

## 31.12.2022 ஆம் திகதிக்கான நிதிக் கூற்றுக்கள்

| | | குழுமம் | | அதிகார சபை | |
|---|---|---|---|---|---|
| | | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| | | 2022 | 2021 | 2022 | 2021 |
| | குறிப்பு | | | | |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | (1) | 111,447,032 | 114,258,254 | 111,401,972 | 114,219,393 |
| முதலீடுகள் (நீண்ட கால) | (2) | 235,989 | 23,104 | 636,565 | 421,485 |
| புலனாகாத சொத்துக்கள் | | - | 6 | - | 6 |
| மூலதன பணிச் செயல்முறை | | 8,738 | 31,390 | 8,738 | 31,390 |
| மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள் | | 111,691,760 | 114,312,754 | 112,047,276 | 114,672,274 |
| உயிரியல் சொத்துக்கள் – மூலதனம் | (3) | 320,905 | 286,717 | 309,674 | 278,294 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | |
| சரக்கு இருப்புகள்/ இருப்புகள் | (4) | 270,140 | 276,905 | 264,778 | 273,724 |
| உயிரியல் சொத்துக்கள் – வணிகம் | (3) | 119,708 | 41,118 | 119,386 | 40,242 |
| வணிகம் மற்றும் ஏனைய பெறுவனவுகள் | (5) | 4,576,005 | 3,471,407 | 4,566,296 | 3,462,625 |
| வங்கி உத்தரவாதங்கள் | | - | - | - | - |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | (6) | 272,418 | 1,177,597 | 271,802 | 1,175,376 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 5,238,270 | 4,967,027 | 5,222,261 | 4,951,967 |
| **மொத்த சொத்துக்கள்** | | **117,250,935** | **119,566,498** | **117,579,210** | **119,902,534** |
| | | | | | |
| **பொறுப்புகள்** | | | | | |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | | | |
| கொடுப்பனவுகள் | (7) | 39,760,813 | 39,819,011 | 39,721,101 | 39,815,804 |
| குத்தகை – ஏலியன்ஸ் பினான்ஸ் | (8) | 107,390 | 103,544 | 107,246 | 66,756 |
| பெருகிய செலவுகள் | | 39,868,202 | 39,922,555 | 39,828,347 | 39,882,560 |
| **மொத்த நடைமுறை பொறுப்புகள்** | | | | | |
| **நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | (9) | 1,413,100 | 1,343,221 | 1,400,912 | 1,332,168 |
| பிற்போடப்பட்ட வரி | | - | - | - | - |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | 1,413,100 | 1,343,221 | 1,400,912 | 1,332,168 |
| **மொத்த பொறுப்புகள்** | | 41,281,302 | 41,265,776 | 41,229,259 | 41,214,728 |
| | | | | | |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | **75,969,632** | **78,300,722** | **76,349,951** | **78,687,806** |
| | | | | | |
| **தேறிய சொத்துக்கள் / உரிமையான்மை** | | | | | |
| நிதிக் கூட்டுத்தொகை | (10) | 70,823,574 | 73,877,177 | 70,823,574 | 73,877,177 |
| ஒதுக்குகள் – வருமான மற்றும் செலவுக் கணக்கின் ஆரம்ப மீதி | | (2,723,686) | (1,238,559) | (2,338,096) | (844,052) |
| வருமான ஒதுக்குகள் - நிறுவனங்கள் | | - | - | - | - |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் – | | 7,869,744 | 5,662,104 | 7,864,472 | 5,654,681 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமையான்மை** | | **75,969,632** | **78,300,722** | **76,349,951** | **78,687,806** |

**31.12.2022 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கள்.**

| குழுமம் | அதிகார சபை | | | குழுமம் | அதிகார சபை |
|---|---|---|---|---|---|
| ரூ.'000 | ரூ.'000 | | | ரூ.'000 | ரூ.'000 |
| 2021 | 2021 | | | 2022 | 2022 |
| | | | அட்ட. | | |
| | | **வருமானம்** | (01) | | |
| 304,110 | 304,110 | வாடகை | | 309,934 | 309,934 |
| 653,583 | 653,583 | ஆதாய உரிமை | | 326,583 | 326,583 |
| 8,859 | - | பண்ணை விளைபொருள் விற்பனை | | 20,617 | - |
| 6,478 | 6,478 | முதலீட்டு வருமானம் (நிறுவனங்கள்) | | 5,045 | 5,045 |
| 3,336,532 | 3,336,532 | ஏனைய வருமானங்கள் | | 3,342,394 | 3,342,394 |
| 4,309,562 | 4,300,703 | **தோற்றுவிக்கப்பட்ட வருமானம்** | | 4,004,572 | 3,983,955 |
| | | | | | |
| | | கருவூல மானியம் - | (02) | | |
| 2,161,937 | 2,161,937 | மீண்டுவரும் | | 3,030,026 | 3,030,026 |
| 3,314,843 | 3,314,843 | மூலதனம் | | 366,518 | 366,518 |
| - | - | விவசாய மற்றும் கால்நடை வளங்கள் | | 160,741 | 160,741 |
| - | - | பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன புனரமைப்பு | | - | - |
| **9,786,341** | **9,777,483** | | | **7,561,856** | **7,541,240** |
| | | **குறைந்த : செலவுகள்** | (03) | | |
| 2,817,807 | 2,815,516 | தனிப்பட்ட ஊதியம் | | 2,960,628 | 2,958,451 |
| 86,400 | 86,343 | போக்குவரத்து /வாழ்க்கைப்படி | | 76,206 | 75,954 |
| 154,543 | 154,543 | வழங்கல்கள் /போக்குவரத்து | | 213,750 | 213,750 |
| 440,492 | 440,492 | தாபரிப்பு செலவினங்கள் | | 405,750 | 405,750 |
| 134,151 | 134,100 | ஒப்பந்தவியல் பணிகள் | | 127,263 | 127,203 |
| 1,950 | 1,950 | காப்புறுதி | | 1,854 | 1,854 |
| 97,007 | 91,633 | ஏனைய செலவுகள் | | 93,800 | 87,012 |
| 3,242,826 | 3,240,416 | பெறுமானத் தேய்வு | | 4,150,274 | 4,147,853 |
| 2,495,308 | 2,495,308 | மறுசீரமைப்பு, மேம்பாடு மற்றும் ஏனைய தாபரிப்புக்கள், சமூக விருத்தி மற்றும் குடியேறியோருக்கான சேவைகள் | (04) | 1,262,470 | 1,262,470 |
| 36,400 | 36,400 | சுற்றுப்பயண மாளிகையின் நட்டம் | (05) | 37,712 | 37,712 |
| 6,806 | 6,806 | அபிவிருத்தி மத்திய நிலையத்தின் இலாபம் | | 7,326 | 7,326 |
| 5,950 | 5,950 | நீர் செயற்திட்ட முகாமைத்துவ நட்டம் | | 6,872 | 6,872 |
| 34,430 | 34,430 | பயிற்சிப் பட்டறையின் நட்டம்/ இலாபம் | | 21,915 | 21,915 |
| 25,748 | 25,748 | நாற்றுமேடையின் நட்டம் | (06) | 24,264 | 24,264 |
| 632 | 632 | பண்ணை நட்டம்/ இலாபம் | (07) | (3,539) | (3,539) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 293 | 293 | ஹெல போஜுன்ஹலவின் நட்டம்/ இலாபம் | | 204 | 204 |
| (459,736) | (459,736) | மொரகஹகந்த மின் உற்பத்தி நிலைய நட்டம்/ இலாபம் | | (339,913) | (339,913) |
| **9,121,007** | **9,110,823** | **மொத்த செயற்பாட்டுச் செலவுகள்** | | **9,046,837** | **9,035,138** |
| 665,334 | 666,660 | **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான மிகை/ (பற்றாக்குறை)** | | (267,788) | (1,484,980) |
| 506 | 506 | நிலையான ஆதனங்களை அகற்றியமை – மேல. இலாபம் / நஷ்டம் | **(08)** | (147) | (147) |
| | | | | | |
| **665,841** | **667,166** | **வரியின் பின்னரான வருமானம்** | | (1,485,127) | (1,494,045) |
| | - | | | | |
| (1,156,391) | (763,578) | 2021.01.01 ஆம் திகதிக்கு கொண்டு வரப்பட்ட மீதி | | (1,238,559) | (844,051) |
| **(490,550)** | **(96,412)** | **தேறிய மிகை (பற்றாக்குறை) முன் கொண்டுவரப்பட்ட** | | **(2,723,686)** | **(2,338,096)** |

## 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | குழுமம் | | அதிகார சபை |
|---|---|---|---|
| | | | |
| | **ரூ.'000** | | **ரூ.'000** |
| | | | |
| **இயக்கச் செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | (1,485,127) | | (1,494,045) |
| **பணமல்லாத நகர்வுகள்** | | | |
| பெறுமானத் தேய்வு | 5,187,501 | | 5,185,079 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 69,879 | | 68,744 |
| உயிரியல் ஆதனங்களின் ஆதாய அதிகரிப்பு | (34,188) | | (31,380) |
| ஆதனங்களின் உரிமை மாற்றங்கள் | (8,779) | | (8,779) |
| ஆதன ஒப்படைப்பு | 473 | | 147 |
| | | | |
| **இயக்கச் செயற்பாடுகள்** | | | |
| இருப்புக்களின் அதிகரிப்பு/ குறைவு | 6,765 | | 8,946 |
| உயிரியல் ஆதனங்களின் அதிகரிப்பு/ குறைவு – வணிகம் | (78,590) | | (79,143) |
| ஏனைய பெறுகைகளின் அதிகரிப்பு/ குறைவு | (1,104,598) | | (1,103,670) |
| வங்கி உத்தரவாதங்களின் அதிகரிப்பு/ குறைவு | | | |
| கொடுப்பனவுகளின் அதிகரிப்பு/ குறைவு | (58,198) | | (94,703) |
| அட்டுறுச் செலவுகளின் அதிகரிப்பு/ குறைவு | 3,846 | | 40,490 |
| | | | |
| **இயக்கச் செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **2,498,983** | | **2,491,687** |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| **முதலீட்டுச் செயற்பாடுகள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (151,976) | | (151,781) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்ளை மீள் மதிப்பிடுதல் | (8,750) | | - |
| புலனாகாத சொத்துக்களின் அதிகரிப்பு | 6 | | 6 |
| சொத்து விற்பனைகளின் மூலமான உருவாக்கங்கள் | 2,545 | | 2,545 |
| முதலீடுகளின் அதிகரிப்பு/ குறைவு | (212,885) | | (215,080) |
| பணி முன்னேற்றங்களின் அதிகரிப்பு/ குறைவு | 22,651 | | 22,651 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **(348,409)** | | **(341,658)** |
| | | | |
| **நிதிசார் செயற்பாடுகள்** | | | |
| நிதிக் கட்டணங்களின் அதிகரிப்பு/ குறைவு | - | | - |
| திரண்ட நிதி மற்றும் ஒதுக்குகளின் அதிகரிப்பு/ குறைவு | (3,053,603) | | (3,053,603) |
| ஒதுக்குகளை மீள் மதிப்பீடு செய்தல் அதிகரிப்பு/ குறைவு | (2,151) | | - |
| **நிதிசார் செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | **(3,055,754)** | | **(3,053,603)** |
| **காசு மற்றும் காசு உரிமையாண்மைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | **(905,179)** | | **(903,574)** |
| 01.01.2022 ஆம் திகதிக்கு காசு மற்றும் காசு உரிமையாண்மைகள் | 1,177,597 | | 1,175,376 |
| 31.12.2022 ஆம் திகதிக்கு காசு மற்றும் காசு உரிமையாண்மைகள் | **272,418** | | **271,803** |

## உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றுக்கள் – குழுமம்

| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
|---|---|---|---|---|
| | | | | |
| **விபரம்** | **ஒருங்கிணைக்கப்பட்ட நிதி** | **ஒதுக்குகள்** | **வருமானங்கள் மற்றும் செலவினங்கள்** | **மொத்தம்** |
| | | | | |
| 01.01.2021 ஆம் திகதிக்கு மீதி | 76,779,867 | 5,626,304 | (1,156,391) | 81,249,780 |
| ஆண்டின் போது | 282,781 | - | 665,841 | 948,621 |
| மாறுபட்ட வருமானம் | (3,187,920) | | | (3,187,920) |
| **31.12.2021 ஆம் திகதிக்கு மீதி** | **73,874,727** | **5,626,304** | **(490,550)** | **79,010,481** |
| 01.01.2022 ஆம் திகதிக்கு மீதி | **73,877,177** | **5,662,104** | **(1,238,559)** | **78,300,722** |
| ஆண்டின் போது | 151,976 | 2,207,640 | (1,485,127) | **874,489** |
| மாறுபட்ட வருமானம் | (3,205,579) | | | **(3,205,579)** |
| **31.12.2022 ஆம் திகதிக்கு மீதி** | **70,823,574** | **7,869,744** | **(2,723,686)** | **75,969,633** |

## உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றுக்கள் – மகாவலி அதிகார சபை

| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
|---|---|---|---|---|
| | | | | |
| | **ஒருங்கிணைக்கப்பட்ட நிதி** | **ஒதுக்குகள்** | **வருமானங்கள் மற்றும் செலவினங்கள்** | **மொத்தம்** |
| | **நிதி** | - | **செலவினங்கள்** | **81,647,912** |
| 01.01.2021 ஆம் திகதிக்கு மீதி | 76,779,867 | 5,618,881 | (763,578) | 81,635,170 |
| ஆண்டின் போது | 282,781 | - | 667,166 | 949,947 |
| மாறுபட்ட வருமானங்கள் | (3,187,920) | - | - | (3,187,920) |
| **31.12.2021 ஆம் திகதிக்கு மீதி** | **73,874,727** | **5,618,881** | **(96,412)** | **79,397,197** |
| 01.01.2022 ஆம் திகதிக்கு மீதி | 73,877,177 | 5,654,681 | (844,051) | 79,397,197 |
| ஆண்டின் போது | 151,781 | 2,209,791 | (1,494,045) | 867,528 |
| மாறுபட்ட வருமானங்கள் | (3,205,384) | - | - | (3,205,384) |
| **31.12.2022 ஆம் திகதிக்கு மீதி** | **70,823,574** | **7,864,472** | **(2,338,096)** | **77,059,341** |

# நிதிக் கூற்றிற்கான பிரமாணக் குறிப்புக்கள்

**1.) அறிக்கையிடல் நிறுவனம்**

இலங்கை மகாவலி அதிகார சபை (MASL) 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிகள் 12 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. (MDP.)

மகாவலி சட்டத்தின் பிரகாரம், எந்தவொரு விசேட பிரதேசத்திலும் அல்லது அது தொடர்பில் அதிகார சபையின் பணிகள் பின்வருமாறு இருக்கும்.

அ) நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்துதல், நீர்ப்பாசன விநியோக முறைமை மற்றும் மின் சக்தி உற்பத்தி மற்றும் வழங்கல் போன்ற மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்தை திட்டமிட்டு அமுல்படுத்துதல்.

ஆ) எவ்வாறாயினும், மின் சக்தி விநியோகம் தொடர்பான செயல்பாட்டை வேறு எந்த எழுத்துப்பூர்வ சட்டத்தின் கீழும் செய்யத் தகுதிவாய்ந்த எந்த அதிகாரியும் விடுவிக்கலாம்.

இ) எந்தவொரு சிறப்புப் பகுதியின் முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை வளர்த்தல் மற்றும் பாதுகாத்தல்.

ஈ) விவசாய உற்பத்தித் திறனையும் வேலைவாய்ப்பு திறனையும் மேம்படுத்துதல் மற்றும் எந்தவொரு சிறப்புப் பகுதிக்குள் பொருளாதார மற்றும் விவசாய அபிவிருத்தியை உருவாக்குதல் மற்றும் பாதுகாத்தல்;

உ) ஏதேனும் ஒரு சிறப்புப் பகுதிக்குள் பௌதிக சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.

ஊ) எந்தவொரு விசேட பிரதேசத்திலும் சமூகத்தின் பொது நலன் மற்றும் கலாச்சார முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் அத்தகைய பகுதியின் விவகாரத்தை நிர்வகித்தல்.

எ) எந்தவொரு சிறப்புப் பகுதியின் பொருளாதார மற்றும் விவசாய அபிவிருத்தியிலும் உள்நாட்டு மற்றும் வெளி மூலதனத்தின் பங்களிப்பை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் மற்றும்

ஏ) மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்தைத் திட்டமிடுதல் மற்றும் அமுல்படுத்துதல் மற்றும் ஏதேனும் விசேட பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்தில் அரசாங்க திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச நியதிச் சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நபர்களின் ஒத்துழைப்பை தனியார் அல்லது பொது மக்களின் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக அதிகார சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் அதே சட்டத்தின் 12 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கை மகாவலி அதிகாரசபையானது மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம், இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) நிறுவனம், மகாவலி கால்நடை மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம், மகாவலி ஆலோசனை பணியகம் (தனியார்) நிறுவனம், மற்றும் மகாவலி கால்நடை தொழில் முயற்சிகள் நிறுவனம் ஆகிய நான்கு துணை நிறுவனங்களையும் ஒரு இணை நிறுவனத்தையும் கொண்டுள்ளது.

அனைத்து துணை நிறுவனங்களும் மற்றும் இணை நிறுவனமும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவன சட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு பின்வரும் கொள்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் பங்கு மூலதனத்தின் விளக்கங்கள் பின்வருமாறு

| நிறுவனம் | ஒரு பங்கிற்கான பெறுமதி | வழங்கப்பட்ட மற்றும் பூரணமாக செலுத்தப்பட்ட பங்கு மூலதனங்களிக் பங்குகளின் எண்ணிக்கை | மகாவலி அதிகார சபைக்கு வழங்கபட்ட பங்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1)மகாவலி ஆலோசனைப் பணியகம் (தனியார்) நிறுவனம். | ரூ. 10.00 | 6385 | 6384 |
| 2)இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) நிறுவனம் | ரூ. 10.00 | 1502 | 1500 |
| 3) மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம் | ரூ. 10.00 | 1,039,803 | 1,039,800 |
| 4)மகாவலி கால்நடை மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம். | ரூ. 10.00 | 3 | - |

**மகாவலி நிறுவனங்களின் கொள்கை நடவடிக்கைகள்**

**துணைமை அலகுகள்.**

**அ) மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம்**

- மகாவலி தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல்.
- நிறுவனத்திற்கான நிதியை உருவாக்க வணிக முயற்சியை மேற்கொள்ளுதல்.

**ஆ) இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) நிறுவனம்**

- இயற்கை வளங்கள் துறையில் தொழில்முறை ஆலோசனை மற்றும் சேவைகளை வழங்குதல்
- மேலாண்மை வடிவமைப்பு மற்றும் பயிற்சி, நீரியல் கண்காணிப்பு, நிலப் பயன்பாட்டு வரைபடம், நீர்ப் பிடிப்பு பாதுகாப்பு மற்றும் வனவியல் போன்றவை.
- தகவல் மற்றும் தரவுகளை வழங்குதல் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வுகளை தயாரித்தல்,
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஆய்வுகள் (EIA), ஆரம்ப சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகள் (IEER) போன்றவை.

**இ) மகாவலி கால்நடை மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்.**

- மகாவலி விவசாயிகளுக்கு உயர்தர விலங்குகளை கிடைக்கச் செய்வது.
- பால் மற்றும் இறைச்சி பொருட்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.

**ஈ) மகாவலி ஆலோசனைப் பணியகம் (தனியார்) நிறுவனம்.**

- கட்டிடங்கள், நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால் மற்றும் சாலைகள் கட்டும் துறைகளில் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- கட்டிடங்கள், நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால் மற்றும் சாலைகள் கட்டும் துறைகளில் கட்டுமான ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல்.

**இணைக்கப்பட்ட நிறுவனங்கள்**

**அ) மகாவலி கால்நடை தொழில் முயற்சிகள் (நிறுவனம்)**

- பிராய்லர் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.
- மகாவலி விவசாயிகளுடன் பிராய்லர் மீள் கொள்வனவு ஏற்பாடுகள்.

எனினும், மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையானது 2012 ஆம் ஆண்டில் மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனத்தை கலைக்க முடிவு செய்தது. இதன் மூலம் இந்த நிறுவனத்தின் கணக்குகள் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளில் சேர்க்கப்படவில்லை. பின்னர் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறிப்பு அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டன.

**2) தயாரிப்பு அடிப்படை**

**2.1 இணக்கக் கூற்று**

நிதிக் கூற்றுக்களானது நிதி நிலைமை, நிதிச் செயல்திறன் கூற்றுக்கள், உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்,மற்றும் நிதி கூற்றுக்களின் குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத் துறை கணக்கியல் தரத்திற்கு (SLPSAS) இணங்க இந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் முந்தைய நிதியாண்டில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் ஒத்திருக்கின்றன.

**2.2 அளவீட்டு அடிப்படை**

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்கும் எந்தவொரு சீராக்கலும் மேறகொள்ளப்படவில்லை.

## 2.3 செயல்பாட்டு மற்றும் விளக்கக்காட்சி நாணயம்

இலங்கை ரூபாயிலேயே நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. ரூபாய்களில் அளிக்கப்பட்ட அனைத்து நிதித் தகவல்களும் மிக அருகில் உள்ள ஆயிரத்திற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

## 2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளின் பயன்பாடு

இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை (SLPSAS) உடன் இணங்கிய நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு, கணக்கியல் கொள்கைகளின் பயன்பாடு மற்றும் அறிவிக்கப்பட்ட சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகள் ஆகியவற்றை பாதிக்கும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை நிர்வாகம் செய்ய வேண்டும். தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள், வரலாற்று அனுபவம் மற்றும் சூழ்நிலைகளில் நியாயமானவை என்று நம்பப்படும் எதிர்பார்ப்புகள் உட்பட பிற காரணிகளை அடிப்படையாகக் கொண்டவை. எனவே உண்மையான அனுபவமும் முடிவும் இந்த தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்களைத் தொடர்ந்து அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கியல் மதிப்பீடுகளின் திருத்தமானது அந்த காலகட்டத்தையும் எதிர்கால காலங்களையும் மட்டுமே பாதிக்கும் பட்சத்தில் மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்ட காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## 2.5 கணக்கியல் கொள்கைகளின் மாற்றங்கள்

பின்பற்றப்பட்ட கணக்கியல் கொள்கைகள் பின்வருனவை தவிர முந்தைய நிதியாண்டின் கணக்குக் கொள்கைகளுடன் ஒத்திருக்கின்றன.

**2.5.1** தனிப் பண்ணைகள், தாவர நாற்று மேடைகள் மற்றும் சுற்றுலா மாளிகைகள் ஆகியவை குறிப்பிட்ட மகாவலி அமைப்புகளின் கீழ் தனித்தனி வருமானம் மற்றும் செலவினக் கணக்குகளாக கணக்கிடப்பட்டு உள்ளன.

**2.5.2** உயிரியல் சொத்துக்கள் நியாயமான மதிப்பில் மதிப்பிடப்படுகின்றன. விவசாய கணக்கிலிருந்து ஆதாயம் அல்லது இழப்பு அடையாளம் காணப்படுகிறது.

**2.5.3** நடப்பு நிதியாண்டில் கணினிகள் மற்றும் துணைக் கரிவிகளின் மீள் மதிப்பீடு காரணமாக மீள் மதிப்பீட்டு உபரி ரூ. 547,347 மில்லியனாக உயர்த்தப்பட்டுள்ளது.

## 3) குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் அந்த நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து காலத்திற்கும் தொடர்ந்து பொருந்தும்.

### 3.1 ஒருங்கிணைப்பு அடிப்படை

**3.1.1** ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களானது ஒருங்கிணைக்கப்பட்ட நடைமுறைகளை தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் தயாரிக்கப்படுகின்றன. இதில் பெற்றோர் மற்றும் துணை நிறுவனங்களின் நிதி அறிக்கைகளை ஒருங்கிணைப்பது அறிக்கையின் முடிவு மற்றும் பங்கு முறையின் அடிப்படையில் அடங்கும். இவ்வாறாக, ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களானது இ.மா.அ.ச. பற்றிய நிதித் தகவல்களை ஒற்றைப் பொருளாதார அலகாக முன்வைக்கின்றன.

### 3.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

**3.2.1** சொத்துக்கான செலவானது அதன் மீள் மதிப்பீட்டு விலை, கொள்முதல் விலை அல்லது கட்டுமானச் செலவு மற்றும் அதன் நோக்கமான பயன்பாட்டிற்காக சொத்தை வேலை நிலைக்குக் கொண்டு வருவதற்கு நேரடியாகக் கூறப்படும் செலவு ஆகியவற்றை உள்ளடக்கியது. 2021.01.01 ஆம் திகதி முதல் அனைத்து மோட்டார் வாகனங்களும் மீள் மதிப்பிடப்பட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**3.2.2** ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் செலவு அல்லது மீள் மதிப்பீட்டின் அடிப்படையில் பெறுமானத் தேய்மானத்தின் ஏற்பாடு கணக்கிடப்படுகிறது. இதனால் சொத்து வகையின் மதிப்பிடப்பட்ட வாழ்க்கைக்கு பொருத்தமான காலத்தில் சொத்துச் செலவு சீர் செய்யப்படுகிறது. சொத்துக்கள் பயன்படுத்துவதற்குக் கிடைக்கும் போது தேய்மானம் வசூலிக்கப்படுகிறது மற்றும் சொத்து விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள விதத்தில் தெளிவுபடுத்தப்படும் திகதியின் தொடக்கத்தில் நிறுத்தப்படும். மோட்டார் வாகனங்களின் 10% காட்சித் திரை மதிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேய்மான விகிதங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அனுமதிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 01 | கட்டிடங்கள் – அலுவலகம் | 2 ½ % | ஆண்டொன்றிற்கு |
| | ஏனையவை | 5% | ஆண்டொன்றிற்கு |
| 02 | மோட்டார் வாகனங்கள் | 20% | ஆண்டொன்றிற்கு |
| 03 | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் நலன்புரி பொருட்கள் | 15% | ஆண்டொன்றிற்கு |
| 04 | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - மின் பிறப்பாக்கிகள் | 15% | ஆண்டொன்றிற்கு |
| 05 | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கட்டுமானங்கள் | 15% | ஆண்டொன்றிற்கு |
| 06 | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - பொதுவானவை | 15% | ஆண்டொன்றிற்கு |
| 07 | தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் | 10% | ஆண்டொன்றிற்கு |
| 08 | கணினி மற்றும் துணைக்கருவிகள் | 20% | ஆண்டொன்றிற்கு |
| 09 | கால்வாய்கள் | 4% | ஆண்டொன்றிற்கு |
| 10 | அணைக்கட்டுகள் | 1% | ஆண்டொன்றிற்கு |

### 3.3 முதலீடுகள்

#### 3.3.1 இணை நிறுவனங்களில் முதலீடு செய்தல்.

இணை நிறுவனத்திலான முதலீடானது செலவுக் கணக்கில் மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் ஒரு நீண்ட கால முதலீடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. முதலீட்டு நிறுவனத்தின் நிதி மற்றும் இயக்க கொள்கை முடிவுகளில் அதிகார சபைக்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கு இல்லை, எனவே உரிமையாண்மை முறையை ஏற்றுக்கொள்வது பொருத்தமற்றது.

#### 3.3.2 பிற முதலீடுகள்

பிற முதலீடுகள் இருப்புநிலைக் குறிப்பில் நீண்ட கால முதலீடாகக் கருதப்பட்டு, செலவில் குறிப்பிடப்படுகின்றன.

### 3.4 சரக்கு இருப்புகள்

சரக்கு இருப்புகளானது குறைவான செலவு மற்றும் தேறிய உணரக்கூடிய பெறுமதியாக மதிப்பிடப்படுகின்றன. மெதுவாக நகரும், குறைபாடுள்ள மற்றும் காலாவதியான பங்குகளுக்கு தேவையான இடங்களில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3.5 வணிக மற்றும் பிற பெறுகைகள்

வணிகம் மற்றும் பிற பெறுகைகள் அடைய மதிப்பிடப்பட்ட பெறுமதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 3.6 பணம் மற்றும் பண உரிமையாண்மை.

பணம் மற்றும் பண உரிமையாண்மை என்பன பண மீதிகள் மற்றும் வங்கி மேலதிகபற்று ஆகியவற்றிற்கு இணங்கியது ஆகும், அவை தேவைக்கேற்ப திருப்பிச் செலுத்தப்படுகின்றன மற்றும் இ.ம.அ.ச. இன் பண முகாமைத்துவத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளன. அவை பணப் பாய்ச்சல் அறிக்கையின் நோக்கத்திற்காக பணத்தின் ஓர் அங்கமாக சேர்க்கப்பட்டுள்ளது.

### 3.7 வெளிநாட்டு உதவி

2012 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நன்கொடை முகவர் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த கொடுப்பனவுகளில் அறிவிக்கப்பட்ட வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்துதல். வெளிநாட்டு நாணயங்களில் செலவீனங்களானது கொடுப்பனவு திகதிகளில் நிலவும் செலாவணி வீதங்களின் மீது ரூபாவுக்கு மாற்றப்பட்டன.

### 3.8 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

இருப்புநிலைக் குறிப்பில் தற்போதைய பொறுப்புகள் என வகைப்படுத்தப்படும் பொறுப்புகள், இருப்புநிலைக் குறிப்பு திகதியில் இருந்து தேவையின் பேரில் அல்லது ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய கடப்பாடு ஆகும். நடப்புப் பொறுப்புகள் என வகைப்படுத்தப்படும் விடயங்கள் இருப்புநிலைக் குறிப்புத் திகதியில் இருந்து ஓராண்டு காலத்திற்கு மேல் காலாவதியாகும் கடப்பாடுகள் ஆகும்.

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் அறியப்பட்ட அனைத்து பொறுப்புகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**3.9 ஓய்வு பெறும் உதவித் திட்டம்**

அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வுப் பணிக்கொடைகளை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டின் கணக்கீடு, நிதியாண்டின் இறுதியில், சேவையின் முதல் ஆண்டிலிருந்து தொடங்கும் ஒவ்வொரு ஆண்டினதும் அரை மாத தகுதிச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டது.

**3.10 வருமானக் கூற்றுக்கள்**

**3.10.1.** இ.ம.அ.ச வருவாய் என்பது பொது கருவூலத்திலிருந்து பெறப்பட்ட மீண்டும் மீண்டும் கிடைக்கும் மூலதன மானியம் மற்றும் குத்தகை வாடகை வருவாய், அரசு நிலத்திலிருந்து குத்தகை வாடகை வருமானம், குடியிருப்புகளிலிருந்து பெறப்பட்ட வாடகைகள் மற்றும் பங்குவீத உரிமை மற்றும் முதலீடு மற்றும் வட்டியிலிருந்து பெறப்பட்ட வருமானம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**3.10.2** வருவாய் என்பது, அந்த பொருளாதார நன்மைகள் இ.ம.அ.சபைக்கு பாயும் என்றும், நம்பத்தகுந்த வகையில் அளவிடப்பட முடியும் என்றும் அறியப்படுகின்றது.
மற்ற வாடகைகள், பங்குவீத உரிமைகள், வட்டி வருமானம் ஆகியவை ஒரு திரட்டல் அடிப்படையில் அறியப்படுகின்றது.

**3.10.3** அரச மானியங்களானது 'மூலதன மானியம் மற்றும் மீண்டுவரும் மானியங்கள்' என அறியப்படுகின்றது.
மானியங்களானது ஈடுசெய்ய உத்தேசித்துள்ள தொடர்புடைய செலவினங்களாக அறியப்படுவதுடன், இ.ம.அ.ச. அங்கீகரிக்கும் காலகட்டங்களில் முறையான அடிப்படை ரீதியில் மீண்டுவரும் மானிய இலாபம் அல்லது இழப்பாக அறியப்படுகின்றது.
நிதி நிலை கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான மூலதன மானியங்களானது வேறுபட்ட வருமானமாக மானியங்களாக இருந்து பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. சொத்துக்களின் பயனுள்ள வாழ்க்கை மீதுள்ள முறையான அடிப்படை மீதான நிதி செயல்திறன் அறியப்படுகின்றது.

**3.11 செலவினம்**

நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகள் மற்றும் செயல்திறன் நிலையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைப் பராமரிப்பதற்கான அனைத்து செலவுகளும் ஆண்டுக்கான இலாபம் / இழப்பை அடைவதில் வருமான அறிக்கைக்கு வசூலிக்கப்பட்டுள்ளன. மோசமான மற்றும் சந்தேகத்திற்குரிய கடன்கள், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான அனைத்து அறியப்பட்ட பொறுப்புகள் மற்றும் பெறுமானத் தேய்மானம் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**3.12 இருப்புநிலைக் குறிப்புக்குப் பிந்தைய நிகழ்வுகள்**

இருப்புநிலைக் குறிப்புத் திகதிக்குப் பிறகு நிகழும் அனைத்து பொருள் நிகழ்வுகளும் தேவையான இடங்களில் சீர் செய்யப்பட்டன.

**3.13 தற்செயல் நிகழ்வுகள்**

31.12.2021 ஆம் திகதியாகும் போது இலங்கை மகாவலி அதிகார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு வழக்குகளின் மீதான தொடர்ச்சியான தற்செயல் பொறுப்பு 62.631 மில்லியன் ரூபாய் ஆகும்.

**3.14 முடிவுருத்தல்**

வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிறுவனமானது கடன் வழங்குனர் தன்னார்வ முடிவுருத்தலின் கீழ் உள்ளது.

**மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம்,**

**2021.12.31 ஆம் திகதியின் போதான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்**

**(கடன்வழங்குனர் தன்னார்வ முடிவுருத்தலின் கீழ்)**

| **சொத்துக்கள்** | **குறிப்பு** | 2022 ரூ. | 2021 ரூ. |
|---|---|---|---|
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 07 | 3 | 3 |
| சொத்துகள் | 08 | 2,794,671 | 2,749,671 |
| | | **2,794,671** | **2,749,671** |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| சிங்கர் இயந்திர இருப்புக்கள் | | 29,480 | 29,480 |
| வட்டிப் பெறுகைகள் | 10 | 380,726 | 380,726 |
| அழுத்தமான கட்டுப்பாட்டுக் கணக்கு | | 28,336 | 28,336 |
| வருமான வரி மீளளிப்பு | | 62,008 | 62,008 |
| ஏனைய பெறுகைகள் | 11 | 25,000 | 25,000 |
| கருவூல கட்டணப் பட்டியல்கள் | | 9,455,896 | 9,455,896 |
| வங்கியல் உள்ள தொகை | 12 | 6,229,626 | 4,466,061 |
| கையிருப்பில் உள்ள தொகை | | 2,521 | 2,521 |
| | | 16,213,593 | 14,450,028 |
| | | 19,008,267 | 17,244,702 |
| **மொத்த சொத்துக்கள்** | | | |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **உரிமையாண்மை மற்றும் ஒதுக்குகள்** | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 06 | 10,398,000 | 10,398,000 |
| பெறப்பட்ட நிதி ATI | | 150,325 | 150,325 |
| பெறப்பட்ட நிதி EEC | | 10,000,000 | 10,000,000 |
| சபையில் இருந்தான பங்களிப்பு | | 432,000 | 432,000 |
| வைத்திருக்கப்படும் இலாபங்கள் (இழப்புக்கள்) | | (2,433,223) | (4,196,788) |
| **மொத்த உரிமையாண்மை** | | 18,547,102 | 16,783,537 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| அட்டுறுச் செலவுகள் | 13 | 71,183 | 71,183 |
| சொத்துகள் | | 2021 Rs. | 2020 Rs. |
| பல்வேறு பற்றாளர்கள் | | 310,025 | 310,025 |
| மொத்த மீதியின் முன்கூட்டிப் பெறப்பட்ட வட்டி | | 79,957 | 79,957 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **461,165** | **461,165** |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | 19,008,267 | 17,244,702 |

## 3.15 அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், வீதிகள், குளங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் மற்றும் காணிகளின் சொத்துக்கள்.

2021.12.31 ஆம் திகதியாகும் போது மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், வீதிகள், குளங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் மற்றும் காணிகள் ஆகியவற்றின் சொத்துக்களின் சாராம்சம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.15.1 குளங்களின் எண்ணிக்கை

| வலயம் | குளங்களின் எண்ணிக்கை | நிதிப் பயன்பாடு (ரூ.மி.) |
|---|---|---|
| பி வலயம் | 84 | 6,790.00 |
| சி வலயம் | 56 | 21,100.00 |
| டி வலயம் | 23 | 1,380.00 |
| ஜி வலயம் | 19 | 1,140.00 |
| எச் வலயம் | 127 | 21,913.85 |
| எல் வலயம் | 47 | 940.00 |
| வலவ வலயம் | 80 | 2,400.00 |
| ஹுருளு வாவி | 15 | 2,220.00 |
| **கூட்டுத்தொகை** | **451** | **59,163.85** |

### 3.15.2 வீதிகள்

| வீதிகள் | வலவ வலயம் (km) | எல் வலயம் (km) | பி வலயம் (km) | நிதிப் பயன்பாடு (ரூ.மி.) |
|---|---|---|---|---|
| பிரதான வீதிகள் | 100.0 | 51.0 | 549.0 | 21 |
| சிறு கிராமிய வீதிகள் | 250.0 | - | - | 0.30 |
| சந்தை வீதிகள் | 12.5 | - | - | 0.015 |
| விவசாய வீதிகள் | 25.0 | - | - | 0.025 |
| பாலங்கள் | 5.0 | - | - | 0.125 |
| மதகுகள் | 125.0 | - | - | 0.038 |
| ஆற்றிடைப் பாதை | 10.0 | - | - | 0.08 |
| **கூட்டுத் தொகை** | **527.5** | **51.0** | **549.0** | 21.583 |

**3.15.3 நீர் விநியோகம் மற்றும் கிணறுகள்**

| வீதிகள் | எல் வலயம் (எண்ணிக்கை) | ஹுருளுவெவ (எண்ணிக்கை) | நிதிப் பயன்பாடு (ரூ.மி.) |
|---|---|---|---|
| குடிநீர்க் கிணறுகள் | 350.0 | - | 0.07 |
| விவசாயக் கிணறுகள் | 150.0 | 297.0 | 0.223 |
| ஆழ் துளைகள் | 100.0 | - | 0.04 |
| மேல் நிலைத் தொட்டிகள் | 100.0 | - | 0.06 |
| விவசாய ஆலை | - | 1.0 | 0.0025 |
| குழாய்க் கிணறுகள் | - | 48.0 | 0.0096 |
| **கூட்டுத் தொகை** | **700.0** | **346.0** | 0.4051 |

**3.15.4 அணைக்கட்டுக்களின் எண்ணிக்கை**

| **அணைக்கட்டு** | **செலவினம் (பில்லியன் ரூபாய்)** |
|---|---|
| கொத்மலை | 13.0 |
| விக்டோரியா | 9.8 |
| ரன்தெனிகல | 5.8 |
| ரண்தம்பே | 3.2 |
| பொல்கொல்லை | 0.09 |
| போவதென்ன | 0.05 |
| மினிப்பே | 0.65 |
| ரத்கிந்த | 1.9 |
| மாதுறு ஓயா | 2.6 |
| உடவலவ | 0.14 |
| சந்திரிக்கா வாவி | 0.08 |
| **கூட்டுத் தொகை** | **37.31** |

**3.15.5 இலங்கை மகாவலி அதிகார சபையின் காணிகள்**

| வலயம் | மொத்த காணிகள் (ஹெக்டயர்) | கையுதிர்க்கப்பட்ட காணிகள் (ஹெக்டயர்) | எஞ்சியுள்ள காணிகள் (ஹெக்டயர்) |
|---|---|---|---|
| பி வலயம் | 95,687.0 | 28,448.0 | 67,239.0 |
| சி வலயம் | 52,564.0 | 41,024.0 | 11,540.0 |
| டி வலயம் | 16,396.0 | 1,597.0 | 14,799.0 |
| எச் வலயம் | 80,803.0 | 33,191.0 | 47,612.0 |
| ஜி வலயம் | 11,940.0 | 9,560.0 | 2,350.0 |
| எல் வலயம் | 37,338.0 | 4,762.0 | 32,576.0 |
| விக்டோரியா | 311,118.0 | 3,384.0 | 307,576.0 |
| வலவ வலயம் | 57,775.0 | 34,506.0 | 23,296.0 |
| ஹுருளு வெவ | 9,704.0 | 6,904.0 | 2,800.0 |
| ரம்பகண் ஓயா | 134,002.0 | 6,111.0 | 127,891 |
| **கூட்டுத் தொகை** | **807,327.0** | **169,517.0** | **637,810.0** |

### 3.1.6

**முதலீட்டு சொத்து**

முதலீட்டுச் சொத்துக்களை அங்கீகரித்தல், அளவிடல் மற்றும் வெளிப்படுத்தல் தொடர்பில் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 13 (SLPSAS 13) ஆனது இலங்கை மகாவலி அதிகாரசபையினால் பிரயோகிக்கப்படுகின்றது.

முதலீட்டு சொத்துக்கள் நியாயமான மதிப்பை அளவிடுகின்றன, இது ஒரு சுயாதீன மதிப்பீட்டாளரால் நடத்தப்படும் அடிப்படை மதிப்பீட்டை அளவிடுகிறது, அவர் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தொடர்புடைய தொழில்முறை தகுதிகள் மற்றும் மதிப்பிடப்படும் முதலீட்டுச் சொத்தின் இருப்பிடம் மற்றும் வகைகளில் சமீபத்திய அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 13 இன் கீழ் "முதலீட்டுச் சொத்தாக" அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டு கருத்திட்டங்களுக்காக இலங்கை மகாவலி அதிகார சபையானது பின்வரும் காணிகளை அகற்றியுள்ளது. சொத்துக்களின் மதிப்புகள் 2023 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டு, நிதி அறிக்கைகளில் சேர்க்கப்படும்.

| **வலயம்** | **முதலீட்டுச் செயற்திட்டம்** | **கையுதிர்க்கப்பட்ட காணிகள் (ஹெக்டயர்)** |
|---|---|---|
| பி வலயம் | 352 | 3,035 |
| சி வலயம் | 184 | 1,066 |
| டி வலயம் | 15 | 715 |
| எச் வலயம் | 68 | 203 |
| ஜி வலயம் | 8 | 32 |
| எல் வலயம் | 38 | 381 |
| விக்டோரியா | 36 | 67 |
| வலவ வலயம் | 73 | 562 |
| ஹுருளு வெவ | 13 | 74 |
| ரம்பகண் ஓயா | 10 | 399 |
| **கூட்டுத் தொகை** | 797 | 6,534 |

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

## பாகம் - III

# தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இலக்கம் - IWR/B/MASL/01/22/34

திகதி – 2023 டிசம்பர் 30 ஆம் திகதி

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை மகாவலி அதிகார சபை.

**இலங்கை மகாவலி அதிகார சபையின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று மற்றும் ஏனைய சட்ட மற்றும் பிரமாண அவசியங்கள் குறித்து 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது உறுப்புரைக்கு அமைவான கணக்காய்வாளர் நாயக அறிக்கை.**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மகாவலி அதிகார சபையின் (**"அதிகார சபை")** மற்றும் அதன் கீழ் நிர்வாகிக்கப்படுகின்றவைகளின் (**"குழுமம்")** 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் தினத்துடன் நிறைவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்தினத்துடன் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுடன் தொடர்புடைய குறிப்புக்கள், சாராம்சப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கியல் கொள்கைகளைக் கொண்ட 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது. அரசியமைப்பு யாப்பின் 154 (6) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையானது பகுதியில் விளக்கப்பட்டுள்ள விடயங்கள் மூலம் ஏற்படுகின்ற தாக்கங்களைத் தவிர, இலங்கை மகாவலி அதிகார சபையின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமை மற்றும் அத் தினத்துடன் நிறைவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினை மற்றும் காசுப் பாய்ச்சல்கள் என்பன இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையாக மற்றும் நியாயமான நிலைமையை உறுதி செய்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.2.1 இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக இல்லாமை

(அ) அதிகார சபையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மற்றும் தற்போது அதிகார சபையினால் நிர்வாகம், செயற்படுத்துகை, தாபரிப்பு மற்றும் மேம்படுத்தல்கள் முன்னெடுக்கப்படுகின்ற பிரதான அணைகள் 11 இன் செலவினம் 37.31 பில்லியன் ரூபாய் என நிதிக் கூற்றுக் குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு இருந்தாலும், இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமத்தின் 07 ஆம் இலக்கத்தின் 19 ஆம் பந்தியின் பிரகாரம் அவற்றின் பெறுமதி விலை மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், அதிகார சபையினால் அச் சொத்துக்களின் செயற்பாடு மற்றும் தாபரிப்புச் செலவுகள் ஏற்கப்பட்டாலும், அவற்றில் மூலதனமாக்கப்பட்ட வேண்டிய செலவுகளை இனங்கண்டு உரிய முறையில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருக்காததுடன், உகந்த அடிப்படை ஒன்றின் பிரகாரம் வருடாந்தம் பெறுமானத் தேய்வு செய்வதற்கும் ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) அதிகார சபையின் வலயங்கள் மற்றும் பிரிவுகள் 18 இற்காக வெவ்வேறாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 118 ஆம் பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்க வேண்டிய தேறிய சொத்துக்கள் மாற்றமடைவதன் கூற்றுகள் மற்றும் 127 ஆம் பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக் கூற்றைத் தயாரிக்கும் அடிப்படை மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், 11 வலயங்களினால் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 01 ஆம் பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

(இ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 53 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுகின்ற சகல எண்ணியல் தகவல்களுக்கும் கடந்த ஆண்டின் ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் எனிலும், அதிகார சபையினால் ஒருங்கிணைந்த காசுப் பாய்ச்சல் கூற்றிற்காக ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. மேலும், குழுமத்தின் நிதி நிலைமை கூற்றுக்களில் ஒப்பீட்டுத் தகவல்களைக் குறிப்பிடும் போது கடந்த ஆண்டின் கணக்காய்வுக்கு உட்பட்ட இருப்பு முன்வைக்கப்பட்டு இருக்காததுடன், மீண்டும் வெளியிடப்பட்ட இருப்பு மாத்திரம் முன்வைக்கப்பட்டு இருந்தது. அதில் மீள முகவிலைகளுக்கு உரியதாக இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 54 ஆம் பந்தியின் (அ) இல் இருந்து (ஈ) வரையான பந்திகளின் பிரகாரம் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பின்வருவனவை ஆவதானிக்கப்பட்டன.

(i) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் ஒன்று சேர்த்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பான மூலதன செலவினங்களுக்குரிய சொத்துக்கள் கணக்கிற்கு வரவிலிடப்பட வேண்டும் எனிலும் 08 வலயங்களுக்குரிய ரூ. 92,774,812 பெறுமதியான மூலதன வகையைச் சேர்ந்த செலவினங்கள் வருவாய்ச் செலவினங்களாக கணக்குகளில் குறிப்பிடப்பட்டு இருந்தன.

(ii) அதிகார சபையின் வலய அலுவலகங்கள், பிரிவுகள், உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் சுற்றுளா மாளிகைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ள காணிகளை இனங்கண்டு அவற்றின் பெறுமதி மற்றும் அதிகார சபையினால் 1984 – 1989 ஆம் கால கட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்ட செலவினம் ரூ. 64,320,853 பெறுமதியான காணித் துண்டங்கள் 02 ஆனது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.

(iii) அசையாச் சொத்து வகுப்புக்கள் 07 இற்காக மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் ரூ. 8,190,683 பெறுமதிக்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு இருந்ததுடன், அம் மீள் மதிப்பீட்டிற்கு உரியதாக இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 90 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. மேலும், இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஒன்று மீள் மதிப்பீடு செய்யப்படும் பட்சத்தில் அச் சொத்து வகுப்பானது முழுமையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்ட வேண்டும் எனினும், சி வலய வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகத்தின் முழுமையான செலவினம் ரூ. 15,601,12 பெறுமதியான அலுவலக உபகரணங்களில் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதியாகும் போது மீள் மதிப்பீடு செய்யப்பட்டு இருந்தது ரூ. 11,725,422 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் மாத்திரமாகும். அதற்கமைய, செலவினம் ரூ. 3,875,707 பெறுமதியான உரிய சொத்துக்களில் நூற்றுக்கு 25 ஆனது மீள் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. வலவ வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகத்தின் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதியாகும் போது செலவினம் (பொதுவான) ரூ. 15,655,004 பெறுமதியான இயந்திராதிகளில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு இருந்தது ரூ. 10,561,272 பெறுமதியான செலவினத்திற்குரிய இயந்திரங்கள் மாத்திரம் ஆகும். அதற்கமைய சொத்துக்களில் நூற்றுக்கு 33, அதாவது ரூ. 5,093,735 பெறுமதியான செலவினத்திற்குரிய சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு இல்லை.

(iv) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு ஆரம்பிக்க வேண்டியது அச் சொத்தை பயன்பாட்டிற்கு கொள்வதை ஆரம்பிக்கப்பட்டதுடன் என்றாலும் அதற்கு முரணாக, அதிகார சபையினால் 2022 ஆம் ஆண்டு ரூ. 12,550,592 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட வித்துக்களை சுத்தம் செய்யும் இயந்திரம் ஒன்றை 2023 ஆம் ஆண்டு

ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி வரை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்காமல் தொழிற்படுத்தாமல் வைத்திருந்தாலும், மீளாய்வு ஆண்டில் அவ் இயந்திரத்திற்காக ரூ. 1,021,239 பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

(உ) பிரதான அலுவலகம் மற்றும் வலய அலுவலகங்கள் 07 இற்கு உரிய 366 வழக்குகள் தொடர்பாக இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 100 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அதிகார சபைக்கு எதிரான வழக்குகள் 23 இற்காக சார்ந்த பொறுப்பாக ரூ. 56,696,667 ஐ இனங்கண்டு அப் பெறுமதியை ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தி இருந்தாலும், இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் தேவையான விதத்தில் மானியங்களை இனங்காண்பதற்கு ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 14 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகார சபையினால் தொடர்புபட்ட தரப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட ஊதியத் தொகை மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பாக நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும் எனினும், அதிகார சபையின் பிரதான முகாமைத்துவ பதவியணியின் அத்தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டோ அல்லது தொடர்புபட்ட தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பது தொடர்பாகவோ நிதிக் கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

மகாவலி ஒருங்கிணைந்த செயற்திட்டம், வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகத்தை – பி வலயத்தின் கீழ் கொண்டு வருவதனை 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி முன்னெடுத்து இருந்ததுடன், அதன் கீழ் மகாவலி ஒருங்கிணைந்த செயற்திட்டத்தின் கூட்டுத் தொகை ரூ. 121,050,992 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் ரூ. 121,050,992 பெறுமதியான பொறுப்புக்கள் சாட்டப்பட்டு இருந்தன. 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதியாகும் போது இருப்புக்கு அதற்குரிய சீராக்கல்கள் முன்னெடுக்கப்பட்டு இருந்தாலும், இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 135 ஆம் பந்தியின் பிரகாரம் அதற்குரிய கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆண்டிற்குரிய வரவுகள் மற்றும் செலவுகள் இனங்காணப்பட்டு அட்டுறு அடிப்படையில் கணக்கிடுவதற்குப் பதிலாக கடந்த ஆண்டின் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மீண்டும் குறிப்பிட்டு நஷ்டத்திற்காக சீராக்கல்கள் முன்னெடுக்கப்பட்டு இருந்தன. அதற்கமைய, கடந்த ஆண்டின் நிதிச் செயலாற்றுகை கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்த ரூ. 490,550,000 பெறுமதியான நஷ்டத்திற்காக ரூ. 748,009,000 பெறுமதியான சீராக்கல்

முன்னெடுக்கபட்டு மீளாய்வு ஆண்டு தொடக்கத்தில் நஷ்டமானது ரூ. 1,238,559,000 ஆகும் விதமாக நூற்றுக்கு 152 இனால் அதிகரித்து மீண்டும் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(ஆ) ஒருங்கிணைந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் இயக்கல், செயற்பாடு ஆகியவற்றின் கீழ் காசுப் பாய்ச்சலாக குறிப்பிடப்பட வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவு ரூ. 83,774,749 ஆனது குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. காசுப் பாயச்சல் கூற்றிற்கு பொருத்தப்படக் கூடாத ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. 8,750,000 ஆனது முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழான காசுப் பாய்ச்சலாகவும், மீள் மதிப்பீட்டு ஒதுக்கின் ரூ. 2,151,000 அதிகரிப்பானது நிதி நடவடிக்கைகளினால் தோற்றுவிக்கப்பட்ட காசுப் பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டு இருந்தது. மேலும், காசுப் பாய்ச்சல் அற்ற ரூ. 8,779,000 பெறுமதியான வலயங்களுக்கு மத்தியில் சொத்துக்களை மாற்றுதல் மற்றும் நிறைவடையாத பணிகளுக்கு ரூ. 2,151,000 இன் குறைப்பானது காசுப் பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

(இ) அதிகார சபையின் சொத்துக்களை வேறு தரப்பினர்கள் பயன்படுத்துவதனால் பெறப்படுகின்ற வருமானங்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் 33 ஆவது பந்தியின் பிரகாரம் இனங்காணப்பட வேண்டும் எனினும், தம்புத்தேகம மற்றும் வலவ வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகங்கள் மூலம் செயற்படுத்தப்பட்ட கருங்கல் செயற்திட்டங்களுக்குரியதாக முறையே வர்த்தகர்கள் 14 பேர் மற்றும் 16 பேரிடம் இருந்து 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் போது அறவிடப்பட வேண்டிய காணி உபயோக கட்டணம் ரூ. 24,692,041 மற்றும் ரூ. 893,269,286 உம், இலங்கை உரக் கம்பனியிடம் இருந்து மற்றும் மகாவலி கால்நடை வர்த்தகக் கம்பனி ஆகியவற்றிடம் இருந்து 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் போது கிடைக்கப் பெற வேண்டிய தொகை முறையே ரூ. 2,352,000 மற்றும் ரூ. 26,100,000 பெறுமதியான வரி வருமானங்களும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் செயற்திட்டம் மூலம் ரூ. 671,503,748 உம், மொரகஹகந்த செயற்திட்டம் மூலம் ரூ. 536,539,275 உம், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை குறைப்பதற்கான செயற்திட்டம் முலம் ரூ. 325,457,540 பெறுமதியான சொத்துக்கள் அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்று இருந்தாலும் அச் சொத்துக்களில் மீளாய்வு ஆண்டாகும் போது முறையே ரூ. 589,325,677 உம், ரூ. 466,896,356 உம் மற்றும் ரூ. 78,348,847 பெறுமதியான சொத்துக்களும் மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டு இருந்தன. அதற்கமைய கூட்டுத் தொகை ரூ. 398,929,683 ஆன சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.

(உ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் 49 ஆம் பந்திக்கு அமைய மூலதனம் மற்றும் வருவாய் ஏற்பாடுகள் மற்றும் சொத்து ஏற்பாடுகள் கிடைக்கப் பெற்றதும் வருவாயாக இனங்காணப்பட வேண்டும் எனிலும், அதற்கமைய ஆவன செய்யாமையினால் அதிகார சபைக்கு வெளிநாட்டு செயற்திட்டங்கள் 03 இன் மூலம்

கிடைக்கப் பெற்ற சொத்துக்களுக்குரிய பரிவர்த்தனை செய்யப்படாத கொடுக்கல் வாங்கல் பெறுமதியானது ஆயுள் காலத்திற்கு ஏற்ப தவணை நீடிப்பு செய்யப்பட்டு, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது தவணை நீடிப்பு செய்யப்பட்ட வருமானம் ரூ. 83,565,000 மற்றும் தொடர்ந்து வருவாயாக இனங்காணப்பட வேண்டிய ரூ. 39,095,160,211 ஆனது செலுத்தப்பட வேண்டிய இருப்பின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இதற்கு மேலதிகமாக திறைசேரியில் இருந்து அதிகார சபைக்குக் கிடைக்கப் பெற்ற மூலதன ஏற்பாடுகளுக்கு உரியதாக ரூ. 3,204,892,000 ஆன மீளாய்வு ஆண்டில் தவணை நீடிப்பு செய்யப்பட்ட வருமானம் மற்றும் தொடர்ந்து வருமானமாக இனங்காணப்பட வேண்டிய திரள் நிதியத்தின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்த ரூ. 70,823,574 ஆனது நியமத்திற்கு ஏற்ப கணக்கிடுவதற்கு ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை.

(எ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 13 இன் 20 ஆம் பந்திக்கு அமைய முதலீட்டுச் ஆதனமாக இனங்காணப்பட வேண்டிய அதிகார சபைக்குச் சொந்தமான குத்தகை வாடகை ஈட்டுவதற்காக கையுதிர்ப்பு செய்யப்பட்ட 6534 ஹெக்டயர் காணியை மதிப்பிட்டு, நியமத்தின் 27 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஏ) 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது பிரதான அலுவலகத்தின் நிதிக் கூற்றிற்கு அமைய கடனாளிகள் மற்றும் பண இருப்புன் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்த மகாவலி சவிய மற்றும் மொரகஹகந்த அத்வெல கடன் முன்மொழிவுத் திட்டங்களின் இருப்புகள் முறையே ரூ. 80,797,751 மற்றும் ரூ. 28,561,609 ஆக இருந்ததுடன், வங்கியிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தலுக்கு அமைய இதற்குரிய இருப்புகள் முறையே ரூ. 81,936,909 மற்றும் ரூ. 29,493,597 ஆக காணப்பட்டன. அதற்கமைய இருப்புகளை உறுதிப்படுத்துதல் மற்றும் கணக்கு இருப்புகளுக்கு இடையில் முறையே ரூ. 1,139,158 மற்றும் ரூ. 931, 988 பெறுமதியான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஐ) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான நூற்றுக்கு 99 பங்குகளின் உரித்துரிமை காணப்படுகின்ற மகாவலி ஆலோசனைகள் சேவை பணிப்பகம் (தனியார்) நிறுவனமானது விவசாய, கிராமிய, பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீர்வாழ் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டு இருந்தது. அவ்வாறாயினும், இதற்குரிய ரூ. 63,850 பெறுமதியான 6385 பங்குகளுக்கான முதலீடு 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு இலங்கை மகாவலி அதிகார சபையின் நிதிக் கூற்றுகளில் மேலும் குறிப்பிடப்பட்டு இருந்ததுடன், அம் முதலீட்டு ஒப்படைப்பிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு இருக்கவில்லை.

(ஒ) பின்வரும் விடயங்களுக்குரிய கூட்டுத் தொகை ரூ. 44,770,945 ஆன செலுத்தப்பட வேண்டிய இருப்புகள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை.

| | விபரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| (i) | மகாவலி வலயங்கள் 03 இல் முன்னெடுக்கப்பட்ட கட்டுமானங்களுக்காக அரச நிறுவனங்கள் 02 இற்காக செலுத்த வேண்டிய தொகை | 22,819,672 |
| (ii) | திகன வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகத்திற்காக கையகப்படுத்தப்பட்ட 126.23 ஏக்கர் காணிக்காக 2018 ஆண்டு நஷ்டயீடு செலுத்திய பின்னர் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு செலுத்த வேண்டிய நிலுவை வட்டி மற்றும் தேசிய இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வரித் தொகை | 18,258,685 |
| (iii) | 2022 ஆம் ஆண்டிற்குரிய 2023 ஆம் ஆண்டு செலுத்தப்பட்டு இருந்த சி வலயத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தின் மீள் திருத்தச் செலவுகள் மற்றும் இரக்கிந்த வித்துப் பண்ணையின் 2022/23 பெரும் போகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் கூட்டுத் தொகை | 3,692,588 |
| | | **44,770,945** |

(ஓ) வலவ வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகத்தின் ரூ. 79,270,211 ஆன நிலையான வைப்பிற்காக 2022 ஆம் ஆண்டிற்குரிய வட்டி ரூ. 2,080,669 ஆனது கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஔ) பின்வருமாறும் விடயங்கள் காரணமாக மீளாய்வு ஆண்டின் நட்டமானது ரூ. 12,549,542 இனால் அதிகமாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

| | விபரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| (i) | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் 63 ஆம் பந்தியின் பிரகாரம் சேவைக் காலம் 01 தொடக்கம் 05 வரையான மகாவலி பாதுகாப்புப் படையணியின் ஊழியர்கள் 103 பேரிற்கு பணிக்கொடைக்காக ஒதுக்கீடுகள் மேள்கொள்ளப்படாமை | (6,338,112) |
| (ii) | 2019 ஆம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு மீள் மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. 34,750,000 பெறுமதியான வாகனங்கள் 4 இற்கு ரூ. 41,794,209 ஆக குறிப்பிட்டுள்ள காரணத்தால் மீளாய்வு ஆண்டின் பெறுமானத் தேய்வு அதிகமாக குறிப்பிடப்பட்டு இருந்தமை | 1,408,862 |
| (iii) | அதிகார சபையின் கட்டிடங்களானது பெறுமானத் தேய்வு கொள்கைக்கு அமைய பெறுமதியில் நூற்றுக்கு 2.5 ஆனது | 15,477,815 |

வருடாந்தம் பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும், பிரதான அலுவலகத்திற்குச் சொந்தமான செலவினம் ரூ. 619,112,600 பெறுமதியான கட்டிடங்கள் நூற்றுக்கு 5 வீதம் பெறுமானத் தேய்வு மேற்கொண்ட காரணத்தால் கட்டிடங்களின் பெறுமானத் தேய்வு அதிகமாக குறிப்பிடப்பட்டு உள்ளமை.

| | | |
|---|---|---|
| (iv) | அதிகார சபையின் பெறுமானத் தேய்வு கொள்கைக்கு அமைய நூற்றுக்கு 15 ஆன பெறுமானத் தேய்வு வீதம் உரியதாகக் காணப்படுகின்ற ஆதனம், பொறி ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய பொருட்கள் 14 ஆனது நூற்றுக்கு 20 ஆன பெறுமானத் தேய்வு வீதம் உரியதான வாகனங்களின் கீழ் குறிப்பிட்டுள்ள காரணத்தால் 04 பிரிவுகளுக்குச் சொந்தமான வாகனங்களின் பெறுமானத் தேய்வு அதிகமாக குறிப்பிடப்பட்டு உள்ளமை | 3,249,977 |
| (v) | கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கீடுகள் ஒதுக்காமை | (1,249,000) |
| | | **12,549,542** |

(க) முறையான அங்கீகாரம் இன்றி திகன வதிவட வணிக முகாமைத்துவ அலுவலகத்திற்குச் சொந்தமான நிலுவை வரி வருமானம் ரூ. 46,478,749 ஆனது முன்னைய ஆண்டு சரி செய்யப்பட்ட கணக்கின் ஊடாக மற்றும் சி வலயத்தின் நிலுவை வரி வருமானம் ரூ. 29,740,601 பெறுமதுயான காணி உபயோக கட்டணமானது வருமானக் கணக்கின் மூலம் பதிவழிக்கப்பட்டு இருந்தது.

### 1.2.4 கணக்காய்விற்கு சாட்சியங்கள் இல்லாமை

(அ) ஒருங்கிணைந்த நிதிக் கூற்றிற்கு அமைய 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு 05 ஆண்டுகளைத் தாண்டிய செலுத்தப்பட வேண்டிய இருப்புகளின் கூட்டுத் தொகை ரூ. 161,080,000 ஆக உள்ளதுடன், பிரதான அலுவலகம் மற்றும் வலய அலுவலக புத்தகங்களில் 05 ஆண்டுகளைத் தாண்டிய இருப்புகளின் கூட்டுத் தொகை ரூ. 173,520,378 ஆகியமையால் ரூ. 12,440,378 இன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. செலுத்தப்பட வேண்டிய மொத்த இருப்புகளின் கூட்டுத் தொகையில் நூற்றுக்கு 98.6 ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூ, 39,231,461,000 ஆன அதிகார சபையின் பிரதான அலுவலகத்தின் பல்வேறு கடன் வழங்குநர் இருப்புக்கான அட்டவணை ஒன்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) பிரதான அலுவலக நிதிக் கூற்றுகளில் நடைமுறைக் கணக்கு இருப்பின் கீழ் 3001 நிதியக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பல வருட காலமாக இருந்து வருகின்ற கூட்டுத் தொகை ரூ. 554,135,228 ஆன பற்று இருப்பு மற்றும் கூட்டுத் தொகை ரூ.

509,098,933 ஆன வரவு இருப்புகளை உறுதி செய்து கொண்டு உரிய கணக்கீட்டுப் சீராக்கல்களை முன்னெடுப்பதற்கு ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை.

(இ) அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் வரை/ மகாவலி கால்நடை வர்த்தகக் கம்பனியின் முதலீடு ரூ. 10,000,000 எனக் குறிப்பிடப்பட்டு இருந்ததுடன், இம்முதலீட்டுக்கு உரியதாக பங்குச் சான்றுகள், பிரதிப் பயன்கள் தீர்மானிக்கப்பட்ட விதம் மற்றும் அது தொடர்பாக பணிப்பாளர் குழாம் மற்றும் அமைச்சரவைத் தீர்மானம் ஆகியவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காத காரணத்தால் அம் முதலீட்டுத் தீர்மானத்தின் ஏற்புடைமை மற்றும் நிலைபெறு தன்மைமைய உறுதி செய்வதற்கு முடியாமல் போயுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்கியதாக என்னால் கணக்காய்வு முன்னெடுக்கப்பட்டது. இக்கணக்காய்வு நியமத்தின் கீழான எனது பொறுப்பு, இவ் அறிக்கையின் நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் தெளிவுபடுத்தப்பட்டு உள்ளது. எனது முனைப்பழியுள்ள அப்பிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்றை வழங்கும் நோக்குடன் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் பொருண்மையானது மற்றும் பொருத்தமானது என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 குழுமத்தின் 2022 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய விபரங்கள்

---

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கி உள்ள எனினும், நிதிக் கூற்று மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் மூலம் கருதப்படுகின்றது. இவ் ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக் கூற்று தொடர்பான எனது கருத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாது என்பதுடன், நான் அது தொடர்பாக எவ்விதத்திலும் உறுதியளிக்கவோ கருத்து தெரிவிக்கவோ மாட்டேன்.

நிதிக் கூற்று தொடர்பான எனது கணக்காய்விற்கு உரியதாக, எனது பொறுப்பாக இருப்பது யாதெனில் மேற்குறிப்பிட்ட இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள் பெற்றுக் கொள்ள முடியுமான போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுடனோ அல்லது கணக்காய்வின் போதோ வேறு விதத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவிற்கு அமைய பொருண்மையான விதத்தில் பொருத்தம் அற்றதா என்று கருத்தில் கொள்வதாகும்.

அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, அதில் பொருண்மையான அளவு பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளது என நான் ஊகித்தால் பிழை திருத்தம் செய்வதற்காக நிர்வகிக்கின்ற தரப்பினருக்கு அவ்விடயம் தொடர்பாடல் செய்யப்படல்

வேண்டும். மேலும் பிழை திருத்தம் செய்யப்படாமல் பிழையாக குறிப்பிடப்பட்டு இருப்பின் அவை அரசியலமைப்பு யாப்பின் 154 (6) ஆம் உறுப்புரைக்கு அமைய என்னால் காலப்போக்கில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வாகிக்கின்ற தரப்புகளின் பொறுப்புக்கள்.

---

இந்நிதிக் கூற்றானது இலங்கைப் பொதுத் துறைகளின் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்கியதாக தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் முன்வைத்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தேவைப்படுகின்ற உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகார சபையைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதுடன், முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு எண்ணுவதாயின் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத வேளைகளில் தொழிற்பாடுகளை இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பட்சத்தைத் தவிர தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் அடிப்படையின் கீழ் கணக்கு வைத்தல் மற்றும் அதிகார சபையை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகார சபையின் நிதிகளை ஆவணமாக்கும் செயன்முறைகள் தொடர்பான பொறுப்பானது நிர்வாகிக்கும் தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டில் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) உப உறுப்புரைக்கு அமைய அதிகார சபையின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயன்ற வகையில் சுய வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்து உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களைப் பராமரித்து வர வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்.

---

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றைப் பெற்றுக் கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்பொழுதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகமோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால்

மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்களில் ஏற்படுகின்ற தாக்கங்களில் தங்கியுள்ளன.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புரை மற்றும் தொழில்சார் சந்தேக கண்ணோட்டத்துடன் முன்னெடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அப்பிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்துக்களை இனங்காணுதல் மற்றும் விலை மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படும். பிழையாக குறிப்படுவதால் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, பிழையான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டைத் தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதி தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமலாயினும்,, சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக நிர்வாகம் தொடர்பாக பரிந்துணர்வு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் முறைமைகளின் பொருத்தமுடைமை, கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக அதிகார சபையின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தும் சீராக்கல் தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதாக நான் அனுமானிப்பதாயின் நிதிக் கூற்றுக்களுக்கு அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனத்தை ஆற்றுப்படுத்த வேண்டும் என்பதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையானதாக இல்லை எனில் எனது அபிப்பிராயத்தை திரிவுபடுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பானது முடிவடையக் கூடும்.

- நீதிக் கூற்றுக்களின் கட்டமைப்புக்கள் மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாக இருந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டு உள்ளமை மற்றும்

வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுகளின் ஒட்டு மொத்த முன்வைப்பு மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒருங்கிணைந்த நிதிக் கூற்று தொடர்பான அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிப்பதற்காக குழுமத்தில் உள்ள நிறுவனம் அல்லது வியாபாரச் செயற்பாடுகளின் நிதி சார் தகவல்கள் தொடர்பாக போதுமான அளவு கணக்காய்வு சாட்சியங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. குழுமத்தின் கணக்காய்வின் செயற்பாடு, கண்காணிப்பு மற்றும் செயலாற்றுகைக்கு நான் பொறுப்புக் கூற வேண்டும். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு நான் முழுமையாக பொறுப்புக் கூற வேண்டும்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக நிர்வாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகத் தரப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டுகின்றேன்.

**2. ஏனைய சட்ட மற்றும் பிரமாணத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.**

-----------------------------------------------------------------------------------------------------

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (அ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்கள் மற்றும் விளக்கங்கள் எனக்குக் கிடைக்கப் பெறாததுடன், எனது பரிசீலனையின் மூலம் விளங்குகின்ற விதத்தில் உரிய நிதி அறிக்கைகளை குழுமமானது பேணி வரவில்லை.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய குழுமத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றானது கடந்த ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய எனது அறிக்கையில் முனைப்பளியுள்ள அபிப்பிராயம் பகுதியில் 1.2.1 (அ), (இ) ii, 1,2,3 (ஈ), (உ), மற்றும் (ஏ) பந்திகளில் குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்களைத் தவிர கடந்த ஆண்டு என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளுக்கு அமைய மற்றும் பொருண்மையான காரணிகளுக்கு மட்டுப்படுத்துவதன் மூலம், பின்வருவனவற்றை பிரகடனப்படுத்தும் அளவிற்கு எதுவும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (இ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய அதிகார சபையின் கட்டுப்பாட்டுச் சபையில் எவரேனும் ஒரு உறுப்பினரிற்கு அதிகார சபை சம்பந்தப்பட்டு

ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாக அல்லது வேறு விதமாக பொதுவான வியாபார நிலைமையைத் தாண்டி தொடர்பு உள்ளதாக.

.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஊ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர வேறு ஏதேனும் உரிய எழுத்து மூல சட்டம் ஒன்றிற்கோ அல்லது அதிகார சபையின் கட்டுப்பாட்டுச் சபையின் மூலம் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஆணைகளுக்கு இணங்காத விதத்தில் செயற்பட்டுள்ளதாக.

| | சட்ட திட்டங்கள்/ ஆணைக்கு ஆற்றுப்படுத்துல் | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | 1981 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க காணி அபிவிருத்தி (திருத்தம்) சட்டத்தின் 72 ஆம் உறுப்புரை | அனுமதிப் பத்திரம் வழங்கும் போது காணிகளை அளவிட்டு திட்டம் தயாரித்தோ அல்லது உகந்த காணியைத் தெரிவு செய்வதை முன்னெடுத்து அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும் எனினும், 2014 ஆம் ஆண்டு சி வலயத்தின் கிராந்துரு கோட்டை வட்டார அலுவலகத்தில் இடம்பெற்ற காணிக் கச்சேரியில் தெரிவு செய்யப்பட்ட நபர்கள் 99 பேரிற்கு மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளை மீறி மற்றும் காணிகளை காண்பிக்காமல் காணி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு இருந்தது. |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண விதிக் கோவையின் நிதிப் பிரமாணம் 371 (இ) | கந்தகாடு மற்றும் கிராந்துரு கோட்டை ஆகியவற்றில் மின் வேலிகளை நிர்மாணித்தல் மற்றும் எச் வலயத்தில் மீன் மத்திய நிலையம் மற்றும் குட்டைகளை அமைப்பதற்காக பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் விசேட செயற்திட்டங்கள்) இற்கு கூட்டுத் தொகை ரூ. 24,239,319 ஆன முற்பணத் தொகையானது 2021 ஆம் ஆண்டில் மூன்று சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டு இருந்தாலும், இம் முற்பணமானது கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதியாகும் போதும் சுமார் 02 வருட காலமாக முடிக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், அதற்குரிய பணிகளும் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் 02 ஆம் திகதிய பீ.இ.டி/12 ஆம் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தி மற்றும் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதிய 2021/01 ஆம் இலக்க அரச வியாபார சுற்றறிக்கையின் மூலம் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுக் கையேடு<br>3.5 ஆம் பந்தி | அமைச்சரவையின் அனுமதி இன்றி வெளி நிறுவனம் ஒன்றிற்கு 2020 ஆம் ஆண்டில் இருந்து 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் விடுவிக்கப்பட்டு இருந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் 45 பேரிற்காக வழங்கப்பட்டு இருந்த சம்பளம், ஊழியர் சேமலாப நிதியங்கள் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றிற்கான பங்களிப்புத் தொகை மற்றும் மேலதிக நேர கொடுப்பனவாக முறையே 34,867,475 ரூபாய், 5,440,787 ரூபாய், மற்றும் 15,851,797 ரூபாயில் 2023 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதியாகும் போது 1,495,003 ரூபாய் மாத்திரமே மீள் நிரப்பப்பட்டு இருந்தது. |

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய அதிகார சபையின் அதிகாரங்கள், பணி வினைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத விதத்தில் செயற்பட்டுள்ளதாக.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஏ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர அதிகார சபையின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமானதாக கால வரையறைகளுக்குள் உரிய சட்ட திட்டங்களுக்கு இணங்கியதாக கொள்முதல் செய்து பயன்படுத்தி இருக்கவில்லை என,

(அ) பகமூண பேருந்து தரிப்பிடத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தமானது கொள்முதல் செயல்முறைகளை மீறி பொறியியல் செயல்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணிப்பகத்திற்கு வழங்குவதற்கு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதிய அமைநி/21/1396/317/039 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. பகமூண பேரூந்து தரிப்பிடத்தின் கட்டுமானப் பணிகளானது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டும் எனிலும், கணக்காய்வு திகதியான 2023 ஆம் அண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியாகும் போதும் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்படாமல் கை விடப்பட்டு இருந்தது. பணிகளுக்கு முன்பான முற்பணமாக செலுத்தப்பட்டு இருந்த மொத்தத் தொகையான 13 மில்லியன் ரூபாயையும் அதிகார சபையினால் அறவிட முடியாமல் இருந்ததுடன், 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியாகும் போது செலுத்தப்பட்டு இருந்த ரூ. 6,238,208 ஆன சான்றுப்படுத்தப்பட்ட பணிப் பெறுமதி உட்பட இவ் ஒப்பந்தத்திற்காக ரூ. 19,238,208 செலுத்தப்பட்டு இருந்தது.

(ஆ) மகா ஓயா வலயத்தில் உத்தியோகபூர்வ இல்லம் ஒன்றை அமைப்பதற்காக 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி ரூ. 4,843,183 இற்கு ஒப்பந்தம் ஒன்று வழங்கப்பட்டு இருந்ததுடன், உடன்படிக்கைக்கு அமைய 2018 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதி பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும் எனிலும், கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதியாகும் போதும் ஒப்பந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமல் உரிய கட்டுமானப்

பணிகள் கை விடப்பட்டு இருந்தன. அதற்குரிய ரூ. 1,422,931 இயக்க முற்பணத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது ரத்கிந்த சுற்றுளா மாளிகையின் மீள் திருத்தப் பணிகளுக்குரிய ஒப்பந்தமும் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி ரூ. 12,107,000 தொகைக்கு மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரருக்கே வழங்கப்பட்டு இருந்தது. ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைய 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதியாகும் போது பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும் எனிலும், கணக்காய்வு திகதியான 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதியாகும் போதும் ஒப்பந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமல் உரிய கட்டுமானப் பணிகள் கை விடப்பட்டு இருந்தன. இவ் ஒப்பந்தத்திற்காக ஒப்பந்ததாரருக்கு ரூ. 3,447,508 தொகையானது இயக்க முற்பணமாக வழங்கப்பட்டு இருந்ததுடன், அத்தொகையையும் அறவிடுவதற்கு அதிகார சபையினால் முடியாமல் போயிருந்தது.

(இ) அதிகார சபையினால் தம்மன்னாவ வாவியை அண்டி பொருளாதார மத்திய நிலையம் ஒன்றை 6,514,819 ரூபாய்க்கு நிர்மாணிப்பதற்காக கொள்முதல் வழிகாட்டல்களை மீறி பொறியியல் செயல்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணிப்பகத்துடன் 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டு இருந்ததுடன், ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய கட்டுமானப் பணிகள் 60 நாட்களுக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் எனிலும், 2023 ஆம் அண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியாகும் போது உரிய ஒப்பந்தம் கை விடப்பட்டு இருந்ததுடன், கணக்காய்வு திகதியான 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியாகும் போது அதற்காக செலுத்தப்பட்ட ரூ. 2,062,201 பெறுமதியான இயக்க முற்பணம் வழங்கப்பட்டு சுமார் 02 வருட காலம் சென்றிருந்தாலும் அதனை மீண்டும் அறவிடுவதற்கோ அல்லது அவ் ஒப்பந்தம் தொடர்பான எதிர்வரும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கோ ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) மத்திய சுற்றாடல் அதிகார சபையின், மத்திய மாகாண அலுவலகமாக பயன்படுத்தப்பட்டு வந்த பொல்கொல்ல அணைக்கு அருகில் அமைந்துள்ள கட்டிடத்தினை மகாவலி அதிகார சபைக்கு கையகப்படுத்தி மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குச் சொந்தமான குண்டசாலை வராபிடிய பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் புதிய கட்டிடம் ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்காக மகாவலி அதிகார சபையினால் ரூ, 32,096,839 பெறுமதியான ஒப்பந்தம் ஒன்று பொறியியல் செயல்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணிப்பகத்துடன் எவ்வித உடன்படிக்கைகளும் இன்றி வழங்கப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும், மானியங்களின் போதாமையினால் கணக்காய்வு திகதியான 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியாகும் போது இணங்கிய விதத்தில் 04 மாடிகளைக் கொண்ட கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், கீழ் மாடி மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டு இருந்தது.

## 2.3 ஏனைய விடயங்கள்

### 2.3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

(அ) அதிகார சபையின் வளங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வர்த்தக (தனி) நிறுவன செயற்திட்ட குழுவின் மூலம் தெரிவு செய்யப்பட்ட

வெளி முதலீட்டாளர் ஒருவருடன் அரச தனியார் கூட்டு வியாபாரமாக மீள் ஒழுங்கமைப்பு செய்வதற்காக 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதிய அமைநி/18/2083/803/031 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டு கணக்காய்வு திகதியாகும் போது 04 ஆண்டுகள் கடந்த நிலைமையிலும் அரச தனியார் கூட்டு வியாபாரத்தை ஆரம்பிக்க முடியாமல் போயிருந்தது.

(ஆ) மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வர்த்தக (தனி) நிறுவனத்தை உபயோகித்து வந்த இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான தெமடகொடை, பேஸ்லயின் வீதியில் அமைந்துள்ள 0.2139 ஹெக்டயர் காணி மற்றும் கட்டிடம் என்பன 2020 ஆம் ஆண்டு மீண்டும் மகாவலி அதிகார சபைக்குக் கையகப்படுத்தப்பட்டு இருந்தாலும், அச் சொத்துக்களை உரிய முறையில் ஒப்படைப்பதற்கு மற்றும் பெற்றுக் கொள்வதற்கு அந்நிறுவனம் மற்றும் அதிகார சபை என்பன ஆவன செய்திருக்கவில்லை. இக் காணியானது 2018 ஆம் ஆண்டு 296 மில்லியன் ரூபாய்க்கும், கட்டிடமானது 619 மில்லியன் ரூபாய்க்கும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் விலை மதிப்பீடு செய்யப்பட்டு இருந்தாலும், 2023 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி கணக்காய்வினால் வளாகத்தினை பௌதீக ரீதியாக பரிசீலித்த போது காணியில் அமைந்திருந்த கட்டிடத்தை மீண்டும் பயன்படுத்த முடியாதவாறு சீர்குலைந்து இருந்ததுடன் கட்டிடத்தினுள் எவ்விதமான தளபாடங்களோ வீட்டுப் பொருட்களோ இருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

(இ) அதிகார சபைக்குச் சொந்தமான இணை நிறுவனங்கள் இரண்டான மகாவலி (வென்சர் கெபிடல்) துணிகர மூலதன (தனி) நிறுவனமானது 2012 ஆம் ஆண்டிலும், இயற்கை வளங்கள் முகாமைத்துவ (தனி) நிறுவனமானது 2019 ஆம் ஆண்டிலும் தீர்ப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு இருந்தாலும், மீளாய்வு ஆண்டின் இறுதியாகும் போதும் தீர்ப்பனவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) பணிப்பாளர் நாயகத்தின் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதிய MASL/DG/ பொது/01 ஆம் இலக்க கடிதம் மற்றும் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 01 ஆம் திகதிய DG/3/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மகாவலி வலயங்களில் மற்றும் செயற்திட்டங்களின் அத்தியாவசியமான மற்றும் காலத்தின் தேவைக்கேற்ற தேவைப்பாடுகள் அதாவது, நீர்த்தேக்க முறைமைகளை பராமரித்தல், பண்ணைகளின் ஊழியத் தேவைப்பாடு, துப்புறவு நடவடிக்கைகள், முகாம்களின் பராமரிப்புகள் மற்றும் 5,000,000 ரூபாய் பெறுமதி வரையிலான சிறு புணர்நிர்மாணங்களுக்குரிய பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக உழவர் அமைப்புக்கள் மட்டத்தில் தொழிலாளர்களை இணைத்துக் கொள்ள வேண்டும் எனிலும், மீளாய்வு ஆண்டில் சி வலயத்தினால் முன்னெடுக்கப்பட்டு இருந்த தாபரிப்புப் பணிகளுக்குரியதான பெறுமதிகளின் கூட்டுத் தொகை ரூ. 46,045,718 ஆன சிறு அளவிலான ஒப்பந்தங்கள் (ஊழிய ஒப்பந்தங்கள்) 59 மற்றும் கூட்டுத் தொகை ரூ. 9,281,309 ஆன கட்டுமான ஒப்பந்தங்கள் 05 என்பன தனியார் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டு இருந்தன.

(உ) அதிகார சபைக்குச் சொந்தமான 43 களஞ்சியங்கள் 2009 ஆம் ஆண்டில் இருந்து நெல் சந்தைப்படுத்தல் சபையினால் பயன்படுத்தப்பட்டாலும், அக் களஞ்சியங்களுக்காக எவ்வித வாடகைத் தொகையும் மீளாய்வு ஆண்டு இறுதி வரையிலும் அறவிடப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) அதிகார சபை அறவிடுகின்ற நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணம் அறவிடுவதற்காக, இலங்கை மின்சார சபை, நீர் மின் உற்பத்தி நிலைய உரிமையாளர் மற்றும் மகாவலி அதிகார சபை உள்ளடங்கலாக முறையான முத்தரப்பு உடன்படிக்கைக்கு எட்டாமையினால் 12 முதலீட்டாளர்களிடம் இருந்து 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக 242,149,483 ரூபாய் அறவிடப்பட முடியாமல் இருந்தது. அதற்கு மேலதிகமாக மகாவலி விசேட அதிகார பிரதேசங்களில் மின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 65 சிறு நீர் மின் உற்பத்தி நிலையங்களின் ஒழுங்கு விதி மற்றும் முகாமைத்துவத்திற்காக கட்டணங்கள் அறவிடுவதற்கு ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை.

(எ) வலவ வலயத்தில் கருங்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் 16 பேரிடம் இருந்து 2009 – 2020 ஆம் காலப் பகுதிக்குரியதாக அறவிடப்பட வேண்டிய காணி உபயோக கட்டணமான ரூ. 1,038,026,047 ஆக உள்ளதுடன், அதில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ரூ. 144,756,661 மாத்திரமே அறவிடப்பட்டு இருந்தது. 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதிய அமைறி/20/1852/317/012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட அறவிடப்பட வேண்டிய ரூ. 893,269,386 ஆன காணி உபயோக கட்டணத்தில் நூற்றுக்கு 75 அதாவது, ரூ. 669,952,040 ஐ பதிவழிப்பதற்கும் எஞ்சிய தொகையான ரூ. 223,317,346 ஐ 36 தவணைகளில் அறவிடுவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டு இருந்தது. மேலும், அவ்வியாபாரிகளுக்கு மத்தியில் 05 வியாபாரிகளினால் இணங்கிய விதமாக அத்தவணைக் கட்டணத்தில் ரூ. 157,004,041 ஐ செலுத்துவதற்கு புறக்கணிக்கப்பட்டு இருந்தது.

(ஏ) அதிகார சபையினால் நிர்வாகம் மற்றும் தாபரிக்கப்பட்டு வருகின்ற 06 வலயங்களின் 9,237.9 கி.மீ. நீளமான கால்வாயானது ரூ. 74,989,140,000 இற்கு விலை மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டு இருந்தாலும், அக் கால்வாயின் விலை மதிப்பீடானது தொழில் தகைமையுள்ள ஏற்றுக் கொள்ளப்பட்ட விலை மதிப்பீட்டாளர் அல்லது விலை மதிப்பீட்டுக் குழு ஒன்றினால் முன்னெடுக்கப்பட்டு இருக்காத காரணத்தால் விலை மதிப்பீட்டுப் பெறுமதியின் ஏற்றுக் கொள்ளும் தன்மை சவாலுக்கு உட்படுத்தப்பட்டு இருந்தது.

### 2.3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

(அ) (i) உதவிப் பணிப்பாளர் (காணி) இன் 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதிய DL/01/01 ஆம் இலக்க மகாவலி அதிகார பிரதேச காணிகளில் இருந்து நீக்கப்படுகின்ற கனிமப் பொருட்களுக்காக கட்டணங்கள் அறவிடுவது தொடர்பான கடிதத்தின் பிரகாரம் உத்தரவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அகழ்வு அளவிற்கு அமைய காணி உபயோகக் கட்டணம் அறவிடப்பட வேண்டும் எனிலும், அதிகார சபையின் சி வலயத்தில் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒரு மாத காலத்திற்கான அகழ்வு அளவிற்குரிய காணி உபயோக கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டு மணல் அகழ்விற்காக அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. இதன் காரணமாக மணல் அகழ்விற்கான 386 உத்தரவுப் பத்திரங்களுக்குரிய எஞ்சிய காலத்திற்காக அறவிடப்பட வேண்டிய காணி உபயோக கட்டணம் ரூ. 278,685,665 ஐ அறவிடுவதற்கு முடியாமல் இருந்துள்ளது. எவ்வாறாயினும், அதிகார சபைக்கு ரூ. 278,685,665 பெறுமதியான வருமானத்தை இல்லாமல் செய்தமை தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் யார் என்பது தொடர்பாகவும், அகழ்வு உத்தரவுப் பத்திரம் வழங்கும்

போது பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்ட மற்றும் பின்னர் அது தொடர்பாக உரிய முறையில் மேற்பார்வையை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்கள் யார் என்பது தொடர்பாக பரிசீலனை ஒன்றை மேற்கொண்டு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு அதிகார சபையினால் ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ii) இவ்வாறான சிக்கல்கள் எழாமல் இருப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் கீழ் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற பொது வியாபாரம் தொடர்பான செயற் குழு ஒன்று கூடலில் மகாவலி கஙகையின் இரு புறமும் 60 மீட்டர் அளவான ஒதுக்கு எல்லைகளை அடையாளமிடுவதற்கு இணக்கத்திற்கு வந்துள்ளதுடன், அதற்காக 2018 ஆம் ஆண்டு ரூ. 1,000,000 ஆனது 2019 ஆம் ஆண்டில் ரூ. 612,300 ஆகவும் கூட்டுத் தொகை ரூ. 1,612,300 தொகையை இலங்கை நில அளவைத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டு இருந்தாலும், கணக்காய்வு திகதியான 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதி வரையில் அளவீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு ஒதுக்கு எல்லைகள் அடையாளமிடப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை காணி முகாமைத்துவத்திற்கு அறிமுகப்படுத்துவதற்காக அதிகார சபையினால் 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ரூ. 6,973,405 செலவிட்டு காணி தகவல் முறைமை ஒன்று நிறுவப்பட்டு இருந்ததுடன், முறைமையை அமுல்படுத்துவதற்காக 60 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு ஆவன செய்யப்பட்டு இருந்தது. அவ்வாறாயினும், கணக்காய்வு திகதியான 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதியாகும் போதும் அத் தகவல் முறைமையானது உரிய முறையில் அமுல்படுத்தப்படாத காரணத்தால் அச் செலவானது தொழிற்பாடற்ற செலவாக மாறி இருந்தது.

(இ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருந்த தகவல்களுக்கு அமைய அதிகார சபைக்குச் சொந்தமான பி, சி, டி, ஜீ, எச், எல், ஈ, ஹுருளுவாவி, வலவ ஆகிய வலயங்களில் மற்றும் நீர்த்தேக்கங்கள் மற்றும் செயற்பாட்டுப் பிரிவின் கீழ் நிலவுகின்ற நீர்த்தேக்க ஒதுக்குகளில் 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03 ஆம் திகதியாகும் போது சட்ட விரோதமாக உடைமை கொள்ளப்பட்டுள்ள 2544 காணித் துண்டுகள் மற்றும் நபர்களின் எண்ணிக்கை 402 ஆகும். இச் சட்டவிரோத குடியிருப்பாளர்களை நீக்குவதற்காக இதனிடையில் வலய மட்டத்தில் 910 துண்டுகளுக்காக நிறுவன ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன், 145 துண்டுகளுக்காக சட்ட ரீதியான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு இருந்தது. பணிப்பாளர் (நீர்த்தேக்கங்கள் மற்றும் செயற்பாடுகள்) கீழ் நிலவுகின்ற நீர்த்தேக்க ஒதுக்குகளில் சட்ட விரோத குடியிருப்பாளர்கள் 150 பேரிற்காக நிறுவன ரீதியான நடவடிக்கைகளும், 185 பேரிற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. இதற்கமைய எஞ்சிய 1489 துண்டுகளில் 67 குடியிருப்பாளர்களை நீக்குவதற்காக கணக்காய்வு திகதியான 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதியாகும் போதும் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) மகாவலி குடியேற்றவாசிகளுக்கு கடன் வழங்கும் மறைமுக கடன் முன்மொழிவுத் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்காக திறைசேறியில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 50 மில்லியன் ரூபாயானது 2006 ஆம் ஆண்டில் லங்கா புத்திர அபிவிருத்தி வங்கிக்கு வழங்கப்பட்டு இருந்தது. லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி இரத்துச் செய்யப்பட்ட பின்னர் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு உரிய வைப்பு மாற்றப்பட்டுள்ளதுடன், கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியாகும் போதும் இப் பணமானது உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் வைப்பாக பேணப்பட்டு வந்துள்ளது. இதற்குரியதாக 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குக் கிடைக்கப் பெற்ற வட்டியானது 26.196 மில்லியன் ரூபாய் என அவ்வங்கியால் உறுதி செய்யப்பட்டு இருந்தது.

(உ) ரம்பகண் ஓயா வதிவிட வணிக முகாமைப் பிரதேசமான கல்வல யாய மகாவலி கிராமத்தில் வீதியை அமைப்பதற்காக மற்றும் வயற் காணிகளை பருமட்டாக்குவதற்காக அம்பாறை நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு 2013 – 2014 காலப் பகுதியில் 05 சந்தர்ப்பங்களில் 11 மில்லியன் ரூபாய் முற்பணம் வழங்கப்பட்டு இருந்தது. அம் முற்பணத் தொகையில் 8.1 மில்லியன் ரூபாய்த் தொகை 2019/ 2020 ஆம் ஆண்டுகளில் முடிக்கப்பட்டு இருந்ததுடன், 2.9 மில்லியன் ரூபாயானது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியாகும் போதும் முடிக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) அதிகார சபைக்குச் சொந்தமான நாற்று மேடைகள் 11 இல் 06 உம், மற்றும் பண்ணைகள் 21 இல் 13 உம் மீளாய்வு ஆண்டில் நட்டம் ஈட்டி இருந்ததுடன், அந் நட்டங்கள் முறையே ரூ. 27,429,000 மற்றும் ரூ. 72,452,000 உம் ஆகும்.

(எ) அதிகார சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்பாடின்றி பல பிரதேசங்களில் காணப்பட்ட போதும், 15 உத்தியோகத்தர்களுக்காக அவர்கள் தனிப்பட்ட ரீதியில் வாடகைக்குப் பெற்றுக் கொண்ட இல்லங்களுக்காக 2022 ஆம் ஆண்டில் இல்ல வாடகையாக ரூ. 3,098,129 செலுத்தப்பட்டு இருந்தது.

**2.3.3 அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளை கையுதிர்த்தல்.**

(அ) மட்டுப்படுத்தப்பட்ட வளங்களான காணிகள் மனித தேவைப்பாடுகளுக்கு அமைய உரிய ஒழுங்கு முறையில், முறையான விதத்தில் விவசாயம், குடியேற்றம், கைத்தொழில்கள் மற்றும் சுற்றுளா நடவடிக்கைகளைப் போன்றே சுற்றாடல் சமநிலைத் தன்மைக்காக திட்டம் மிக்கதாக மற்றும் விஞ்ஞான அடிப்படையில் உபயோகிக்க வேண்டும் எனிலும், அதிகார சபையினால் அதற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்றின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் 03 ஆம் பிரிவிற்கு அமைய காணி உபயோகத்திற்காக அடிப்படைக் கட்டமைப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருந்தாலும், 2011 ஆம் ஆண்டின் பின்னர் தற்போதைய காணி உபயோக தேவைப்பாடுகளுக்கு அமைய அக் கட்டமைப்புத் திட்டங்கள் இற்றைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக 704 முதலீட்டாளர்களுக்கு 7832 ஹெக்டயர் காணி வழங்கப்பட்டு இருந்தாலும், அதில் 2697

ஹெக்டயர், அதாவது வழங்கப்பட்ட அளவில் நூற்றுக்கு 34 ஆனது முழுமையாக அபிவிருத்தி இன்றி காணப்பட்டன.

(இ) நீண்ட கால குத்தகைக்கு விடப்பட்ட காணிகளில் உரித்துப் பத்திரம் வழங்கப்பட்ட காணிகள் தொடர்பாக 10 வலயங்களில் கணக்காய்வு மேற்கொண்டு தகவல்கள் கோரியமைக்கு அமைய 05 வலயங்களில் மாத்திரம் தகவல்கள் வழங்கப்பட்டு இருந்ததுடன், அவ்வாறு வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய நீண்ட கால குத்தகைக் காலமான 30 வருடங்கள் நிறைவடைந்த காணித் துண்டுகள் 237 இற்கு உரியதான காணியின் அளவு 635.8799 ஹெக்டயர் ஆகும். அந் நீண்ட கால குத்தகை முடிவடைந்த காணிகள் தொடர்பாக குத்தகையை மீண்டும் வழங்குவதா, இரத்துச் செய்வதா, காணியை மீண்டும் விலை மதிப்பீடு செய்வதா அல்லது மீண்டும் அதிகார சபைக்குக் கையகப்படுத்துவதா என்பது தொடர்பாக கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி வரையில் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) தேசிய உணவு உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு நிதி வசதிகளின் கீழ் முதலீட்டு வாய்ப்புக்களுக்காக காணிகளை வழங்குவதன் கீழ் 04 முதலீட்டாளர்களுக்கு ரம்பகண் ஓயா வலயத்தில் பொல்லேபெத்த பிரதேசத்தில் 1750 ஏக்கர் வழங்கப்பட்டு இருந்தது. அதில் ஒரு நிறுவனத்திற்கு சோளக பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்டு இருந்த 500 ஏக்கர்கள் அந்நிறுவனத்தினால் கை விடப்பட்டு இருந்ததுடன், இன்னுமொரு நிறுவனத்திற்காக விடுவிக்கப்பட்டு இருந்த 250 ஏக்கருக்காக 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி வரையிலும் வரி அங்கீகாரம் வழங்கப்பட்டோ அல்லது வரி அறவிடப்பட்டோ இருக்காததுடன், இணங்கிய விதத்தில் ரூ. 1,125,000 ஆன செயலாற்றுகை முறி ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை. சேனைப் பயிர்ச் செய்கைக்காக மூன்றாம் நிறுவனத்திற்கு 100 ஏக்கர்கள் வழங்கப்பட்டு இருந்ததுடன், 2020 ஆம் ஆண்டு டிசம்பரில் இருந்து கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி வரையிலும் நிலுவை வரி ரூ. 1,800,000 ஐ அறவிடுவதற்கு ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை. பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணிப்பகத்திற்கு 150 ஏக்கர் காணி வழங்கப்பட்டு இருந்ததுடன், அது முறையான விதத்தில் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு உடன்படிக்கை ஒன்றின் மூலம் வழங்கப்பட்டு இருக்கவில்லை.

(உ) பி வலயத்தில் தம்மின்ன வட்டாரத்தில் அளுத் வாவி அலகில் விவசாய செயற்திட்டங்களின் கீழ் தென்னைப் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்காக நிறுவனம் ஒன்றிற்கு நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் 100 ஏக்கர்கள் வழங்கப்பட்டு இருந்தன. அதில் இந்த 100 ஏக்கருக்குரியதாக அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் திகதியில் இருந்து 30 வருட காலத்திற்குரியதாக நீண்ட கால உத்தரவுப் பத்திரங்கள் மேற்குறிப்பிட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு இருந்ததுடன், குத்தகைக் காலமானது 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதியுடன் முடிவடைந்து இருந்தது. குத்தகைக் காலம் முடிவடைவற்கு முன்னர் தொடர்ந்து அதனை அந்நிறுவனத்திற்கு வழங்குவதற்கோ அல்லது வேறு விண்ணப்பதாரி ஒருவருக்கு வழங்குவதற்கோ அவசியமான தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை. பின்னர் 100 ஏக்கர்களுக்காக ஒரு

வருடத்திற்கு ரூ. 7,302 வீதம் 2013 ஆம் ஆண்டில் இருந்து 2017 ஆம் ஆண்டு வரையிலும், ஆண்டொன்றிற்கு ரூ. 8,764 வீதம் 2018 ஆம் ஆண்டில் இருந்து 2021 வரையில் கூட்டுத் தொகையாக ரூ. 80,330 தொகை உரிய நிறுவனத்திடம் இருந்து அறவிடப்பட்டு இருந்ததுடன், அதற்காக விலை மதிப்பீடு ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் வரித் தொகை அறவிடப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) நீண்ட கால குத்தகை அடிப்படையில் வலவ வலயத்தில் காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டு உள்ள முதலீட்டுச் செயற்திட்டங்கள் 03 இற்காக 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் போது நிலுவையாக இருந்த ரூ. 19,919,338 ஆன நிலுவை வரியை கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதியாகும் போதும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. அந்நிறுவனங்களில் 02 நிறுவனங்களானது உரிய காணியைக் குத்தகைக்குப் பெற்றுக் கொண்ட நோக்கத்திற்காக பயன்படுத்தி இருக்கவில்லை.

### 2.3.4 தொழிற்பாடற்ற அல்லது குறைப் பயன்பாட்டுச் சொத்துக்கள்

(அ) 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதிய 2181/25 ஆம் இலக்க அரச வர்த்தமானிப் பத்திரிகை மூலம் மகாவலி ஜீ வலயத்தை சேதன வலயமாக வர்த்தமானியிட்டு வலயத்தின் வெல்லேவல பிரதேசத்தில் 20,278,462 ரூபாய் செலவு செய்து கொம்போஸ்ட் உற்பத்தி அலகு ஒன்று மற்றும் 40 X 60 அடி கட்டிடங்கள் 02 என்பன 2021 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டு இருந்தன. மேலும் மீளாய்வு ஆண்டில் ரூ. 230,000 தொகை செலவு செய்து கொம்போஸ்ட் கலக்கும் இந்திரம் ஒன்று மற்றும் கொம்போஸ்ட் கொட்டும் இயந்திரம் ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டு இருந்தன. எவ்வாறாயினும், திட்டமிடப்பட்ட செயற்பாடு இதுரையில் செயற்படுத்தப்படாத காரணத்தால் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் தொழிற்பாடின்றி வைக்கப்பட்டு இருந்தன. இதற்கு மேலதிகமாக ரூ. 11,270,000 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட பாரிய மற்றும் சிறிய அளவிலான பல்நோக்கு துண்டாக்கல் இயந்திரங்கள் 23 ஆனது கொம்போஸ்ட் உற்பத்திச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் மாடுகளுக்கு வழங்கப்படுகின்ற புற்களை துண்டாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டு இருந்தது.

(ஆ) மகாவலி பி மற்றும் எல் வலயங்களில் பரவியுள்ள கொடும் சிறுநீரக நோய்க்குத் தீர்வாக தரம் வாய்ந்த நீர் விநியோகத்தை உறுதி செய்யும் நோக்குடன் மீள் சேர்க்கை நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் 30 ஆனது அதிகார சபையினால் ரூ. 80,000,000 செலவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு பொருத்தப்பட்டு இருந்தன. நிறுவப்பட்டு இருந்த 30 இயந்திரங்களில் பி மற்றும் எல் வலயங்களில் முறையே 09 இயந்திரங்கள் மற்றும் 04 இயந்திரங்கள் 2023 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆம் திகதியாகும் போதும் தொழிற்பாடற்ற நிலைமையில் காணப்பட்டன. பி வலயத்தில் இயந்திரங்களை நிறுவும் போது நிலையப் பரிசீலனை மற்றும் மதிப்பீடுகள் மேற்கொண்டு இடங்களைத் தெரிவு செய்யாத காரணத்தால் 05 சுத்திகரிப்பு இயந்திரங்கள் தொழிற்பாடற்றுக் காணப்பட்டதுடன், 04 இயந்திரங்கள் பொருத்திய பின்னர் இயக்காமல் இருந்துள்ளன.

### 2.3.5 செயற்திட்ட செயலாற்றுகை

(அ) மகாவலி பி வலயத்திற்குச் சொந்தமான கந்தகு பிரதேசத்தில் 3770 ஏக்கர் அளவான நிலப் பரப்பு விவசாயம் மற்றும் கால்நடை வள அபிவிருத்திச் செயற்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்காக அதிகார சபையினால் தெரிவு செய்யப்பட்டு இருந்தது. இச் செயற்திட்டத்திற்குரிய சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிக்கும் ஒப்பந்தமானது ஸ்ரீ ஜயவர்தனபுற பல்கலைக்கழகத்திற்கு ரூ. 6,539,600 தொகைக்கு 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி வழங்கப்பட்டு இருந்ததுடன், கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதியாகும் போது ரூ. 3,211,376 ஆனது பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டு இருந்தது. 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதிய 22/0482/317/011 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள காணியின் உரித்தானது தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட காரணத்தால் ஒரு பகுதி மாத்திரம் நிறைவு செய்யப்பட்டு இருந்த சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் உரித்து மற்றும் எதிர்வரும் கொடுப்பனவின் பொறுப்புக்கள் தொடர்பாக உறுதியான ஒரு இணக்கப்பாட்டிற்கு எட்டுவதற்கு 2023 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி வரையிலும் முடியாமல் போன காரணத்தால் பல்கலைக்கழகமானது உரிய சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை நிறைவு செய்யாமல் இருந்தது. இதன் காரணமாக உரிய இயலுமை ஆய்வு மற்றும் திட்டம் ஒன்று இன்றி ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்திற்காக கணக்காய்வுத் திகதியாகும் போது செலவு செய்யப்பட்டு இருந்த தொகை ரூ. 3,211,376 ஆனது தொழிற்பாடற்ற செலவாக மாறி இருந்தது.

(ஆ) அதிகார சபையினால் பாற் பசு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மகாவலி பி, சி, டி, எல் மற்றும் உடவலவ ஆகிய வலயங்களில் புல் வளர்ப்பிற்காக சுமார் 2802 ஏக்கர் வழங்கப்பட்டு கால்நடைகளின் போசணையை மேம்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்தாலும், கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதியாகும் போதும் எந்தவொரு காணியும் புல் வளர்ப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டு இருக்கவில்லை. இதில் எல் வலயத்தில் முன்மொழியப்பட்ட புற் தரைக்காக அடிப்படை சூழலியல் பரிசோதனையை முன்னெடுப்பதற்காக ரஜரட பல்கலைக்கழகத்திற்கு ரூ. 1,551,958 தொகையும், தொல்பொருளியல் மதிப்பீட்டுக் கணிப்பீடு ஒன்றிற்காக தொல்பொருளியல் திணைக்களத்திற்கு ரூ. 140,099 தொகையும், புல் வளர்ப்புத் தரையின் அளவீட்டுப் பணிகளுக்காக இலங்கை நில அளவைத் திணைக்களத்திற்கு ரூ. 4,879,825 தொகையுமாக மொத்தமாக ரூ. 6,545,882 ஆனது அதிகார சபையினால் செலவு செய்யப்பட்டு இருந்தது.

(இ) 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்ட மகாவலி வலயங்களை அண்டிய சமூர்த்திப் பயனாளிகளான பாற் பசு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டமானது அதிகார சபையின் ஒருங்கிணைப்பில், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊழியப் பங்களிப்புடன், சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் மானியத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு

இருந்தது. பின்னர் சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களமானது மானியங்களை வழங்குவதற்கு மறுத்த காரணத்தால் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டு இருக்காததுடன், மாட்டுப் பட்டிகள் 150 மற்றும் நீர்த் தொட்டிகள் 150 ஐ அமைப்பதற்காக 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வழங்கப்பட்டு இருந்த ரூ. 1,425,000 ஆன முற்பணமானது கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆம் திகதி வரை முடிக்கப்பட்டு இருக்காததுடன், உரிய செயற்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) மகாவலி பி வலயத்தில் விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயப் பயிர் உற்பத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 540 ஏக்கர் அளவான நிலப் பரப்பை முதுவெல்ல வெலிகந்த பிரதேசத்தில் வழங்குவதற்கு 2020 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு இருந்ததுடன், கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதியாகும் போது 3 ½ வருடங்கள் கடந்திருந்த நிலையில், எவ்வித முதலீட்டுச் செயற்திட்டமும் அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை. இம் முதலீட்டுச் செயற்திட்டங்களின் சுற்றாடல் தாக்க மதிப்பீடானது ரூ. 2,619,000 ஒப்பந்தத்திற்கு கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டு இருந்ததுடன், செயற்திட்டத்தை அமுல்படுத்தாத காரணத்தால் கணக்காய்வுத் திகதியாகும் போது அதற்காக செலுத்தப்பட்டு இருந்த ரூ. 2,093,200 ஆனது அதிகார சபைக்கு நட்டமாக இருந்தது.

(உ) மகாவலி வலயங்களில் விவசாயிகளுக்கு தரம் வாய்ந்த விதை நெல் உற்பத்தியை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அதிகார சபைக்குச் சொந்தமான ரத்கிந்த வித்துப் பண்ணையில் நெற்களை காய வைப்பதற்காக ரூ. 3,824,406 செலவு செய்யப்பட்டு புதிதாக சூட்டு மேடைகள் 03 அமைக்கப்பட்டு, ரூ. 60,073,046 செலவு செய்யப்பட்டு 15 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்தன. 2021 ஆம் ஆண்டு சிறு போகத்தில் இருந்து விதை நெல் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டு அவ்விதைகளைப் பயன்படுத்தி 04 பயிர்ச் செய்கை போகங்கள், 196.25, 195.75, 152.75 மற்றும் 100 ஹெக்டயர் நிலப்பரப்பில் பயிர் செய்யப்பட்டு இருந்ததுடன், 2023 ஆம் ஆண்டு சிறு போகத்தில் இருந்து விதை நெல் உற்பத்தி நிறுத்தப்பட்டு முன்பு நிலவிய போகங்கள் குத்தகை அடிப்படையில் பண்ணைகளுக்குச் சொந்தமான வயல்களில் பயிரச் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டு இருந்தது. இதன் காரணமாக விதை நெல் உற்பத்திக்காக அதிகார சபை செலவு செய்த ரூ. 63,897,452 தொகையில் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்கள் பெறப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) அதிகார சபையினால் சிறிய அளவிலான மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்காக முதலீட்டாளர்கள் மற்றும் உகந்த இடங்கள் 20 ஐ இனங் காண்பதற்காக 2011 ஆம் ஆண்டில் இருந்து 2013 ஆம் ஆண்டு வரை ரூ. 1,297,533 செலவு செய்யப்பட்டு இருந்தாலும், இதில் 10 செயற்திட்டங்கள் கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

(எ) 2022 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 54 குளங்களை புணர்நிர்மாணம் செய்வதற்கு திட்டமிடப்பட்டு வருடாந்த வரவு செலவில் 80 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது. 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் போது இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு 81.4 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டு இருந்த காரணத்தால் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 102 ஆக இருந்ததுடன், 32 குளங்கள் மாத்திரமே உருவாக்கப்பட்டு இருந்தமையால் பௌதீக முன்னேற்றமானது நூற்றுக்கு 59 ஆக காணப்பட்டது.

(ஏ) வலவ வலயத்திற்குச் சொந்தமான மொரகெடிய கிளைக் கால்வாயை புணர் நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதி 34,475,753 ரூபாய்க்கு கட்டுமான நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டு இருந்ததுடன், 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08 ஆம் திகதி கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும் எனினும், கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியாகும் போதும் உரிய கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. இதற்கு உரியதாக பணிகளை ஆரம்பிக்கும் முற்பணமாக ரூ. 9,752,927 மற்றும் முதலாவது கொடுப்பனவாக ரூ. 2,062,244 என்ற அடிப்படையில் மொத்தமாக ரூ. 11,815,171 ஆனது ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டு இருந்தது.

(ஐ) ரம்பகன் ஓயா வலயத்தில் பொல்லேபெத்த வட்டாரத்தில் உத்தியோகபூர்வ இல்லம் அமைக்கும் ஒப்பந்தம் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி ரூ. 4,861,103 இற்கு

வழங்கப்பட்டு இருந்தது. 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி அதன் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனினும், கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியாகும் போது ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாமல் கட்டுமானப் பணிகள் கை விடப்பட்டு இருந்ததுடன், ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூ. 1,417,556 ஆன இயக்க முற்பணத்தை அறவிடுவதற்கு ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஓ) அதிகாரவ சபையின் பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தங்களுக்குரிய எஞ்சிய பணிகளை பரிசீலித்துப் பார்த்து மதிப்பீடு தயாரித்து கொள்முதல் செயல்முறைகளின் ஊடாக புதிய ஒப்பந்ததாரிகள் தெரிவு செய்யப்பட்டு பணிகளை நிறைவு செய்வதற்காக கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியாகும் போதும் ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை. இதன் காரணமாக தேவை என இனங் கண்டு, நிதி ஒதிக்கி ஆரம்பிக்கப்பட்டு இருந்த கட்டுமானப் பணிகள் பல பூரணப்படுத்தப்படாமல் நிறுத்தப்பட்டு இருந்ததுடன், அக் கட்டுமானங்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த பயன்பாடுகளைக் கையப்படுத்துவதற்கு மேலும் தாமதமாக இருந்தது.

(ஓ) தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் II ஆம் கட்டத்தில் மாத்தறையில் இருந்து ஹம்பாந்தோட்டை வரையான பகுதியின் நிர்மாணப் பணிகள் காரணமாக அதிகார சபையின் வலவ விசேட அதிகார பிரதேசங்களுக்குச் சொந்தமான அங்குணுகொலபெலஸ்ஸ மற்றும் முரவெசிஹேன வட்டாரங்களுக்குச் சொந்தமான பிரிப்புக் கால்வாய்களை அண்டிய கட்டமைப்புக்களுக்கு ஏற்பட்ட சேத மறுசீராக்கலுக்கான 10 செயற்திட்டங்களுக்காக அதிகார சபையினால் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் திகதி முன்வைத்த ரூ. 43,883,862 ஆன மதிப்பீட்டின் பிரகாரம் உரிய தொகையை நெடுஞ்சாலை அபிவிருத்தி அதிகார சபையினால் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி வலவ வலயத்தில் வைப்புச் செய்து இருந்தாலும், கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி வரையில் இக் கால்வாய்களின் மறுசீராக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டோ அல்லது நிலையான சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் கணக்குகளுக்குப் சீராக்கல் செய்வதற்கு ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை.

### 2.3.6 இனங்காணப்பட்ட இழப்புகள்

(அ) 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு செலவினம் ரூ. 7,898,381 எனக் குறிப்பிடப்பட்டு இருந்த திகன வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டு இருந்த PG – 0455 ஆம் இலக்க வாகனம் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி விபத்துக்கு உள்ளாகி இருந்தது. விபத்து நேர்ந்து 02 வருட காலங்கள் கழிந்த நிலையிலும் வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்பானது விலை மதிப்பீடு செய்யப்பட்டு மீள் திருத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருக்காததுடன், வாகனத்தின் 2022/ 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய காப்புறுதிகள் உரிய காலத்தில் முன்னெடுக்கப்படாத காரணத்தால் காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் இருந்துள்ளது.

(ஆ) மகாவலி கேந்திர மையத்தின் பணிப்பாளருக்கு இணைக்கப்பட்டு இருந்த CAF – 1918 ஆம் இலக்க வாகனமானது 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதிய விபத்துக்கு உள்ளாகி இருந்தாலும், நிதிப் பிரமாணம் 104 (4) இற்கு அமைய 03 மாத காலத்திற்குள் முன்வைக்கப்பட வேண்டிய இழப்பு தொடர்பான பூரண அறிக்கையானது கணக்காய்வுத் திகதியான 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதியாகும் போதும் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. விபத்திற்குரிய மீள் திருத்தங்களுக்காக அதிகார சபையினால் ரூ. 932,373 செலவு செய்யப்பட்டு இருந்தாலும், காப்புறுதி இழப்பீடாக கிடைக்கப் பெற்று இருந்தது 318,350 ரூபாய் மாத்திரம் என்பதால் 614,023 ரூபாயான எஞ்சிய இழப்பீட்டை பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களிடம் இருந்து அறவிடுவதற்கு ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை.

(இ) தெஹிஅத்த கண்டிய விதிவட வணிக முகாமைத்துவ அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டு, மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் ஆலோசகருக்கு வழங்கப்பட்டு இருந்த வாகனம் ஒன்று 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி விபத்துக்கு உள்ளாகி இருந்ததுடன் நிதிப் பிரமாணம் 104 (4) இற்கு அமைய 03 மாத காலத்திற்குள் முன்வைக்கப்பட வேண்டிய இழப்பு தொடர்பான பூரண அறிக்கையானது 2023 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. அதவாது, விபத்து நேர்ந்து 03 வருடங்கள் 05 மாதங்கள் கழிந்த நிலையில் ஆகும். வாகனமானது ரூ. 9,991,909 மதிப்பீட்டின் அடிப்படையில் மீள் திருத்தப் பணிகளுக்காக 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி முகவர் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு இருந்ததுடன், காப்புறுதி இழப்பீடாக ரூ. 3,700,000 மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டு இருந்தது. அதற்கமைய, அறவிடப்பட முடியாத ரூ. 6,217,909 ஆன இழப்பீட்டை பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களிடம் இருந்து அறவிடுவதற்கு ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை.

### 2.3.7 வாகன முறைமை முகாமைத்துவம்

(அ) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான வலவ வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டு இருந்த WP – JF – 3105 ஆம் இலக்க வாகனமானது 2004 – 2005 ஆம் காலப் பகுதியில் அனுமதி இன்றி வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டு இருந்ததாக கடந்த ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டு இருந்தாலும் 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி வரையில் அது தொடர்பாக எவ்விட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான 15 வாகனங்களை அத் திணைக்களத்திற்கு முறையான விதத்தில் ஒப்படைப்பதற்கோ அல்லது அதிகார சபைக்கு கையகப்படுத்துவதற்கோ நடவடிக்கைகளை முன்னெடுக்காமல் அதிகார சபையின் தம்புத்தேகம இயந்திர வேலைத்தள வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது.

(இ) 2019 ஆம் ஆண்டில் வாகன புறமிழப்பிற்காக நியமிக்கப்பட்டு இருந்த குழுவின் பரிந்துரைக்கு அமைய 45 வாகனங்களை வாகனங்களாக கையுதிர்ப்பதற்கும், 31 வாகனங்களை மீண்டும் பழுது பார்த்து பயன்பாட்டிற்குக் கொள்வதற்கும், 63 வாகனங்களை சிதைவு இரும்பாக கையுதிர்ப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டு இருந்தது. சிதைவு இரும்பாக கையுதிர்த்த 63 வாகனங்களின் படலிமை (செஸி) இலக்கங்கள் நீக்கப்பட்டு அப் படலிமை இலக்கங்கள் மோட்டார் வாகன போக்குவரத்துப் பதிவாளருக்கு ஒப்படைக்கப்பட்டு இருந்தாலும், அவ் வாகனங்களில் 25 வாகனங்களின் உரித்துரிமையானது அதிகார சபைக்குச் சொந்தமானதாக இருக்கவில்லை. சிதைவு இரும்பாக பதிவை இரத்துச் செய்வதற்காக ஒப்படைக்கப்பட்ட இலக்கம் 31 – 9908 மற்றும் 32 – 2129 ஆம் இலக்க வாகனங்கள் கணக்காய்வுத் திகதியான, அதாவது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியாகும் போது தனிப்பட்ட தரப்பினர்களால் பயன்படுத்தப்படுகின்றதாக மோட்டார் வாகன போக்குவரத்துப் பதிவாளர் திணைக்களத்தின் தரவு முறைமையைப் பரிசீலிக்கும் போது அவதானிக்கப்பட்டது. சிதைவு இரும்பாக நீக்குவதற்கு படலிமை இலக்கங்கள் நீக்கப்பட்ட 44 வாகனங்களின் பதிவானது கணக்காய்வுத் திகதியாகும் போதும் இரத்துச் செய்யப்பட்டு இருக்கவில்லை.

### 2.3.8 மனித வள முகாமைத்துவம்

மீளாய்வு ஆண்டு இறுதியில் அதிகார சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான 34 பதவிகள் நிலவியதுடன், அதன் பின்னர் 15 பதவிகளுக்காக வெற்றிடங்கள் நிலவியது. அதில் 12 பதவிகளுக்காக பதில் கடமை புரிதல்/ கடமை நிறைவேற்றுதல்/ கடமை தழுவுதல் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் கடமைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றதுடன், அப்பதவி வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கு ஆவன செய்யப்பட்டு இருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடங்காத 10 பதவிகளுக்காக நிரந்தரமாக 13 பேரும், ஒப்பந்த அடிப்படையில் 32 பேருமாக மொத்தமாக 45 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு இருந்தனர். ஆரம்ப தரத்தைச் சேர்ந்த 04 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைத் தாண்டி 63 பேர் நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு இருந்தனர்.

டப்லியூ. பீ. சி. விக்ரமரத்ன,
கணக்காய்வாளர் நாயக

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பணிப்பாளர் நாயகத்தின் வாதுரை

## பாகம் – IV

## இலங்கை மகாவலி அதிகார சபை

### இல. 500, டி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

எனது இலக்கம் : MASL/FIN/F4/AG/22/34

2024.02.

கணக்காய்வாளர் நாயகம்,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இலக்கம் 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை

**இலங்கை மகாவலி அதிகார சபையின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று மற்றும் ஏனைய சட்ட மற்றும் பிரமாண அவசியங்கள் குறித்து 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது உறுப்புரைக்கு அமைவான கணக்காய்வாளர் நாயக அறிக்கை.**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக உங்களால் எனக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட IWR/ B/ MASL/ 01/ 22/ 34 ஆம் இலக்க மற்றும் 2023.12.30 ஆம் திகதிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான எனது பதில்கள் பின்வருமாறு அமையும்.

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**1.2.1 இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக இல்லாமை**

(அ) இலங்கை மகாவலி அதிகார சபையினால் நிர்வாகம், செயற்படுத்துகை, தாபரிப்பு மற்றும் மேம்படுத்தல்கள் முன்னெடுக்கப்படுகின்ற பிரதான அணைகள் 11 இன் பெறுமதியை விலை மதிப்பீடு செய்து கணக்கில் இடுவதற்காக அவ் அணைகளின் சட்ட ரீதியான உரிமையானது யாருக்கு எவ்வாறு ஒப்படைக்கப்பட்டு உள்ளது என்பது தொடர்பாக உறுதிப்பாடு ஒன்றுக்கு எட்டி இருக்காமையினால் அது தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் தற்போதுள்ள ஆவணங்களின் அடிப்படையில் தற்பொழுது கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதுடன் அதில் உறுதியாக மகாவலி அதிகார சபையின் உரிமையை உறுதி செய்து கொண்ட பின்னர் முறையான விலை மதிப்பீட்டை முன்னெடுத்து கணக்கில் இடுவதற்கு ஆவன செய்கின்றேன்.

(ஆ) இலங்கை மகாவலி அதிகார சபையானது ஒருங்கிணைந்த நிதிக் கூற்றைத் தயாரிக்கும் போது பிரதான அலுவலகம் உட்பட வலயங்கள் மற்றும் பிரிவுகளின் நிதிக் கூற்றுக்களைப் பயன்படுத்தி அதனை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைந்த நிதிக் கூற்று தயாரிக்கப்படும்.

பிரதான அலுவலகம் உட்பட வலயங்கள் மற்றும் பிரிவுகளில் நிதிக் கூற்றைத் தயாரிப்பதற்கு அவசியமான வழிகாட்டல்கள், கணக்கீட்டு நியமங்கள் மற்றும் அடிப்படைகள், கணக்குக் குறியீடுகளைப் போன்றே உரிய நிதியங்கள் தொடர்பான தகவல்கள் இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் பொதுவாக தீர்மானிக்கப்பட்டு உள்ளதுடன், பிரதான அலுவலகம்

உட்பட ஒவ்வொரு வலயங்கள் மற்றும் பிரிவுகளுக்காக வெவ்வேறாக வழிகாட்டல்கள், கொள்கைகள், கணக்குக் குறியீடுகள் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படாது. அவ்வாறே, சகல சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பொறுப்பாண்மையானது இலங்கை மகாவலி அதிகார சபையின் பெயரில் காணப்படும்.

அதற்கமைய பிரதான அலுவலகம் உட்பட சகல வலயங்கள் மற்றும் பிரிவுகளுக்காக ஒரே விதமான நிதிசார் மற்றும் செயற்பாட்டுத் தீர்மானங்கள் அமுல்படுத்தப்படுகின்றமையால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பொறுப்பாண்மையானது இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமாக உள்ளதால் "உரித்து மாற்றலுக்கான கூற்று" ஆனது ஒருங்கிணைந்த நிதிக் கூற்றில் உள்ளடக்கி உள்ள தரவுகளின் அடிப்படையில் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது.

அவ்வாறே, வலயங்கள் மற்றும் பிரிவுகளுக்காக வெவ்வேறாக நிதிகளை வழங்குவதைப் போன்றே அவர்களால் தமது பிரிவு/ வலயத்திற்குச் சொந்தமான வளங்களைப் பயன்படுத்தி வருமானங்களை ஈட்டுவதன் மூலம் நிதிகள் சேகரிக்கப்படுவதால் அவ் வலயங்கள்/ பிரிவுகளுக்காக காசுப் பாய்ச்சல் கூற்றானது வெவ்வேறாக தயாரிக்கப்பட வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். அதற்கமைய கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் வலயங்கள்/ பிரிவுகளுக்காகவும் உரிய மாதிரியை வழங்கி 2023 ஆம் ஆண்டில் இருந்து அம் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்றை சமர்ப்பிப்பதற்கு ஆவன செய்கின்றேன்.

(இ) ஏற்றுக் கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டில் இருந்து ஒருங்கிணைந்த காசுப் பாய்ச்சல் கூற்றுக்காக ஒப்பீட்டுத் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு ஆவன செய்கின்றேன்.

மீண்டும் வெளியிடப்பட்ட இருப்புக்காக நாட்குறிப்புப் பதிவுகளில் இசைவு மற்றும் விரிவான தகவல்களானது மீண்டும் வெளியிடப்பட்ட கூற்றில் குறிப்பிட்டுக் காண்பிக்கப்பட்டு உள்ளது.

(ஈ)

i. வலவ, ரம்பகண் ஓயா, மெதிரிகிரிய, மொரகஹகந்த, ஹுருளுவாவி, ஈ வலயம் மற்றும் பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டுப் பிரிவு ஆகிய வலயங்கள்/ பிரிவுகள் 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுடன் "கடந்த வருட சீராக்கல்" என திருத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. மேலும், எச் வலயத்தின் உரிய ஒப்பந்தங்கள் மூலம் பணிகள் நிறைவு செய்யப்பட்டு இருக்காத தம்மென்னாவ வாவிக்கு அருகில் ஹெலபோஜுன் விற்பனை நிலையம் ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் கலா வாவி சுற்றுளா மாளிகையை நவீன மயப்படுத்தும் ஒப்பந்தங்களின் பெறுமதியானது "முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற பணிகள்" கணக்கில் குறிப்பிடப்பட்டு இருந்தது. அவ்வாறே நொச்சியாகம வட்டார அலுவலகத்தின் மீள் திருத்தங்களுக்காக வழங்கப்பட்டு உள்ள 02 மில்லியன் ரூபாய் தொகையானது "முற்பணமாக" வழங்கப்பட்டு உள்ளமையால் மூலதனப்படுத்தப்பட்டு இல்லை.
ii. இச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்காக சகல வலயங்களுக்கும் ஆலோசனைகளை வழங்கி என்னால் DL/ADM/45-1 ஆம் இலக்க மற்றும் 2023.09.04 ஆம் திகதிய கடிதம் ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளதுடன் அதற்கமைய வலயங்களின் காணிப் பகுதிகளை அளவிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. இக் காணிகளை விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மூலம் விலை மதிப்பீடு செய்து கொள்வதற்காக

பாரிய தொகை கட்டணமாக செலுத்த வேண்டி ஏற்படும் என்பதுடன் மானியங்கள் மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் மற்றும் இதற்காக பாரியளவு நிலப்பரப்பு காணப்படுவதால் அக் காணிப் பரப்பிற்கு அமைய இப் பணிகளை ஒரு வருட காலத்திற்குள் நிறைவு செய்வதற்கு முடியாமல் உள்ளது என்பதனை அறிவித்துக் கொள்கின்றேன். அதற்கமைய உரிய சகல காணிகளினதும் விலை மதிப்பீட்டை நிறைவு செய்வதற்காக பல வருடங்கள் செல்லலாம் என்பதனை அறிவித்துக் கொள்வதுடன் விலை மதிப்பீடு முன்னெடுக்கப்படுகின்ற ஒழுங்கிற்கு அமைய உரிய காணிகளை கணக்கில் இடுவதற்கு ஆவன செய்வதாக அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். எவ்வாறாயினும், இக் காணிகளில் அமைந்திருந்த **சகல உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் ஏனைய கட்டிடங்களின் விலை மதிப்பீட்டுப் பெறுமதிகள் கணக்கேடுகளில் உள்ளடக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டு உள்ளன.**

கொழும்பு 10, டி.பி. ஜாயா மாவத்தை, இலக்கம் 493 மற்றும் 493/01 ஆகிய காணிகளின் விலை மதிப்பீடானது 2023.02.01 ஆம் திகதி கிடைக்கப் பெற்று உள்ளமையால் 2023 ஆம் ஆண்டில் கணக்கில் இடுவதற்கு ஆவன செய்கின்றேன். கொழும்பு 10, டி.பி. ஜாயா மாவத்தை, 500 ஆம் இலக்க காணியை விலை மதிப்பீடு செய்வதற்காக திணைக்களத்தில் இருந்து வருகை தந்த பின்னர் காணியின் திட்டத்தில் மாற்றம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டதுடன், அதற்கமைய காணியின் திட்டத்தை புதிதாக தயாரித்துக் கொள்வதற்காக நில அளவைத் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்பட்டு இருந்த கட்டணமானது தற்பொழுது செலுத்தப்பட்டு உள்ளது. அதற்கமைய அத் திணைக்களத்தில் இருந்து வருகை தந்து நில அளவீடு முன்னெடுத்தமைக்கான உரிய நில அளவீட்டு அறிக்கையானது இதுவரையில் அனுப்பி வைக்கப்படவில்லை. அவ் அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வழங்கி விலை மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொண்டு அப் பெறுமதியை கணக்கில் இடுவதற்கு ஆவன செய்கின்றேன்.

iii. 2023 ஆம் ஆண்டில் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம 08 மற்றும் 22 ஆம் இலக்க பந்திகளுக்கு அமைய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

iv. 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுடன் வெளிப்படுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

அதற்குரிய சீராக்கல்களை முன்னெடுக்கும் கணக்கீட்டுக் கொள்கை முன்வைக்கப்பட்டு உள்ளது.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2023 ஆம் ஆண்டில் இருந்து முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்களை முன்னெடுப்பதற்கான குறிப்புக்களை இயன்றளவு குறைத்துக் கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(ஆ) ஒருங்கிணைந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் இயக்கச் செயற்பாடுகளின் கீழ் காசுப் பாய்ச்சலாக சரியாக குறிப்பிடப்பட்டு உள்ளது.

2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றின் மூலம் சரி செய்வதற்கு ஆவன செய்கின்றேன்.

(இ) **(i) <u>தம்புத்தேகம வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகம்</u>**

வரி ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றதுடன் 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்கல்களை முன்னெடுப்பதற்கு ஆவன செய்கின்றேன்.

**(ii) <u>காணி உபயோகக் கட்டணம் – வலவ வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகம்</u>**

நீர்ப்பாசன, வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு, மற்றும் சுற்றாடல் ஆகிய விடயப் பொறுப்பு அமைச்சர்களால் 2020.11.13 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட ஒருங்கிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்காக 2020.12.20 ஆம் திகதிய அமைநி/20/1852/317/012 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானம் மூலம் அத்தினத்திற்கு நிலுவைக் காணி உபயோக கட்டணத்தில் 25% ஐ மாத்திரம் அறவிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. அதற்கமைய அறவிடப்பட வேண்டிய நிலுவைக் காணி உபயோக கட்டணமானது ரூ. 223,317,346.00 ஆகும் என்பதுடன், அதில் ரூ. 67,135,153.98 ஆனது 2023.12.31 ஆம் திகதி அறவிடப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**(iii) <u>இலங்கை உரக் கம்பனி</u>**

இது தொடர்பாக பரிசீலித்துப் பார்த்து கிடைக்கப் பெற வேண்டிய வருமானமாக இனங் காணப்பட்ட பின்னர் பொருத்தப்பாட்டை மேற்கொள்வதற்கு ஆவன செய்கின்றேன்.

**(iv) <u>மகாவலி கால்நடை வர்த்தகக் கம்பனி.</u>**

மகாவலி கால்நடை வர்த்தக (தனி) நிறுவனத்திற்கு இப் பண்ணையானது முறையான விதத்தில் குத்தகைக்கு விடப்படாத காரணத்தால் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கப் பெற வேண்டிய வருமானங்கள் கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டு இருக்கவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் செயற்திட்டம் மூலம் கிடைக்கப் பெற்று இருந்த சொத்துக்களில் 2022.12.31 ஆம் திகதியாகும் போது மீள் மதிப்பீடு செய்வதற்கு 05 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் மாத்திரமே நிலவியது.

அதில் 04 மில்லியன் ரூபாய்க்கான சொத்துக்கள் 2023 ஆம் ஆண்டில் தற்பொழுது இனங் காணப்பட்டு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றை கணக்குகளில் சீராக்கல் செய்வதற்கு ஆவன செய்யப்பட்டு உள்ளன. எஞ்சிய 1.0 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துக்களையும் இனங் கண்டு மீள் மதிப்பீடு செய்து 2023 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்கல் செய்வதற்கு ஆவன செய்கின்றேன்.

மொரகஹகந்த செயற்திட்டம் மூலம் கிடைக்கப் பெற்ற சொத்துக்களில் 459.6 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் தற்பொழுது அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டு உள்ளதுடன் அவை கணக்கில் இடப்பட்டு உள்ளன. இச் செயற்திட்டமானது 2023.03.31 ஆம் திகதியுடன் நிறைவடைவதற்கு குறிப்பிடப்பட்டு இருந்தாலும் செயற்திட்ட காலத்தை மேலும் நீடித்து உள்ளமையால் நிலையான சொத்துக்களை கையளித்தல் மற்றும் நிர்ணயிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அக் கையளிப்பு

நடவடிக்கைகள் முறையான விதத்தில் நிறைவு செய்யப்பட்ட பின்னர் உசாவலில் குறிப்பிடப்பட்டு உள்ள விதத்தில் செயற்திட்டத்தின் முலம் கிடைக்கப் பெற்ற நிலையான சொத்துக்கள் கணக்கில் பதியப்பட்டு நிறைவு செய்யப்பட முடியும்.

காலநிலைத் தாக்கங்களைக் குறைக்கும் செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு உள்ள சொத்துக்களில் கணக்கில் பதியப்படாத 102.2 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் முறையான விதத்தில் இனங்காணப்பட்டு உள்ளன. அதனை 2023 ஆம் ஆண்டில் கணக்கில் பதிகின்றேன். எஞ்சிய சொத்துக்களையும் பரிசீலித்துப் பார்த்து இனங் காணப்பட்ட பின்னர் எதிர்வரும் காலத்தில் கணக்கில் பதிவதற்கு ஆவன செய்கின்றேன்.

(உ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் மூலதனம் மற்றும் வருவாய் ஏற்பாடுகள் கிடைக்கப் பெற்றதும் வருவாயாக இனங் கண்டு கணக்கில் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

செயற்திட்டங்கள் மூலம் கிடைக்கப் பெற்ற/ எதிர்வரும் காலத்தில் கிடைக்கப் பெறவுள்ள சொத்துக்கள், கணக்கீட்டு நியமம் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் கணக்கில் பதிவு செய்வதற்கு ஆவன செய்கின்றேன்.

(ஊ) முதலீட்டுச் சொத்தாக கையுதிர்க்கப்பட்டுள்ள காணிகளுக்காக உரிய விலை மதிப்பீட்டுப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்கு ஆவன செய்யுமாறு சகல வதிவிட வணிக முகாமையாளர்கள் மூலம் ஏற்கனவே ஆலோசனைகள் விடுக்கப்பட்டு உள்ளன. [பணிப்பாளர் (காணி) இன் DL/ADM/69-1 ஆம் இலக்க மற்றும் 2023.06.19 ஆம் திகதிய கடிதம்]. அதற்கமைய 2023 ஆம் ஆண்டில் கணக்கில் பதிவதற்கு ஆவன செய்கின்றேன்.

(எ) 2022.12.31 ஆம் திகதிக்கு பிரதேச அபிவிருத்தி வங்கி மூலம் இருப்பு உறுதிகள் வழங்கப்பட்டது கணக்காய்வாளர் நாயகத்திற்கு நிதிக் கூற்று சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் என்பதால், இவ்வாறான மாற்றத்தைக் காட்டுகின்றது. இது தொர்பாக மேலும் பரிசீலித்துப் பார்த்து அவசியமான சீராக்கல்களை 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுடன் சரி செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(ஏ) முதலீட்டைக் கையளிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முறையாக முன்னெடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(ஐ)

i. ஈ வலயம், எச் வலயம் மற்றும் பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டுப் பிரிவு ஆகிய வலயங்கள்/ பிரிவுகள் 03 இனதும் செலுத்தப்பட வேண்டிய இருப்புகள் முறையே ரூ. 7,449,354.94, ரூ. 12,330,317.00 மற்றும் ரூ. 3,446,294.00 என்பன 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றில் செலுத்தப்பட வேண்டிய இருப்பாக கணக்கில் பதிவதற்கு ஆவன செய்கின்றேன்.

ii. 2018 ஆம் அண்டில் இழப்பீடு வழங்கிய பின்னர் 2022.12.31 ஆம் திகதிக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவை வட்டித் தொகையான ரூ. 16,252,018.00 மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூ. 2,006,667.00 தொகையை 2022.12.31 ஆம் திகதியாகும் போதும் முறையான விதத்தில் கணக்கிடப்பட்டு இருக்கவில்லை. ஆகையால் கணக்கில் பதிவதற்கு முடியாமல் போயுள்ளது. 2023 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுடன் கணக்கில் பதிவதற்கு ஆவன செய்யப்பட்டு உள்ளது.

iii. 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளில் செலுத்தப்பட வேண்டிய இருப்பாக கணக்கில் பதிவதற்கு ஆவன செய்கின்றேன்.

(ஒ) ஏற்றுக் கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுடன் நாட்குறிப்புப் பதிவு மூலம் சரி செய்வதற்கு ஆவன செய்கின்றேன்.

(ஓ)

i. ஏற்றுக் கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுடன் நாட்குறிப்புப் பதிவு மூலம் சரி செய்வதற்கு ஆவன செய்கின்றேன்.

ii. PF – 7750 ஆம் இலக்க வாகனத்தின் நிலையான சொத்து ஆவணத்தில் PG – 7750 என தவறுதலாக உள்ளடக்கப்பட்டு உள்ளதுடன் அது PF – 7750 என சரி செய்யப்பட வேண்டும் என்பதால் அதற்கமைய சரி செய்யப்பட்டு உள்ளது.

KV – 7839, CAE – 5358 ஆகிய வாகனங்கள் 2021 ஆம் ஆண்டு மொரகஹகந்த செயற்திட்டத்தின் மூலமும், CAE – 1918 மற்றும் PG – 2160 வாகனங்கள் காலநிலைத் தாக்கங்களைக் குறைக்கும் செயற்திட்டம் மூலமும் கிடைக்கப் பெற்று உள்ளதுடன், அவ் வாகனங்கள் 2019 ஆம் ஆண்டாகும் போதும் பௌதீகமாக மகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்டு இருந்தது. எனினும், முறையான ஆவணங்கள் மூலம் சுமார் ஒரு வருட காலத்தின் பின்னர் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு கையளிப்பு மேற்கொள்ளப்பட்டு உள்ளதுடன் அச் சந்தர்ப்பத்தில் செயற்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்டு உள்ள பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு அவ் வாகனங்கள் கணக்கில் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

ஆகையால் தற்பொழுது கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள பெறுமதிகள், செயற்திட்டங்கள் மூலம் உரிய வாகனங்களை முறையான விதத்தில் கையளிக்கப்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் பெறுமதிகள் மற்றும் 2019 ஆம் ஆண்டில் மீள் மதிப்பீட்டுப் பெறுமதிகளை அடிப்படையாகக் **2023.07.05 ஆம் திகதி சரியான பெறுமதி மற்றும் பெறுமானத் தேய்வு பெறுமதி என்பன நாட்குறிப்புப் பதிவு மூலம் சரி செய்யப்பட்டு உள்ளது.**

iii. ஏற்றுக் கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றின் மூலம் சரி செய்வதற்கு ஆவன செய்யப்பட்டு உள்ளது.

iv. ஏற்றுக் கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றின் மூலம் சரி செய்வதற்கு ஆவன செய்கின்றேன்.

v. ஏற்றுக் கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளில் உரிய “ஒதுக்கீடுகள்” முன்னெடுப்பதற்கு ஆவன செய்கின்றேன்.

vi. காணி ஆணையாளர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2020.05.20 ஆம் திகதிய 2020/6 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டு இருந்த ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு நிலுவை வருமானத் தொகையாக முறையே ரூ. 46,478,749.00 மற்றும் ரூ. 29,740,601.00 ஆன வருமானத் தொகை திருத்தியமைக்கப்பட்டு உள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன். அங்கீகாரம் இன்றி நிலுவை வரி மற்றும் காணி உபயோகக் கட்டணம் என்பன வருமானத்தில் இருந்து பதிவழிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கீட்டு வழுவானது சரி செய்யப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**1.2.4 கணக்காய்விற்கு சாட்சியங்கள் இல்லாமை**

(அ) இவ் இருப்புக்கள் தொடர்பான பகுப்பாய்வு ஒன்றை முன்னெடுத்து 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுடன் தீர்த்து வைப்பதற்கு ஆவன செய்கின்றேன்.

(ஆ) அனைத்து ஆண்டுகளினதும் ஆரம்பத்தில் பற்று இருப்புகள் மற்றும் கடன் இருப்புகள் என்பன அதற்கு முன்னைய ஆண்டின் இறுதி நடைமுறைக் கணக்கு இருப்புடன் சீராக்கல் மேற்கொள்ளப்படும். அதற்கமைய 2022 ஆம் ஆண்டிலும் உரிய கணக்கீட்டுச் சீரக்கல் முன்னெடுக்கப்பட்டு உள்ளது.

(இ) இது தொடர்பான தகவல்களைத் தேடிப் பார்த்து எதிர்வரும் காலத்தில் சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

**2. ஏனைய சட்ட மற்றும் பிரமாணத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.**

**2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (இ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர ஏதேனும் உரிய எழுத்து மூல சட்டம் ஒன்றிற்கோ அல்லு அதிகார சபையின் கட்டுப்பாட்டுச் சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காத விதத்தில் செயற்பட்டுள்ளதாக.**

(அ) காணி அபிவிருத்தி (திருத்தம்) சட்டத்தின் 72 ஆம் பிரிவின் பிரகாரம் மகாவலி சி வலயத்தின் கிராந்துருகோட்டை வட்டாரத்தில் 2014 ஆம் ஆண்டில் மட்டுப்படுத்தப்பட்ட கச்சேரி ஒன்றை நடாத்தி அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நில அளவீடு செய்யாததன் கீழ் எல்லைகள் இட்டு அனுமதிப் பத்திரம் வெளியிடப்பட்டு பின்னர் எல்லைகளைக் காண்பித்து காணிகள் கையுதிர்க்கப்பட்டு உள்ளன. எனினும், ஹொபிரியாவ, ரத்கிந்த, தெல்தெணியாய மற்றும் உல்ஹிடிய ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 184 பயனாளிகளுக்கு நில அளவீடு செய்யப்படாததன் கீழ் எல்லைகள் இடப்பட்டு அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டு இருந்தாலும் நில அளவையாளர்களின் உதவி கிடைக்காமையால் அக் காணித் துண்டுகளின் எல்லைகள் காண்பிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டு இல்லை.

2014 ஆம் ஆண்டில் இருந்து காணிகள் அளவிடப்பட்டு காணித் துண்டங்களை காண்பிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுத்தாலும் வரைபடங்களை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தால் அக் காணிகளைக் காண்பிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு முடியாமல் போயுள்ளது. 2021 ஆம் ஆண்டில் நில அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு காணிகளை கையுதிர்க்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டாலும் அச் சந்தர்ப்பத்தில் எழுந்த எதிர்ப்பு காரணமாக அதனையும் நிறுத்த வேண்டி ஏற்பட்டது.

எவ்வாறாயினும் அனுமதிப் பத்திரம் வெளியிடப்பட்டு உள்ள நபர்களுக்கு காணிகளைக் கையுதிர்ப்பதற்காக காணிகள் அடையாளம் காணப்பட்டு உள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) ஏற்றுக் கொள்கின்றேன். மகாவலி பி வலயத்தில் கந்தகாடு பண்ணையைச் சுற்றி அமைக்கப்பட்ட யானை வேலி மற்றும் எச் வலயத்தில் அமைக்கப்பட்ட மீன் இன விருத்தி மத்திய நிலையம் மற்றும் சேற்றுக் குட்டைகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட முற்பணங்களை முடிப்பதற்கு உரிய பிரிவுகளால் முன்வைக்கப்பட்ட தகவல்கள் போதியளவு மட்டத்தில் இல்லாமையால் அதனை முறைப்படுத்துவதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டு உள்ளது.

சி வலயத்திற்குச் சொந்தமான விவசாய பயிற்றுவிப்பு மத்திய நிலையத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட தொங்கும் மின் வேலியில் தொழில்நுட்ப கோளாருகள் எழுந்துள்ளமையால் அதனை மகாவலி அதிகார சபைக்கு கையேற்பதற்கு முடியாத மட்டத்தில் காணப்படுகின்றமையால் அது தொடர்பாக பரிசீலித்து அறிக்கையிடுவதற்காக என்னால் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டு உள்ளதுடன் அக் குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(இ) வெளி நிறுவனங்களுக்காக விடுவிக்கப்பட்டு உள்ள பாதுகாப்புப் படையணியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களில் ஓய்வு பெற்ற ஜனாதிபதி அவர்களுக்கு விடுவிக்கப்பட்டு உள்ள 05 உத்தியோகத்தர்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டு உள்ள 14 உத்தியோகத்தர்கள் தவிர்த்து ஏனைய நிறுவனங்களுக்காக இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தற்பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையில் கடமைக்காக மீண்டும் வருகை தந்துள்ளனர்.

ஓய்வு பெற்ற ஜனாதிபதி அவர்களினதும் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்டு உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக நிதி மீள் நிரப்பலுக்காக உரிய நிறுவனங்களுக்கு பதிவுத் தபால் மூலம் கடிதங்கள் ஆற்றுப்படுத்தப்பட்டாலும், அவற்றிற்கு பதில் எதுவும் வழங்கப்படவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறே, வன ஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சிற்கு மற்றும் பிரதமர் அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களுக்காக செலவு செய்யப்பட்ட நிதிகளுக்காக மீள் நிரப்புதல் முன்னெடுக்கப்படுவதுடன் செயலாளர், நீர்ப்பாசனத் அமைச்சின் MI/F/26/MA/2022 ஆம் இலக்க மற்றும் 2022.09.05 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய நீர்ப்பாசன அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட ஊழியர்களுக்காக செலவு செய்யப்பட்ட நிதிகளுக்காக மீள் நிரப்பல் முன்னெடுக்கப்படாது.

**2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஏ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர அதிகார சபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறன் மிக்கதாகவும் மற்றும் விலைத்திறன் மிக்கதாகவும் காலப் பகுதிக்குள் உரிய சட்ட திட்டங்களுக்கு இணங்கியதாக கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு இல்லாமை.**

(அ) பகமூண நகரத்தில் பொதுசன பேருந்து தரிப்பிடத்தை அமைப்பதற்கான ஒப்பந்தமானது பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணிப்பகத்திற்கு வழங்குவதானது அவ் ஒப்பந்தத்திற்காக 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதிய அமைறி/21/1396/317/039 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் வழங்கப்பட்டு இருந்த அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டது ஆகும்.

மேலும் இவ் ஒப்பந்தமானது, கட்டுமான மூலப் பொருட்களின் விலைவாசிகளில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பு மற்றும் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நிதி ஏற்பாடுகள் இல்லாமல் போன காரணத்தால் இரு தரப்பினரினதும் இணக்கத்தின் அடிப்படையில் இவ் ஒப்பந்தமானது 2023.05.12 ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டு உள்ளது.

இவ் இரத்தானது முன்னெடுக்கப்பட்டது அதன் மூலம் எவ்வித பாதிப்பும் நாட்டு மக்களுக்கோ அல்லது சூழலுக்கோ இடம்பெறாத விதத்தில் என்பதுடன் எதிர்வரும் பணிகளுக்காக உரிய விலை மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. அதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட பின்னர் இவ் ஒப்பந்தத்தின் எதிர்வரும் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு முன்னதான முற்பணமானது தீர்வு செய்யப்படும் வரையில் பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணிப்பகத்திற்கு செலுத்துவதற்குள்ள ஏனைய பணிகளுக்கான 13 மில்லியன் ரூபாயைச் செலுத்துவதும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு உள்ளது.

(ஆ) ரம்பகண் ஓயா வலயத்தில் மக ஓயா முகாம் வளாகத்தில் iv ஆம் தரத்திலான உத்தியோகபூர்வ இல்லம் ஒன்றை அமைப்பதற்காக MA/TS/RIDE/B/57 ஆம் இலக்க ஒப்பந்தத்தின் கீழ் ஸ்பைரல் கன்ஸ்ரக்ஷன், இலக்கம் 334/5, மாளிகாதென்ன, குருதெணிய எனும் நிறுவனத்திற்கு இவ் ஒப்பந்தமானது 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி ரூ. 4,834,183.00 தொகைக்கு வழங்கப்பட்டு உள்ளது. அவ் ஒப்பந்தத்தின் பணிகள் 2018 மே மாதம் 06 ஆம் திகதியாகும் போது நிறைவடைய இருந்ததுடன் அதற்காக ரூ. 1,414,555.65 இயக்கல் முற்பணம் வழங்கப்பட்டு உள்ளது. எனினும், மேற்குறிப்பிட்ட ஒப்பந்தக்காரரால் அது கை விடப்பட்டு உள்ளதுடன் அதற்காக செலுத்தப்பட்ட இயக்கல் முற்பணத்தை மீள அறவிடுவதற்காக மகாவலி அதிகார சபையின் சட்டப் பிரிவின் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து விடயங்களைக் கோரி உள்ளதுடன், அதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு சட்டப் பிரிவின் மூலம் எதிர்வரும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் எஞ்சிய பணிகளை பூர்த்தி செய்வதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு டெண்டர் செயல்முறைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டாலும் நாட்டில் நிலவிய நிதிப் பற்றாக்குறை காரணமாக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமையால் அதன் கட்டுமானப் பணிகளை முன்னெடுத்துச் செல்லவில்லை என்பதனை அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எதிர்வரும் காலத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் இதன் எஞ்சிய கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ரத்கிந்த சுற்றுளா மாளிகையின் மீள் திருத்தப் பணிகளுக்குரியதாக 2018 ஆம் ஆண்டு 17 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட ஒப்பந்தமானது 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இறுதி கட்டணப் பட்டியலுக்கு அமைய நிறைவேற்றாத பணிகளுக்காக 25% மிகை விதிப்பான ரூ. 2,424,281.54 தொகை உட்பட ரூ. 3,703,459.38 ஆன மொத்த தொகையை ஒப்பந்ததாரரிடம் இருந்து அறவிடுவதற்கு உள்ளதுடன் 2023.08.23 ஆம் திகதிய கடிதம் மூலம் ஒப்பந்ததாரருக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டு உள்ளது. இக் கடிதத்தின் பிரதியானது எதிர்வரும் சட்ட நடவடிக்கைகளுக்காக சட்டப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளது.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் புதிய கட்டுமானங்களுக்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படவில்லை எக்பதுடன் எதிர்வரும் காலத்தில் இதற்கு அவசியமான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட பின்னர் புதிய ஒப்பந்தம் ஒன்றாக இப் பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியுமானதாக இருக்கும்.

(இ) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தை வழங்குவது 2021 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி அமைச்சரவையின் IR/2021/31 ஆம் இலக்க விஞ்ஞாபனத்திற்கு அமைய 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதிய 21/0967/317/026 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணிப்பகம் (CECB) நிறுவனத்திற்கு நேரடி ஒப்பந்தமாக கொள்முதல் வழிகாட்டல் 2.14.1 (Supplementary 35) இற்கு அமைய மற்றும் அமைச்சரவை கொள்முதல் குழு அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டு உள்ளது.

மேலும் உரிய ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு உரிய காணிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஒதுக்கு எல்லைக்குச் சொந்தமாக இருந்தமையால் மற்றும் அவ் ஒதுக்கு எல்லைக்குள் வீதி அபிவிருத்தி அதிகார சபையானது உரிய கட்டுமானத்தை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்காமையால் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தமானது 2023.04.28 ஆம் திகதி புரிந்துணர்வு இணக்கப்பாட்டின் அடிப்படையில் இரத்துச் செய்வதற்கு ஆவன செய்யப்பட்டு உள்ளது.

மேலும் இக் கட்டுமானத்திற்காக உரிய ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட இயக்கல் முற்பணத் தொகையான ரூ. 2,062,201/= ஐ அவ் ஒப்பந்த நிறுவனத்திற்கு இலங்கை மகாவலி அதிகார சபையானது செலுத்த வேண்டிய ஹெலபோஜுன் விற்பனை நிலையத்தின் கட்டுமான கட்டணப் பட்டியலில் இருந்து குறைத்துக் கொள்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதனையும் அறிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மத்திய மாகாண அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக குண்டசாலை பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள பழைய கட்டிடத்துடன் கூடிய வராபிடிய காணியை கையகப்படுத்துதல் மற்றும் புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் கௌரவ அமைச்சரால்

முன்வைக்கப்பட்ட 2016.08.30 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு (அமைச்சரவைப் பத்திர இலக்கம் 16/1857/704/052) வழங்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய முன்மொழியப்பட்டுள்ள புதிய கட்டிடத்தின் முதலாம் கட்டத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தமானது பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணிப்பகத்திற்கு திட்டமிட்டு நிர்மாணித்து ஒப்படைக்கும் (Turnkey – முழுமைப் பணி) அடிப்படையின் பேரில் முதலாம் கட்டத்தை வழங்குவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டு உள்ளது.

இச் செயற்பாட்டிற்கான மதிப்பிடப்பட்ட தொகையான ரூ. 32,096,839.32 ஐ முதலாம் கட்டமாக கீழ் மாடியின் தட்டு (Slab Level) மட்டம் வரையில் நிர்மாணிப்பதற்கு மாத்திரம் முன்வைக்கப்பட்டு உள்ளது. 2017.08.22 ஆம் திகதிய அமைச்சரவைச் செயலாளரினால் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தவிசாளர் அவர்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ள MMDE/TS/Miscellaneous/ 2017/083 ஆம் இலக்கத்துடன் கூடிய கடிதத்தில் செயலாளர் அவர்களால் அக் கட்டிடமானது பிரத்தியேகமாக மேற்பார்வையிடப்பட்டதாகவும், கூடிய விரைவில் பயன்பாட்டிற்குக் கொள்ள முடியுமான மகிழ்ச்சிகரமான மட்டத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதற்கு மேலதிகமாக இக் கட்டிட அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கான எஞ்சிய பணிகளுக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்று உள்ளமையால், எதிர்வரும் காலத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ஏற்பாடுகள் கிடைக்கப் பெற்ற பின்னர் கட்டுமானப் பணிகளை துரிதமாக நிறைவு செய்து அவ் அலுவலகச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டு உள்ளதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

### 2.3 ஏனைய விடயங்கள்

### 2.3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

(அ) இக் கம்பனியானது அரச – தனியார் கூட்டாண்மை (PPP) வியாபாரமாக மீள் ஒழுங்கமைப்புச் செய்வதற்காக முதலீட்டாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் அமைச்சரவைக்கு முன்வைத்து உரிய அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு பின்வரும் நடவடிக்கைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

PFD/PMD/APP/irri/2023/08/02 மற்றும் 2023.05.02 மற்றும் 2023.05.09 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் முறையே "அமைச்சரவையினால் நியமனஞ் செய்யப்பட்ட இணக்கப் பேச்சுக் குழு (CANC) மற்றும் "செயற்திட்ட குழு" ஆனது அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமனஞ் செய்யப்பட்டு அனுப்பப்பட்டு உள்ளது.

அதற்கமைய இச் செயற்பாட்டிற்குரிய சகல ஆவணங்களும் செயற்திட்ட குழு (CANC) இற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு அதன் பின்னர் அமைச்சரவையினால் நியமனஞ் செய்யப்பட்ட இணக்கப் பேச்சுக் குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்து அவ் அங்கீகாரத்தின் அடிப்படையில் 03 மாத காலங்களுக்குள் பத்திரிகை விளம்பரம் பிரசுரித்து உரிய முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது.

இதற்காக 2023.05.25, 2023.06.28 மற்றும் 2023.07.19 ஆகிய திகதிகளில் செயற்திட்டக் குழுவானது மீண்டும் ஒன்று கூடியதுடன் அவ் ஒன்றுகூடலில் முன்மொழியப்பட்ட விடங்கள் தொடர்பான அறிக்கை ஒன்று 2023.08.07 ஆம் திகதி அமைச்சரவையினால் நியமனஞ் செய்யப்பட்ட இணக்கப் பேச்சுக் குழுவிற்கு முன்வைக்கப்பட்டு உள்ளது.

அதற்கமைய 2023.08.27 ஆம் திகதி அமைச்சரவையினால் நியமனஞ் செய்யப்பட்ட இணக்கப் பேச்சுக் குழுவானது ஒன்று கூடியதுடன் செயற்திட்டக் குழு சமர்ப்பித்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதற்கு வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைய ஆவணங்களைத் தயாரித்து செயற்திட்டக் குழுவானது 2023.09.26 ஆம் திகதி ஒன்று கூடி அதில் அபிலாஷைகளைக் கோரும் அறிவித்தல், விண்ணப்பப் படிவம், செயற்திட்ட வழிகாட்டல்களுக்கான இணக்கத்தை வேண்டுதல், கால வரையறை ஆகிய ஆவணங்களைத் தயாரித்து அமைச்சரவையினால் நியமனஞ் செய்யப்பட்ட இணக்கப் பேச்சுக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தயார் செய்யப்பட்டு உள்ளது. அதன் பின்னர் பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு அபிலாஷைகளைக் கோருதல் முன்னெடுக்கப்படும்.

அவ்வாறே, "கம்பனியின் சொத்துக்கள் தொர்பாக விலை மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்ளுதல்" மற்றும் "வெளி நபர்கள் மூவருக்கு கையளிக்கப்பட்டுள்ள கம்பனியின் பங்குகளை மீண்டும் மகாவலி அதிகார சபைக்குக் கையகப்படுத்துதல்" இற்காக அரச நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதால் அப்பணிகள் நிறைவு பெற்றதும் அமைச்சரவையினால் நியமனஞ் செய்யப்பட்ட இணக்கப் பேச்சுக் குழு ஒன்றுகூடலை நடாத்தி எதிர்வரும் பணிகளை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது.

(ஆ) இவ் வளாகத்தில் இக் கம்பனியை நிறுவுவதற்கு முன்னர் அதிகார சபையின் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டு உள்ளதுடன் அது 1998 ஆம் ஆண்டில் இக் கம்பனி பதிவு செய்யப்பட்டதும் அங்கிருந்த அலுவலக உபகரணங்கள் போன்றவற்றை புதிதாக நிறுவிய வரை/ மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வர்த்தக (தனி) நிறுவனத்திற்கு ஒப்படைத்து அதனை அதிகார சபையானது அக் கம்பனியில் செய்த முதலீடாக கணக்குகளில் "முதலீடு" எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது. அதனால் அதிகார சபையின் சொத்து ஆவணத்தில் தெமடகொடை வளாகத்தின் கட்டிடங்களின் மற்றும் காணியின் பெறுமதி மாத்திரம் குறிப்பிடப்பட்டு உள்ளன.

(இ) இக் கம்பனிகள் இரண்டும் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தீர்ப்பனவு செய்வதற்காக தீர்ப்பனவாளர்கள் நியமிக்கப்பட்டு உள்ளதுடன் தீர்ப்பனவாளர்களின் ஒன்று கூடலானது இதுவரையில் இரு தடவைகள் நடாத்தப்பட்டு உள்ளது. இதற்கு மேலதிகமாக ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகிய நிறுவனங்களிடம் இருந்து அறவிடுகைகள் தொடர்பான தகவல்களும் கோரப்பட்டு உள்ளன. முறையான விதத்தில் அரச வர்த்தமானி பத்திரிகையில் மற்றும் தேசிய பத்திரிகைகள் இரண்டில் அறிவித்தல் பிரசுரித்து கடன் வழங்குநர்களின் ஒன்று கூடல் ஒன்றும் நடாத்தப்பட்டு உள்ளது. அதற்கமைய கம்பனிகள் இரண்டையும் தீர்ப்பனவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(ஈ) வருடத்தினுள் முன்னெடுக்கப்பட வேண்டிய பணிகள் ஆண்டு தொடக்கத்தில் மதிப்பீடு செய்யப்படும். அதற்கமைய ஆண்டு தொடக்கத்தில் பணிகளுக்காக வழங்கப்பட முடியுமான குறைந்த ஊழியத் தினங்களின் எண்ணிக்கைக்கு அமைய உரிய பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்வதற்காக ஒப்பந்தம் வழங்குதல் முன்னெடுக்கப்படும்.

**உழவர் அமைப்புக்கள் மூலம் இப் பணிகளை முன்னெடுக்கும் போது நிறுவனத்திற்கு பின்வரும் பிரதிகூலங்கள் நிகழும்.**

- ஒப்பந்தப் பணிகளுக்குரிய அதிகார பிரதேசத்திற்குச் சொந்தமான நிதி, தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ தகைமைகள் ஆகிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்கின்ற உழவர் அமைப்புக்கள் குறைவு என்பதால் தேவையான சந்தர்ப்பத்தில் உரிய பணிகளை முன்னெடுப்பதற்கு முடியாமல் போகின்றமை.

- தொழில் அலுவலகத்தின் சட்ட திட்டங்களுக்கு கீழ்படிந்து உழவர் அமைப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதால் அவ்வாறான உழவர் அமைப்புக்களைத் தேடிப் பிடிப்பதில் சிக்கல் உள்ளமை.

- ஊழியத் தேவைப்பாடுகளுக்கு ஈடுகொடுக்கும் தனித்துறைப் பயிற்சி பெற்ற ஊழியர்கள் அங்கு இல்லாமை.
- நீர் நிர்வாகப் பணிகளின் போது நபர்கள் இடையே பாரபட்சமாக நடந்து கொள்வதால் நீர் முகாமைத்துவத்தில் தடங்கல் ஏற்படுதல்.
- உழவர் அமைப்புக்களின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட ஊழியர்கள் பிற் காலத்தில் தொழிலாளர் உரிமைகளைக் கோருகின்றமை.

- வருடாந்திரம் உழவர் அமைப்பு உத்தியோகத்தர் மாறுவதால் கடமை தவறுதல்.

- உழவர் அமைப்புக்கள் மூலம் பணியாளர்களைப் பெற்றுக் கொள்ளும் போது பொறியியல் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டு உள்ள தொகையை விட 5% மேலதிக தொகையை செலுத்த வேண்டும், எனினும் ஒப்பந்த அடிப்படைக்கு குறைந்த விலை மனுக்கள் கோரப்பட்டு குறைந்த விலைக்கு தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

அதற்கமைய முறையான செயல்முறையின் கீழ் ஊழியத் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன. அவ்வாறே, உழவர் அமைப்புக்கள் மூலம் தொழிலாளர் ஒருவரைப் பெற்றுக் கொள்ளும் போது அனுபவமற்ற தொழிலாளர் ஒருவருக்கு குறைந்தது ரூ. 2,000.00 உம், துப்புறவுத் தொழிலாளர் ஒருவருக்கு ரூ. 3,000.00 உம் 5% பங்கிலாபம் உழவர் அமைப்பிற்குச் செலுத்த வேண்டும். எனினும் திறந்த விலை மனு கோருதலின் கீழ் வருடத்திற்கே ஊழய அலகிற்கு செலவு செய்யப்படுவது ரூ. 1,466.50 மாத்திரம் ஆகும். ஆகையால் மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் இப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

(உ) உரிய களஞ்சியசாலைக்கு வாடகை வழங்குவதற்கு நெற் சந்தைப்படுத்தல் சபைக்கு இயலுமை இல்லை என நெற் சந்தைப்படுத்தல் சபையின் தவிசாளர் அவர்களால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு இருந்தமையால் களஞ்சியசாலை வாடகை செலுத்துவதில் இருந்து விடுவித்து நெற் சந்தைப்படுத்தல் சபைக்கு கையகப்படுத்துவதற்கு அங்கீகாரத்தைப்

பெறும் பொருட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு முன்வைக்குமாறு தவிசாளர், நெற் சந்தைப்படுத்தல் சபைக்கு அறிவிக்கப்பட்டு உள்ளது. அதன் முன்னேற்றத்தின் பிரகாரம் எதிர்வரும் பணிகளை முன்னெடுக்கின்றேன்.

(ஊ) சிறிய அளவான நீர் மின் உற்பத்திச் செயற்திட்ட முதலீட்டாளர்களால் 2021 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கருத்திற் கொண்டு அப்போதைய ஜனாதிபதியின் செயலாளர் அவர்களால் "நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணம்" அறவிடுவதனை இடைநிறுத்துமாறு இலங்கை மகாவலி அதிகார சபைக்கும் மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டு இருந்தது. அதற்கமைய அத்தீர்மானம் வழங்கப்பட்ட 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து குறித்த நீரேந்து பிரதேச முகாமைத்திவக் கட்டணமானது இலங்கை மகாவலி அதிகார சபைக்குக் கிடைக்கப் பெறவில்லை.

அவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் குறித்த நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணத்தை மீண்டும் அறவிட முடியும் என ஜனாதிபதியின் செயலாளர் அவர்களாலேயே ஆலோசனை வழங்கப்பட்டது. அதற்கமைய 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணமானது கிடைக்கப் பெற வேண்டுமாயினும் அப்பொழுது இலங்கை மின்சார சபையானது முகங்கொடுத்து இருந்த நிதி நெருக்கடி காரணமாக சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரத்திற்காக கட்டணம் செலுத்தப்படாததுடன் அதற்கமைய இலங்கை மகாவலி அதிகார சபைக்கும் கிடைக்கப் பெற வேண்டிய நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணமும் கிடைக்கப் பெறவில்லை. எனினும் தற்பொழுது நிதி நெருக்கடியானது கொஞ்சம் கொஞ்சமாக இயல்பு நிலைக்குத் திரும்புகின்றமையால் இலங்கை மின்சார சபையினால் குறித்த சிறிய அளவிலான நீர் மின் உற்பத்திச் செயற்திட்டத்திற்காக நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. அதற்கமைய தற்பொழுது இலங்கை மகாவலி அதிகார சபைக்கும் குறித்த நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணமானது 2023 ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தில் இருந்து கிடைக்கப் பெற்று வருகின்றது.

எவ்வாறாயினும், ஜனாதிபதியின் செயலாளரின் ஆலோசனைப் பிரகாரம் நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணம் செலுத்துவதை இடைநிறுத்திய 2021 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் வரையான காலப்பகுதிக்கு நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணத்தை அறவிட முடியாமல் உள்ளது.

இச் சிறிய அளவிலான 65 நீர் மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு இருப்பது இற்றைக்கு சுமார் 15 – 25 வருடங்களுக்கு முன்னர் என்பதுடன் அவற்றை நிர்மாணிக்கும் போது இலங்கை மகாவலி அதிகார சபையின் தலையீடு இன்றி பிரதேச செயலாளர்களினால் உரிய அனுமதிகள் வழங்கப்பட்டு உள்ளன. தற்காலத்தில் குறித்த சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்களால் உருவாக்கப்படுகின்ற மின்சாரத்திற்காக இலங்கை மின்சார சபையினால் பணம் செலுத்தப்படுவது அவற்றின் தாபரிப்புச் செலவை ஈடு செய்வதற்குப் போதியதான விதத்தில் தயாரிக்கப்பட்ட கொடுப்பனவு முறைக்கு (Tariff) அமையவாகும். ஆகையால் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணம் அறவிடப்பட வேண்டுமாயின் அதன் உற்பத்தி நிலையங்களுக்காக

செலுத்தப்படுகின்ற கொடுப்பனவு முறையானது அதற்கு இணங்கியதாக திருத்தப்பட வேண்டும். ஆகையால் இச் சிறிய அளவிலான 65 நீர் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணம் அறவிடுவதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கான சாத்தியங்கள் தற்பொழுது இல்லை.

(எ) 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதிய அமைறி/20/1852/317/012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் 15 வியாபாரிகளிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய காணி உபயோக நிலுவைத் தொகையாக இக் கணக்காய்வு உசாவலில் குறிப்பிடப்பட்டு உள்ள 15 வியாபாரிகளும் பின்வருமாறு. அதில் ஆர். எல். பெசில் ரோஹண, சைனா ஸ்டேட் கன்ஸ்ரக்ஷின் நிறுவனம், சீ. கே. திஸாநாயக்க ஆகிய நபர்களால் சகல நிலுவைத் தொகையும் செலுத்தி முடிக்கப்பட்டு உள்ளதுடன் இலங்கை இராணுவம் மற்றும் கே. ஜீ. ரத்ன குமார ஆகியோரால் முறைப்படி மாதாந்த தவணை செலுத்தப்பட்டு வருகின்றது. எஞ்சிய நபர்களிடம் இருந்து இத் தொகையை அறவிடுவதற்காக பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் அவ்வவ் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்ற பொலிஸ் அதிகார பிரதேசங்களில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு உள்ளதுடன் மாகா இன்ஜினியரின் இற்கு எதிராக கொழும்பில் முறைப்பாடு பதிவு செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு குறித்த பொலிஸ் நிலையங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளது.

(ஏ) பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்கள், குளங்கள், வீதிகள் மற்றும் உரிய கால்வாய்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்தல் தொழில்சார் தகைமைகளைப் பூர்த்தி செய்த பட்டயம் பெற்ற பொறியியலாளர்களால் (Chartered Engineers) பின்வரும் பிரமாணங்களின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டு உள்ளன.

I. சிறிய, நடுத்தர மற்றும் பெரிய குளங்களை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்திய மூலப் பொருட்களின் அளவை நிலவுகின்ற அலகு விலையால் பெருக்குதல்.
II. வீதிகள், பிரதான, கிளைப் பிரிப்பு மற்றும் களக் கால்வாய்களை 1 கி.மீ. நிர்மாணிப்பதற்காக பயன்படுத்திய மூலப் பொருட்களின் அளவை நிலவுகின்ற அலகு விலையால் பெருக்குதல்.

### 2.3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

(அ)

i. மகாவலி சி வலயத்தில் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒரு மாதத்திற்குரிய காணி உபயோகக் கட்டணம் மாத்திரம் அறவிட்டு மணல் அகழ்வதற்காக மணல் அகழ்வு உத்தரவுப் பத்திரங்கள் 386 இற்குரிய எஞ்சிய காலத்திற்காக அறவிடப்பட வேண்டிய காணி உபயோகக் கட்டணமான ரூ. 509,861,400/= வரை உள்ளதுடன் இத்தொகை சரியானதாக இல்லாமையால் அத்தொகையைச் சரி செய்தற்குரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பதுளை அகழ்வு பொறியியலாளருக்கு கடிதம் ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளது. அதற்மைய அறவிடப்பட வேண்டிய தொகையான ரூ. 278,685,665.00 என RMR/BD/RPM/Mmahaweli/2023/13 மற்றும் 2023.07.17 ஆம் திகதி விடயப் பொறுப்பு பொறியியலாளர் (பதுளை), கனிம மற்றும் சுரங்க அகழ்வுப் பணியகம் மூலம் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதற்கமைய உரிய தொகை திருத்தப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் அரசாங்கத்திற்கு வருமானத்தை இல்லாதொழித்தமை தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் தலைமையிலான குழுவின் மூலம் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. அவ் விசாரணையின் பரிந்துரைகள் தற்பொழுது அமுல்படுத்தப்பட்டு உள்ளன.

(ஆ) காணி முகாமைத்துவத்தை வினைத்திறனாக்குவதை இலக்காகக் கொண்டு எமது நிறுவனத்திற்கு காணி முகாமைத்துவ (E – Slims) தரவு முறைமையானது 2016 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. அதற்கமைய 2019 ஆம் ஆண்டாகும் போது அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணித் துண்டங்கள் ஐம்பதாயிரத்திற்கு அதிகளவிலான தகவல்கள் அதற்கு உள்ளடக்கப்பட்டு உள்ளது. எனினும் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் 60 பேரும் பதவி உயர்வு பெறுதல் மற்றும் சேவையில் இருந்து நீங்கியமை போன்ற காரணங்களால் நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு பயன்படுத்த முடியாமல் போனமை, கொரோனா தொற்றுப் பரவல், 2019 ஆம் ஆண்டில் காணி உறுதிகள் வழங்கும் துரித நிகழ்ச்சித் திட்டத்திற்காக சகல உத்தியோகத்தர்களையும் அதற்காக ஈடுபடுத்துதல் மற்றும் அரச தரவு வெளி LGCI இல் இருந்து LGC2 வரை மாற்றுதல் எனும் விடயம் காரணமாக உரிய தரவு முறைமை செயலிழந்தமையால் தரவுகளை உள்ளடக்குதல் நிறுத்தப்பட்டு உள்ளது. 2023.05.23 மற்றும் 2023.08.10 ஆகிய தினங்களில் நிலவிய பொது வியாபாரங்கள் தொடர்பான செயற்குழுவில் இவ் விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினி வல்லுனர்களின் உதவியையும் பெற்றுக் கொண்டு 2023 ஆம் ஆண்டிலேயே இம் முறைமையை மீண்டும் இற்றைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் ஆலோசனைக் கொள்முதல் குழு (CPC) ஆகிய குழுக்கள் நியமிக்கப்பட்டு உள்ளதுடன் தற்பொழுது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஒன்றுகூடல்கள் இரண்டு நடாத்தப்பட்டு விலைகள் தொடர்பான இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொண்டு கொள்முதல் செயல்முறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய தகவல்களை உள்ளடக்குவதற்காக வலயங்கள் மற்றும் தொகுதிகள் ரீதியாக நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமாகும் போது காணித் தரவுகளை உள்ளடக்கி முடிப்பதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது.

(இ) தொடர்ந்தும் உடைமை கொள்கின்ற சட்ட விரோத குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுப்பதற்காக ஒதுக்குக் காணிகளை அளவீடு செய்வதற்காக நில அளவீட்டுத் திணைக்களத்துடன் இணைந்து நில அளவீட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தயார்படுத்தப்பட்டு உள்ளது. இதற்கு மேலதிகமாக வலயத்தினுள் நீர்த்தேக்க ஒதுக்குகளை சட்ட விரோதமாக பெரும் போகத்தின் போது நெற் பயிர்ச் செய்கைக்காக மாத்திரம் ஒதுக்குக் காணிகளில் சட்ட விரோத செயற்பாடுகள் 1489 இல் சுமார் 547 சட்ட விரோதமாக பயிர்ச் செய்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் வலய ரீதியாக அறிவுறுத்தல்களை முன்னெடுத்து அச் சட்ட விரோத பயிர்ச் செய்கைகளுக்காக காணிகளுக்குள் பிரவேசிப்பது தடுக்கப்பட்டு உள்ளது.

இதற்கு மேலதிகமாக நிலையான பயிர்களை நட்ட சட்ட விரோத நபர்களின் எண்ணிக்கை 651 ஆக உள்ளதுடன் அவர்களுக்கு எதிராக நிறுவன ரீதியான நடவடிக்கைகள் மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. மேலும் சட்ட விரோதமாக காணிகளை உடைமை கொண்டுள்ள சுமார் 17 நபர்களை நீக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளதுடன் அதற்கமைய நிரந்தர வீடுகளை அமைத்துள்ள நபர்கள் வசிக்கும் காணிகளை இனங்கண்டு கொள்வதற்காக நி அளவீட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நில அளவீட்டு நடவடிக்கைகளுக்கு ஒன்றியதாக உடைமையை மீளப் பெற்றுக் கொள்ளும் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை முன்னெடுத்து அதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஆவன தயார் செய்யப்பட்டு உள்ளது.

தொடரந்தும் சட்ட விரோத செயறடபாடுகளைத் தவிர்ப்பதற்காக DL/ADM/69-1 ஆம் இலக்க மற்றும் 2023.09.12 ஆம் திகதிய கடிதம் மூலம் மீண்டும் சட்ட விரோத ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் குறித்து சகல வதிவிட வணிக முகாமையாளர்களுக்கும் விழிப்புணர்வூட்டுவதற்கு ஆவன செய்யப்பட்டு உள்ளது. இதற்கு மேலதிகமாக சகல கள உத்தியோகத்தர்கள் மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கும் தம்மால் மேற்பார்வையிடப்பட வேண்டிய ஒதுக்குகள் மற்றும் வரைபடங்களில் உள்ளடங்கிய ஒதுக்குகளைப் பாதுகாப்பதற்காக பிரத்தியேகமாக கடமை நிறைவேற்றி ஒப்படைக்குமாறு DL/ADM/69-1 ஆம் இலக்க மற்றும் 2023.09.12 ஆம் திகதிய கடிதம் மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டு உள்ளன. DL/ADM/69-1 ஆம் இலக்க மற்றும் 2023.09.12 ஆம் திகதிய கடிதம் மூலம் நீர்த்தேக்க ஒதுக்குகளில் உள்ள சட்ட விரோத கட்டுமானங்கள் உட்பட சகல சட்ட விரோத செயற்பாடுகளுக்கும் எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சகல வலய ரீதியாகவும் அமுல்படுத்தக் கூடிய திட்டம் ஒன்றைத் தயாரித்து அதற்கமைய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு உள்ளன.

பணிப்பாளர் (நீர்த்தேக்கங்கள் மற்றும் செயற்பாடுகள்) இன் கீழ் காணப்படுகின்ற நீர்த்தேக்க ஒதுக்குகளில் சட்ட விரோத ஆக்கிரமிப்பாளர்களை நீக்குவதற்காக எல்லைகளை இனங்காண வேண்டி உள்ளதுடன் அதற்காக நில அளவீடுகளை முன்னெடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக சட்ட விரோத குடியிருப்பாளர்கள் 67 பேரில் 57 பேருக்காக காணியில் இருந்து நீங்குமாறு கடிதம் வழங்கப்பட்டு உள்ளதுடன் அச் சட்ட விரோத குடியிருப்பாளர்களை நீக்குவதற்காக நிறுவன ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

(ஈ) பிரதேச அபிவிருத்தி வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (கடன்) மற்றும் குறித்த உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பித்து அதற்கமைய உரிய வைப்புத் தொகையான 50 மில்லியன் ரூபாய் இற்காக தற்பொழுது 26.196 மில்லியன் ரூபாய் வட்டி வருமானத்துடன் மொத்த கூட்டுத் தொகை 79.196 மில்லியன் ரூபாயான இருப்பு பிரதேச அபிவிருத்தி வங்கியில் காணப்படுவதாக உறுதி செய்யப்பட்டு உள்ளது.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் இணக்கத்திற்கு அமைய கடன் விண்ணப்பதாரிகள் முன்னர் குறிப்பிட்ட வரைமுறைகளுக்கு அமைய 10 பேர் வீதம் தெரிவு செய்து பணிப்பாளர் (வியாபார அபிவிருத்தி) இற்கு அனுப்புமாறு சகல வலயங்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு உள்ளது.

வட்டார அலுவலகங்கள், அலகு அலுவலகங்கள் ரீதியாக வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் / நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தலைமையின் கீழ், பிரதி வதிவிடவணிக முகாமையாளர் (அபிவிருத்தி) இன் வழிகாட்டல் மற்றும் வலயத்தின் வதிவிட வணிக முகாமையாளர்களின் மேற்பார்வையின் கீழ் கடன் விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்து பரிந்துரைகளை முன்வைப்பதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு உள்ளன.

100 கடன் விண்ணப்பதாரிகளுக்கு முதல் கட்டத்தின் கீழ் உயர்ந்த பட்சம் 5 மில்லியன் ரூபாய் வரையில் கடன் தொகையை விவசாயம், கால்நடை வளர்ப்பு, மற்றும் ஏனைய பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திச் செயற்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் நிலவுகின்ற வியாபாரத்தை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மேம்படுத்துவதற்காக முன்னர் குறிப்பிட்ட வரைமுறைகளுக்கு அமைய உரிய செயல்முறையின் ஊடாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது.

ஒரு வலயத்தில் இருந்து 10 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்ட தொழில் முயற்சியாளர்களின் செயற்திட்ட அறிக்கைகளை ஆராய்ந்து, களத்தைப் பரிசீலித்து கடன் விண்ணப்பத்தை பரிந்துரைத்து வங்கிக்கு ஆற்றுப்படுத்துவதற்கு ஆவன செய்யப்படும். அதில் குறித்த வங்கிக் கிளையினால் செயற்திட்ட அறிக்கை ஆராயப்பட்டு களப் பரிசீலனை முன்னெடுக்கப்பட்ட பிப்னர் கடன் விண்ணபதாரிகளின் கடன் அறிக்கை மற்றும் பிணையாளர்கள் மற்றும் உரிய நிபந்தனைகள் ஆராயப்பட்டு கடன் தொகையை வழங்குவதற்கு ஆவன செய்யப்படும்.

தற்பொழுதாகும் போது பிரதேச அபிவிருத்தி வங்கியானது மேற்குறிப்பிட்ட விதத்தில் கடன் திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய முன்னொழியப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த வரைவை மகாவலி அதிகார சபைக்கு வழங்கி உள்ளது. அதற்கு அவசியமான திருத்தங்களுடன் சட்டத் தன்மையை ஆராய்ந்து முறையான ஒப்பந்தத்தைத் தயாரிப்பதற்கு சட்டப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2023.12.31 ஆம் திகதியாகும் போது 100 தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கி முடிப்பதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது.

(உ) இது தொடர்பாக நீர்ப்பாசன பணிப்பாளர் (அம்பாறை) இன் DI/AMP/W/WG/01/2023 ஆம் இலக்க மற்றும் ஆம் திகதிய கடிதம் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபையினால் வழங்கப்பட்ட தொகையின் சகல கொடுப்பனவுகளும் முன்னெடுக்கப்பட்டு உள்ளதாகவும், எஞ்சிய இருப்புகள் இல்லை எனவும் அது தொடர்பாக பகுப்பாய்வு அறிக்கை ஒன்று எமக்கு வழங்கப்பட்டு உள்ளது.

அதன் செயலாற்றுகையை முறையாக சான்றுப்படுத்திய பின்னர் முடிப்பதற்காக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஆவன செய்கின்றேன்.

(ஊ) **நாற்று மேடைகள் நட்டம் அடைவதற்கான காரணங்கள்**

மரக் கன்றுகளின் உற்பத்திச் செலவு அதிகமாவதற்குக் காரணமாக இருப்பது ஊழிய அலகு ஒன்றின் செலவினம் அதிகரித்தல் மற்றும் அதற்கு ஒன்றியதாக ஏனைய செலவினங்களும் அதிகரித்தல், மரக் கன்றுகளை நட்டு பராமரிக்கும் போது பாரியளவு செலவு ஒன்றை ஏற்க வேண்டி உள்ளமையால் ஆகும். மரக் கன்று ஒன்றின் சந்தை விலைக்கு ஏற்ப இலங்கை

மகாவலி அதிகார சபையின் நாற்று மேடைகளுக்கு அவசியமான மரக் கன்றுகளை வழங்க முடியாமல் போனமை, அவ்வாறே உயர் ரக மரக் கன்றுகளின் விற்பனை விலை 450*750 வீச்சில் இருந்தாலும் இக் கன்றுகளை பண்ணைகளுக்கு சலுகை விலையில் வழங்குதல், 2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமையின் காரணமாக மரக் கன்றுகளை நடுதல் மற்றும் கொள்வனவு செய்தல் குறைந்தமை போன்ற காரணங்கள் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன.

எனினும் எதிர்வரும் காலத்தில் இந்நட்டத்தைக் குறைப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1. 2021 ஆம் ஆண்டில் இருந்து சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மகாவலி நாற்று மேடைகள் மூலம் காட்டு மரக் கன்றுகள் மற்றும் அவசியமான ஏனைய மரக் கன்றுகள் சமூக நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக மரக் கன்றுகளை நடுதலை முன்னெடுத்து மரக் கன்றுகளைக் கொள்வனவு செய்வதை முன்னெடுத்து திட்டமிடப்பட்ட விதத்தில் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.
2. மகாவலி விவசாயிகளுக்கு விவசாய பயிர் கன்றுகளை வழங்குதல்.
   இம் மரக் கன்றுகள் 50% பங்களிப்பு (சலுவை விலை) அல்லது இலவசமாக வழங்குவதை மட்டுப்படுத்துதல்.
3. இலாப நட்டங்களைக் கணக்குப் பார்ப்பதற்காக இலவசமாக வழங்கப்பட்ட மரக் கன்றுகளின் பெறுமதியை கணக்கில் கொள்ளுதல்.
4. நாற்று மேடைகளுக்காக தொழிலாளர் உழைப்பு, பராமரிப்புச் செலவுகளைக் குறைத்தல்.
5. அதிக பெறுமதி உடைய பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த மரக் கன்றுகளின் உற்பத்தியை அதிகரித்தல்.
6. அனைத்து நாற்று மேடைகளிலும் மரக் கன்றுகளின் விற்பனை விலையை அதிகரிப்பதற்கு ஆவன செய்தல்.
7. நாற்று மேடைகளில் உள்ள மிளகு, மா, தென்னை, பெரிய கொய்யா, வாழை போன்ற பயிர்ச் செய்கைகளை முறையாகப் பராமரித்து அதன் விளைச்சல்களை விற்பனை செய்வதன் மூலம் வருமானத்தை அதிகரித்தல்.

(எ) 2019 ஆம் ஆண்டில் இ வலயத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஹசலக, மினிப்பே மற்றும் வில்கமுவ பிரதேசங்களில் விவசாயம், கால்நடை வளங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதும், அதற்கு ஒன்றியதாக விக்டோரியா அலுவலகத்தின் பதவியணியை இ வலயத்திற்கு இணைத்தலானது முன்னெடுக்கப்பட்டது.

எனினும் இ வலயமானது புதிய அபிவிருத்தி வலயமாக அறிமுகப்படுத்தப்பட்டமையால் அதனுள் (வில்கமுவ, மினிப்பே மற்றும் ஹசலக) நிறுவப்பட்ட மகாவலிக் கட்டிடங்கள் இல்லாமையால் அலுவலகம் மற்றும் வதிவிட வசதிகளுக்காக தனியார் வாடகை வீடுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டதுடன், அதற்காக திணைக்கள கொள்முதல் அங்கீகாரத்தின் பேரில் வீட்டு வாடகைகள் செலுத்தப்பட்டு உள்ளன.

### 2.3.3 அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளைக் கையுதிர்த்தல்.

(அ) மகாவலி வலயங்களில் நிலவுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட காணிகள், தேசிய மற்றும் காலத்தின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு முறையான செயல்முறையின் ஊடாக விவசாய, தொழில்நுட்ப மற்றும் பல்வேறு செயற்திட்டங்களைப் போன்றே வசிப்பதற்காகவும் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் மற்றும் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அதற்கமைய இலங்கை மகாவலி அதிகார சபையினால் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக காணிகளைக் கையுதிர்க்கும் போது பின்பற்றுகின்ற செயல்முறை பின்வருமாறு.

இவ்வாறான முதலீட்டுக் காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதன் மூலம் தேசிய தேவைப்பாடுகளை இலக்காகக் கொண்டு விவசாய, கால்நடை வள உற்பத்தி மற்றும் தொழில்நுட்பத் துறை உற்பத்திகளை உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்து, பொருளாதாரத்தை வலுப்படுத்துதல், அந்நியச் செலாவணி உருவாக்கம், தொழில் வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதன் மூலம் தொழில் இன்மையை இல்லாதொழித்தல், வறுமையைப் போக்குதல் மற்றும் பிரதேச உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் இலக்குகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

அதற்கமைய இனங்காணப்பட்ட முதலீட்டுக் காணிகளுக்காக பத்திரிகை விளம்பரங்கள் மூலம் அபிலாஷைகளைக் கோருதல் அல்லது அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாட்டின் அடிப்படையில் தேர்வு அடிப்படையின் கீழ் முதலீட்டாளர்களைத் தெரிவு செய்யும் செயல்முறையானது பின்பற்றப்பட்டு உள்ளது. அதற்கமைய பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களைக் கொண்ட முறையான குழு ஒன்றின் மூலம் தொழில்நுட்ப, சமூக மற்றும் நிதிப் பிரமாணங்கள் ஊடாக தொழில்முயற்சியாளர்கள் பாராட்டப்படுவதுடன், காணிகளை காணி உபயோக திட்டத்திற்கு அமைய பௌதீக திட்டப் பரிந்துரைகளின் கீழ் முறையான செயல்முறையைப் பின்பற்றி அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கௌரவ விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு ஆவன செய்யப்பட்டு உள்ளன.

(ஆ) முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக கையுதிர்க்கப்பட்டு உள்ள காணிகள் தொடர்பாக 2023 ஆம் ஆண்டாகும் போது கையுதிர்க்கப்பட்டு இருந்த மொத்த காணிகளின் ஹெக்யடர் அளவு மற்றும் முதலீட்டாளர்களின் எண்ணிக்கையும் அதன் அபிவிருத்தி நிலைமையும் உள்ளடங்கிய அறிக்கை மூலம் குறிப்பிடப்பட்டு உள்ளது. இதில் காணியின் அபிவிருத்தி நிலைமையானது சார்பு அளவீடாக பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது.

(இ) பத்திரிகை விளம்பரங்கள் மூலம் அபிலாஷைகளைக் கோருதல் அல்லது தேர்வு அடிப்படையின் கீழ் முதலீட்டாளர்களைத் தெரிவு செய்யும் செயல்முறையானது பின்பற்றப்பட்டு உள்ளது. அதற்கமைய பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களைக் கொண்ட முறையான குழு ஒன்றின் மூலம் தொழில்நுட்ப, சமூக மற்றும் நிதிப் பிரமாணங்கள் ஊடாக தொழில்முயற்சியாளர்கள் பாராட்டப்படுவதுடன், காணிகளை காணி உபயோக திட்டத்திற்கு அமைய பௌதீக திட்டப் பரிந்துரைகளின் கீழ் முறையான செயல்முறையைப் பின்பற்றி அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கௌரவ விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் தெளிவுடன் கூடிய முறையான செயல்முறையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களுக்கு அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 30 வருட காலத்திற்காக நீண்ட கால குத்தகை வழங்குதல் முன்னெடுக்கப்படுகின்றது.

நீண்ட கால குத்தகை முடிவடைந்த பின்னர் வழமையான செயல்முறையின் அடிப்படையில் புதிய குத்தகை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு முதல் முதலீட்டாளருக்கு தேர்வு அடிப்படையில் வழங்குவதற்கு ஆவன செய்யப்படும். 30 வருடங்கள் முடிவடைந்த காணிகளுக்காக மீண்டும் குத்தகை வழங்குவதற்கு தற்பொழுது அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(ஈ) பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்திற்கு நிபந்தனைகள் உள்ளடங்கும் விதமாக உடைமையை ஒப்படைக்கும் அறிக்கையின் மூலம் காணி கையுதிர்க்கப்பட்டு உள்ளதுடன் மேலும், இதுவரையில் அறவிடப்பட வேண்டி உள்ள வரித் தொகையை அறவிடுவதற்காக வதிவிட வணிக முகாமையாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளது.

RAN பிளான்டேசன் நிறுவனத்திற்கு சோளகப் பயிர்ச் செய்கைக்காக அண்மையில் உள்ள காணியின் அரச விலை மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு காணி ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அம் முதலீட்டாளருக்கு காணியின் எல்லைகளைக் காண்பிக்கும் போது பிரச்சினைகள் ஏற்பட்டமையால் பயிர்ச் செய்கை மேற்கொள்ள இயலுமான அளவிற்கு மாத்திரம் பின்னர் செயலாற்றுகை வரித் தொகையான ரூ. 555,750.00 தொகை செலுத்தப்பட்டு உள்ளது. இக்காணிக்காக வேடர்களின் தலைவர் உட்பட நபர்களால் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு உள்ளமையால் காணியின் அபிவிருத்திப் பணிகளை இடை நிறுத்துமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டு உள்ளமையால் காணியின் அபிவிருத்திப் பணிகள் நிறுத்தப்பட்டு உள்ளன.

சோளக பயிர்ச் செய்கைக்காக சி. எஸ். டப்லியூ. ஹர்பல் பிளான்டேசன் நிறுவனம் மூலம் செயலாற்றுகை வரியாக ரூ. 450,000.00 தொகை செலுத்தப்பட்டு உள்ளதுடன் வருடாந்த வரித் தொகையை அறவிடுவதற்காக வதிவிட வணிக முகாமையாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளது.

(உ) என்.கே. என். எல். கன்ஸ்ரக்ஷன் என்ட் டிவலொப்மன்ட் நிறுவனத்திற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் இக்காணியானது வழங்கப்பட்டு உள்ளது. முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்டு குத்தகைக் காலம் நிறைவு செய்யப்பட்டு உள்ளது. புதிய குத்தகை வழங்கும் போது 50 ஏக்கர்களுக்கும் அதிகமான காணி என்பதால் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு குத்தகை அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நீண்ட கால குத்தகைக் காலம் முடிவடைந்த பின்னர் வழமையான செயல்முறையின் அடிப்படையில் புதிய குத்தகை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு முதல் முதலீட்டாளருக்கு காணியை வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். 30 வருடங்கள் முடிவடைந்த காணிகளுக்காக மீண்டும் குத்தகை வழங்குவதற்கு தற்பொழுது அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(ஊ) **<u>நந்தசேன ஹேரத்</u>**

இந் நபரின் பருமட்டான விலை மதிப்பீட்டின் அடிப்படையில் நிலுவை வரித் தொகை ரூ. 3,724,800.00 என கணக்காய்வுத் திகதியாகும் போது இனங்காணப்பட்டு இருந்தது. எனினும் தற்பொழுது மொத்த நிலுவை வரித் தொகை ரூ. 6,540,763.00 என இனங்காணப்பட்டு உள்ளது.

இந் நபரால் உரிய காணியில் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக அஸ்திவாரம் இடப்பட்டு உள்ளது. வேறு எவ்வித அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு இல்லை. இம் முதலீட்டாளரால் குறித்த காணியை இரத்துச் செய்வதற்கு எதிராகவும் மற்றும் குத்தகையை வழங்குமாறும் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. அபிவிருத்திக்காக 2 ½ வருட காலம் கோரப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட சகல நிலுவை வரிகளையும் செலுத்திய பின்னர் அபிவிருத்திக்காக வழங்குவதற்கு வழக்கின் இணக்கத்திற்காக ஆவன செய்யப்பட்டு வருகின்றது.

**<u>லயிசியம் சர்வதேச பாடசாலை</u>**

உரிய நிறுவனத்திடம் இருந்து நிலுவை வரித் தொகையான ரூ. 11,854,160.00 தொகை நிலுவை வரியாகக் காணப்படுவதுடன் அத்தொகையை அறவிடுவதற்காக விளக்கக் கோரிக்கைக் கடிதம் ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளது. எனினும் நிலுவை வரித் தொகையானது இதுவரையில் செலுத்தப்பட்டு இல்லை என்பதுடன் காணியை இரத்துச் செய்வதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**<u>லலித் சஞ்சீவ</u>**

கணக்காய்வுத் தகவல்களுக்கு அமைய லலித் சஞ்சீவ இற்குப் பதிலாக இரேசா ஸ்பைசி லங்கா தனியார் நிறுவனமாக திருத்தப்படல் வேண்டும். அந்நிறுவனத்தால் 2022.12.31 ஆம் திகதிக்கு ரூ. 2,168,618.00 தொகை நிலுவையாக உள்ளது. நாட்டில் நிலவிய கொரோனா நிலைமை காரணமாக வரி செலுத்துவதற்கு சலுகைக் காலம் ஒன்றை வழங்குமாறு குறித்த நிறுவனம் கோரி உள்ளது. எனினும் அதிகார சபையினால் குறித்த நிலுவை வரியைச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டு உள்ளதுடன் வரித் தொகையை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு விளக்கக் கோரிக்கைக் கடிதம் ஆற்றுப்படுத்த ஆவன செய்யப்பட்டு உள்ளது.

### 2.3.4 தொழிற்பாடற்ற அல்லது குறைப் பயன்பாட்டுச் சொத்துக்கள்

(அ) 2021 ஆம் ஆண்டில் அப்பொழுது நிலவிய சௌபாக்கியா விவசாய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பசுமை விவசாயத்தை நோக்கமாகக் கொண்டு பயிர்களுக்கு இரசாயனப் பசளைப் பயன்பாட்டை முற்றாக நிறுத்தியமை மற்றும் சேதனப் பசளைப் பயன்பாட்டிற்கு விவசாயிகளை ஆற்றுப்படுத்தும் அரச கொள்கைக்கு அமைய மகாவலி வலயங்களில் கொம்போஸ்ட் உற்பத்தி மற்றும் பயன்பாடு தொடர்பாக விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

அதற்கமைய மகாவலி வலயங்களுக்காக வர்த்தக ரீதியில் சேதனப் பசளை உற்பத்திக்காக, வினைத்திறனான உற்பத்தி செய்தல் மற்றும் அதன் கடுகதித் தன்மையை அதிகரிப்பதற்காக பல்வேறு இயந்திராதிகளை மகாவலி வலயங்களுக்கு கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டது.

அதில் பி வலயத்தின் அரலகங்வில விதை நெல் உற்பத்திப் பண்ணையில் 96 ஹெக்யடர் அளவான நீர்ப்பாசன நிலத்திற்கு அவசியமான சேதனப் பசளையை வினைத்திறனாகவும்

மற்றும் துரிதமாகவும் உற்பத்தி செய்யும் பொருட்டு இவ் இயந்திராதிகள் பண்ணைக்கு கொள்வனவு செய்தல் முன்னெடுக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் இக் கொள்வனவுகளுக்காக கொள்முதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் இயந்திரங்கள் பண்ணைகளுக்குக் கிடைக்கப் பெற்றது 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் கடைசிப் பாதியில் ஆகும். அதற்கமைய கொம்போஸ்ட் உற்பத்தி மற்றும் பண்ணைகளுக்காக இப்பசளையைப் பயன்படுத்துவதற்காக பண்ணை முகாமைகள் சகல ஏற்பாடுகளை முன்னெடுத்தாலும் 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வளங்களினால் பண்ணை அபிவிருத்திச் செயற்பாடுகள் பல நிலை குலைந்தன. அதற்கமைய கொம்போஸ்ட் உற்பத்திச் செயன்முறைக்குச் செலவாகின்ற மின்சாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக போதியளவு நிதி இல்லாமையால் தற்காலிகமாக இவ் இயந்திராதிகளைப் பயன்பாட்டிற்குக் கொள்வது தாமதம் அடைந்தது.

(பண்ணை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக மானியங்கள் மற்றும் எரிபொருள் குறைந்தமையால் மொத்த நீர்ப்பாசன நிலப்பரப்பான 95 ஹெக்டயரில் 47 ஹெக்டயர் மாத்திரம் 2022 ஆம் ஆண்டின் சிறு போக பயிர்ச் செய்கையை முன்னெடுக்க முடியுமாக இருந்ததுடன் 2022/23 பெரும் போகத்தில் 43 ஹெக்யடரில் மாத்திரமே பயிர்ச் செய்கையை முன்னெடுக்க முடியுமாக இருந்தாகவும், தொடர்ந்தும் போதியளவு மானியங்கள் இல்லாமையால் பண்ணை நீர்ப்பாசன நிலங்கள் 2023 ஆம் ஆண்டின் சிறு போகத்தில் இருந்து பிரதேச விவசாயிகளுக்கு போக குத்தகை வழங்கப்பட்டது என்பதனை குறிப்பிட்டுக் கொள்கின்றேன்.)

இந் நிலைமையின் அடிப்படையில் தொடர்ந்தும் பண்ணைகளில் கொம்போஸ்ட் உற்பத்திக்கு இவ் இயந்திரங்களைப் பயன்படுத்துவது கடினம் என்பதால் ஜீ வலயத்தில் கொம்போஸ்ட் பளை உற்பத்தி அலகிற்கு இவ் இயந்திரங்களை வழங்குவது தொடர்பாகவும் திட்டமிடப்பட்டாலும் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி மற்றும் தற்பொழுது இரசாயனப் பசளையைப் பயன்பாட்டில் கொள்வது தொடர்பாக அரச கொள்கைத் தீர்மானங்களின் அடிப்படையில் இவ் உற்பத்தி அலகின் உற்பத்திச் செயற்பாடுகள் தற்காலிகமாக நிலை குலைந்துள்ளது. ஆகையால் எதிர்வரும் காலத்தில் கொம்போஸ்ட் பசளை உற்பத்திச் செயல்முறையை ஆரம்பிப்பதற்கு இயல்திறன் உள்ள இடம் ஒன்றிற்கு இவ் இயந்திராதிகளை வழங்கி கொம்போஸ்ட் உற்பத்தியை முன்னெடுப்பதற்கு திட்டம் தீட்டப்பட்டு உள்ளது.

பாரிய மற்றும் சிறிய அளவிலான பல்நோக்கு துண்டாக்கல் இயந்திரங்கள் 23 ஆனது 2021 ஆம் ஆண்டில் சேதனப் பசளை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டதுடன் இவ் 23 இயந்திரங்களை வழங்குதல் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

| இயந்திர வகை | அளவு | வழங்கப்பட்ட வலயம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பி | சி | ஜீ | ர.ஓ. | எச் | வலவ |
| பல்நோக்கு துண்டாக்கல் இயந்திரங்கள் (நடுத்தர அளவு) | 11 | | 4 | - | - | 7 | - |
| பல்நோக்கு துண்டாக்கல் இயந்திரங்கள் (பாரிய அளவு) | 12 | 1 | - | 1 | 1 | 7 | 2 |
| கொம்போஸ்ட் கொட்டும் இயந்திரம் | 01 | * | - | - | - | - | - |
| கொம்போஸ்ட் கலக்கும் இயந்திரம் | 01 | | - | - | - | - | - |

*பண்ணை, அரலகங்வில

மேலே பெயர் குறிப்பிட்ட வலயங்களுக்கு இவ் இயந்திராதிகளை விநியோகித்தல் அவ் வலயங்களின் உற்பத்தி இயல்திறன் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் அடிப்படையில் வழங்குதல் முன்னெடுக்கப்பட்டது.

சி வலயத்திற்கு வழங்கப்பட்டுள்ள பல்நோக்கு துண்டாக்கல் இயந்திரங்கள் 04 இல் 03 இயந்திரங்கள் எச் வலயத்தின் உற்பத்தி இலக்குகள் மற்றும் அதிகளவான உற்பத்திக் கொள்ளளவின் அடிப்படையில் முறையாக வழங்குதல் முன்னெடுக்கப்பட்டு உள்ளது.

எச் வலய விவசாயிகளின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் அந்த 03 இயந்திராதிகளையும் வலயத்திற்கு முறையாக வழங்குதல் முன்னெடுக்கப்பட்டு உள்ளது.

காரணிகள் இவ்வாறு இருந்தாலும் 2022 ஆம் ஆண்டாகும் போது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி மற்றும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் தீர்மானங்களுக்கு அமைய மீண்டும் இரசாயனப் பசளைப் பயன்பாட்டிற்கு இடம் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பயன்பாடு குறைந்தது.

இதன் காரணமாக சேதனப் பசளை உற்பத்திக்கு கொள்வனவு செய்யப்பட்ட இவ் இயந்திரங்கள் பாற் பசு வளர்ப்பு நடவடிக்கைகளுக்கு பிரதியீடாக பயன்படுத்தப்பட்டதுடன் பாற் பசுக்களுக்கு உணவுகளை சூட்சுமமாக வழங்கும் முறையாக, குறித்த உணவு வகைகள் உதாரணம் – புல் வகைகளை சிறு துண்டுகளாக்கி வழங்குவதன் மூலம் பால் உற்பத்தி அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது. இதில் சேதனப் பசளை உற்பத்தியுடன் ஒப்பிடும் போது இவ் உபகரணங்கள் மூலம் இக் கால வரையறையில் பால் உற்பத்திக்காக இவ் உபகரணங்களை பயன்படுத்துவது ஒப்பீட்டளவில் இலாபகரமான மற்றும் வினைத்திறனான செயற்பாடாகும். அதனால் அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் சேதனப் பசளை உற்பத்தி குறைவடைந்ததன் மூலம் இயந்திராதிகளை குறித்த செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த முடியாமல் போனாலும் அவ் இயந்திராதிகள் மூலம் சிறந்த முகாமைத்துவத்துடன் கூடிய பாற் பசு வளர்ப்பிற்காக பயன்படுத்தியமை நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்கு முக்கியமான காரணியாக இருக்கும்.

(ஆ) பி வலயத்தில் நிறுவப்பட்டு இருந்த இயந்திரங்களில் உசாவலில் குறிப்பிடப்பட்டு இருந்த 09 இயந்திரங்களில் 06 இற்குரிய மீள் திருத்தங்களை முன்னெடுப்பதற்குரிய டெண்டர் செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சமூக நீர் விநியோக திணைக்களத்தின்

DNCWSTL/PD/4/6 ஆம் இலக்க மற்றும் 2023.10.06 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டு உள்ளது. 02 இயந்திரங்கள் சமூக உதவி அமைப்பான "Lions Club Colombo of Excellence" நிறுவனம் மூலம் உரிய மீள் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஏனைய இயந்திரங்கள் தொழிற்படு நிலைமையில் உள்ளன.

உசாவல் மூலம் குறிப்பிடப்பட்டு உள்ள எல் வலயத்தின் 04 இயந்திரங்களை மீள் திருத்தம் செய்வதற்காக சமூக நீர் விநியோக திணைக்களத்திற்கு அறிவித்த பின்னர் சமூக நீர் விநியோக திணைக்களத்தின் DNCWS/PD/மீள் அண்டிய, ஆம் இலக்க மற்றும் 2023.03.13 ஆம் திகதிய கடிதம் மூலம் குறித்த மீள் திருத்தங்களை முன்னெடுப்பதற்காக ஆரம்ப கட்ட கொள்முதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

**2.3.5 செயற்திட்ட செயலாற்றுகை**

(அ) கந்தகாடு விவசாய முதலீட்டுத் திட்டத்தின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் அதன் எதிர்வரும் நடவடிக்கைகளை ஒப்படைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று 2023.06.01 ஆம் திகதி இடம் பெற்றது. (இலங்கை மகாவலி அதிகார சபையின் உத்தியோகத்தர்களின், NLDB, ஸ்ரீ ஜயவர்தனபுற பல்கலைக்கழக உத்தயோகத்தர்களுடன்)

இதில் ஸ்ரீ ஜயவர்தனபுற பல்கலைக்கழகம் மூலம் முன்னெடுக்கப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ள ஆலோசனைச் சேவைகளுக்குரிய எஞ்சிய கொடுப்பனவைச் செலுத்துதல் தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை நிராகரிக்கின்றமையால் உடன்படிக்கைப் பிரகாரம் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை இலங்கை மகாவலி அதிகார சபைக்குப் பெற்றுக் கொள்வதற்காக பணிப்பாளர் சபையின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்கு ஆவன செய்யப்பட்டு உள்ளன.

இதற்காக பணிப்பாளர் குழாம் மகஜர் ஒன்று 2023.08.08 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 2023/353/5279 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானம் மூலம் இச் சுற்றாடல் மதிப்பீட்டுப் பணிகளுக்காக இதுவரையில் ஏற்கப்பட்டு உள்ள செலவுகள் மற்றும் உடன்படிக்கைப் பிரகாரம் எதிர்வரும் காலத்தில் செய்ய வேண்டிய கொடுப்பனவுகள் தொடர்பாக ஆலோசனைகள் மற்றும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவைக்கு அமைச்சரவை மகஜர் ஒன்றை முன்வைக்குமாறு வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைய அமைச்சரவை மகஜர் ஒன்றைத் தயாரித்து அமைச்சரவை அங்கீகாரத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளது.

(ஆ) மகாவலி பி, சி மற்றும் உடவலவ வலயங்களில் புற் தரையாக விடுவிப்பதற்கு உகந்த காணித் துண்டுகளை இனங்காண்பது நிறைவடைந்து உள்ளது. உடவலவ வலயத்தில் மயுரபுற தொகுதியில் புற் தரைக்காக ஒதுக்கப்பட்டு உள்ள நிலப் பரப்பில் 735.36 ஹெக்யடர் பகுதியில் எருமை மாடு இன விருத்திப் பண்ணைகள் 15 இற்காக 75 ஏக்கர்களை விடுவிப்பதற்கு சுற்றாடல் அங்கீகாரம் மற்றும் (பால் விவசாயிகளைத் தெரிவு செய்வது நிறைவடைந்துள்ளதுடன்) அக் காணித் துண்டுகளை கையுதிர்ப்பதற்காக கௌரவ ஜனாதிபதி அவர்களின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நீர்ப்பாசன அமைச்சின் செயலாளருக்கு MASL/LD/22/01 ஆம் இலக்க மற்றும் 2023.08.25 ஆம் திகதிய கடிதம் ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளது.

இச் செயற்திட்டத்திற்காக குறித்த நேரியல் அமைச்சுக்களின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்று உள்ளது. (மத்திய சுற்றாடல் அதிகார சபை, தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் நிலை அளவைத் திணைக்களத்தின் மூலம் குழுத் திட்டம் தயாரித்து வழங்கப்படுதல்.)

2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக இச் செயற்பாடானது சற்று தாமதம் அடைந்தாலும் முன்மொழியப்பட்ட நிலங்களை பால் விவசாயிகளுக்கு பிரித்து வழங்குவதற்கு 2022.07.21 ஆம் திகதி காணிக் கச்சேரி ஒன்று நடாத்தப்பட்டு 47 நபர்களுக்கு கையுதிர்ப்பதற்கு சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் நவம்பர் மாதமாகும் போது எல் வலயத்தின் புற் தரைகளை பால் விவசாயிகளுக்கு விடுவிப்பதற்கு அவசியமான சட்ட நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டு இருந்தாலும் ஜனாதிபதியின் செயலாளரின் PS/CSA/00/08 ஆம் இலக்க மற்றும் 2022.11.11 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைய இலங்கை மகாவலி அதிகார சபைக்கு அரச காணிகளை கையுதிர்ப்பதை தற்காலிகமாக இடை நிறுத்தி உள்ளமையால் செயற்திட்டத்தின் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு உள்ளன என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(இ) பாற் பசு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு மாட்டுப் பட்டிகள் 150 மற்றும் நீர்த் தொட்டிகள் 150 ஐ நிறுவுவதற்கு முற்பணம் விடுவிக்கப்பட்டாலும் நாட்டினுள் நாளாந்தம் பொருட்களின் விலைவாசி அதிகரிக்கின்ற காரணத்தால் அத் தொகைக்கு மாட்டுப் பட்டிகள் மற்றும் உணவுத் தொட்டிகள் அமைக்க முடியாது என அறிவிக்கப்பட்டு உள்ளது.

அதற்கமைய காணப்படுகின்ற மானியங்களின் கீழ் 74 மாட்டிப் பட்டிகளை அமைக்குமாறு எனது MASL/LD/38-1 ஆம் இலக்க மற்றும் 2022.06.21 ஆம் திகதிய கடிதம் மூலம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு உள்ளது.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் (நிதி) இன் CSB/ACCT/C/18/06/23 (06) ஆம் இலக்க மற்றும் 2023.06.01 ஆம் திகதிய கடிதம் மூலம் இதற்காக ரூ. 14,185,303.70 தொகை செலவிடப்பட்டு உள்ளதாகவும், எஞ்சிய தொகைக்காக 2023.06.01 ஆம் திகதிய ரூ. 64,696.30 ஆன காசோலை எமக்கு வழங்கப்பட்டு உள்ளது.

எனினும் முற்பணத் தொகையை நிர்ணயிப்பதற்காக வழங்கப்பட்ட விபரங்கள் போதியதாக இல்லாமையால் அக் காசோலை மற்றும் முறையாகவும் துரிதமாக நிர்ணய அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அந் நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

(ஈ) முதுவெல்ல செயற்திட்டத்தின் சுற்றாடல் மதிப்பீட்டு நடவடிக்கைகளின் கள நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதும் பின்வரும் நிலைமைகள் காரணமாக அதன் பணிகளை முன்னோக்கிச் செயற்படுத்துவதற்கு சிக்கலான நிலைமை எழுந்துள்ளதுடன் அதற்கமைய திட்டமிடப்பட்ட காலத்தை விட மதிப்பீட்டு நடவடிக்கைகள் தாமதம் அடைந்தன.

i. கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக ஏற்பட்ட பயணக் கட்டுப்பாடு காரணமாக மாகாணங்களுக்கு இடையிலான பயணங்களை முன்னெடுப்பது இடைநிறுத்தப்பட்டமை மற்றும் அக்காலத்தில் பல்கலைக்கழக பதவியணியுடன் ஒருங்கிணைப்புச் சிக்கல்கள் எழுந்தமை.

ii. கள மதிப்பீட்டு நடவடிக்கைகளிக் ஆரம்பத்தில் செயற்திட்ட நிலப் பிரதேசத்திற்கு அண்மையில் உள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் நிலத்தை அண்டிய சட்ட விரோத குடியிருப்பாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தமையால் மற்றும் அவ் எதிர்ப்புகளுக்குக் காரணமாக இருந்த காணிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சில காலம் சென்றமை.

iii. செயற்திட்ட அபிவிருத்திக்காக பத்திரிகைகள் முலம் வெளி முதலீட்டாளர்களிடம் இருந்து அபிவிருத்தி அபிலாஷைகள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் தனியார் முதலீட்டாளர்களால் அவர்களுடைய நிதிச் செலவில் அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதன் கீழ் செயற்பட்டமையால் நீர் மூலாதாரங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைளுக்கான இயலுமை ஆய்வானது மகாவலி அதிகார சபையால் முன்னெடுக்கப்படாவிட்டாலும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய மற்றும் சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட குறிப்பு விதிமுறைகளுக்கு அமைய (Terms of Reference) மற்றும் சுற்றாடல் மதிப்பீட்டு நடவடிக்கைகளின் தேவைப்பாடுகளின் பொருட்டு செயற்திட்டத்தின் நீர் மூலாதாரங்கள் தொடர்பாக ஆய்வுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி என்பன மகாவலி அதிகார சபையினால் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் அது தொடர்பாக திட்டம் தயாரிப்பதற்காக காலம் சென்றமை.

கொழும்புப் பல்கலைக்கழகம் மூலம் வரைவு IEE அறிக்கையானது 2022.10.17 ஆம் திகதி தயாரித்து வழங்கப்பட்டதுடன் அவ் அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது. மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் ஏனைய நிறுவனங்கள் அவ் அறிக்கையை ஆராய்ந்து மீண்டும் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டதுடன் இறுதி அறிக்கையானது 2023.07.09 ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

இறுதி IEE அறிக்கையை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு முன்வைத்து செயற்திட்டத்திற்காக சுற்றாடல் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டு உள்ளமையால் இச் செயற்திட்டத்திற்குரிய எதிர்வரும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு சாத்தியம் உள்ளது.

(உ) மகாவலி சி வலயத்தில் ரத்கிந்த வித்து உற்பத்திப் பண்ணையின் நீர்ப் பாசன/ மானாவாரி காணிகள் 2013 ஆம் ஆண்டில் இருந்து ஏலமிடும் செயல்முறையின் அடிப்படையில் போக குத்தகை அடிப்படையில் வலயத்தின் நீர்ப்பாசன காணி உரித்து இல்லாத இரண்டாவது மற்றும் மூன்றாவது பரம்பரையைச் சேர்ந்த இளம் சமூகத்திற்கு வழங்குதல் முன்னெடுக்கப்பட்டது. எனினும் 2021 ஆம் ஆண்டில் அரச கொள்கையின் பேரில் வலய விவசாய சமூகத்திற்கு சான்றுப்படுத்தப்பட்ட விதை நெல் விநியொகிக்கும் நோக்கில் ரத்கிந்த பண்ணையின் 196 ஹெக்டயர் நீர்ப்பாசன நிலங்களில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் சிறு போகத்தில் இருந்து மகாவலி அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

2020 ஆம் ஆண்டு பரவிய கொவிட் தொற்று நிலைமையின் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக 2021/22 பெரும் போகத்தின் போது இரசாயனப் பசளை மற்றும் விவசாய உபகரணங்களின் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டமையால், 2022 ஆம் ஆண்டின்

சிறு போகத்தின் போது நாடு எரிபொருள் தட்டுப்பாட்டிற்கு முகங் கொடுக்க வேண்டி நேர்ந்தமையால் நிலங்களைச் சீராக்கும் பணிகளை உரிய காலத்தில் முன்னெடுப்பதற்கு முடியாமல் போனமையால், 2022/23 பெரும் போகத்தின் போது திறைசேறி மானியங்களைப் பெற்றுக் கொள்வது மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் நிதிப் பாய்ச்சல் உரிய முறையில் கிடைக்கப் பெறாமையால் இலக்குகளை அடைவதில் சிக்கல்கள் ஏற்பட்டமை போன்ற காரணங்களால் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட நிலங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக குறைக்க வேண்டி ஏற்பட்டமை.

மேலும் தற்பொழுது திறைசேறி நிதியைப் பெற்றுக் கொள்ளும் போது நிலவுகின்ற நெருக்கடிகளுக்கு மத்தியில் பண்ணைகளில் நிலவுகின்ற இயல்திறன்களின் அடிப்படையில் அபிவிருத்திப் பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லுதல், இலாபகரமான பொருளாதார அலகாக மாற்றுதல் மற்றும் தேசிய உற்பத்திக்கு உயர் பங்களிப்பை வழங்குதலை நோக்காகக் கொண்டு அரச தனியார் பங்குடையைமை செயல்முறைக்கு அல்லது நீண்ட கால குத்தகை செயல்முறைக்கு தனியார் முதலீட்டாளர்களைத் தொடர்பு கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கமைய முறையான செயல்முறைகளைப் பின்பற்றி பொருத்தமான முதலீட்டாளர்களைத் தொடர்பு கொள்வதற்கான பணிகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், இதற்காக சில காலம் செல்கின்றமையால் முழுமையான நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை முன்னெடுத்தல் மற்றும் நெல் உற்பத்தியை இலக்காகக் கொண்டு 2023 சிறு போகத்தில் இருந்து முறையான செயல்முறையின் அடிப்படையில் பண்ணை நீர்ப்பாசன/ மானாவாரி நிலங்களை ஏலமிடும் செயல்முறையின் அடிப்படையில் போக குத்தகைக்கு வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் 193 ஹெக்டயர் நிலத்தை போக குத்தகைகு வழங்கியதன் மூலம் 14.6065 மில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்டுவதற்கு முடிந்தது.

2021 ஆம் ஆண்டில் விவசாய இராஜாங்க அமைச்சு வழங்கிய மானியங்களைப் பயன்படுத்தி ரத்கிந்த வித்து உற்பத்திப் பண்ணையில் விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல், பண்ணை உட்கட்டமைப்பு வசதிகளை நவீன மயப்படுத்துதல் மற்றும் 03 சூட்டு மேடைகளை நிர்மாணித்தல் என்பன இயல்திறன் உற்பத்திக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்பு வழங்குகின்றது. 2021/22 பெரும் போகத்தில் விதை நெல் மெ.தொ. 403 மற்றும் வர்த்தக நெல் மெ.தொ. 52 உற்பத்திக்கு இம்முறை உதவியாக இருந்ததுடன், விற்பனை மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியின் பெறுமதி சுமார் 71 மில்லியன் ரூபாய் ஆகும். விதை நெல் உற்பத்தியானது சிக்கலான மற்றும் சூட்சுமமான செயல்முறைகளைக் கொண்டதுடன், நிலத்தைத் தயாரிப்பதில் இருந்து அறுவடைக்குப் பின்னரான சேதங்களை குறைத்தல் வரையான இச் செயல்முறையில் மேற்குறிப்பிட்ட பெற்றுக் கொள்ளப்பட்ட உபகரணங்கள் மற்றும் வசதிகளானது முறையான விதத்தில் சில போகங்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. எனினும் தற்பொழுது திறைசேரியில் இருந்து மானியங்களைப் பெற்றுக் கொள்வதில் எழுந்துள்ள சிக்கல்கள் காரணமாக பண்ணை விதை நெல் உற்பத்திச் செயற்பாடுகளை எவ்விதத்திலும் முன்னெடுக்க முடியாமையினால் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தனியார்

முதலீட்டாளர்களைத் தொடர்பு கொள்ளும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வரையில் ஏலமிடும் செயல்முறைக்கு அமைய போக குத்தகை வழங்குதலை முன்னெடுக்க வேண்டி உள்ளது.

அதற்கமைய மேற்குறிப்பிட்ட நிதியை தொழிற்பாடற்ற செலவாக அல்லாமல் முதலீடாக கருத்தில் கொள்ள முடியும்.

(ஊ) சிறிய அளவான நீர் மின் உற்பத்திச் செயற்திட்ட முதலீட்டாளர்களால் 2021 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கருத்திற் கொண்டு அப்போதைய ஜனாதிபதியின் செயலாளர் அவர்களால் "நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணம்" அறவிடுவதனை இடைநிறுத்துமாறு இலங்கை மகாவலி அதிகார சபைக்கும் மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டு இருந்தது. அதற்கமைய அத்தீர்மானம் வழங்கப்பட்ட 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து குறித்த நீரேந்து பிரதேச முகாமைத்திவக் கட்டணமானது இலங்கை மகாவலி அதிகார சபைக்குக் கிடைக்கப் பெறவில்லை.

அவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் குறித்த நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணத்தை மீண்டும் அறவிட முடியும் என ஜனாதிபதியின் செயலாளர் அவர்களாலேயே ஆலோசனை வழங்கப்பட்டது. அதற்கமைய 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணமானது கிடைக்கப் பெற வேண்டுமாயினும் அப்பொழுது இலங்கை மின்சார சபையானது முகங்கொடுத்து இருந்த நிதி நெருக்கடி காரணமாக சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரத்திற்காக கட்டணம் செலுத்தப்படாததுடன் அதற்கமைய இலங்கை மகாவலி அதிகார சபைக்கும் கிடைக்கப் பெற வேண்டிய நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணமும் கிடைக்கப் பெறவில்லை. எனினும் தற்பொழுது நிதி நெருக்கடியானது கொஞ்சம் கொஞ்சமாக இயல்பு நிலைக்குத் திரும்புகின்றமையால் இலங்கை மின்சார சபையினால் குறித்த சிறிய அளவிலான நீர் மின் உற்பத்திச் செயற்திட்டத்திற்காக நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. அதற்கமைய தற்பொழுது இலங்கை மகாவலி அதிகார சபைக்கும் குறித்த நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணமானது 2023 ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தில் இருந்து கிடைக்கப் பெற்று வருகின்றது.

எவ்வாறாயினும், ஜனாதிபதியின் செயலாளரின் ஆலோசனைப் பிரகாரம் நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணம் செலுத்துவதை இடைநிறுத்திய 2021 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் வரையான காலப்பகுதிக்கு நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணத்தை அறவிட முடியாமல் உள்ளது.

(எ) நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆரம்ப கட்டமாக அத்தியாவசியப் பணிகளை இனங்காண்பதற்காக ஒவ்வொரு வலயம் மூலமும் பணி விபரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அதில் மானியங்கள் மற்றும் அத்தியாவசியமாக முன்னெடுக்கப்பட வேண்டிய பணிகளுக்கு அமைய பின்வருமாறு 275 குளங்கள் தெரிவு செய்யப்பட்டன.

குளங்களை மாத்திரம் அபிவிருத்தி செய்தல் – 199 குளங்கள்

குளங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் வண்டல் நீக்குதல் – 10 குளங்கள்

வண்டல் நீக்குதல் – 66 குளங்கள்

அவற்றில் 152 குளங்களின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன.

2020 ஆம் ஆண்டில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட குளங்களின் எண்ணிக்கை – 20

2021 ஆம் ஆண்டில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட குளங்களின் எண்ணிக்கை – 100

2022 ஆம் ஆண்டில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட குளங்களின் எண்ணிக்கை – 32

எஞ்சிய 123 குளங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

2022 ஆம் ஆண்டில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டிலும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்ற குளங்களின் எண்ணிக்கை – 06

மானியங்கள் குறைந்தமையால் நிறுத்தப்பட்டுள்ள குளங்களின் எண்ணிக்கை – 30

திட்டமிடல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற குளங்களின் எண்ணிக்கை – 08

நிதி ஏற்பாடுகள் இல்லாமையால் மற்றும் குளங்களின் தாபரிப்பு மற்றும் செயற்பாட்டுப் பணிகளுக்கு தாக்கம் ஏற்படாது என்பதால் கட்டுமானங்கள் நிறுத்தப்பட்டு உள்ள குளங்களின் எண்ணிக்கை – 12

நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டாலும் எவ்வித கட்டுமானங்களும் முன்னெடுக்கப்படாத குளங்களின் எண்ணிக்கை – 67

(ஏ) இவ் ஒப்பந்தமானது 2021.09.17 ஆம் திகதி ரூ. 34,475,753.07 + VAT தொகைக்கு யூ.பீ. ரனுங்கே நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு உள்ளது. ஒப்பந்தத்தின் பிரகாரம் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி 2021.10.01 என்பதுடன், 2022.07.08 ஆம் திகதிக்கு பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்தன. எனினும் 2021 சிறு போகத்திற்காக நீர் விநியோகம் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் அதன் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், 2021/2022 பெரும் போகம் மற்றும் 2022 சிறு போகம் இற்கான நீர் விநியோகம் நிறைவு செய்யப்பட்ட பின்னரான காலப்பகுதியில் இதன் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. ஏனெனில், நாட்டில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார சிக்கல்கள் காரணமாக அவ் ஆண்டில் வருடாந்த பணித் திட்டத்தில் இச் செயற்திட்டத்திற்கு நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்வதற்கு முடியாமல் போனமை இதற்குக் காரணடாக அமைந்தது. அதனால் 2023.08.04 ஆம் திகதி வரையில் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் முற்பண முறி மற்றும் செயலாற்றுகை முறி என்பன நீடிக்கப்பட்டு உள்ளன. இதில் 2023 சிறு போகத்திற்கான நீர் விநியோகம் நிறைவு செய்யப்பட்ட பின்னர் எஞ்சிய பணிகளைப் பூர்த்தி செய்து செயற்திட்டத்தை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ) ரம்பகண் ஓயா வலயத்தின் பொல்பெத்த தொகுதியின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்குரியதாக 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி ரூ. 4,861,103/= இற்கு ஒப்பந்த இலக்கம் MA/TS/RAMBA/B/14 இன் கீழ் இன்டிபெண்டன்ட் கன்ஸ்ரக்ஷன் என்ட் டிவலப்மன்ட் எனும் ஒப்பந்ததாரிக்கு வழங்கப்பட்டு உள்ளது. 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் திகதிக்கு பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனினும், அதன் ஆரம்ப ஒப்பந்ததாரி அவ் ஒப்பந்தத்தை கை விட்டுச் சென்றிருந்தார். அவ் ஒப்பந்ததாரியான இன்டிபெண்டன்ட்

கன்ஸ்ரக்ஷன் என்ட் டிவலப்மன்ட் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டு இருந்த இயக்கல் முற்பணத் தொகையான ரூ. 1,243,051.56 தொகையை அறவிடுவதற்காக மகாவலி அதிகார சபையின் சட்டப் பிரிவின் மூலம் சட்டமா அதிபரிடம் விபரங்களைக் கேட்டுள்ளதுடன், அதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு சட்டப் பிரிவின் மூலம் எதிர்வரும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் அவ் ஒப்பந்தத்தின் எஞ்சிய பணிகளை DDG/TS/CON/RAMBA/B/14 இன் கீழ் கட்டுமானங்களைப் பூர்த்தி செய்து பயன்பாட்டிற்குக் கொள்வதற்கு ஆவன செய்யப்பட்டு உள்ளன.

(ஒ) ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்வரும் காலத்தில் இவ்வாறான நிலைமைகளைக் குறைத்துக் கொள்ளும் விதமாக செயற்படுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றேன்.

(ஓ) இதற்காக ரூ. 43,883,862.00 தொகையானது வீதி அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து வலவ வலயத்திற்குக் கிடைக்கப் பெற்றது. நீர்ப்பாசனக் கால்வாய்கள் உட்பட கட்டமைப்புக்களுக்கு ஏற்பட்ட சேதங்களை இயல்பு நிலைக்கு மாற்றுவதற்கு 10 செயற்திட்டங்களுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 08 செயற்திட்டங்களுக்காக பணி அங்கீகாரம் கிடைக்கப் பெற்று கொள்முதல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### 2.3.6 இனங்காணப்பட்ட இழப்புகள்

(அ) வதிவிட வணிக முகாமைத்துவ இ வலயத்திற்குச் சொந்தமான WP/PD – 0455 கெப் வண்டியானது 2021.05.07 ஆம் திகதி விபத்திற்கு உள்ளானமை தொடர்பாக ஆரம்ப கட்ட விசாரணையை மேற்கொண்டு அப் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு கெப் வண்டியின் மீள் திருத்தங்களை முன்னெடுத்தல் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் காப்புறுதியில் உள்ளடங்காத தொகையை கெப் வண்டியின் சாரதியாக பணியாற்றிய ஊழியரிடம் இருந்து அறவிடுவதற்கு அறிவிக்கப்பட்டு உள்ளது.

வாகன மீள் திருத்தத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ. 3,419,152.42 என்பதுடன் அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 இன் பிரகாரம் செயலாளர், நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு MASL/ADM/DP/2337 ஆம் இலக்க மற்றும் 2023.08.23 ஆம் திகதிய கடிதம் மூலம் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

(ஆ) CAE – 1918 ஆம் இலக்க வாகனம் விபத்துக்கு உள்ளானமை தொடர்பாக ஆரம்ப கட்ட விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்குரிய வாக்குமூலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தருமாறு இரண்டு சந்தர்ப்பங்களில் வெவ்வேறாக அப்போதைய மகாவலி கேந்திய மையத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய உத்தியோகத்தருக்கு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய சாரதிக்கும் அறிவித்து இருந்தாலும் அதற்காக வருகை தரவில்லை.

வாகனம் விபத்திற்கு உள்ளானமையால் மகாவலி அதிகார சபைக்கு ஏற்பட்ட நிதி இழப்பீடுகளை காப்புறுதியில் உள்ளடங்காத தொகையான ரூ. 1,652.40 ஐ செலுத்துமாறு

அதன் சாரதி அவர்களுக்கு அறிவித்து இருந்தாலும் அதற்காக இதுவரையில் பணத்தைச் செலுத்தி இல்லை என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(இ) **WP PH – 0845 ஆம் இலக்க கெப் வண்டி விபத்துக்கு உள்ளானமை.**

மகாவலி அதிகார சபைக்கு ஏற்பட்ட நிதி இழப்பீடுகளை காப்புறுதியில் உள்ளடங்காத தொகையான ரூ. 6,217,909.16 (ரூ. 9,991,909.16 – ரூ. 3,774,000.00) ஐச் செலுத்துமாறு குறித்த உத்தியோகத்தருக்கு 2023.05.29 ஆம் திகதிய மற்றும் 2023.06.16 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டு உள்ளது. கொடுப்பனவு தொடர்பாக இதுவரையில் எவ்விதப் பதிலும் கிடைக்கப் பெறவில்லை. ஆகையால் 2023.08.07 ஆம் திகதிய கடிதம் மூலம் இது தொடர்பாக அவசியமான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சட்டப் பிரிவின் மூலம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**2.3.7 வாகன முறைமை முகாமைத்துவம்**

(அ) **WP JF – 3105 ஆம் இலக்க கெப் வண்டி காணாமல் போனமை.**

வலவ வலயத்திற்கு இணைக்கப்பட்ட WP JF – 3105 ஆம் இலக்க கெப் வண்டி காணாமல் போனமை தொடர்பாக ஆரம்ப கட்ட விசாரணையை மேற்கொள்வதற்காக 2023.05.02 ஆம் திகதிய கடிதம் மூலம் நியமிக்கப்பட்ட குழுவின் முலம் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளுக்காக எதிர்வரும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக் கெப் வண்டி காணாமல் போனமை தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 (1) இற்கமைய 2023.06.21 ஆம் திகதிய கடிதம் மூலம் அமைச்சரவையின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு உள்ளதுடன் நிதிப் பிரமாணம் 104 (4) விசாரணைகளுக்காக செயலாளர் அவர்களால் நியமிக்கப்பட்ட குழுவின் பிரகாரம் உரிய விசாரணை ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.

(ஆ) நீர்ப்பாசன அமைச்சிற்குச் சொந்தமான இந்த வாகனத்தை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு கையளிக்குமாறு அல்லது அவ் வாகனத்தை நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குக் கொண்டு செல்லுமாறு அறிவிக்கப்பட்டாலும் அதற்கான எவ்வித பதில்களும் கிடைக்கப் பெறவில்லை.

(இ) துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட காலப் பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட குறித்த வாகனமானது அச் சந்தர்ப்பங்களில் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்ட அலுவலகங்களின் பெயரிலும், இன்னும் சில வாகனங்கள் வாகன நிதி வழங்குகின்ற நிறுவனங்களின் பெயரிலும் பதிவு செய்யப்பட்டு உள்ளன. குறித்த வாகனங்கள் செயற்திட்ட முடிவில் அதன் அடிப்படை நிறுவனமான இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தாலும் அவற்றின் பதிவு உரிமையை முறையான விதத்தில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. 30 வருடங்களுக்கும் அதிகம் பழைமையான இச் சிதைவடைந்த வாகனங்களின் உரிமை குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் தற்பொழுது நாட்டில் செயற்பாட்டில் இல்லை.

31 – 9908 ஆம் இலக்க மற்றும் 32 – 2129 ஆம் இலக்க வாகனங்களின் உரிமை முறையே ஹயாமாதோடா மற்றும் ஹில் இன்டர்நெசனல் ஆகிய நிதி வழங்கும் வெளிநாட்டு

நிறுவனங்களுக்குச் சொந்தமானது. மேற்குறிப்பிட்ட இரு வாகனங்களும் மேற்குறிப்பிட்ட (II) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக கொண்டு வரப்பட்ட வாகனங்கள் ஆகும். அவற்றின் படலிமை இலக்கங்களை பதிவழித்து நீக்கி மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்திற்கு ஒப்படைப்பதற்கு ஆவன செய்யப்பட்டு உள்ளன. 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற கையுதிர்ப்புச் (Disposal) செயல்முறையின் கீழ் சிதைவுப் பொருட்களாக (இரும்பின் பாரத்திற்கு) குறித்த டெண்டருக்கு அமைய விற்பனையாளர்களால் ஏற்கனவே பணம் செலுத்தப்பட்டு வலயங்களில் இருந்து கொண்டு செல்லப்பட்டு உள்ளன.

2023 ஆம் ஆண்டு மே மாதத்தில் வாகனங்களாக கையுதிர்ப்பதற்கு இனங்காணப்பட்டு உள்ள வாகனங்களின் அகற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு முடிவடைந்துள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

### 2.3.8 மனித வள முகாமைத்துவம்

2023.09.01 ஆம் திகதிக்கு கௌரவ விடயப் பொறுப்பு அமைச்சரின் தலைமையில் மற்றும் நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் கலந்து கொண்டு அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள சகல நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுடனும் இடம் பெற்ற விசேட கலந்துரையாடலில் இலங்கை மகாவலி அதிகார சபையின் தற்போதைய வகிபாகங்களுக்கு இணங்கியதாக மீள ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத் திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டும் எனவும், அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்து அவ் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் இலங்கை மகாவலி அதிகார சபையின் எதிர்வரும் பணித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு ஆவன செய்யுமாறும் தீர்மானிக்கப்பட்டமை.

அதற்கமைய உள்ளக விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டு பதவி வெற்றிடங்களை நிரப்புவது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டு உள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஒப்பம்)
எம். எல். டி. சி. மஹேந்திர அபேவர்தன,
பணிப்பாளர் நாயகம்,
இலங்கை மகாவலி அதிகார சபை

பிரதிகள் –

1. செயலாளர் – நீர்ப்பாசன அமைச்சு
2. செயலாளர் - நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

# வருடாந்த

# செயலாற்றுகை

# அறிக்கை

# 2022

# பகுதி - V

**உள்ளடக்கம்**

**1.1 இலங்கை மகாவலி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் 198**

**1. வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம் 198**

**2. ரம்பகன் ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டம் 199**

**3. ரிதிமாலியத்த ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டம் 200**

**1.2 ஒவ்வொரு பிரிவிலும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் 201**

**1.2.1 விவசாயம், கால்நடைகள் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளின் முன்னேற்றம் 201**

**1.2.2 நீர்ப்பாசன சுபீட்சம் திட்டம் 203**

**1.2.3 மகாவலி முதலீட்டு வலயங்கள் மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா வலயங்களின் அபிவிருத்தி 203**

**1.2.4. தாபன அபிவிருத்திப் பிரிவின் முக்கிய செயல்பாடுகளின் முன்னேற்றம் 203**

**1.2.5 காணிகளை வழங்குதல் 204**

**1.2.6. சுற்றுச்சூழல் பாதுகாப்பு 204**

1.1 இலங்கை மகாவலி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம்

**1. வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம்**

<table>
<tr><td>மதிப்பிடப்பட்ட மொத்த செலவினம் (மி.ரூ)</td><td>3957.10</td><td>பயன்பெறும் மாவட்டம்</td><td>அநுராதபுரம், வவுனியா, முல்லைதீவு</td></tr>
<tr><td>நிதி மூலாதாரம்</td><td>GOSL</td><td rowspan="2">பயனாளிகள்</td><td rowspan="2">5,700 குடும்பங்கள்</td></tr>
<tr><td>செயற்திட்ட கால எல்லை</td><td>2012-2023</td></tr>
<tr><td>நிதி ஒதுக்கீடு 2022<br>(மி. ரூபாய்)</td><td>40.00</td><td>2023 மானியம் கோருதல்<br>(மி. ரூபாய்)</td><td>32.00</td></tr>
<tr><td rowspan="2">ஒட்டுமொத்த நிதி முன்னேற்றச் செலவினம் (மி.ரூபாய்)</td><td rowspan="2">2534.386</td><td>நிதி முன்னேற்றம் 2022 (மி. ரூபாய்)</td><td>37.666</td></tr>
<tr><td>மொத்த பௌதீக முன்னேற்றம்</td><td>92.5 %</td></tr>
<tr><td>பௌதீக முன்னேற்றம் - 2022</td><td colspan="3">• சாலைகள் கட்டுமானம் மற்றும் புனரமைப்பு - 30 கி.மீ<br>•குளங்களின் மீளுருவாக்கம் - 01 தொட்டிகள்<br>• நீர்ப்பாசன கால்வாய் புனரமைப்பு - 1.5 கி.மீ<br>• கட்டிடங்களின் கட்டுமானம் மற்றும் புனரமைப்பு - 01 கட்டிடம்<br>• அளவீடு செய்யப்பட்ட நிலப் பகுதி - 744 துண்ட இலக்கங்கள்<br>• உரித்து வழங்குதல் - 1940 வழங்கல் மற்றும் உரித்துப் பத்திரங்கள் நிறைவு செய்யப்பட்டு உள்ளன.<br>• நிறுவன மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டம் - 83 திட்டங்கள்</td></tr>
<tr><td>மொத்த பௌதீக முன்னேற்றம் 2022.12.31</td><td colspan="3">• 422 கி.மீ சாலைகள் நிர்மாணம் மற்றும் புனரமைப்பு<br>• 393 புதிய மதகுகள் புனரமைக்கப்பட்டன<br>• 81 கிமீ கால்வாய்கள் புனரமைக்கப்பட்டுள்ளன<br>• 01 குளம் மற்றும் 131 புனரமைக்கப்பட்ட 131 நீர்ப்பாசன கட்டமைப்புகளின் கட்டுமானம் மற்றும் புனரமைப்பு<br>• 16698 காணித் துண்டங்கள் அளவீடு செய்யப்பட்டுள்ளன.<br>• 5412 மானியங்கள் மற்றும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டன<br>• 1498 நிறுவன மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் நடத்தப்பட்டன<br>• 140 கட்டிடங்களின் கட்டுமானம் மற்றும் புதுப்பித்தல்<br>• 5800 விவசாயிகளுக்கு விவசாயம் மற்றும் கால்நடை விரிவாக்க சேவைகள்</td></tr>
</table>

**2. ரம்பகன் ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| **மதிப்பிடப்பட்ட மொத்த செலவினம் (மி.ரூ)** | 1086.00 | **பயன்பெறும் மாவட்டம்** | அம்பாறை |
| **நிதி மூலாதாரம்** | GOSL | பயனாளிகள் | (மகா ஓயா/ பதியதலாவ) 15,975 குடும்பங்கள் |
| செயற்திட்ட கால எல்லை | 2012-2023 | | |
| **நிதி ஒதுக்கீடு 2022 (மி. ரூபாய்)** | 60.00 | **2023 மானியம் கோருதல் (மி. ரூபாய்)** | 43.00 |
| **ஒட்டுமொத்த நிதி முன்னேற்றச் செலவினம் (மி.ரூபாய்)** | 706.648 | **நிதி முன்னேற்றம் 2022 (மி. ரூபாய்)** | 46.636 |
| | | மொத்த பௌதீக முன்னேற்றம் | 86 % |
| **பௌதீக முன்னேற்றம் - 2022** | •இறக்குமதி கட்டுப்பாடுகளுடன் கூடிய பயிர்களின் சாகுபடி 2084 ஹெக்டேர்<br>• 13715 தோட்டங்கள் அபிவிருத்தி<br>• 60 விவசாயிகள் / அதிகாரிகள் பயிற்சி திட்டங்கள்<br>• 35 கி.மீ சாலைகள் புனரமைப்பு<br>• 3 குளங்கள் புனரமைப்பு<br>• 4 கட்டிடங்கள் கட்டுதல்<br>• நில அளவீடு மற்றும் காணித் துண்டங்கள் 600 ஐ நிறைவு செய்தல்<br>• 359 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன<br>• 28 துண்டங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது<br>• 78 நிறுவன மற்றும் சமூக மேம்பாட்டு திட்டங்கள் | | |
| **மொத்த பௌதீக முன்னேற்றம் 2022.12.31** | • இறக்குமதி கட்டுப்பாடுகளுடன் கூடிய பயிர்களின் சாகுபடி 2084 ஹெக்டேர்<br>• 13715 தோட்டங்கள் அபிவிருத்தி<br>• 60 விவசாயிகள்/அதிகாரிகள் பயிற்சி திட்டங்கள்.<br>• 246 கி.மீ சாலைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன<br>• 3 குளங்களின் புனரமைப்பு நிறைவு.<br>• 1.925 கி.மீ எப் கால்வாய் மற்றும் டி கால்வாய் மற்றும் 2 அணைகள் புனரமைக்கப்பட்டுள்ளன.<br>• 79 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன<br>• 2,264 காணித் துண்டங்களின் நில அளவீடு நிறைவடைந்துள்ளது.<br>• 2137 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன<br>• 568 துண்டங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது.<br>• 514 நிறுவன மற்றும் சமூக மேம்பாட்டு திட்டங்கள் முடித்துள்ளன<br>• 51 சிறு வணிகங்களுக்கு சந்தை வாய்ப்புகளை வழங்குதல்<br>• 10 தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள் நடாத்தப்பட்டு உள்ளது.<br>• 50% பங்களிப்பில் 41 பேருக்கு இயந்திரங்கள் வழங்குதல்<br>• 121 விவசாயக் கிணறுகள் கட்டப்பட்டன.<br>• 840 துப்புறவு சுகாதார அமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.<br>• 10 கி.மீ மின்சார யானை வேலி பராமரிப்பு<br>• மரம் நடுதல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 5000 மரக் கன்றுகள் நடப்பட்டு சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்கள் 8 நடாத்தப்பட்டு உள்ளன. | | |

**3. ரிதிமாலியத்த ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம்**

<table>
<tr><td>மதிப்பிடப்பட்ட மொத்த செலவினம் (மி.ரூ)</td><td>1100.00</td><td>பயன்பெறும் மாவட்டம்</td><td>பதுளை<br>(ரிதிமாலியத்த)</td></tr>
<tr><td>நிதி மூலாதாரம்</td><td>GOSL</td><td rowspan="2">பயனாளிகள்</td><td rowspan="2">19,127 குடும்பங்கள்</td></tr>
<tr><td>செயற்திட்ட கால எல்லை</td><td>2012-2022</td></tr>
<tr><td>நிதி ஒதுக்கீடு 2022<br>(மி. ரூபாய்)</td><td>40.00</td><td>2023 மானியம் கோருதல்<br>(மி. ரூபாய்)</td><td>0.00</td></tr>
<tr><td rowspan="2">ஒட்டுமொத்த நிதி முன்னேற்றச் செலவினம் (மி.ரூபாய்)</td><td rowspan="2">870.577</td><td>நிதி முன்னேற்றம் 2022 (மி. ரூபாய்)</td><td>33.997</td></tr>
<tr><td>மொத்த பௌதீக முன்னேற்றம்</td><td>98%</td></tr>
<tr><td>பௌதீக முன்னேற்றம் - 2022</td><td colspan="3">• கி.மீ. 18.5 வீதி புனரமைப்பு நிறைவடைந்துள்ளது<br>• இறக்குமதி தடை செய்யப்பட்ட பயிர்களின் சாகுபடி 3468 ஹெக்டேரில் செய்யப்பட்டுள்ளது<br>• வீட்டுத் தோட்ட விருத்தியின் கீழ் 17079 வீட்டுத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன<br>• விவசாயிகள் / அதிகாரிகள் பயிற்சித் திட்டங்களின் கீழ் 48 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன<br>• 25 நிறுவன மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் நடாத்தப்பட்டு உள்ளன.<br>• 3 மரம் நடும் திட்டங்களின் கீழ் மரம் நடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன<br>• 2 குளங்களின் மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன<br>• 1 கட்டிடம் கட்டப்பட்டு பராமரிக்கப்படுகிறது</td></tr>
<tr><td>மொத்த பௌதீக முன்னேற்றம் 2022.12.31</td><td colspan="3">• 22 குளங்களின் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன<br>• 1 கட்டமைப்பு புனரமைக்கப்பட்டது.<br>• 72.84 கி.மீ., கால்வாய் சீரமைப்பு பணி முடிந்துள்ளது<br>• 108.10 கி.மீ சாலை புதுப்பிக்கப்பட்டுள்ளது.<br>• 4 மதகுகள் புனரமைக்கப்பட்டுள்ளன.<br>• 43 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன<br>• 1508 ஹெக்டேர் இறக்குமதி தடைசெய்யப்பட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது<br>• 17079 வீட்டுத் தோட்டங்களில் வீட்டுத் தோட்ட விருத்தி<br>• விவசாயிகள் / அதிகாரிகளுக்கு 48 பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தியது<br>• 2,284 சுகாதார வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• 310 நிறுவன மேம்பாட்டுத் திட்டங்களை நடத்தியது.<br>• 9 மரம் நடும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன</td></tr>
</table>

**1.2.1 விவசாயம், கால்நடைகள் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளின் முன்னேற்றம்**

**1.1 விவசாயத்தின் பிரதான செயற்பாடுகளின் முன்னேற்றம்**

| இல. | பிரதான விடயம் | இலக்கு (மெ.தொ.) வருடாந்தம் | முன்னேற்றம் (மெ.தொ) | % |
|---|---|---|---|---|
| **1** | **விவசாய உற்பத்தி** | | | |
| 1.1 | **விதைகள் – மகாவலி பண்ணை** | | | |
| | விதை நெல் | 2,832.6 | 1,443.00 | 85% |
| | **வேறு களப் பயிர்கள்** | 83.8 | 15.12 | 18% |
| 1.2 | **விதைகள் - விவசாயிகள்** | | | |
| | விதை நெல் | 4,909.5 | 5,018.50 | 102% |
| | **வேறு களப் பயிர்கள்** | 1,232.1 | 1,008.20 | 82% |
| 1.3 | **உணவுப் பயிர்கள் உற்பத்தி** | | | |
| | நெல் | 985,547.0 | 723,944.00 | 73% |
| | **வேறு களப் பயிர்கள்** | | | |
| | **பெரிய வெங்காயம்** | 74,792.0 | 11,358.00 | 15% |
| | சோயா | 7,227.0 | 8,485.90 | 117% |
| | உளுந்து | 5,485.0 | 1,244.00 | 23% |
| | கவ்பி | 2,634.0 | 1,861.00 | 71% |
| | குரக்கன் | 2,479.0 | 1,366.50 | 55% |
| | பயறு | 10,121.0 | 1,319.00 | 24% |
| | சோளம் | 83,417.0 | 20,112.00 | 24% |
| | நிலக்கடலை | 8,436.0 | 2,388.00 | 28% |
| | மிளகாய் | 64,435.0 | 10,140.00 | 16% |
| | எள்ளு | 753.0 | 394.40 | 52% |
| | மஞ்சள் | 5,750.0 | 6,820.00 | 119% |
| | இஞ்சி | 3,680.0 | 4,680.00 | 127% |
| 1.4 | **பழங்கள்** | | | |
| | வாழை | 182,340.0 | 152,230.00 | 83% |
| | பப்பாசி | 57,036.0 | 38,970.00 | 68% |
| | கொய்யா | 20,750.0 | 18,020.00 | 87% |
| | ஏனைய பழங்கள் (மா, டிராகன், அன்னாசி, பெசன், இளநீர்) | 35,852.0 | 58702.50 | 163% |
| 1.5 | **மரக்கறிகள்** | 233,175.0 | 212,154.00 | 91% |
| **2** | **சேதன வலய அபிவிருத்தி – ஜீ வலயம் (ஹெக்.)** | 1,970.0 | 1,745.80 | 89% |
| 2.1 | மகாவலி வலயங்களில் சேதனப் பசளை உற்பத்தி – கொம்போஸ்ட் | 304,532 | 27199 | 59% |

**1.1. கால்நடை வள உற்பத்தியின் முன்னேற்றம் மற்றும் கால்நடை மற்றும் மீன்பிடித்துறையின் பிரதான செயற்பாடுகள்.**

| | பிரதான செயற்பாடு | அலகு | இலக்கு 2022 | முன்னேற்றம் 31.12.2022 |
|---|---|---|---|---|
| | **கறவை மாடு மேம்பாடு** | | | |
| | பண்ணைத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் பாற்பண்ணையாளர்களுக்குப் பயிற்சி அளித்தல். | பால் பண்ணை விவசாயக் குடும்பங்கள் | 2000 | 1445 |
| | கால்நடை தங்குமிடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் | வீடுகள் மற்றும் துணைக்கருவிகள் | 380 | 420 |
| | **அலங்கார மீன் வளர்ப்பு** | | | |
| | இனப்பெருக்கப் பண்ணை மேம்பாடு | விவசாயிகள் | 17 | 12 |
| | சேற்றுக் குட்டைகள்/ தனிமைப்படுத்தப்பட்ட குட்டைகள் / உட்கட்டமைப்பு மேம்பாடு | வீடு | 102 | 97 |
| | **கோழி உற்பத்தியை மேம்படுத்தல்** | | | |
| | சிறிய அளவிலான விவசாயிகளை நடுத்தர அளவிலான விவசாயிகளாக விரிவுபடுத்துதல் | விவசாயக் குடும்பங்கள் | 120 | 120 |
| | ஒரு மாத வயதுடைய குஞ்சுகளை வழங்குதல் | நிகழ்ச்சித் திட்டங்கள் | 40,536 | 37,692 |
| | நடுத்தர அளவிலான விவசாயிகளை வணிக அலகுகளாக மாற்றுதல் | பண்ணை | 37 | 37 |
| | மீன் திரள்கள் | மில்லியன் | 30 | 22.8 |
| | மீன் குஞ்சுகள் | மில்லியன் | 32 | 21.31 |
| | நன்னீர் இறால் | மில்லியன் | 6 | 5.94 |
| | வலைக் கூண்டுளை வழங்குதல் | கூண்டுகள் | 4 | 4 |

| | | இலக்கு (மெ.தொ.) வருடாந்திர | முன்னேற்றம் (மெ.தொ.) | % |
|---|---|---|---|---|
| | **கால்நடை வளர்ப்பு** | | | |
| | நன்னீர் மீன் (மெ.தொ.) | 14,000 | 14397.7 | 100 % |
| | பால் (மில்லியன் லீட்டர்) | 50 | 48.34 | 96 % |
| | முட்டை (மில்லியன்) | 80 | 61 | 76 % |
| | அலங்கார மீன் (மில்லியன் ஜோடி) | 41 | 42.55 | 100 % |

**2 நீர்ப்பாசன சுபீட்ச நிகழ்ச்சித் திட்டம்**

ஏரி சீரமைப்பு திட்டத்தின் முன்னேற்றம் - 31.12.2022

| வலயம் | 2022 ஆம் ஆண்டிற்கான அடையாளம் காணப்பட்ட குளங்கள் | மானியம் (ரூ. மீ ) | புதுப்பிக்கப்பட்ட குளங்கள் 2022 | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | முன்னேற்றம் |
| பி | 9 | 4.00 | 3 | 1 |
| சி | 8 | 17.8 | 5 | 2 |
| டி | 14 | 7.73 | 9 | 4 |
| எச் | 37 | 16.21 | 21 | 20 |
| ஹுறுலு வாவி | 1 | 0.32 | 1 | 0 |
| எல் | 5 | 1.7 | 2 | 0 |
| வலவ | 5 | 8.97 | 3 | 1 |
| ரம்பகன் ஓயா | 25 | 23.10 | 9 | 4 |
| இ | 7 | 0.20 | 1 | 0 |
| **கூட்டுத் தொகை** | **111** | **80.00** | **54** | **32** |

**3 . மகாவலி முதலீட்டு வலயங்கள் மற்றும் சூழல் சுற்றுலா வலயங்களின் அபிவிருத்தி**

மகாவலி முதலீட்டு செயற்திட்டங்களுக்கான காணி ஒதுக்கீடு

| பிரதான செயற்பாடு | அலகு | ஆண்டு இலக்கு | முன்னேற்றம் 30.09.2022 |
|---|---|---|---|
| முதலீட்டு திட்டங்களுக்கான முதலீட்டாளர்களைத் தேர்ந்தெடுத்தல் | மதிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | 200 | 165 |
| | கையுதிர்க்கப்பட்ட நிலத்தின் அளவு (ஹெக்டேர்) | 100 | 14.58 |

**4. தாபன அபிவிருத்திப் பிரிவின் பிரதான செயற்பாடுகளின் முன்னேற்றம்**

| | முக்கிய செயற்பாடு | இலக்கு | முன்னேற்றம் | % |
|---|---|---|---|---|
| | தொழிற் பயிற்சியுடன் கூடிய வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு (இளைஞர்) | 975 | 697 | 71% |
| | மகாவலிப் பிரதேசத்திலிருந்து திறமையான விளையாட்டு வீரர்களை இனங்கண்டு அவர்களை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருதல் (விளையாட்டு வீர வீராங்கனைகள்) | 2050 | 2264 | 100% |
| | மகாவலி சவிய கடன் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சிறு அளவிலான தொழில்முயற்சியாளர்களை அவர்களது வியாபாரத்திற்கு (பயனாளிகளுக்கு) கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் அபிவிருத்தி செய்தல். | 250 | 250 | 100% |

**5. நில ஒதுக்கீடு**

இலங்கை மகாவலி அதிகாரசபையினால் அளிப்புப் பத்திரங்கள் வழங்கப்படுவதில் முன்னேற்றம் - 2022.12.31

| வலயம் | ஆண்டு இலக்கு (உரித்துகள்) | அளவு |
|---|---|---|
| பி | 6,700 | 5,363 |
| சி | 7,700 | 3,897 |
| டி | 300 | 727 |
| இ | 100 | 99 |
| ஜீ | 1,100 | 1,673 |
| எச் | 5,600 | 5,245 |
| எல் | 5,000 | 1,243 |
| ஹூறுலு வாவி | 1,600 | 655 |
| ரம்பகன் ஓயா | 1,500 | 657 |
| வலவ | 34,800 | 4,241 |
| **கூட்டுத் தொகை** | **65,000** | **23,830** |

**6. சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்தின் முன்னேற்றம் - 31.12.2022

| முக்கிய செயற்பாடு | அலகு | இலக்கு 2022 | முன்னேற்றம் 31.12.2022 |
|---|---|---|---|
| தாவர உற்பத்தி (மகாவலி நாற்று மேடைகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் விவசாயிகள் மூலம்) | மரக் கன்றுகள் | 661,250 | 920,360 |
| மேல் நீரேந்து பகுதிகள் மற்றும் கீழ் பள்ளத்தாக்கு பகுதிகளில் மரக்கன்றுகள் நடுதல் | மரக் கன்றுகள் | 207,600 | 226,751 |
| மேல் நீரேந்து பகுதிகளில் மண்வள பாதுகாப்பு திட்டம் | மீற்றர் | 20000 | 10456 |
| சுற்றாடல் கல்வி மற்றும் மேம்பாடு | நிகழ்ச்சித் திட்டங்கள் | 101 | 94 |
| சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு | செயற்திட்டங்கள் | திறந்த | 7 |
| மேல் நீரேந்து பகுதிகளில் நீரின் தரம் மற்றும் நீரியல் ஆய்வு | தளங்கள் | 27 | 27 |
| இழைய வளர்ப்புத் தாவரங்களின் உற்பத்தி | மரக் கன்றுகள் | 370,000 | 50350 |
| யானை - மனிய மோதல்களைக் குறைத்தல் (யானை வெடிகள், எனஜயிசர்கள் போன்றவை) மற்றும் உயிர் வேலிகளைப் பராமரித்தல் | கி.மீ. | 31.5 | 31.5 |
| ஆக்கிரமிப்பு இன நீர்வாழ் தாவரங்களை அகற்றுதல் | ஏரிகளின் எண்ணிக்கை / ஹெக்டேர் | 4 | 4 |
| தோட்டக்கலை மற்றும் கழிவு முகாமைத்துவம் | நிகழ்ச்சித் திட்டங்கள் | 3 | 5 |
| பசுமை பூங்காக்கள்  அமைத்தல் | தோட்டங்கள் | 12 | 1 |